*உ*

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாந் திருமுறை

( இரண்டாம் தொகுதி )

# திருமுருகாற்றுப்படை


பதிப்பாசிரியர்

**டாக்டர் இராச.வசந்தகுமார்**

நிறுவன வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்



Enable | Enlighten | Enrich

KARPAGAM UNIVERSITY

(Under Section 3 of UGC Act 1956)

**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**

**கற்பகம் பல்கலைக்கழகம்**

ஈச்சநாரி, கோவை - 21

## நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **பதினொன்றாம் திருமுறை** (இரண்டாம் தொகுதி) **(திருமுருகாற்றுப்படை)** |
| ஆசிரியர் | : | **நக்கீரர்** |
| நூல் வகை | : | செய்யுள் நூல் |
| வெளியீடு | : | **பன்னிரு திருமுறை ஆய்வு மையம் கற்பகம் பல்கலைக்கழகம்** |
| வெளியீட்டு எண் | : | **52** |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி **2017** |
| பக்கங்கள் | : | **976** |
| தாள் | : | மேப்லித்தோ 80 gsm |
| அளவு | : | டெமி 1/8 |
| அச்சகம் | : | செஞ்சுடர் அச்சகம்<br>கோ.வா.பாளையம்,<br>போத்தனூர், கோவை – 23.<br>அலைபேசி : 98431 74238 |




# பதினொன்றாந் திருமுறை

## (இரண்டாம் தொகுதி)

## நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I. | பதிப்புரை<br>(வழிபாட்டு வரலாற்றுக் கருத்தரங்க அழைப்பிதழுடன்) | 4 |
| II. | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அறுபடை வீடுகள் | 22 |
| III. | இதுவரை திருமுருகாற்றுப்படை நூலுக்கு<br>வெளிவந்துள்ள நூல் பதிப்புகள் | 27 |
| IV. | திருமுருகாற்றுப்படையின் திரண்ட பொருள் | 29 |
| V. | திருமுருகாற்றுப்படை மூலம் | 33 |
| VI. | திருமுருகாற்றுப்படை பாராயணப்பயன் தசவெண்பாக்கள் | 43 |
| VII. | **திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும்**<br>அ. திருப்பரங்குன்றம் (பரங்கிரி) | 45 |
| | ஆ. திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்) | 224 |
| | இ. பழனி (ஆவினன்குடி) | 425 |
| | ஈ. சுவாமிமலை (திருவேரகம்) | 564 |
| | உ. திருத்தணி முதலியன (குன்றுதோறாடல்) | 642 |
| | ஊ. பழமுதிர்சோலை (திருமாலிருஞ்சோலை) | 738 |
| VIII. | திருமுருகாற்றுப்படை பாராயணப்பயன் தசவெண்பாக்களின் உரை | 929 |
| | அருஞ்சொற்பொருள் விளக்கம் | 965 |

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாம் திருமுறை (இரண்டாம் தொகுதி)

## திருமுருகாற்றுப்படை - வழிபாட்டு வரலாற்றுக் கருத்தரங்கம்

## (18.2.2017, 19.2.2017 சனி, ஞாயிறு)

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.

**- திருமுருகாற்றுப்படை - திருப்பரங்குன்றம்**

## பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். - திருக்குறள் (10)

**1. உயிரின் நோக்கம் / இலட்சியம்** - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

**2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்**

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவபெருமானைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

**3. வகுத்துக்கொண்ட நெறிகள்**

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்தி பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள.

**– திருமுருகாற்றுப்படை – பழமுதிர்ச்சோலை**

**அன்புடையீர், வணக்கம்.**

இருநூற்று இருபத்து நான்கு புவனங்களின் இயக்கத்திற்குத் தம்மினும் மேலான பொருள் ஒன்று உண்டென்றும், அதுவே தம்மை வழிப்படுத்துகின்றது என்றும் கருதிய சான்றோர் பெருமக்கள் அப்பரம்பொருளிடத்து அஞ்சியும் அன்பு செலுத்தியும் வந்தனர். அவ்வகையில் தம் வாழ்வையும், மனத்தையும் நெறிப்படுத்த முயற்சி செய்தனர். கற்காலம் தொடங்கி நாகரிக காலம் வரை உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் தேடக் கற்றுக் கொண்டபின், கற்ற கல்வி, கேள்வி நலன்களைப் பயன்படுத்தி நெறிப்படுத்துதல் சற்றுத் தீவிரமடைந்த நிலையில், அவ்வமைப்பே சமயம் எனப்பட்டது. இவ்வகையில் சிவபரம்பொருளை வழிபட்டு வளரும் சமயவுணர்வு மீதூர்ந்து நின்றது. சமயம் என்றாலே சமைத்தல் அல்லது பக்குவப்படுத்தப்படுதல் என்று பொருளாகிறது. இதனைச் சிவநெறி அல்லது சைவநெறி என அழைத்தனர். இந்நெறி மிகத் தொன்மையான நெறி. இது பழங்காலந்தொட்டே உருவாகி வந்துள்ளது. "திசையெட்டும் தோன்றுவதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்பது அப்பர் பெருமானின் அருள்வாக்கு. இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கின்ற தொல்காப்பியம், தொகை, பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற சங்க கால நூல்களாலும், மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கண்ட அகழ்வாய்வுகளாலும் நாம் இதனையறியலாம்.

"தெய்வம் அஞ்சல்"

"கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

"வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப"

'ஏமுறு கடவுளை ஏத்துதற்கண்ணும்' எனவரும் தொல்காப்பியத் தொடர்களும்,

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்
பிறப்பென்னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு

எனவரும் திருக்குறட்பாக்களும் இக்கருத்தை நிலைநாட்டுகின்றன. மன்னுயிர்கள் தம் சிற்றறிவைக் கொண்டு தம்மாலான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கும்போது பரம கருணாநிதியாகிய சிவபெருமான் நம் வினைநீக்கத்தின் பொருட்டு ஞானம் பெற தம் அடியார்களை அனுப்பித் திருமுறைகளை இயற்றிப் பரப்பச் செய்கின்றார். இது

பெருங்கருணையாகும். இயற்கை உணவுகளை உண்டு, இலைதழைகளை உடுத்து, மரப்பொந்துகளிலும், பாறைக் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் இன்று ஆயிரக்கணக்கான விருந்துண்ணல் நிகழ்வுகளை மேற்கொண்டு கோடிக்கணக்கில் செலவு செய்து உடை உடுத்தும், நகை அணிந்தும், ஆடம்பர மாளிகைகளில் வாழ்ந்தும், பொழுதைப் போக்கும் நிலையில் அந்தப் பரம கருணாமூர்த்தி அருளிய திருமுறைகளை உணர்ந்த ஒரு சிறு அடியார் கூட்டமே இந்த நூலை இன்று படித்துணர்ந்து கொண்டிருக்கிறது.

எவ்வளவு புண்ணியம் செய்திருந்தால் அந்தத் திருமுறைகளை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் ?

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை"

என்பார் திருஞானசம்பந்தர். தோத்திரங்கள், சாத்திரங்கள் என்ற இருவகை நூல்களில், தோத்திர வகையைச் சார்ந்த பன்னிரு திருமுறைகளில் பத்துத் திருமுறைகளும், பதினொன்றாம் திருமுறையில் முதல் பாகமும் வெளியிடப்பட்டு ஓதிய நிலையில், சிவபெருமானது பெருங்கருணையால் 11ஆம் திருமுறையின் இரண்டாம் தொகுதியை வெளியிடும் பேற்றை இன்று நாம் பெற்றுள்ளோம்.

## முருக வேளுக்குரிய இடம்

தமிழர் வழிபட்ட கடவுளர்களில் முருகவேள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். "சேயோன் மேய மைவரை உலகம்" எனத் தொல்காப்பியம் இம்முருகவேளைக் குறிஞ்சி நிலத் தெய்வமாக உரிமைப்படுத்திச் சிறப்பிக்கின்றது. வேண்டுபவர்க்கு வேண்டியதை அருளும் வள்ளன்மையும், முன்னியது முடிக்கும் ஆற்றலும் அவருக்குண்டெனத் திருமுருகாற்றுப்படை சிறப்பிக்கின்றது.

இந்தத் தொகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில் வாழ்ந்த மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர் என்ற பெரும்புலவர் அருளிய திருமுருகாற்றுப்படை என்ற ஒரே நூலைப் படித்துணரத் திருவருள் திருவுள்ளம் பற்றியுள்ளது. திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியத்தைச் சார்ந்தது. அதே காலத்தில் பதினொன்றாம் திருமுறையிலும் இடம் பெற்று திருமுறைகளில் இணைக்கப்பட்ட ஒரே சங்க இலக்கியம் என்ற பெயரையும் பெற்றுள்ளது. முருக பக்தர்களின் பாராயண நூலாகும். சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள முதல் நூல் திருமுருகாற்றுப்படையாகும். எனவே பத்துப்பாட்டுக்கும் இந்நூலை, கடவுள் வாழ்த்தாகக் கொள்வர்.

கடைச் சங்க காலத்தில் எழுந்த பல நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. புலவர்கள் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் ஆயிரக்கணக்கில் இருந்தன. இடையிலே அவற்றையெல்லாம் தமிழ்நாடு இழந்துவிட்டது. பின்பு வந்தவர்கள், கிடைத்த பாடல்களைத் தொகுத்து வகைப்படுத்தியிருக்கிறார்கள். நீண்ட பாடல்கள் சில கிடைத்தன. சிறிய பாடல்கள் பல கிடைத்தன. இவற்றையெல்லாம் பிரித்து மூன்று வரிசையாக ஆக்கினார்கள். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன அவை. அந்த மூன்றில் பத்துப்பாட்டு

என்ற வரிசையில் பத்து நீண்ட பாடல்கள் இருக்கின்றன. எட்டுத்தொகை என்ற வரிசையில் எட்டு நூல்கள் இருக்கின்றன. பல சிறிய சிறிய பாடல்களைக் கொண்டவை அவை. அதனால் எட்டுத்தொகை என்ற பெயர் வந்தது. பதினெட்டு நூல்களை ஒன்றாகச் சேர்ந்த தொகுதியே பதினெண்கீழ்க்கணக்கு என்பது. திருக்குறள் அதில் சேர்ந்ததுதான். பிற்காலத்தில் எழுந்தது இந்த வரிசை என்று (ஆராய்ச்சியாளர்) சொல்வார்கள்.

பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்று இவற்றை முறையாக எடுத்துச் சொல்வார்கள். இந்த நூல்கள் முப்பத்தாறும் கடைச்சங்க காலத்து நூல்கள் என்று இப்போது வழங்கப்படுகின்றன. "பழங்காலத்து நாகரிகம் எப்படி இருந்தது? தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? அவர்களுடைய பழக்கவழக்கங்கள் எவையெவை?" என்பன போன்ற பல செய்திகளை இந்த முப்பத்தாறு நூல்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

## பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று முறையாகச் சொல்வது ஒரு வழக்கம். இந்த மூன்று வரிசைகளில் முதல் வரிசையாக அமைந்திருப்பது பத்துப்பாட்டு. அந்தப் பெயரே பத்துப் பாடல்களை உடைய தொகுதி அது என்பதைத் தெரிவிக்கிறது அல்லவா? பத்து நெடிய பாடல்களையுடைய அந்தத் தொகுதியில் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படைகள். ஒருவனை ஒரு புரவலனிடத்தில் போகும்படியாக ஆற்றுப்படுத்தி வழிநடத்திச் சொல்வது ஆற்றுப்படை. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை என்ற ஐந்து ஆற்றுப்படைகள் பத்துப்பாட்டில் இருக்கின்றன. சரிபாதி ஆற்றுப் படைகளால் அமைந்த தொகுதி அந்தப் பத்துப்பாட்டு. அதில் முதல் பாட்டாக நிற்பது திருமுருகாற்றுப்படை.

## திருமுருகாற்றுப்படை

தன்னிகரற்ற தலைவனொருவன்பால் பரிசில் பெற்றுவரும் கூத்தர், பாணர், பொருநர், விறலி முதலிய பரிசில்வாணர்கள் வழியிடையே தம்மை யெதிர்ப்பட்ட இரவலர்களது துயர்கண்டிரங்கித் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை அவர்களும் பெற்று மகிழும்படி வழி கூறியனுப்புதலாகப் பாடப்பெற்ற பிரபந்தம் ஆற்றுப்படையெனப்படும். ஆற்றுப்படையென்பதற்கு வழிப்படுத்தல் என்பது பொருள். வரையாது வழங்கும் வள்ளலொருவனை அடைந்து வளம் பெற்ற வாழ்க்கைநிலையெய்திய பரிசிலர்கள், தாம் பெற்ற பெருவளத்தை ஏனையோரும் பெற்று இன்புறுமாறு வழி கூறியனுப்புதலாகிய இப்பேருதவியை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

எனப் புறத்திணையியலிற் பாடாண்டினைத் துறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுவர்

தொல்காப்பியனார். ஆடுதற்றொழிலில் வல்ல கூத்தரும், பண்ணொடு பாடுதலில் வல்ல பாணரும், பிறர் மனத்துக் கொண்டதனைக் குறிப்பால் அறிந்து இசைபட நடித்துக் காட்டவல்ல பொருநரும், மனக்குறிப்பு மெய்க்கண் புலப்பட ஆடவல்ல விறலியும் என்னும் நால்வகையோரும் தமது செல்வப் பொலிவும் தம்மெதிர்ப்பட்ட பரிசிலர்களது வறுமைத் தோற்றமும் ஒன்றினொன்று மாறுபட்டுத் தோன்ற, வழியிடையே சந்தித்தபொழுது, தமக்கு இத்தகைய பெருஞ் செல்வத்தை வழங்கியவர் இன்னாரெனவும் அவரை யடைந்து பரிசில் பெறுதற்குரிய வழிமுறைகள் இவையெனவும் தம்மையெதிர்ப்பட்ட பரிசிலர்க்கு அறிவுறுத்தி, அன்னோர் தாம் கூறிய நெறியே சென்று பரிசில்பெற வழிசொல்லி அனுப்பிய பகுதி ஆற்றுப்படை யென்னுந் துறையாம் என்பது மேற்காட்டிய தொல்காப்பியத் தொடரின் பொருளாகும். இத்தொடரிற் கூறிய இலக்கணத்தின்படி அமைந்த ஆற்றுப்படைகளாவன கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை யென்பனவாம். இவற்றுக்குரிய இலக்கியங்களாகப் பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாமென்னுங் கூத்தராற்றுப்படை ஆகிய பாடல்களையும் புறநானூற்றில் விறலியாற்றுப்படையென்ற துறையிலமைந்த பாடல்களையும் கொள்ளலாம்.

வாழ்க்கைத் துறையில் வளம்பெற்றோர், தம் போல் வளம்பெறாதாரை நோக்கி வருந்தி, அவரும் தம்போல் வளம்பெற்று வாழ்தற்கேற்ற வழிமுறைகளைத் தெரிவிப்பதே ஆற்றுப்படை யென்னும் இப்புறத்துறையின் நோக்கமாகும். யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றெண்ணிப் பரந்தவுள்ளத்துடன் ஒருவர்க் கொருவர் தத்தம் அநுபவங்களை எடுத்துரைத்து வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டியுதவும் இத்தெய்வ அருட்குறிப்பினை,

> ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்று பெயனெதிரச் சொன்ன பக்கம்

எனவருந் தொடரால் ஆசிரியர் தொல்காப்பியனார் இனிது விளக்கியுள்ளார். இத்தொடர்ப் பொருளை ஊன்றி நோக்குங்கால் இங்குக் கிளந்தோதப் பெற்ற கூத்தர், பாணர், பொருநர், விறலியென்னும் இவர்களேயன்றி இவர்களைப்போன்று ஏனைக் கலைத்துறைகளிற் பயிற்சியுடைய பிறரும் தம் எதிர்ப்பட்ட மக்களை மேன்மேலுயரச் செய்தல் வேண்டுமென்னும் அருள் நோக்குடன் நல்வழியிற் செலுத்துதற்குரியரென்பதும், இங்ஙனம் வெவ்வேறு கலைத் துறைகளில் வல்ல சான்றோர் பலரும் தத்தம் பயிற்சி நிலையையும் வாழ்க்கை அனுபவத்தையும் எடுத்துரைத்துத் தம்மையொத்த மக்களை நல்வழிப்படுத்தலாகிய பல்வேறு முயற்சிகளும் ஆற்றுப்படையாகிய இத்துறையில் அடங்குமென்பதும் ஆசிரியர் கருத்தென்பது நன்கு விளங்கும். ஆகவே தொல்காப்பியனார் கிளந்தோதிய கூத்தர், பாணர், பொருநர், விறலியென்போர் கூற்றாக அமைந்த ஆற்றுப்படைகளேயன்றிப் புலவர் முதலியோர் கூற்றாக அமைந்த ஏனைய ஆற்றுப்படைகளும் தொல்காப்பியனார் அறிவுறுத்திய ஆற்றுப்படை இலக்கணத்தின்படியமைந்த ஆற்றுப்படைகளெனவே கொள்ளுதல் வேண்டும்.

முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தானோர்

இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்த தென்பது பொருளாகக் கொள்க என்பர் நச்சினார்க்கினியர். இதனைப் புலவராற்றுப்படை யென்ற பெயரால் வழங்குதல் வேண்டுமெனக் கருதுவர் சிலர். கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படையென ஏனைய ஆற்றுப்படைகளெல்லாம் ஆற்றுப்படுத்துவோர் தலைமை தோன்ற அவர் பெயரால் வழங்குமாறு போல, முருகன்பால் முதுவாயிரவலனாகிய புலவனைப் புலமைச் செல்வரொருவர் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த இத் திருமுருகாற்றுப்படையும் ஆற்றுப்படுத்துவோராகிய புலவர் பெயராற் புலவராற்றுப்படையென வழங்கப்பெறுதல் வேண்டுமென்பது அன்னோர் கருத்தாகும். புலவராற்றுப்படையென்ற பெயரால் நூல் நுதலிய சமயப்பொருள் விளங்கமாட்டாது போகவே, அப்பொருள் எளிதில் விளங்குமாறு பாட்டுடைத் தெய்வத்தின் பெயரொடு சார்த்தி இப்பனுவல் வழங்கலாயிற்றென்றும், இப்புது வழக்கம் பரவி விட்ட காரணத்தால் புலவராற்றுப்படை யென்ற பழம்பெயர் வழக்கு வீழ்ந்ததாதல் வேண்டுமென்றும் மேற்கூறிய கருத்திற்கு விளக்கங் கூறுவதும் உண்டு. புலவராற்றுப்படை யென்ற பெயர் திருமுருகாற்றுப்படைக்கு என்றும் வழங்கியதில்லை. நச்சினார்க்கினியர் காலத்தில் வாழ்ந்த அறிஞர் சிலர் புலவராற்றுப்படையென்ற பெயரால் திருமுருகாற்றுப்படையை வழங்கத் தொடங்கிய நிலையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படைக்கு அப்புதுப்பெயர் பொருந்தாதென எடுத்துக்காட்டித் தெருட்டி உள்ளார். ''இதனைப் புலவராற்றுப்படையென்று உய்த்துணராது பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க'' எனப் புறத்திணை இயல் **36–**ஆம் சூத்திரவுரையில் அவ்வாசிரியர் கூறுதலால் இச்செய்தி புலனாதல் காணலாம்.

### படைவீடு – பொருளும் இயைபும்

திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய அறுவகை இடங்களையும் படைவீடு எனக் குறித்தலும் மரபாய் உள்ளது. படைவீடு என்பது சேனைகள் தங்கும் இடம் அல்லது இராசதானி எனப் பொருள்படும். தானை, யானை முதலிய சேனைகள் தங்கும் படைவீடு என்ற பொருள் வகையில் காணின். (கந்தபுராண வரலாற்றின்படி) திருச்செந்தூர் ஒன்றே அமையும். 'செந்தூரில் போய்க் கருணை வெள்ளமெனத் தவிசில் வீற்றிருந்து' என்பர் குமரகுருபரரும். பதுமனை வென்றிகொண்ட பின் வந்து தங்கிய இடம் திருப்பரங்குன்றம் எனத் தெரிவதால் அதனையும் இவ்வகையில் கொள்ளினும் பொருந்தும். எஞ்சிய இடங்கள் இவ்வகையில் கொள்ளுதற்கில்லை. இராசதானி – தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்யும் இடம். இவ்வாறு கொள்ளின் ஆறு திருப்பதிகளும் பொருந்துவதாகும். 'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கும்' என்புழிப் போல இவ்வாறிடங்களையும் தலைமையாகக் கொண்டு அருள்புரிவோன் எனலாம். பதுமனைப் பொருதற்கு முன், படையொடு தங்கிய இடம் திருச்செந்தூராகும். அவனைப் பொருது வென்றிகொண்டபின் தங்கியதும், தெய்வ யானையம்மையை மணந்ததும் திருப்பரங்குன்றமாகும். இறைவற்குப் பிரணவத்தை வழங்கிய

இடம் திருவேரகமாகும். அயனைச் சிறைவிடுக்க அருளிய இடம் திருஆவினன்குடியாகும். குறிஞ்சி நிலக் கடவுளாதல் பற்றி குன்றுதோறாடலும், பழமுதிர்ச்சோலையும் அவனுக்குரிய இடங்களாக அமைந்தன. இவ்வாறன்றி ஆற்றுப்படுத்தப்பெறும் வீடு என்பது பற்றி ஆறுபடை வீடு என்றாயிற்று எனக் கொள்ளின் அது மேலும் பொருத்தமாகும்.

இனி, முருகன் எழுந்தருளிய ஆறுபடை வீடுகளைப் பற்றிக் கூறுவது இத் திருமுருகாற்றுப்படைப் படையெனக் கொண்டு இவ்வொரு பாடலை ஆறுபகுதிகளாகப் பகுத்து நெடுநாட்களாக வழங்கி வருகிறார்கள். முருகன் வீற்றிருந்து அருள்புரியுந் திருப்பதிகளாக இத்திருமுருகாற்றுப் படையிற் சிறப்பிக்கப் பட்டவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம் என்னும் நான்கு திருப்பதிகளேயாகும். அன்னோர் ஐந்தாவதாகக் கூறும் 'குன்றுதோறாடல்' என்பது ஒரு தனித்திருப்பதியன்று. முருகப்பெருமான் குறிஞ்சி நிலத் தெய்வமாதலால் அப்பெருமானுக்கு எல்லா மலைகளும் விரும்பி விளையாடுதற்குரிய சிறப்புடைய திருத்தலங்களே யென்னுங்கருத்தினால் "குன்றுதோ றாடலும் நின்ற தன்பண்பே" என்றார் ஆசிரியர். 'மலைகள் தோறும் சென்று விளையாடுதலும் முருகப்பெருமானுக்கு நிலைபெற்ற பண்பாம்' என்பது இத்தொடரின் பொருளாகும். இவ்வாறே குறிஞ்சிக் கிழவன் என்ற பொருள்படப் 'பழமுதிர் சோலை மலை கிழவோன்' என முருகவேளை இந்நூலாசிரியர் இத்திருமுருகாற்றுப்படையின் இறுதியடியிற் குறிப்பிட்டு உள்ளார். இங்குக் கூறப்பட்ட பழமுதிர் சோலைமலை யென்பதனை இப்பொழுது அழகர்மலையென வழங்குந் திருப்பதியாகக் கொள்வதுமுண்டு. இம்மலை சங்கத்தொகை நூலாகிய பரிபாடலில் திருமாலிருஞ்சோலை யென்ற பெயரால் திருமாலுக்குரிய சிறப்புடைய திருப்பதியாகப் போற்றப் பெற்றுள்ளது. பழமுதிர் சோலைமலையென அதனைத் தனியே எண்ணாமல் அம்மலையை முருகனுக்கு உரிமையாக்கிப் 'பழமுதிர்சோலை மலைகிழவோன்' என அவ்விறைவனை நக்கீரர் குறித்துப் போற்றுதலால் "பழமுதிர் சோலைமலை யென்ற தொடர் திருமாலிருஞ் சோலை மட்டுங் குறித்ததெனக் கொள்ளாமல் இழுமென இழிதரும் அருவியையுடைய வளமார்ந்த எல்லாமலைகளையுங் குறித்து நின்றதெனக் கொள்ளுதலே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும். 'பழமுதிர்சோலை மலைகிழவோன்' என உடம்பொடு புணர்த்தமையால் பழமுதிர்சோலை மலையின்கண்ணே எழுந்தருளி யிருத்தலும் உரியன்" எனவும் கொள்வர். எனினும் அறுபடை வீடு என்னும் ஒழுகலாற்றைப் பின்பற்றித் திருமுருக வழிபாடு ஞாலம் உய்ய வளர வேண்டுமென நமது முன்னோர் தீர்மானித்து எல்லாப் பதிப்புகளிலும் அறுபடை வீட்டையே நிலைநிறுத்தி நூல்களை ஆக்கியுள்ளனர்.

### பாட்டுடைத்தலைவன் வரலாறு

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இயற்றிய இத்திருமுருகாற்றுப்படைக்குச் செந்தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானே பாட்டுடைத் தலைவனாவான்.

ஏனை ஆற்றுப்படைகட்கு இவ்வுலகத்தே சிறந்த வண்மையாளராய்த் திகழ்ந்த புரவலர்களே பாட்டுடைத் தலைவராக, இப் பாட்டிற்கு உயிர்களின் துயர்போக்கி அந்தமில் இன்பத்து அழியாவீட்டை நல்கியருளும் ஒப்பற்ற வள்ளற் பெருமானாகிய முருகவேளையே சான்றாண்மைமிக்க நல்லிசைப் புலவராகிய நக்கீரர் பாட்டுடைத் தலைவனாகத் தேர்ந்து கொண்டமை பெரிதும் போற்றற்பாலதொன்றாம்.

இனி, இம் முருகப்பெருமானே, தமிழ்நாட்டின்கண் முதனிலமாகக் கொள்ளப்படும் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத் தெய்வம் ஆவார். இதனைச், "சேயோன் மேய மைவரை யுலகமும்" எனவரும் தொல்காப்பிய நூற்பாவான் உணரலாம். உலகில் மக்கள் முதன்முதலாகத் தோன்றி வாழத் தொடங்கியது குறிஞ்சி நிலத்திலேதான் என்பர் உயிர்நூல் ஆராய்ச்சி வல்லுநர். மக்கள் முதன்முதலாக இவ் வுலகியற்கையைக் கூர்ந்து நோக்கி இவ் வுலகத்தை இவ்வாறு ஒழுங்குற நடத்தற்கு ஒரு முழுமுதற்பொருள் இருத்தல் வேண்டுமென்றும், அப் பொருள் இவ் வுலகின்கண் ஒவ்வோர் அணுவினும் உள்ளீடாய் உறைந்து இவ் வுலகினை இயக்குகின்றதென்றும், எங்கும் நிறைந்து எப்பொருட்கும் தான் பற்றுக்கோடாய்த் தனக்கொரு பற்றுக்கோடுமின்றி நிற்பதும், தோற்றமும் ஈறும் இல்லாததும், எப் பொருளையும் தன்னுட்டோற்றி யழிப்பதுமாகிய, அப் பொருளாலேதான் இவ்வுலகம் இனிதின் இயங்குகின்றதென்றும், தம் கூரிய அறிவானே கண்டகாலத்தே, அப்பொருளைக் கந்தழி என்னும் பெயரானே வழங்கி, அதனை மனத்தானே போற்றி வருவாராயினர். இக் கடவுளறிவு மிகுந்த பிற்காலத்தே இங்ஙனம் கருதலளவையான் மட்டுமே ஊகித்துக் கண்ட அவ்விறைப் பொருளை மற்றோராற்றாற் காண்டல் அளவையானும் காணத் தலைப்பட்டனர். அஃதாவது – இப் பேருலகத்தே எத்திசையினும், யாண்டும் முதிர்ந்த மனனுணர்ச்சிக்குப் புலனாகத் தெள்ளத் தெளியக் காணப்படுகின்ற அழகே அக்கடவுளின் தோற்றம் ஆதல்வேண்டும் என்று கருதினர். அவ்வழகு கடவுளின் வெளிப்பாடாகலான், அதற்கு முருகு என்னும் சிறந்ததொரு பெயரிட்டு வணங்குவாராயினர். முருகு என்னும் தனித்தமிழ்ச்சொல் அழகு, இளமை, இன்பம் முதலிய உயரிய கடவுட் பண்புகளை உணர்த்தும் ஒருசொல்லாதல் அறிக. அவ்விறைப்பொருளை ஆண் பெண் ஆகிய இரண்டுபாலுள் ஒன்றாகக் கருதாமையால், கந்தழி என்றாற்போன்று முருகு என்றே வழங்குவராயினர்.

தமிழ்மொழி, மக்களிடத்தே வளர்ச்சியுற்று எழுத்து சொல் பொருள் என்னும் முத்திறத்த இலக்கணங்கள் சான்றோர்களால் வகுக்கப்பட்ட காலத்தேதான் முருகென இறைப்பொருள் என்னும் பொருட்டாய் நின்றசொல், அன் என்னும் ஆண்பால் விகுதி பெற்று முருகன் என்று வழங்கப்பட்டது. நிலத்தை நான்காக வகுத்த காலத்தே, தமிழ்நாட்டில் முதன் முதற்றோன்றிய இம் முருகு நானிலத்தொன்றாய் முதனிலமாகிய மலைநிலத் தெய்வமாக வகுக்கப்பட்டது. இக் காலமே வடவாரியர் தமிழகம் புகுந்து தமிழரொடு கலந்துவாழ்ந்த காலம் ஆகும். ஆகவே, அவர்கள் வழங்கிவந்த இந்திரன், திருமால், வருணன் முதலிய கடவுளரையும் குறிஞ்சி நிலமொழிந்த ஏனை நிலங்கட்குத் தெய்வமாக அமைத்துக்கொள்ளலாயினர்.

இனி, இம் முருகனையும் வடவாரியர் கொண்டிருந்த தெய்வங்களுள் ஒன்றாய கந்தன் என்னும் தெய்வத்தையும் ஒன்றாகக் கருதி, அக் கந்தன் என்னும் தெய்வத்தின் வரலாறனைத்தும் இம் முருகனுடைய வரலாறாகவே வேற்றுமையின்றி வழங்கலாயினர். குமாரசம்பவம், கந்தபுராணம் முதலிய வடமொழிக் காப்பியங்களிலே இக் கந்தனுடைய வரலாறு கூறப்பட்டுள்ளது. அவ் வரலாறு புராணந்தோறும் சிற்சில வேறுபாடுகள் உடையதாம். அவ் வரலாறுகள் பின்வருமாறு:

இவ்வுலகுக்கு எந்நாளும் அருள்புரிவதற்காக சிவபெருமானிடமிருந்து வெளிப்பட்ட மின்னல் சக்தியே முருகன். 'கந்த' என்ற வடசொல்லுக்கு வெளிப்படுதல் என்று பொருள் சொல்கிறார்கள். மேகத்திலிருந்து மின்னல் வெளிப்படுவது போன்று சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து சிவசோதியாக வெளிப்பட்ட ஆறு பொறிகள் ஆறுமுக சுவாமியாகிக் கந்தன் என்று பெயர் கொண்டது. தீப்பொறியாகத் தோன்றி, வானிலிருந்து வாயுவால் சுமந்து வரப்பெற்று, கங்கையில் விடப்பெற்று, சரவணப் பொய்கையில் வளர்ந்த முருகப்பெருமான் நெருப்பையும் எரிக்கும் ஞானாக்கினியாக விளங்குகிறான் என்பது கந்தபுராணச் செய்தியாகும். இன்னொரு வகையான வரலாற்றைக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

சிவபெருமான் மலையரையன் மகளை மணந்த காலத்தே இந்திரன் அவர்பாற் சென்று, "நீ இவளுடன் புணர்தலை ஒழிதல் வேண்டும்" என வேண்டினானாக, இறைவனும் அவன் வேண்டுகோட்கிணங்கி அவளைப் புணர்தல் தவிர்ந்தவனாய்க் கருவினை அவ் விந்திரன் கையிற் கொடுத்தருளினான். அதனை, ஏழ்பெருந் துறவியர் அவ் விந்திரனிடத்திற் பெற்று, அதன் ஆற்றல் தம்மாற் பொறுக்கவியலாமை கண்டு அவ் வாற்றல் தணியும் பொருட்டு இறைவன் கூறாகிய முத்தீயிலே பெய்து மீண்டும் எடுத்துத் தம் மனைவியர்பாற் பகுத்துக் கொடுத்தனர். அவருள் அருந்ததியொழிந்த ஏனைமகளிர் அறுவரும் அக் கருவினை விழுங்கிச் சூன்முதிர்ந்து, சரவணப் பொய்கையில் தாமரைப் பாயலிலே கருவுயிர்த்தனர். அறுவர் ஈன்றமையானே ஆறு வடிவமாக அக் கரு வளருங்கால், இந்திரன் முன்னர்த் தான் துறவிகட்கு இக்கருவினை அளித்தமை மறந்து, அதனைத் தன் வச்சிரத்தால் எறிந்தான். எறிந்த காலத்தே அவ்வாறு வடிவமும் ஒன்றாய்க் கூடி, அவ் விந்திரனோடு பொருது அவனை வலியழித்துப் பின்னர்ச் சூரபன்மர் முதலிய அவுணர்களையும் போரிட்டழித்தது என்பது. இவ் வரலாறு "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாடலிற் கண்டபடியாம். இவ் வரலாறு வேறுவேறு வகையாகவும் வழங்கப்படுகின்றது. கந்தபுராணச் செய்தியே சிறந்த செய்தியாகும்.

இவ் வரலாற்றுக் குறிப்புகள் இத் திருமுருகாற்றுப்படையிற் பலவிடங்களிற் காணப்படுகின்றன.

"ஏது பாவித்திடினும் அதுவாக வந்தருள்செய் எந்தைநீ குறைவு முண்டோ", எனத் தாயுமான அடிகளார் கூறியாங்கு வடிவமும் பெயருமில்லாத அம் முழுமுதற் கடவுள், தன் அன்பர்கள் அன்பாலே அழைத்த எந்த ஒரு பெயரையும், தன் பெயராகக் கொண்டருளி, எந்த ஒரு வடிவையும் தன்வடிவமாக ஏற்றருளி, அவர் நினைந்தவடிவில் அவர் நெஞ்சத் தாமரையிலே விரைந்து எழுந்துவந்து அருள்செய்வன் என்பது முக்காலும் உண்மையேயாம்.

"தாபர சங்க மங்கள் என்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்"

"திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளனெங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்

விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
　　மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி
　　ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே”

என்பதும், பிற்றைநாள் மெய்கண்ட வித்தகர் விளம்பிய மெய்ம்மொழிகள்.

## ஆசிரியர்

திருமுருகாற்றுப் படையினை இயற்றிய ஆசிரியராவார் ‘மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்’ எனப் பத்துப் பாட்டுரையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தெளிவாகக் கூறியுள்ளார்.

பூதத்தால் மலைமுழையிலடைக்கப்பட்டு வருந்திய நிலையில் நக்கீரனார் இத் திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகப்பெருமானாற் சிறைவீடு செய்யப்பெற்று உய்ந்தார் எனப் பிற்காலத்தார் கூறுங்கதை நக்கீரனார் மனநிலைக்கும் வரலாற்று நெறிக்கும் முற்றிலும் மாறுபட்டதென்பதாகும். முருகன் திருவருளால் வீடுபேற்றுக்குரிய திருவடி ஞானம் கைவரப்பெற்ற சீவன் முத்தராக மதுரையில் வாழ்ந்த நக்கீரனாரென்னும் புலவர் பெருமான் முருகப் பெருமானது திருவடிப் பேரின்பத்தை யடைய விரும்பிய முதுவாயிரவலனை நோக்கி ‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்னும் அருட்குறிப்புடன் முருகப் பெருமானது பேரருளின்பத்தையெடுத்துரைத்து அவ்விறைவன்பால் ஆற்றுப்படுத்தும் நிலையில் இத்திருமுருகாற்றுப் படையைப் பாடியுள்ளாரென்பதே நச்சினார்க்கினியர் முதலிய பண்டைச் சான்றோரது துணிபாகும். இப்புலவர் பெருமான் திருமுருகாற்றுப்படை மட்டுமின்றி, நெடுநல்வாடை, நற்றிணையில் ஏழு செய்யுள்கள், குறுந்தொகையில் எட்டு செய்யுள்கள், அகநானூற்றில் 17 செய்யுள்கள், திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும் பாடித் தமிழை வளப்படுத்தியுள்ளார். நக்கீரனார் சிறந்த உரை ஆசிரியராயும் திகழ்ந்துள்ளார். இறையனார் களவியலுக்கு இவர் கண்டவுரை சிறந்த உரையாகும்.

**நக்கீரரின் நூல்கள் : (அகர வரிசையில்)**

1. அகநானூறு : களிற்றியானை நிரை –
   பாடல்கள் : **36, 57, 78, 93, 120.**

   மணிமிடை பவளம் –
   பாடல்கள் : **126, 141, 205, 227, 249, 253, 290.**

   நித்திலக்கோவை
   பாடல்கள் : **310, 340, 346, 369, 389.**

2. இறையனார் களவியல் உரை
3. குறுந்தொகை பாடல்கள் : 78, 105, 143, 161, 266, 280, 368.
4. திருவள்ளுவமாலை பாடல் : 7
5. நற்றிணை பாடல்கள் : 31, 86, 197, 258, 340, 358, 367.
6. பத்துப்பாட்டு : திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை
7. புறநானூறு பாடல்கள் : 56, 189, 395.

புறநானூற்றில் இடம்பெறும்

'தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே' (189)

என்ற பாடலின் கருத்து ஒன்றுக்கே, நக்கீரர் நிறைந்த பெயரும் புகழும் பெறற்குரிய தகுதி படைத்தவராகிறார் என்பது உறுதி.

கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற தொடரைப் போல, 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற தொடரும் உலகம் முழுதும் பரப்பப்பெறுதல் வேண்டும். பரப்புதலுக்குத் தமிழகம் முனைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாக ஏற்போமாக!

இந்தத் தொடரின் பொருளை அனைவரும் குறிப்பாகச் செல்வம் பெற்றவர்கள் உணர்ந்து நடந்து கொண்டால் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம் தேதி நள்ளிரவு 12 மணிக்குப்பின் ஒவ்வொரு இந்தியனும் ரூபாய் நோட்டுகளுக்காக இவ்வளவு கடினப்பட வேண்டியதில்லை. கறுப்புப்பணம் என்ற சொற்றொடரே அகராதியில் இல்லாமல் போயிருந்திருக்கும்.

### உரையாசிரியர்கள்

நம் தமிழ்மொழியில் உரை பலவாக அமைந்த நூல்கள் நான்காம். ஒன்று தொல்காப்பியம், இரண்டு திருக்குறள், மூன்று திருமுருகாற்றுப்படை, நான்கு சிவஞான சித்தியார் சுபக்கம் என்பன.

திருமுருகாற்றுப்படை ஒரு சிறந்த பாட்டோவியம். இதற்கு உரை காண்போருக்கு அவரவர் அறிவுத் திறத்துக்குத் தக்கவாறு அது காட்சியளிக்கும். ஒரு மலைச்சாரலில் பிரம்மாண்டமானதோர் பேரருவியைப் பலர் காண்கின்றனர். இயற்கையழகில் ஈடுபட்ட ஒரு

ஓவியன், புலவன், அடியவர், விஞ்ஞானி, வழிப்போக்கன் முதலியோர் அக்கூட்டத்தில் இருக்கின்றனர். ஒரு திரையில் ஓவியமாகத் தீட்டி மகிழ்கிறான் ஓவியன். இயற்கை வனப்பைக் கண்டு களித்த புலவன் பாடலில் தன் மகிழ்ச்சியை வெளியிடுகிறான். அடியவர் இயற்கையில் இறைவன் உடலையும் அதன் உயிராயிருக்கும் இறைவனையும் காண்கிறார். விஞ்ஞானி நீரிலுள்ள வாயுக்களையும் நீரோட்டத்திலிருந்து உண்டாகக் கூடிய மின்சார சக்தியையும் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தும் வகைகளையும் பற்றி ஆராய்ச்சி செய்கிறான். தாகத்தைத் தீர்த்துக் கொண்டு தன் ஊரை நோக்கிச் செல்லுகிறான் வழிப்போக்கன். **திருமுருகாற்றுப்படையும் இவ்வாறே பலருக்கும் பல வகையாகக் காட்சியளிக்கிறது, பயன் தருகிறது. அதற்கு அறிஞர்கள் காணும் உரைகளும், அவர்கள் கருத்துக்கும், அறிவுத் திறனுக்கும் ஏற்றனவாகவே அமையும்.**

திருமுருகாற்றுப் படைக்குப் பல பழைய உரைகள் உள்ளன.

1. நச்சினார்க்கினியர் உரை 2. பரிப்பெருமாள் உரை 3. பழைய உரை 4. பரிமேலழகர் உரை 5. பரிதியார் உரை என்பன. இவ் ஐவர் உரைகளும் அவர்கள் வாழ்ந்த கால வரையறையைக் கொண்டு பின்வருமாறு முறைப்படுத்தலாம்.[1]

1. பரிப்பெருமாள் – பதினொன்றாம் நூற்றாண்டு
2. பழைய உரை – பதின்மூன்றாம் நூற்றாண்டு
3. பரிமேலழகர் – பதின்மூன்றாம் நூற்றாண்டு
4. நச்சினார்க்கினியர் – பதினான்காம் நூற்றாண்டு
5. பரிதியார் – பதினைந்தாம் நூற்றாண்டு

இவர்களுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் மகாவித்துவான். ஆறுமுக நாவலர் போன்றோரின் உரைகளும் வெளிவந்துள்ளன.

### பரிப்பெருமாள்

இவரைக் கவிப் பெருமாள் என்றும் கூறுவர். திருக்குறளுக்கு உரை வகுத்தவர் இவர். அவ்வுரை இறுதியில்

"தெள்ளிய மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார்
ஒள்ளிய காமநூல் ஓர்ந்துரைத்து – வள்ளுவனார்
பொய்யற்ற முப்பாற் பொருளுரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பொருள் தேர்ந்து"

என்ற வெண்பா காணப்படுகின்றது. இதனால் இவர் மொழியியல், காமநூல் ஆகிய இரு நூல்களையும் எழுதியவர் எனத் தெரிகிறது. இவரது ஊர் தென் செழுவை என்றும் தெரிகிறது. இவ்வூர் பாண்டி மண்டலத்துச் சேதுநாட்டில் உள்ளது என்பர்.

[1]தமிழ் இலக்கிய வரலாறு : மு. அருணாசலம் – 14–ஆம் நூற்றாண்டு

மாயிரு ஞாலத்து மன்பொருள் விளக்கும்
ஆயிரம் கதிரும் ஆழ்கடல் மறைந்தபின்
விரிகதிர் மதியும் விளங்காக் காலத்து
எரிதலைக் கொளீ இய சில்திரி விளக்கின்
அரியவும் பெரியவும் அறிந்தோர் போல
வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை
நன்மதி யுடையோர் நாடார் ஆதலின்
என்மதி யளவில் யானறிந் துரைத்த
மழலைக் கிளவியை மதியோர் ஆராய்ந்து
இகழ்தல் இன்றியே யாவையும் இயைத்துத்
திருத்தி உரைத்தல் வேண்டும்
அருத்தம் பயில்வோர் அருங்கடன் எனவே.[1]

எனவரும் உரைச் சிறப்புப் பாயிரத்தால் இவர்தம் அடக்கமும் அறிவும் புலனாகின்றது.

புதியதுதீது பழையதுநன் றென்றல் பூமியுள்ளோர்
விதியது வேபொரு ளென்னன்மின் நல்லோர் விருப்ப முண்டேல்
புதியது நன்று பழையது தன்னினும் பூமடந்தை
பதியதின் மேவிற் பருமுத்தொ டாடையைப்பார்மின்களே.[2]
அருத்தம் பயில்வோர் அருங்கடன் எனவே.[1]

இப்பாடலால் இவர்தம் ஆய்வுத்திறன் விளங்கும். இப்பாடல்,

தொன்மையவா மெனுமெவையு நன்றாகா இன்று
தோன்றியநூ லெனுமெனவும் தீதாகா துணிந்த
நன்மையினார் நலங்கொண்மணி பொதியுமதன் களங்க
நவையாகா தெனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினார் பழமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழி லேத்துவரே திலருற்று
இகழ்ந்தனரே லிகந் திடுவர் தமக்கெனவொன் றிலரே.[3]

எனும் பாடற் கருத்தோடு இயைபுடைத்தாய் உள்ளது. திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதியவரும் இவரே ஆவர். இற்றைக்குக் கிடைத்திருக்கும் திருமுருகாற்றுப்படை உரைகளுள் இதுவே முந்தியதாம். இவர் காமத்துப் பாலின் தொடக்கத்தில் 'வாத்ஸ்யாயனம்' எனும்

[1]மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 11–ஆம் நூற்றாண்டு, பக். 97
[2]மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 11–ஆம் நூற்றாண்டு, பக். 97
[3]சிவப்பிரகாசம், பா.எண் 12.

காமநூலைக் குறிப்பிடுகின்றார். அந்நூலாசிரியர் 11–ஆம் நூற்றாண்டினராதலின் இவரும் அக்காலம் அல்லது அவருக்குச் சிறிது பிற்பட்டோர் ஆகலாம்.

திருமுருகாற்றுப்படைக்கு எழுதிய இவர் உரை பதவுரையாகவே இருந்தது. இடச் சுருக்கம் கருதிப் பிற்காலத்தில் பொழிப்புரையாக்கி விட்டனர்.

**பழைய உரை**

ஆசிரியர் பெயர் தெரியாத உரை ஒன்று உள்ளது. ஆயினும் அவர் பழைய உரையாசிரியர்களில் ஒருவராகவே இருத்தல் தகும். இந்நூலில் உரையாசிரியர் எனும் பெயரில் தரப்பெற்றுள்ள உரை இவ்வுரையேயாம். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியராகிய இளம்பூரணர் இவரல்லர். இவர் அவரின் வேறாவர். இதுவன்றி இவரைப்பற்றி ஏதும் அறிதற்கியலாதுள்ளது. இவ்வுரையைச் செந்தமிழ் இதழ்களில் முதன்முதலாக வெளிக்கொணர்ந்தவர் வையாபுரிப்பிள்ளையாவர். அவர்தம் முன்னுரையோடு இவ்வுரை 1943ல் வெளியிடப்பட்டுள்ளது[1].

**பரிமேலழகர்**

திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரைச்சிறப்புப் பாயிரத்தில்,

அரிமே லழகுறூஉம் அன்பமை நெஞ்சப்
பரிமே லழகன் பகர்ந்தான் – விரிவுரைமூ
தக்கீர் இஞ்ஞான்று தனிமுருகாற் றுப்படையாம்
நக்கீரன் நல்ல கவிக்கு.

என்றொரு பாடல் காணப்படுகின்றது. இப்பாடல் கொண்டே இந்நூற்குப் பரிமேலழகர் உரை ஒன்று உண்டெனத் தெரியலாயிற்று. எனினும் பத்துப்பாட்டின் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே.சா அவர்கள் இவ்வுரைக் கூறுகளை ஆங்காங்கு குறிக்குமிடத்து வேறுரை என்றே குறிப்பிடுகின்றார். ஒன்று அது தவறாகலாம் அல்லது அவ்வுரை திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரின் வேறாயதொரு பரிமேலழகர் உரையாகலாம் என்பது இக்கால ஆய்வாளரின் கருத்தாகும். இவ்வுரை எழுந்த காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டென்பர்.

**நச்சினார்க்கினியர்**

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரே இந்நூற்கும் உரைகண்டுள்ளார். இவர் வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளினும் அஃகியகன்ற புலமையுடையவர். உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் எனப் பாராட்டப்பெறுவர். இவர் உரை எழுதிய நூல்கள் ஐந்தாம். அவை தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையுள் இருபது பாடல்களாம். இவர் காலம் கி.பி. 14–ஆம் நூற்றாண்டாம்.

---

[1]தமிழ் இலக்கிய வரலாறு : மு. அருணாசலம் – பதின் மூன்றாம் நூற்றாண்டு; பக் – 107.

பதினொன்றாம் திருமுறை (இரண்டாம் தொகுதி)

**பரிதியார்**

நக்கீரர் செய்த நல்முருகாற்றுப் படைக்குத்
தக்கஉரை சொன்ன தகுதியான் – மிக்குலகில்
பன்னூல் அறிந்த பரிதி மறைப்புலவன்
தொன்னூல் அறிவால் துணிந்து.

என வரும் பழம்பாடலால் பரிதியார் இந்நூற்கு உரை எழுதியுள்ளமை தெரியவருகிறது. திருக்குறளுக்கு உரை எழுதினாரும் இவரேயாவர். பரிதிநியமம் எனும் ஊரினராதலின் இப்பெயர் பெற்றார் என்பர். திருக்குறள் உரையில் சிவபெருமான், சிவகீர்த்தி, பரமேஸ்வரன், சிவபுண்ணியம், சிவஞானம் என்பனவாகிய சொற்களை வழங்குவதால் இவர் பழுத்த சைவர் என அறியலாம். இராவுத்தன், பவிசு, பெண்சாதி, சடுதி, காவடி முதலிய சொற்களை இவர் கையாளுவதால் இவர்காலம் பிற்காலமாகலாம் என்றும், அது **15–**ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் கருதுவர்[1].

மேற்காண் ஐந்து உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்து, முனைவர் கு. சுந்தரமூர்த்தி அவர்களின் உரைத்திறனுடன் திருப்பனந்தாள் காசிமடமும், இரத்தினகிரி பாலமுருகன் கோயில் நிர்வாகமும் "உரைக்கொத்து" ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அவர்தம் உரையுடன் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தம் உரை மற்றும் பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரையையும் சேர்த்து எண்மர் உரைக்கொத்தாக வெளியிடத் திருவருள் கூட்டியது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த முருக வழிபாட்டை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். அதற்குப்பின் கால வெள்ளத்தில் முருக வழிபாடு எப்படி இருந்தது என்று ஆராய முற்பட்டபோது பரிபாடல், அகநானூறு, கலித்தொகை, கல்லாடம், தேவாரம் என்று வரிசை நீண்டு அவ்வத்தலங்களைப் போற்றும் நூல்களைப் பட்டியலிட்டோம். நிறைவாக இருபத்தொன்றாம் நூற்றாண்டில் முருக வழிபாடு என்ற தலைப்புக்கு வந்து சேர்ந்தோம். இத்தலைப்பில் நமது மையப் பேராசிரியர்களும் இக்கால வழிபாட்டை நினைவுறுத்தும் வகையில் அவ்வழிபாடுகளை இந்நூலுள் பதிவு செய்துள்ளார்கள். இக்காலத்தில் அறுபடை வீடுகளின் வழிபாட்டையும் ஒப்புமையாகப் பார்க்கவும் திருவருள் கூட்டியது.

இருபத்தி இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி பிற்காலச்சமூகத்திற்கு நமது முருக வழிபாட்டு ஆவணம் தேவை என்று இவைபோன்ற ஏராளமான நுட்பங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு, திருமுருக வழிபாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு நடத்தத் திருவருள் கூட்டுவித்த நிலையில் ஏற்கனவே இரண்டு திங்களுக்கொருமுறை நிகழ்ந்த பன்னிரு திருமுறை ஆய்வுக் கருத்தரங்குகளைக் கீழ்க்கண்டவாறு நினைவு கூர்வோம்.

| | |
|---|---|
| முதல் திருமுறை | டிசம்பர் 27, 28.2014 |
| இரண்டாம் திருமுறை | பிப்ரவரி 21, 22.2015 |
| மூன்றாம் திருமுறை | ஏப்ரல் 18, 19.2015 |
| நான்காம் திருமுறை | ஜீன் 27, 28.2015 |
| ஐந்தாம் திருமுறை | ஆகஸ்டு 29, 30.2015 |
| ஆறாம் திருமுறை | அக்டோபர் 24, 25-2015 |
| ஏழாம் திருமுறை | டிசம்பர் 26, 27-2015 |
| எட்டாம் திருமுறை - I | பிப்ரவரி 27, 28 - 2016 |
| எட்டாம் திருமுறை - II | ஏப்ரல் 23 - 2016 |
| ஒன்பதாம் திருமுறை | ஏப்ரல் 24 - 2016 |
| பத்தாம் திருமுறை - I | ஜீன் 26, 27, 2016 |
| பத்தாம் திருமுறை - II | ஆகஸ்ட் 27, 28, 2016 |
| பத்தாம் திருமுறை - III | அக்டோபர் 22, 23, 2016 |
| பதினொன்றாம் திருமுறை - I | டிசம்பர் 24, 25, 2016 |

அதன் வரிசையில், வரும் பிப்ரவரி மாதத்தில் பதினோராம் திருமுறையின் இரண்டாம் தொகுதிக் கருத்தரங்கமானது கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாம் திருமுறை (இரண்டாம் தொகுதி)

## திருமுருகாற்றுப்படை - வழிபாட்டு வரலாற்றுக் கருத்தரங்கம்

**(18.02.2017, 19.02.2017 சனி, ஞாயிறு)**

## நிகழ்ச்சி நிரல்

| நாள்/நேரம் | சொற்பொழிவாளர் | தலைப்பு |
|---|---|---|
| 18.02.2017 சனி<br>காலை<br>09.00-11.00 | மகாவித்துவான் மயிலம்<br>**வே. சிவசுப்பிரமணியம்**<br>அவர்கள் | திருப்பரங்குன்றம் |
| 18.02.2017 சனி<br>நண்பகல்<br>11.00-01.00 | பேராசிரியர்<br>**ம.வே. பசுபதி** அவர்கள் | திருச்செந்தூர் |
| 18.02.2017 சனி<br>பிற்பகல்<br>02.00-04.00 | சிவத்திரு<br>**ப. குமரலிங்கம்** அவர்கள் | பழனி |
| 18.02.2017 சனி<br>மாலை<br>04.00-07.00 | சேலம்<br>**குஹானந்தா திருப்புகழ் சபை** | திருப்புகழ் இசை வழிபாடு, பரங்கிரி, சீரலைவாய், ஆவினன்குடி மற்றும் சில தலங்கள் |
| 19.02.2017 ஞாயிறு<br>காலை<br>09.00-11.00 | சிவத்திரு<br>**சு. குஞ்சிதபாதம்** அவர்கள் | சுவாமிமலை |
| 19.02.2017 ஞாயிறு<br>நண்பகல்<br>11.00-01.00 | சிவத்திரு<br>**சிவ. காந்தி** அவர்கள் | திருத்தணி முதலிய தலங்கள் (குன்றுதோறாடல்) |
| 19.02.2017 ஞாயிறு<br>பிற்பகல்<br>02.00-04.00 | முதுமுனைவர்<br>**ந.இரா. சென்னியப்பனார்**<br>அவர்கள் | பழமுதிர்ச்சோலை |
| 19.02.2017 ஞாயிறு<br>மாலை<br>04.00-07.00 | சேலம்<br>**குஹானந்தா திருப்புகழ் சபை** | திருப்புகழ் இசை வழிபாடு, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை மற்றும் சில தலங்கள் |

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும், முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின், முனைவர் இரா. மதன்குமார், முனைவர் ச. கவிதா, முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்ட தமிழ்த்துறையினருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி அவர்களுக்கும், கணினி நிபுணர்களான திரு. மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக வெளியிடும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை இன்பம் பெறுவார்களாக.

மென்னூல் வடிவம் www.panniruthirumurai.org என்ற இணையமுகவரியில் உள்ளது. அன்பர்கள் படித்தும், படியெடுத்தும், தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவர்க்கு எடுத்துரைத்தும் இன்புற அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் வருக.

நன்றி.

அன்பன்,

**இராச. வசந்தகுமார்**

வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்

16.01.2017

கோவை - 21

## இருபத்தொன்றாம் நூற்றாண்டில்

| வ. எண் | தலம் | திருப்புகழ் பாடல் எண்ணிக்கை | சஷ்டிக் கவசம் | தினசரி பூசைக் காலங்கள் | போற்றிப் பரவிய நூல்கள் | ஆகமம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருப்பரங் குன்றம் மூலாதாரம் (ச) | 14 | உண்டு | 8 | 40 | காமிகம் காரணம் |
| 2. | திருச்செந்தூர் சுவாதிட்டானம் (ர) | 84 | உண்டு | 9 | 14 | ஆகமம் |
| 3. | ஆவினன்குடி (பழனி) மணிபூரகம் (வ) | 100 (பழனி ஆவினன்குடி சிவகிரி) | உண்டு | 6 | 22 | குமார தந்திரம் காரண ஆகமம் |
| 4. | திருவேரகம் சுவாமிமலை அநாகதம் (ண) | 40 | உண்டு | 6 | 17 | காரண ஆகமம் + குமார தந்திரம் |
| 5. | குன்று தோறாடல் திருத்தணி முதலியன துரியம் (ப) | 63 | உண்டு | 6 | 12 | காமிக, காரண, சுப்ரபேதம் ஆகமம் + குமார தந்திரம் |
| 6. | பழமுதிர் சோலை விசுத்தி (வ) | 16 | உண்டு | 3 | 6 | காமிக ஆகமம் |

## அறுபடை வீடுகள்

| பிரார்த்தனைச் சிறப்பு | தங்கத் தேர் | போற்றிய வேறு பெயர்கள் | இயற்கை எழில் | நிலம்/ ஆண்டு, வருமானம் | இடச்சிறப்பு |
|---|---|---|---|---|---|
| முடிக் காணிக்கை காவடி எடுத்தல் | உண்டு | சத்தியகிரி, சத்திய ஞானகிரி, சுமந்தவனம் | சிறுகுன்று 300 அடி உயரம் | 380.93 ஏக்கர் | அசை வில்லாத விவேகம் |
| உருள்வலம், முடிக்காணிக்கை, காவடி, பால்குடம் | உண்டு | செந்தில், அலைவாய் | கடல், கடற்கரை | 45 கோடி ரூபாய் | விஷயக் கடல் அலை அடிக்கும் இடம் |
| முடிக்காணிக்கை காவடி எடுத்தல் பால், பஞ்சாமிர்த அபிடேகம், காவடிச்சிந்து | உண்டு<br><br>தங்க விமானமும் உண்டு | பொதினி பழனாபுரி சித்தன் வாழ்வு | குன்று உயரம் 450 அடி, 697 படிகள், விஞ்ச் ரோப்கார், யானை வழி, படி வழி. | 781.22 ஏக்கர் | ஆன்ம அறிவு விளக்க இடம் |
| காவடி எடுத்தல், முடிக் காணிக்கை | உண்டு | குருமலை | செய்குன்று 60 அடி உயரம் 60 படிகள் | 274 ஏக்கர் ரூபாய் 7 கோடி | அறிவு பொருந்திய இடம் |
| படித்திருவிழா, காவடி எடுத்தல், முடிக் காணிக்கை | உண்டு<br><br>தங்க விமானமும் உண்டு | தணிகாசலம் | 400 அடி உயர மலை, 365 படிகள் பேருந்து செல்லும் | 900 ஏக்கர் 110 கோடி ரூபாய் 45 உப கோயில்களும் சேர்த்து | அலையற்ற அற்புத இடம் |
| காவடி எடுத்தல், முடிக் காணிக்கை | எதிர் காலத்தில் உண்டு | சோலைமலை, சோலை வெற்பு, குளகிரி, விருஷக்கிரி | நீண்டமலை | 45 இலட்ச ரூபாய் | பட்டறிவு விளங்கும் |

தேடுதல் வேட்டையில் சேகரிக்க இயன்ற அளவு புள்ளி விபரங்களை அளித்துள்ளோம். காலியிடங்களை அடியார்கள் பூர்த்தி செய்து கொள்ளவும்.

| வ. எண் | இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நக்கீரர் காலத்திய திருமுருக வழிபாடு | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருமுருக வழிபாடு |
|---|---|---|
| 1. | பெரும்பாலும் ஊர்களின் முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்தி என்று கூறப்படும் தெருச் சந்திகளிலும், காடுகளிலும், ஆற்றோரங்களிலும், ஆற்றிடைக்குறைகளிலும், வெறியாடு களங்களிலும், கடம்ப மரங்களிலும், பொது மரங்களின் அடியிலும், பொது மண்டபங்களிலும், நடப்பட்ட தறிகளிலும் வழிபட்டனர். | இன்று மயன் போன்ற தேவதச்சர்கள் வகுத்தருளிய சிற்ப சாத்திர விதிப்படி கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், உள், வெளிப்பிரகாரங்கள், தேர்வலம் வரும் வீதிகள் என்றமைத்து முருகப்பெருமானின் திருவுருவை எழுந்தருளச் செய்து வழிபட்டு வருகின்றனர். |
| 2. | இரு பிறப்பாளர்கள் நீராடி, ஈரஆடையுடுத்து, ஆறெழுத்து மந்திரமாகிய மறையையோதி, மலர் தூவி வணங்கியதை ஏரகத்து இறைவன் விரும்பி ஏற்றுள்ளான். மற்ற தலங்களில் இத்தகைய வழிபாடுகளைப் பற்றிச் சொல்லப்படவில்லை. | “எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை'' என்று சேக்கிழார் உரைத்தப்படி கணக்கற்ற ஆகம முறைகளின்படி தமிழ், வடமொழிகளில் ஒரு காலம் முதல் ஒன்பது காலம் வரை தினசரி கால பூசைகள் நடைபெறுகின்றன. சுமார் 71/2 கோடி பொதுமக்கள் வாழும் தமிழ்நாட்டில் 38000 கோயில்கள் உள்ளன. 99% தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் சுமார் 15-20% முருகன் கோயில்கள். மற்றவை சிவன், பெருமாள், அம்பாள், காளி, மாரி, குலதெய்வங்கள், சிறுதெய்வக் கோயில்களாகும். எல்லாச் சிவாலயங் களிலும் முருகனுக்கென்று தனி ஆலயமும் உணடு. |
| 3. | பலியிட்டுக் குருதியோடு பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டு வழிபட்டுள்ளனர். | இன்றைய திருமுருக ஆலயங்களில் பலி என்ற பேச்சுக்கே இடமில்லை |
| 4. | சைவம் என்ற சொல்லே பயன்படுத்தப்படவில்லை. | திருமுருகனின் ஆலயங்களில் அசைவம் என்ற பேச்சுக்கே இடமில்லை |

| | | |
|---|---|---|
| 5. | **வெறியாட்டுதல்.** தமது வாழ்வில் துன்பம், குறைகள் உண்டான போது குறிகேட்டலும், குறிதெய்வத்தான் நேர்ந்தது என்றாலும், தெய்வத்திற்கு வெறியாட்டயர்ந்த தால் தாம் உள்ள துயர் நீங்கும் என்று கருதினாலும், எதிர்கால நிகழ்வை முன்னே அறிய விரும்பினாலும் அவ்வழி முருகப்பெருமானுக்கு வேலனைக் கொண்டு களம் இழைத்து மறியறுத்து, மலர் சிதறி, புகை, சாந்தும் கொடுத்து வழிபாடு செய்தலும், அங்ஙனம் செய்யுங்கால் அக்கடவுள் அவ்வேலனாம் பூசாரி மேல் எழுந்தருளி ஆவன கூறி அவர் குறையைப் போக்குதலும் வழக்கமாம். | இம்மாதிரி வழிபாடுகள் இப்போது இவ்வளவு விரிவாக நடைபெறுவதில்லை. நைமித்திக வழிபாடு என்ற பயன் கருதிச் செய்யும் பூசை மட்டும் சில ஆலயங்களில் நடைபெறுகிறது. பக்தர்களின் குறைகளை இறைவனிடம் சொல்லிப் பலன் பெறுவதற்காக சில பரிகார வழிபாடுகளைச் சில கோயில்களில் செய்கிறார்கள். அவற்றிற்குப் பரிகாரத் தலங்கள் என்றே பெயர். |
| 6. | குறிஞ்சிப் பண்ணைப்பாடிக் குரவைக் கூத்தாடி இறைவனை வழிபட்டுள்ளனர். | சுவாமியின் பெருங்கருணையில் நூற்றுக்கு மேற்பட்ட பண்களை இசை இலக்கணத்தோடு பாடவும், 108க்கு மேற்பட்ட தாண்டவங்களாக ஆடி வழிபடவும் சுவாமி இந்நூற்றாண்டு மக்களுக்கு அருள்பாலித்துள்ளார். |
| 7. | ஊது கொம்புகள் பலவற்றை ஒருங்கே ஊதி, வளைவுடைய மணியை ஒலிப்பித்து வேண்டியவர் வேண்டிய வரம் பெறும் வண்ணம் நின்று வழிபாடு செய்தனர். | காற்று, நரம்பு, தோல் மற்றும் கனக்கருவிகளாம் குழல், வீணை, யாழ், மத்தளம், பறை, தாளம் என்று எண்ணற்ற வாத்திய வகைகளை இசைத்து வழிபடுகிறோம். குறுந்தகடுகளில் எண்ணற்ற பாடல்களைப் பதிவு செய்து அவற்றை இயக்கி வழிபட்டு வருகிறோம். |
| 8. | கந்தருவர் யாழிசைப்ப முப்பத்து முக்கோடி தேவர்களும் முது தேவர்களும் மற்றையோரும் வந்து வழிபடுகின்றனர். | இலட்சக்கணக்கான பக்தர்கள், பல வகையான காவடிகள், பால்குடம், தீர்த்தம் எடுத்துக்கொண்டு, இசைப்பாடல்களை பாடிக்கொண்டே பல மைல் தூரம் பாத யாத்திரை செய்தும், மலைகள் இருந்தால் கிரிவலம் செய்தும், திருச்செந்தூர் போன்ற தலங்களில் உள்ளது போலப் பெரிய பிரகாரங்கள் இருந்தால, உருள்வலம் செய்தும் பெரியோர், சிறியோர், ஆண்கள், பெண்கள் என்று அனைத்து சாதியினரும் வழிபடுகின்றனர். |

| வ. எண் | இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நக்கீரர் காலத்திய திருமுருக வழிபாடு | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருமுருக வழிபாடு |
|---|---|---|
| 9. | உற்சவம் எனப்படும் பெருந்திருவிழாக்களோ, கும்பாபிடேகம் போன்ற நிகழ்வுகளோ நிகழ்ந்ததாகக் குறிப்புகள் இல்லை. | தினமும் ஒரு காலம் முதல் ஒன்பது காலம் வரை பூசைகள், ஓராண்டிற்கு ஒன்று / இரண்டு / நான்கு என்று பல பெருந்திருவிழாக்கள், 12 ஆண்டுக்கு ஒருமுறை திருப்பணி செய்து கும்பாபிடேகம் என்று இவையெல்லாம் சிறப்பாக நடைபெறுகின்றன. |
| 10. | மாதம் மும்மாரி பெய்து இயற்கை வளங்கள் கொழித்து விளங்கின. | மூன்று மாதத்துக்கு ஒரு மழை பெய்வதே அரிதாக உள்ளது. தென்மேற்குப் பருவ மழைகாலம், வடகிழக்குப் பருவமழைக்காலம் என்ற இரண்டு மழைப்பருவங்கள் தற்போது உண்டு. தற்போதைய வடகிழக்குப் பருவ மழையில் 69% பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 10000 லிட்டர் கொள்ளளவு ஒரு சரக்குந்து சுமக்கும் நீரை ரூ.1,200/- கொடுத்து விலைக்கு வாங்குகிறோம். |
| 11. | ஓலைச்சுவடிக்காலம். இவ்வளவு நூல்கள் படிக்க வாய்ப்பில்லை. | 1853 ஆண்டு அச்சு இயந்திரம் தமிழ்நாட்டுக்கு வந்தது. இலட்சக்கணக்கான நூல்களும் இலட்சக்கணக்கான பிரதிகளும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. |
| 12. | கோயில்களைப்பற்றிய பரிணாம வளர்ச்சி எட்டாத காலம். | தங்க, வெள்ளிக்கவசங்கள் மூலவர் திருவுருக்களுக்குச் சாற்றப்பட்டு சில கோயில்களின் விமானங்களும் தங்க கவசம், கலசமிடப்பட்டு முருகப்பெருமான் மாலை நேரங்களில் தங்கத் தேரில் கோயில் வலம் வருகிறார். அனைத்து சேவைகளுக்கும் கட்டணம் என்ற கொள்கையும் உருவாகியுள்ளது. |

**பதினொன்றாம் திருமுறை தொகுதி-II திருமுருகாற்றுப்படைக்கு இதுவரை வெளிவந்துள்ள நூல்பதிப்புகள்**

| வ.எண் | ஆண்டு | நூலின்பெயர் | ஆசிரியர்/வெளியீட்டாளர் | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| 1. | சங்க காலம் | திருமுருகாற்றுப்படை | மதுரைக்கணக்காயர் மகன் நக்கீரர் முழு முதல் மூலம் | சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் |
| 2. | | திருமுருகாற்றுப்படை உரை | கவிப்பெருமாள் | |
| 3. | | திருமுருகாற்றுப்படை உரை | பரிதியார் | |
| 4. | 1853 | திருமுருகாற்றுப்படை உரை | யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் நச்சினார்க்கினியர் உரைக் கருத்தைத் தழுவிச் செய்த புத்துரை | 1960 ஆண்டு வரை 18 பதிப்புகள் வெளிவந்துள்ளன |
| 5. | 1889 | திருமுருகாற்றுப்படை உரை | நச்சினார்க்கினியர் உரை உ.வே.சா. பதிப்பு | |
| 6. | 1924 | திருமுருகாற்றுப்படை உரை | பரிமேலழகர் உரை. அ. மகாதேவச்செட்டியார் பதிப்பு | |
| 7. | 1943 | திருமுருகாற்றுப்படை உரை | உரையாசிரியர் உரை வையாபுரிப்பிள்ளை வெளியீடு | |
| 8. | 1953 | நக்கீரதேவர் அருளிய திருமுருகாற்றுப்படை | உரையாசிரியர் பெ.கா. சண்முகநாதன், பி.ஏ., பி.எல்., திண்டுக்கல், திருச்செந்தூர் தேவஸ்தான வெளியீடு | |
| 9. | 1957 | திருமுருகாற்றுப்படை | மூலமும் உரையும் வே.இரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | 1959 | திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து | தொகுப்பாசிரியர்கள் வித்துவான் கே.எம். வேங்கடராமையா, வித்துவான் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் | பதிப்பாசிரியர் T.M. குமரகுரபரன் பிள்ளை, ஸ்ரீவைகுண்டம், பொருளுதவி- காசிவாசி அருணந்தித் தம்பிரான் |
| 11. | 1968 | திருமுருகாற்றுப்படை உரை விளக்கம் | கி.வா. ஜகன்னாதன், அமுத நிலையம், சென்னை வெளியீடு | இரண்டாம் பதிப்பு 1981 மறுபதிப்பு 2001 |
| 12. | 1987 | திருமுருகாற்றுப்படை உரைத்திறன் | பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி, வெளியீடு இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் | |
| 13. | 2002 | திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே | வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார், வெளியீடு - சைவ சித்தாந்தப் பெருமன்றம் | |
| 14. | 2014 | திருமுருகாற்றுப்படை எளிய உரைநடையுடன் | போராசிரியர் ம. வே. பசுபதி உரை. காசிமட வெளியீடு | அருள்நந்தித்தம்பிரான் 42 ஆம் ஆண்டு மாகேஸ்வர பூசை வெளியீடு |
| 15. | 2017 | திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து-திருமுருக வழிபாட்டு வரலாற்று நூல் | பன்னிரு திருமுறை ஆய்வுமையம் கற்பகம் பல்கலைக்கழகம் | மூலமும் உரையும், சங்க காலம் - அதற்குப்பின் இருபத்தொன்றாம் நூற்றாண்டு வரை முருக வழிபாடுகள் |

*யாழ்ப்பாணத்து நல்லூர் திருஆறுமுக நாவலரவர்கள் 1849 ஆம் ஆண்டு சென்னைப்பட்டணத்திற்குப் போய் ஒரு அச்சு இயந்திரம் வாங்கிக்கொண்டு வந்து "வித்தியாநுபாலன யந்திரம்" என்னும் பெயர்கொடுத்து, யாழ்ப்பாணத்திலே வண்ணார் பண்ணையிலே தாபித்த அச்சகத்திலே திருமுருகாற்றுப்படையைத் தாமியற்றிய உரையோடு முதன்முதலில் அச்சிட்டு 1853 ஆம் ஆண்டு வெளியிட்டார்கள். அவரைப்போன்றே கடினமாக உழைத்து மேற்கண்ட பதிப்புகளை உருவாக்கிய பதிப்பாசிரியர்களுக்கும், உரையாசிரியர்களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறோம். இந்நூல் வெளிவர அன்னாரின் பதிப்பு நூல்கள் பயன்பட்டன.*

# திருமுருகாற்றுப்படையின் திரண்ட பொருள்

"உலகத்துப் பல்லுயிர்களும் மகிழ நீலக்கடல்மேல் தோன்றும் காலையிளங் கதிரவனைப் போன்று நீலமயிலின்மேல் செம்மேனிப் பேரொளியினனாகத் திகழ்வோன் முருகப்பெருமான். தன்னைச் சேர்ந்தவர்களது தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய ஆற்றல் மிக்க திருவடியினையும், அழித்தற்குரிய கொடியோரை அழித்த கையினையும் உடையவன். அறக்கற்பினையுடைய தெய்வயானையார் கணவன். செங்கடம்பின் மாலையசையும் மார்பினை உடையவன். வண்டுகள் மொய்க்காத தெய்வத்தன்மை வாய்ந்த செங்காந்தட் பூவாலாகிய கண்ணியைச் சூடிய திருமுடியையுடையவன். கடல் நடுவிற் புகுந்து சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற சுடர்விடும் நெடிய வேலாலே, அவுணரது நல்ல வன்மையெல்லாம் அழியும்படி கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தைப் பிளந்த குற்றமில்லாத வெற்றியினையும், ஒருவராலும் அளந்தறியவொண்ணாத பொருள்சேர் புகழினையும் உடையவன். சிவந்த வேற் படையைத் தாங்கிய சேயோனாகிய முருகப்பெருமானுடைய திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களினும் விரும்பிப் புரிந்த தலைமை பெற்ற உள்ளத்துடனே அப்பெருமான்பாற் செல்லுதற்கு நீ விரும்பி விட்டாயாயின் நினது நல்ல நெஞ்சத்தினது இனிய விருப்பம் ஈடேற நீ கருதிய வீடுபேற்றின்பத்தை இப்பொழுது தப்பாமற் பெறுவாய். வெற்றியாலும் செல்வத்தாலும் விளக்கமுற்ற கூடல் நகரத்துக்கு மேற்றிசையிலுள்ளதும், இரவெல்லாம் தாமரை மலரில் உறங்கிய வண்டினங்கள் விடியற்காலத்தே நெய்தற் பூவை யூதி ஞாயிறு தோன்றின காலத்தே கண்ணைப் போன்று மலர்ந்த சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்கும் வளமார்ந்ததுமாகிய திருப்பரங்குன்றத்திலே இறைவனாகிய முருகன் மனம் விரும்பி எழுந்தருளியிருத்தலும் உரியன். அதுவன்றி, ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் தத்தமக்கேற்ற தொழில் செய்ய யானையின்மேலெழுந்தருளி வான்வழியாகத் திருச்சீரலைவாய் என்ற திருப்பதியை யடைதலும் அவனுக்கு நிலைபெற்ற பண்பாகும். அதுவன்றிப் படைத்தற் கடவுளாகிய நான்முகனுக்கேற்பட்ட சாபத்தை நீக்குதற் பொருட்டுத் திருமால் உருத்திரன் இந்திரன் ஆகிய தெய்வங்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும், பதினெண்கணங்களும் துனியில் காட்சி முனிவர் முற்புகக் கந்தருவர் யாழிசைக்க உடன் வந்து காணத் திருவாவிநன்குடியில் தன் தேவியுடன் சிலநாள் அமர்ந்திருத்தலும் உரியன். அதுவன்றி இருபிறப்பாளராகிய அந்தணர்கள் நீராடி ஈர ஆடை உடுத்து ஆறெழுத்து மந்திரமாகிய

மறையை ஓதி மலர் தூவி வணங்க அவ்வழிபாட்டை விரும்பியேற்று ஏரகம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருத்தலும் உரியன். அதுவன்றி, குறமகளிராடுங் குரவைக் கூத்துக்கு முதற்கை கொடுத்து அம்மகளிருடன் மலைகள்தோறும் விரும்பி விளையாடுதலும் அவன்பால் நிலைபெற்ற அருட்குணமாகும். அதுவேயுமன்றி, ஊர்கள்தோறும் மக்கள் கொண்டாடுந் திருவிழாக்களிலும் அன்புடைய அடியார்கள் உளமுருகிப் போற்ற அமைந்த இடங்களிலும் முருக பூசை புரியும் வேலனென்பான் வேலேந்தி வெறியாடு களத்திலும் காடுகளிலும் இளமரச் சோலைகளிலும் ஆற்றிடைக் குறையிலும் குளங்களிலும் வேறுபல எழில் மிக்க இடங்களிலும் பல தெருக்கள் ஒன்று கூடும் சந்திகளிலும் புதுப்பூ மலரும் கடம்ப மரங்களிலும் மன்றங்களிலும் பொதுவாகிய அம்பலங்களிலும் தெய்வம் உறையுந் தூண்கள் நிலைபெற்ற இடங்களிலும் குறையிரந்து வேண்டும் அன்பர்கள் தாம் விரும்பியவாறே பெற்று நின்று வழிபட அவ்வவ் விடங்களிலே நிலைபெற எழுந்தருளியிருத்தலும் திருவருட் பெரியோர் அறிந்து கூறிய மெய்ந்நெறியாகும். யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலே யாயினுமாக, அல்லது பிற இடங்களிலேயாயினுமாக, நீ முற்பட அம் முருகப் பெருமானைக் கண்டபொழுது முகம் விரும்பித் துதித்துக் கைகளைத் தலைமேற் குவித்து நின்று வாழ்த்திப் பின்பு அவன் திருவடிகளிலே தலைபொருந்தும்படி வீழ்ந்து வணங்கி,

"நெடும் பெருஞ் சிமையத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால் வரை
மலைமகள் மகனே மற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"

என்பன முதலாக யான் அறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் நினக்குத் தெரிந்த பலவற்றையும் கூறிப் புகழ்ந்து, "நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை யுடைய பெருமானே, நின்தன்மையெல்லாம் முழுதும் அளந்தறிதல் நிலைபெற்ற எவ்வுயிர்க்கும் அரிதாகையினாலே நின்திருவடியைப் பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன்" என அவ் இறைவனை நோக்கி நினது வேட்கையினைத் தெரிவிப்பாயாக. நீ அங்ஙனம் தெரிவித்தற்கு முன்னரே முருகனைச் சேவித்து நிற்போராகிய மெய்யடியார்கள், அங்கே பொலிவுடன் வந்து தோன்றி அவ்விறைவனை நோக்கிப் "பெருமானே, அறிவு முதிர்ந்த வாய்மையுடைய

இப்புலவன் நினது பொருள்சேர் புகழுரையினைக் கூற விரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதி பயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்துள்ளான். இவன் நின்னால் அளிக்கத் தக்கவன்" என நின்பொருட்டுக் குறையிரந்து நிற்பர். அந்நிலையில் இழுமென இழிதரும் அருவி நீரையும் பழம்முதிர்ந்த சோலைகளையும் உடைய மலைக்கு உரியவனாகிய முதிர்ந்த சோலைகளையும் உடைய மலைக்கு உரியவனாகிய முருகப்பெருமான், தெய்வத்தன்மையமைந்த பேராற்றல் விளங்கும் வடிவினையும் வானளவோங்கிய வளர்ச்சியையு முடையவனாக அவ்விடத்தே வந்து தோன்றித் தனது பேருருவம் மக்கள் கண்களாற் காண்டற்கரியதாதலின் அப்பெரிய வடிவத்தை உள்ளடக்கிக் கொண்டு தனது பழைய வடிவாகிய இளமைக் கோலத்தினை நினக்குக் காட்டி, "நீ வீடுபெற நினைந்து வந்த வருகையை யான் முன்னரே யறிவேன். அது நினக்கு எய்துதற் கரிதென்று அஞ்சுதலைத் தவிர்க" என்று நின்பால் அன்புடைய நல்ல வார்த்தைகளைப் பலமுறையும் அருளிச் செய்து, "கல் சூழ்ந்த இவ்வுலகிலே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரிமையுடையையாய்க் கேடின்றித் தோன்றும்படி பிறராற் பெறுதற்கரிய சிறப்பாகிய வீடுபேற்று இன்பத்தை நினக்குத் தந்தருளுவான்" என்பது இத்திருமுருகாற்றுப் படையின் திரண்ட பொருளாகும்.

எல்லாப் பொருளினும் சிறந்ததாகிய வீடுபேற்றினை 'விழுமிய பெறலரும் பரிசில்' என நக்கீரனார் இத்திருமுருகாற்றுப் படையிற் சிறப்பித்துள்ளார். விழுமிய பரிசில், பெறலரும் பரிசில் என இயையும். வீடுபேற்றினுஞ் சிறந்தது பிறிதொன்றின்மையின் அதனை விழுமிய பரிசில் என்றும், அவ் வீடுபேறுதானும் இறைவனது திருவருளாற் கிடைக்கப் பெறுவதன்றி உயிர்கள் தாமே தமது முயற்சியாற் பெறுதற்குரிய எளிமைத் தன்மைத்து அன்றாதலின் அதனைப் பெறலரும் பரிசில் என்றும் நக்கீரனார் குறித்த திறம் நினைந்து மகிழத் தக்கதாகும்.

கந்தழியைப் பெற்றானொருவன் அதனைப் பெறாதான் ஒருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பது பற்றி நக்கீரனார் இத்திருமுருகாற்றுப்படையைப் பாடியுள்ளாரென்பர் நச்சினார்க்கினியர். "கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்; அது.

'சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்'

என்பதாம். இதனை,

'உற்ற வாக்கையி னுறுபொருள் நறுமலரெழுதரு நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'

என அதனை உணர்ந்தோர் கூறிய வாற்றான் உணர்க" என நச்சினார்க்கினியர் கூறிய விளக்கம், இத்திருமுருகாற்றுப்படையும் திருவாசக முதலிய திருமுறைகளும் போற்றும் முழுமுதற் கடவுள் ஒன்றேயென்பதனை இனிது புலப்படுத்துதல் காணலாம்.

இத்திருமுருகாற்றுப்படை வித்தெழுத்தாகிய மந்திரங் கலந்த சொற்கள் மிகுதியாகச் சேர்த்து ஆக்கப்பட்டுள்ளதென்றும், இதனை நாடொறும் அன்பாலே ஓதி முருகப்பெருமானை வழிபாடு செய்வோர், இம்மையின்பம் உடையவராய் வாழ்ந்து இறுதியில் வீடுபேறும் எய்துவர் என்றும் சான்றோர் கூறுவர்.



உ
*சிவமயம்*

# பதினொன்றாம் திருமுறை - இரண்டாம் தொகுதி

***நக்கீரர் அருளிய***

## திருமுருகாற்றுப்படை (முழுநூல்-மூலம்)

***(அகவற்பா)***

*திருச்சிற்றம்பலம்*

### 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)
ஓஅற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்(து)
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்(து)
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்குஞ் செயிர் தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்

மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்(டு)
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்(பு)
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்(டு)
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்(து)

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம்மலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன், அதாஅன்று:

## உ. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளந்து அன்ன வேழம் மேல்கொண்(டு)
ஐவேறு உருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்: ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிதுஒழுகிக்

காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே: ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே: ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே: ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை: உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை;
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப: ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்புஆ றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே, அதாஅன்று;

## 3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்

மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்உறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மெல்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்(று)
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்(து)
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்

தாமரை பயந்த  தாஇல் ஊழி
நான்முக ஒருவன் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொ(டு)
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளிஇடைத்
தீயெழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கின்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன், அதாஅன்று;

### 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅ(து)
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்(டு)
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்(து)
இருபிறப் பாளர் பொழுதுஅறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர்தற் புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்(து)
ஏரகத்து உறைதலும் உரியன், அதாஅன்று;

### 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்

நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலைஇடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மரத்தாழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்புஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறும்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணைத் தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே அதா அன்று;

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர

நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்த ஆறே
ஆண்டுஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நிலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை

மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்று ஆடுஅகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் துஎய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புடை நன்மொழி அளைஇ விளிவுஇன்(று))
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்(து)
ஒருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்(து)
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த

தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ(டு)
இரும்பினை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்(டு)
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்(று)
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

**திருச்சிற்றம்பலம்**

| வ.எண். | தலம் | அடி எண்கள் | அடிகள் |
|---|---|---|---|
| 1. | திருப்பரங்குன்றம் | 1–77 | 77 |
| 2. | திருச்சீரலைவாய் | 78–125 | 48 |
| 3. | திருவாவினன்குடி | 126–176 | 51 |
| 4. | திருவேரகம் | 177–189 | 13 |
| 5. | குன்றுதோறாடல் | 190–217 | 28 |
| 6. | பழமுதிர்சோலை | 218–317 | 100 |
| | | மொத்தம் | 317 |

*நூல்களைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் இறுதியில் பயனைச் சொல்வது ஒரு பழக்கம். திருமுருகாற்றுப் படை இந்த நாட்டில் பல காலமாகப் பாராயண நூலாக இருந்து வருகிறது. அதைப் பாராயணம் செய்த அன்பர்கள் அதற்குப் பயனாகச் சில கவிகள் இருந்தால் நலமாக இருக்கும் என்று எண்ணினார்கள். பக்தி கனிந்த உள்ளமுடைய புலவர் ஒருவர் சில வெண்பாக்களை இயற்றிப் பலருக்கும் கூறினார். பிறகு எல்லாரும் திருமுருகாற்றுப் படையை பாராயணம் செய்து முடித்தவுடன் அந்த வெண்பாக்களையும் சேர்த்து ஓதும் வழக்கம் வந்தது. அவ்வெண்பாக்களை இங்கு காண்போம்.*

## திருமுருகாற்றுப்படைப் பாராயணப் பயன் தச வெண்பாக்கள்

*நேரிசைவெண்பா*

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் – என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றுஅங்கு அமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா – முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் – பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 5

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகத்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். 6

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா – பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமன்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு – சுருங்காமல்
ஆசையாய் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் – முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். 10

**திருச்சிற்றம்பலம்**

**திருமுருகாற்றுப்படை - திருப்பரங்குன்றம் பொருளடக்கம்**


| வ.எண் | பாடல் அடிகள் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 1 – 6 | நச்சினார்க்கினியர் உரை | 47 |
| 2. | ,, | உரையாசிரியர் உரை | 48 |
| 3. | ,, | பரிமேலழகர் உரை | 49 |
| 4. | ,, | கவிப்பெருமாள் உரை | 50 |
| 5. | ,, | பரிதியார் உரை | 50 |
| 6. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 50 |
| 7. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 53 |
| 8. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 70 |
| 9. | 7 – 11 | நச்சினார்க்கினியர் உரை | 80 |
| 10. | ,, | உரையாசிரியர் உரை | 80 |
| 11. | ,, | பரிமேலழகர் உரை | 81 |
| 12. | ,, | கவிப்பெருமாள் உரை | 81 |
| 13. | ,, | பரிதியார் உரை | 81 |
| 14. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 82 |
| 15. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 82 |
| 16. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 84 |
| 17. | 12–44 | நச்சினார்க்கினியர் உரை | 87 |
| 18. | ,, | உரையாசிரியர் உரை | 90 |
| 19. | ,, | பரிமேலழகர் உரை | 93 |
| 20. | ,, | கவிப்பெருமாள் உரை | 95 |
| 21. | ,, | பரிதியார் உரை | 96 |
| 22. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 97 |
| 23 | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 98 |
| 24. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 107 |

| | | | |
|---|---|---|---|
| 25. | 45 – 61 | நச்சினார்க்கினியர் உரை | 116 |
| 26. | ,, | உரையாசிரியர் உரை | 118 |
| 27. | ,, | பரிமேலழகர் உரை | 120 |
| 28. | ,, | கவிப்பெருமாள் உரை | 121 |
| 29. | ,, | பரிதியார் உரை | 122 |
| 30. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 122 |
| 31. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 127 |
| 32. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 136 |
| 33. | 62 – 66 | நச்சினார்க்கினியர் உரை | 142 |
| 34. | ,, | உரையாசிரியர் உரை | 143 |
| 35. | ,, | பரிமேலழகர் உரை | 143 |
| 36. | ,, | கவிப்பெருமாள் உரை | 143 |
| 37. | ,, | பரிதியார் உரை | 144 |
| 38. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 144 |
| 39. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 144 |
| 40. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 150 |
| 41. | 67 – 77 | நச்சினார்க்கினியர் உரை | 153 |
| 42. | ,, | உரையாசிரியர் உரை | 154 |
| 43. | ,, | பரிமேலழகர் உரை | 156 |
| 44. | ,, | கவிப்பெருமாள் உரை | 157 |
| 45. | ,, | பரிதியார் உரை | 157 |
| 46. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 157 |
| 47. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 158 |
| 48. | ,, | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 166 |
| 49. | | திருப்பரங்கிரியைப் போற்றும் நூல்கள் | 171 |
| 50. | | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருப்பரங்குன்றம் | 211 |

# திருமுருகாற்றுப்படை

***(உரைக்கொத்து)***

*திருச்சிற்றம்பலம்*

## 1. திருப்பரங்குன்றம்

**உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)**
**ஓஅற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி**
**உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்**
**செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை**
**மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்**

---

### முருகனின் தோற்றம், அற, மறக்கருணை

**1. நச்சினார்க்கினியர்**

*உலகம் என்பது முதல் கணவன் (6) என்னும் துணையும் ஒரு தொடர்.*

*உலகம் உவப்ப - சீவான்மாக்கள் உவப்ப,*

*உலகம் என்பது பலபொருளொரு சொல்லாய் நிலத்தையும், உயிர்களையும், ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்குமேனும் ஈண்டு உவப்ப என்றதனால், மண்ணிடத்து வாழுஞ் சீவான்மாக்களை யுணர்த்திற்று.*

*(வலனேர்பு திரிதரு:) ஏர்பு - எழுந்து, உதயமாகி. ஏர்பு வலன் திரிதரு - எழுந்து மகா மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்.*

*பலர் புகழ் ஞாயிறு - எல்லாச் சமயத்தாரும் புகழும் சூரியனை.*

*கடற் கண்டாங்கு - கடலிடத்தே கண்டாற் போல,*

*இது வினையெச்சவுவமம்: "விரவியும் வரூஉ மரபின என்ப" என்பதனால், தொழிலுவமமும், வண்ணவுவமமும் பற்றிவந்தது: என்ன? ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலில் தொழிலுவமமும், தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலிற் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமும் கொள்ளக் கிடந்தமை காண்க.*

*(ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி:)*

ஓ அற இமைக்கும் அவிர் ஒளி - இருவகை இந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கள் மேற்சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும் விளங்குகின்ற ஒளி,

ஓ - தங்குதல். அற - நீங்க. ஓ என்பது ஓரெழுத்தொரு மொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டினையும் குவித்தல், அது "நுதல திமையா நாட்டம்" (அகம் - கடவுள் வாழ்த்து) என்பதனானுணர்க

சேண் - தூரத்தில். அவிழ் - பிரகாசிக்கின்ற. சேண் விளங்கு ஒளி - கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்கள் எல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற ஒளியினையும்,

உவப்ப எழுத்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற ஒளியெனத் தொழிலுவமங் கொள்ளுங்கால் வினைமுடிக்க. இனி உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்குச் சேண் விளங்கொளி யென்ன வண்ண வுவமங் கொள்ளுங்கால் வினை முடிக்க.

உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்தாள் - தன்னைச் சேர்ந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய, அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய தாளினையும்,

செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை - அழித்தற்கு உரியாரை அழித்த இடியை மாறுபட்ட பெருமையினையுடைய கையினையும்,

மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன் - மறக்கற்பில்லாத அறக் கற்பினையும் ஒளிபொருந்திய நதுலினையுமுடைய இந்திரன் மகள் தெய்வயானையார் கணவன்;

இப்பெயரை முற்கூறினார், படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற.

ஒளியினையும் (3), தாளினையும் (4), கையினையும் (5) கணவன் உடைய என முடிக்க.

கணவனென்பது ஈண்டு முருகனென்னுந் துணையாய் நின்றது.

**உ. உரையாசிரியர்**

உலகம் உவப்ப வலன் நேர்பு திருதரு - உலகத்திலுள்ள பல்லுயிர்களும் மகிழ மேருவை வலமாக, யாவர்க்கும் நேராகச் சுழலும்.

பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு - தனது ஒளியாற் காட்சியின் பயன் கொள்வார் பலரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்துக் கண்டாற் போல.

கடலிற் பசுமையும் ஆதித்தன் திருமேனியும் போன்று, மயிலிற் பசுமையும் பிள்ளையார் திருமேனியும் மனத்தாற் கருதுவோர்க்குப் புலப்படலால்

இவ்வண்ணம் உவமை கூறப்பட்டது.

ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி - ஞாயிற்றின் ஒளி போலப் போது செய்யாமல், எக்காலமும் ஒழிவற விளங்குவதாகி மனவாக்கையும் கடந்த தூரத்திலே விட்டு விளங்காநின்ற ஒளியினையும்,

இதற்குச் சோமசூரியாக்கினி யொளிசெல்லாமல் ஒழிவற இயல்பான ஒளியையுடைய தேவருலகத்திலே அகமும் புறமுமாகி விட்டு விளங்காநின்ற ஒளி யென்றுமாம்.

உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள் - தன்னை அடைவோரைத் தாங்கும் யான் எனது என்னுஞ் செருக்கைக் கெடுக்கும் வலிய தாளினையும்,

செறுநர்த்தேய்த்த செல் உறழ் தடக்கை - தனது அருள்வழி நில்லாது மாறுபட்டோரை அழித்த, இடியேறு போன்ற பெரிய கையினையும் உடைய.

மறு இல் கற்பின் வாணுதல் கணவன் - குற்ற மில்லாத அ(ற)க் கற்பையுடைய இந்திரன் மகள் தெய்வயானையார் கணவன்.

### 3. பரிமேலழகர்

'உலகமுவப்ப .. ... ... .. மலைகிழ வோனே" என முதலையும் முடிவையும் சொல்ல ஒருமை பெற்ற உள்ளத்துடனே ஒருகாற் பாடமோதியது எனக் கொள்க.

உலகம் உவப்ப - [1]உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டாதலாலும் உயர்ந்தோராகிய பரம இருடிகளாயுள்ளோர் விரும்ப: உயர்ந்தோர் விரும்ப எனினும் அமையும்.

வலன் ஏர்பு திரிதரு - வலமாகத் திரிந்தருளுகின்ற, ஒன்றைக் குறித்து வலம் வரவேண்டுதலால் அது மகா மேருவெனக் கொள்க. இதுவன்றி, “வெற்றியாலெழுந்து திரிதருகின்ற” தென்பாருமுளர்: அது பொருந்தாமை யறிக. அஃதெங்ஙனமெனின் இம் மகாமேரு பூமிக்கு நடுவாதலானும், இதனுச்சியிற் பரமேச்சுரன் எழுந்தருளி யிருத்தலானும் எனக் கொள்க. இஃதன்றிப் பூமியை வலமாக எனினும் அமையும்.

பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு - எல்லாச் சமயத்தாராலும் கொண்டாடப்பட்ட ஆதித்தனைக் கடலிற் கண்டாற் போல,

என்றதனால் உவமை ஆதித்தன் உதிக்கின்ற பொழுதிற் செம்மையும், கடலிற் பசுமையும், பிள்ளையார் திருமேனியினையும் மயில் நிறத்தினையும் காட்டிற்று எனக்கொள்க.

---

1. தொல்காப்பியம்

*ஒவற இமைக்கும் சேண் விளங் கவிரொளி - அதி தூரத்திலே தோன்றி ஒளிவிட்டு விளங்கிப் பாடஞ்செய்கின்ற திருநிறத்தினையுடையனுமாய்: "இதுவன்றி இமைத்தல் - நிறைதல் விட்டு விளங்கும்" என்பாரு முளர்.*

*உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்றாள் - மெய்யடி யாரைக் காக்கின்ற வலியினையுடைத்தான சீபாதத்தையுடையனுமாய்,*

*செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை - சத்துருக்களைக் கெடுத்த மேகத்தினது செய்தியையுடையவாய கைகளை யுடையனுமாய்.*

*மறுவில் கற்பில் வாணுதல் கணவன்-குற்றமிலாத பதிவிரதா பாவத்தினையும் ஒளிதரு நெற்றியினையு முடைய தெய்வ யானைக்குக் கொழுநனுமாய்.*

### 4. கவிப்பெருமாள்

*உயர்ந்தோர் விரும்பும்படி எழுந்து மேருவை வலமாக வருகின்ற பலரானும் புகழ்ப்பட்ட ஆதித்தன் கடலிடத்தே கண்டாலொத்த ஒழிவில்லாமல் விளங்குவதாய் நீண்ட தூரத்தில் சென்று விளங்குகின்ற ஒளியினையும், தன்னை அடைந்தோராகிய சீமாதவாசிரியரைப் பரிக்கின்ற (தாங்குகின்ற) செருக்கும் வலியும் உளவான சீர்பாதங்களையும், பகைவர்களை மாய்த்த மேகம் போன்ற வளவிய கையினையும் உடைய, குற்றமில்லாத கற்பினையும் ஒளி செறிந்த நெற்றியினையும் உடைய தெய்வயானையார்க்குக் கணவனாயுள்ளவன்.*

*இளைய பிள்ளையாரின் செந்நிற மேனிக்கு ஆதித்தனும் அவர் அமர்ந்திருக்கும் பச்சை மயிலுக்குக் கடலும் உவமையாம். ஏர்பு - எழுந்து.*

### 5. பரிதியார்

*உலகம் - உலகின் கண்ணுள்ள எண்பத்து நான்கு இலட்சம் சீவ பேதங்களாகிய உயிர்த் தொகுதிகள். பலர் - எல்லாச் சமயத்தாரும். ஞாயிறு - இளைய சூரியன். கண்டாஅங்கு - உதயமானது போல. ஓவுற-பிரகாசம் பொருந்தி. சேண் விளங்கு அவிரொளி - ஆகாயத்திலும் விளங்கிய அழகை யுடைய ஒளியான திருமேனி. செல் உறழ் - இடிகளைப் போன்ற. வாள் நுதல் - பிறைச்சுந்திரன் போன்ற நுதலையுடைய தெய்வயானை நாச்சியார்.*

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*உலகம் - சீவான்மாக்கள்: மக்கள் என்பர் நச்சினார்க்கினியர். உலகத்திலுள்ள பல்லுயிர்களும் என்பர் உரையாசிரியரும், பரிதியாரும் உயர்ந்தோர் என்பர் கவிப்பெருமாள். உயர்ந்தோராகிய பரம இருடிகள் என்பர்*

பரிமேலழகர். கதிரவனைக் கண்டு உவத்தற்கு அறிவு உயர்வும் தவ உயர்வும் தேவையின்று ஆதலின் பொதுவாக உலகத்து உயிர்கள் என்றல் சிறக்கும்.

வலன் ஏர்பு எனப் பிரித்து, ஏர்பு-எழுந்து என உரைகாண்பர் நச்சினார்க்கினியரும் கவிப்பொருளும். பரிமேலழகரும் இவ்வாறு பிரிப்பினும் இச்சொற்குப் பொருள் குறியாது விடுத்தனர். உரையாசிரியர் மட்டும் நேர்பு எனப்பிரித்து யாவர்க்கும் நேராகச் சுழலும் என உரைகண்டனர்.

ஏர்பு - எழுந்து என உரைகாண்டல் சிறக்கும். பரிமேலழகர் பிறர் உரையாகக் குறித்திருப்பது யாருடையதெனத் தெரிந்திலது. இதன்வழி இந்நூற்கு வேறு உரைகளும் உள்ளமை புலனாகின்றது.

மேருவையோ, அன்றி நிலவுலகையோ வலமாகச் சுற்றிவருவது என்பதினும் வலமாகத் தன்னைத்தானே சுற்றி வருவது என்றல் சிறக்கும். இன்றைய அறிவியல் உலகிற்கும் இதுபொருந்துவதாகும்.

பலர் புகழ் - எல்லாச் சமயத்தாராலும் புகழப்படுகின்ற என உரைகாண்பர் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பரிதியார் ஆகிய மூவரும். கவிப்பெருமாள் பொதுவாகப் பலராலும் என்றே உரைகண்டனர். உரையாசிரியர் தனது ஒளியால் காட்சியின் பயன் கொள்வார் பலரும் என உரைகண்டனர்.

முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர்.
தயங்கு திரைப் பெருங்கடல் உலகுதொழத்தோன்றி
வயங்கு கதிர் விரிந்த உருவுகெழுமண்டிலம்.

என வருவனவற்றான் காட்சியால் பயன் கொள்ளும் பலரும் என உரை காண்டலே சிறக்கும். சமயநெறி தழுவாதாரும் ஞாயிற்றைத் தொழுது வருதல் கண்கூடு.

ஞாயிறு கடற்கண்டாங்கு எனவரும் உவமையை வண்ணம் பற்றியே பலரும் உவம விளக்கம் காண, நச்சினார்க்கினியர் மட்டும் தொழில் உவமமும் கொள்ளுமாறு உரை கண்டது மிகச் சிறப்புடையராம்.

'விரவியும் வரூஉ மரபின என்ப' - ஒருபொருளொடு ஒரு பொருளை உவமிக்கும் கால் வினை, பயன், மெய், உரு எனும் நான்கினுள் ஒரோஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவ உவமம் கொள்ளுதலும் உண்டு என்பது இதன் பொருளாகும்.

ஓ - தங்குதல். இவ்வாறு உரைகாண்டலின் ஓரெழுத்து ஒரு மொழியாகிய தொழிற்பெயர் என்றார் நச்சினார்க்கினியர். ஓ அற - ஒழிதலின்றி என உரைகண்டனர் பிற உரையாசிரியர் அனைவரும். ஓவுற எனப் பாடங்கொண்டு

பிரகாசம் பொருந்தி என உரைகண்டனர் பரிதியார்.

அவிர் ஒளி எனப்பின்னும் வருதலின் இப்பாடம் சிறப் புடைத்தன்று, போது செய்யாமல்-கால எல்லைக்குட்பட்டு ஒளி செய்யாமல். ஞாயிறு பகலில் தோன்றி இரவில் மறைந்து விடுகின்றது. ஆனால் முருகனின் பேரொளியோ பகலிர வின்றி எஞ்ஞான்றும் தோன்றுவதாயுள்ளது. இக்கருத்தமைய உரையாசிரியர் உரை அமைந்துள்ளது.

யாங்ஙன மொத்தியோ வீங்கு செலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

என இந்நிலவுலக மன்னற்கே உவமையாகக் கூற இயலாத ஞாயிற்றின் ஒளி, உயிர்க்குயிராக விளங்கி யாண்டும் விரிந்து நிற்கும் பேரொளிக்கு இது உவமை யாகாமை கூறற்பாற்றோ? அன்று என்பதாம். உரையாசிரியர் தாம் உரை எழுதியதன் மேலும் கூறும் உரை அத்துணைச் சிறப்பாய் அமைந்துள்ளது.

இருவகை இந்திரியங்கள் - மனம் முதலாய அகக்கருவிகளும், கண் முதலாய புறக்கருவிகளும்.

சேண்விளங்கு - கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்கள் எல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற என உரை காண்பர் நச்சினார்க்கினியர். மனம் மொழிகளைக் கடந்த தூரம் என உரை காண்பர் உரையாசிரியர். நீண்டதூரம் என உரைகாண்பர் கவிப்பெருமாள். ஆகாயத்திலும் விளங்கிய அழகையுடைய என்பர் பரிதியார்.

இவற்றுள் நச்சினார்க்கினியர் உரையே சிறக்கும். உலகம் என்பது மங்கலச் சொல்லாம். 'உலகெலாம் உணர்ந்து' எனச் சேக்கிழாரும், 'உலகம் யாவையும்' எனக்கம்பரும் இச்சொல்லை முதற்கண் வைத்தோதுதல் ஈண்டு நினைவுகூரத் தகும்.

உறுநர் - தன்னையடைந்தார்: மெய்யடியார் என அனைவரும் உரைகாணக் கவிப்பெருமாள் மட்டும் தன்னை அடைந்தோராகிய சீமாதவாசிரியர் என உரை காண்பர்.

மதன் உடை - அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய என நச்சினார்க்கினியரும், யான் எனதென்னும் செருக்கைக்கெடுக்கும் என உரையாசிரியரும் உரை காண்பர். பரிமேலழகரும் பரிப்பெருமாளும் திருவடிக்கு இத்தொடரை அடையாகக் கொண்டு, செருக்கும் வலியும் உளதரிய தாள் என உரைகாண்பர்.

*உறுநரைத் தாங்கலும் அவர்தம் செருக்கை அழித்தலும் திருவடிக்கு உளவாகக் கூறுதல் சிறப்புடைத்தாம். இதனால் நோன்றாள் என்றலின் சிறப்பு விளங்கும்.*

*செல் - இடி என்பர் நச்சினார்க்கினியரும், உரையாசிரியரும், பரிதியாரும், மேகம் என்பர் பரிமேலழகரும், கவிப்பெருமாளும். இடி என உரைகாணின் வீரம் மட்டுமே விளங்குகின்றது. மேகம் என உரைகாணின் வீரமும் கொடையும் விளங்குகின்றது. ஏற்பது கொள்க.*

*மறுவில் கற்பு - குற்றமில்லாத கற்பு என்பர் உரையாசிரியர், பரிமேலழகர், கவிப்பெருமாள் ஆகிய மூவரும். நச்சினார்க்கினியர் மறக்கற்பில்லாத அறக்கற்பு என உரைகாண்பர்.*

*இறையன்பு மீதூர்ந்த அடியவர்களின் செயலை வல்வினை மெல்வினை என அருள் நூல்கள் பாகுபடுத்திப்பேசும். அதைப் போன்றே தன் கணவனைத் தெய்வமென்றே ஒழுகும் மனையற மகளிரின் கற்பையும் அறக்கற்பு மறக்கற்பு என இலக்கியப் பேராசிரியர்கள் பாகுபடுத்திப் பேசுவர். கண்ணகிப் பெருமாட்டியார் தம் மார்பைத் திருகி எறிந்து மதுரையை எரியூட்டிய செயல் போல்வன மறக்கற்பென்பர். தற்காத்துத்தற் கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர் வில்லாது வாழ்ந்து தம் கணவன் உயிர்துறப்பத்தம் உயிரும் தாமே கழியுமாறு அமையும் கற்புடைமை அறக்கற்பாகும்.*

*தன்னை அடைந்தார்க்கு வேண்டுவன வெல்லாம் தந்து பாதுகாத்தலின் உறுநர்த் தாங்கிய என்றார். தாங்குதல் - எடுத்துச் சுமத்தல். 'கிடைக்கத் தகுமோ நற்கேண்மையார்க் கல்லால் எடுத்துச் சுமப்பானை இன்று' எனவரும் திருவருட் பயனும் காண்க. மதனுடைநோன்றாள் என்பதும், செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை என்பதும் இறைவனின் அறக் கருணையையும் மறக்கருணையையும் குறிப்பனவாம். 'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிரந்தன்று' என்பவாகலின் கற்பு நலம் குறித்தார். மறுவில் கற்பு அக அழகையும், வாள்நுதல் புற அழகையும் குறித்து நிற்பனவாம். நுதல் புற அழகைக் குறித்தல் 'ஒண்ணுதற்கு ஓ ஓ உடைந்ததே' என்னும் அருளுரையானும் அறியலாம்.*

### 7. கி.வா. ஜகன்னாதன்

#### உதயம்

#### *மங்கலச் சொல்*

***எந்த நூலைத் தொடங்கினாலும் மங்கலச் சொல்லில் தொடங்குவது ஒரு வழக்கு. இன்ன இன்ன சொற்கள் நூல்களின் முதலில் மங்கலச் சொற்களாக ஆள்வதற்குரியன என்று சொல்லும் இலக்கணம் ஒன்று பிற்காலத்தில்***

உண்டாயிற்று. அப்படி வரும் மங்கலச் சொற்கள் பலவற்றில் முக்கியமானது உலகம் என்பது. உலகம் என்ற மங்கலச் சொல்லில் தொடங்கும் நூல்கள் பல இருப்பதைப் பார்க்கலாம். கம்பராமாயணம், "உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்" என்று தொடங்குகிறது. பெரியபுராணம். "உலகெலாம் உணர்ந்து" என்று ஆரம்பிக்கிறது. திருமுருகாற்றுப்படையும், "உலகம் உவப்ப" என்று தொடங்குகிறது.

## உலகம்

தமிழ்நாட்டில் வாழ்ந்த புலவர்கள் இந்தியாவையோ, தமிழ்நாட்டையோ தனித்துப் பார்ப்பது வழக்கம் அன்று. பொதுவாகப் பாரத நாட்டுப் பண்பாடு, உலகம் எல்லாம் வாழ வேண்டுமென்பதே, தன் வீடு, தன் நாடு என்ற குறுகிய எண்ணத்தோடு இல்லாமல், உலகம் அனைத்தும் இறைவனுடைய படைப்பு, அதிலுள்ள உயிர்க் கூட்டங்கள் எல்லாம் இறைவனுடைய குழந்தைகள் என்ற எண்ணம் பெற்று வாழ்வதே இந்த நாட்டுப் பண்பாடு ஆதலால்தான் தமிழில் உள்ள சிறந்த நூல்கள் யாவுமே உலகம் முழுவதும் வாழ வேண்டுமென்பதை அங்கங்கே சொல்லியிருப்பதைக் காணலாம். "உலகம் முழுவதும் வாழ்க" என்று சொல்வார்கள். ஞானசம்பந்தப் பெருமான் சமணர்களோடு வாதிடும்போது வைகையை எதிர்த்துச் செல்லும் திருப்பாசுரத்தைப் பாடினார், அதில் வையகமும் துயர்தீர்கவே! என்று அருளினார்.

அந்த வகையில் முருகப்பெருமானுடைய திருவருளை எண்ணி, அவன் இருக்கும் தலங்களை அடைந்து தரிசிக்க விரும்புகின்ற புலவனுக்கு, நக்கீரராகிய பெரும் புலவர் உபதேசம் செய்யத் தொடங்கும்போது முதலில் உலகத்தை நினைக்கிறார். முருகப்பெருமானுடைய திவ்வியத் திருமேனி செஞ்சுடர்ப் பிழம்பாக இருக்கிறது. அதற்கு ஓர் உவமை சொல்ல வருகிறார். பாலசூரியனுடைய நினைவு வருகிறது. சூரியனுக்கும், முருகப்பெருமானுக்கும் பல வகையில் ஒப்புமை உண்டு, பாலசூரியனின் ஒளி சிவப்பு என்றும் இளைய பிரானாகிய முருகப்பெருமானின் திருமேனி செக்கச் செவேல் என்று இருப்பது, பொதுவாக இறைவனைத் தேஜோமய விக்கிரகன் என்று சொல்வார்கள். அதனால் தான் சின்ன வாகனத்தில் பெரிய வடிவம் இருப்பதாகக் கற்பனை பண்ணியிருக்கிறார்கள்.

## தேஜோமய விக்கிரகம்

விநாயகப் பெருமான் யானைமுகம் உடையவன், அவன் உருவம் மிகப் பெரியது, அவனைத் தாங்கும் வாகனமோ மூஷிகம். அது மிகச் சின்ன உருவம் உடையது. ஒரு நண்பர் என்னைக் கேட்டார்: 'யானையின் மேலே மூஷிகத்தை வைக்காமல் மூஷிகத்தின் மேலே யானையை வைத்தார்களே. இது பொருத்தமா?"

*என்று கேட்டார். அந்த யானை நம்மைப்போன்ற புலால் உடம்பினாலானது என்றால் பொருத்தமில்லாமல் இருக்கும். ஆனால் இறைவனுடைய திருமேனி அத்தனையும் சுடர்த்திருமேனி: திவ்ய தேஜோமயமானது. நெருப்புக் கொழுந்துக்குக் கனம் உண்டா? சினிமாவில் பெரிய கோட்டை கொத்தளங்களை எல்லாம் அட்டையினால் பண்ணி நிறுத்தி வைக்கிறார்கள். தோற்றத்திற்குப் பெரிய மாளிகை போலத் தோன்றுகிற அவைகளே கனம் இல்லாமல் இருக்கும்போது, வெறும் சுடர்க்கொழுந்துக்குக் கனம் இருக்குமா? மூஞ்சூறின்மீது யானை இருப்பது ஆச்சரியம் அன்று. எறும்பின் மேலே கூட இருக்கலாம் அல்லவா? நம்முடைய புலால் உடம்புக்குக் கனம் உண்டு. இதில் கனம் ஏறுவதை நிறுத்துப் பார்க்கின்ற இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் நாம் சரீரத்தை மறப்பதே இல்லை. ரெயில்வேப் பிரயாணம் செய்பவர்கள் சரீரத்தை மறந்து விடாமல் அதை நிறுத்துப் பார்த்து, எத்தனை பவுண்டு கனம் என்று தெரிந்து கொள்ளும்படி அங்கங்கே பொறிகளை வைத்திருக்கிறார்கள். இறைவன் கருணையினால் திருமேனி கொள்கிறான். அது திவ்ய தேஜோமயமான விக்கிரகம். ஒளி படைத்த திருமேனி அது. தேவர்கள் யாவருமே ஒளிபடைத்த திருமேனி உடையவர்கள். இறைவன் திருமேனி அகக் கண்ணினால் பார்ப்பதற்குரியது. "அருட்பெரும் சோதி" என்று இராமலிங்க வள்ளலார் அடிக்கடி பாடியிருப்பது அந்தக் கருத்தைக் கொண்டுதான்.*

*ஆகவே முருகப்பெருமான் சோதிகளில் பெரிய சோதி.*

> *"அருவமும் உருவு மாகிய அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
> *பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகி".*

*என்று கந்தபுராண ஆசிரியர் பாடுகிறார்.*

*அத்தகைய பெருமானுடைய திருமேனிக்குச் சூரியனை உவமை சொல்வதுபோதாது. ஆனாலும் முருகப் பெருமானைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற வேட்கை உடையவனுக்கு அவன் அறிந்த சோதியுள் பெரிய சோதியை உவமையாகக் காட்டுகிறார் நக்கீரர்.*

### சுடர் உவமை

***நாம் அறிந்த சோதி மூன்று, சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றையும் முக்சுடர் என்று சொல்கிறோம். அக்கினி நெருப்பாகவும், விளக்காகவும் நமக்குக் காட்சி தருகின்றது. சந்திரனையும், சூரியனையும் வானத்தில் பார்க்கிறோம். இந்த மூன்று வகைச் சுடர்களிலும் மிகப் பெரிய சுடராக நிலவுவது சூரியன். தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாத ஒன்றைக் காட்டுவது முறை.***

*நாம் அறிந்த சுடர்களுள் மிகப்பெரிய சூரியனை உவமையாக்குகிறார் நக்கீரர். முருகப்பெருமான் சூரியனைப் போல இருக்கிறவன் என்று சொல்ல வருகிறார்.*

*சூரியனை எப்போதும் கண்ணார உற்று நோக்க முடியாது. உச்சி வானத்தில் இருக்கும்போது அவனைப் பார்த்தால் கண் கூசும். இளஞாயிறாக இருக்கும்போது செக்கச் செவேல் என்ற வட்ட வடிவமாகக் கண்ணால் காணும் வகையில் காட்சி அளிப்பான். முருகப்பெருமான் சிவந்த திருமேனி உடையவன். தந்திர ஜபம் பண்ணுகிறவர்களுக்கு அவனுடைய தியான சுலோகம் நினைவுக்கு வரலாம். அவன் குங்குமம் போன்ற சிவப்பு நிறம் உடையவன் என்று அது தொடங்குகிறது. அத்தகைய பெருமான். உண்மையான அன்பர்களுடைய உள்ளத்தில் செக்கச்செவேல் என்று தோன்றுவான். அப்போது உதய ஞாயிறுபோல அவனுடைய திருமேனி சோதிவீசும் என்கிறார் நக்கீரர். இளவள ஞாயிறு போல முருகப்பெருமான் எழுந்தருளுகிறான் என்று சொல்ல வருகிறார்.*

## கதிரவன் புகழ்

***கதிரவன் கண்கண்ட தெய்வம். மற்ற மற்றத் தெய்வங்களைத் தியானம் செய்து தரிசனம் செய்ய வேண்டுமேயொழியச் சூரியனைப்போல யாவரும் காண அவை உலா வருவது இல்லை. சூரியன் எழுந்தால் உலகம் முழுவதும் ஒரு தனிக் கிளர்ச்சி அடைகிறது. உயிருள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் சிறப்பை அடைகின்றன. இராக் காலத்தில் உலகம் முழுவதும் சேர்ந்தாற்போல் ஒரு சாவு வந்தாற்போல யாவும் அமைதியாக இருக்கும். அவரவர்கள் கைகால்கள் அசைவு இன்றி, மூச்சு மாத்திரம் வரப் படுக்கையில் கிடக்கிறார்கள். அப்போது அவர்களுடைய கண் கண்ணாகப் பார்ப்பது இல்லை. காது காதாக இருப்பது இல்லை.***

***கருவி கரணங்கள் எல்லாம் தங்களுக்குரிய செய்கைகளைச் செய்யாமல் ஒடுங்கிக் கிடக்கின்றன. அது ஒரு வகையில் இறப்பது போன்றது. வள்ளுவர் , "உறங்குவது போலும் சாக்காடு" என்று சொல்லுவார்.***

***ஒவ்வொரு நாளும் எல்லோரும் உறங்கும்படியாக வருகிற இரவைத் தினப்பிரளயம் என்று திருமூலர் சொல்வார். அப்படி உயிர்கள் தம்முடைய இயல்பினின்றும் மாறிச் செயல் இழந்துகிடக்கிற இராக்காலம் மாறினவுடன் சூரியன் தோன்றுகிறான். கதிரவன் தோன்றியவுடன் மனிதன் மனிதனாகிறான். பறவை பறவையாகிறது. பறவைக்குச் சிறப்பாக உள்ள சிறகுகள் அப்பொழுது தொழில்படுகின்றன. தம் கூட்டிலிருந்து சிறகை அடித்துக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகின்றன. மனிதன் படுக்கையிலிருந்து எழுந்த பிறகு என்ன என்ன செய்ய வேண்டுமென்று எண்ணிப் பேசிச் செயலைத் தொடங்குகிறான்.***

*தவறான காரியங்கள் யாவும் பெரும்பாலும் இரவில் நடக்கின்றன. இரவு போன பிறகு காலையில் உதயமாகும் சூரியனுடைய ஒளியில் ஊக்கமும், முயற்சியும், நன்மையும் அதிகமாகின்றன. இத்தகைய சூரியனை உலகம் முழுவதும் வரவேற்கிறது. அவன் எழுந்து வானத்தில் உலா வரும்போது உலகம் முழுவதுமே உலா வருகிறது. ஆகவே, சூரியனைப் பற்றிச் சொல்ல வந்த நக்கீரர் அவன் உலகம் எல்லாம் உவக்கும்படியாக வானத்தில் எழுந்தருளுகிறான் என்பதைச் சுட்டுகிறார்.*

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு.

*என்று திருமுருகாற்றுப்படை உதயமாகிறது.*

*எல்லாப் பொருளுக்கும் உரத்தைத் தந்து வளத்தைத் தருவது கதிரவன். வானத்தில் மிக்க வெற்றியோடு எழுந்து உலாவுகிறான், வலமாக எழுந்து திரிதருவதாக நக்கீரர் பாடுகிறார்.*

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு.

*சூரியனைப் புகழாதார் யாரும் இல்லை. சாதி சமயம் கடந்து யாவராலும் புகழப்படுபவன் அவன்: அறிவாளிகளும் அறிவற்றவர்களும் கதிரவனைப் புகழ்கின்றார்கள். இந்து சமயத்தில் சூரியனைக் கடவுளாகக் கும்பிடும் சமயம் ஒன்று உண்டு: அதற்குச் சௌரம் என்று பெயர். பஞ்சாயதன பூசை என்ற சொல்கிற வழிபாட்டில் சூரிய வழிபாட்டுக்கு ஓர் இடம் உண்டு. சிவபூசையிலும் இடம் உண்டு. கோயில்களில் சூரியனுக்கு என்று தனியே ஓர் இடம் இருக்கிறது. சூரியனுக்கு என்று தனிக்கோயில்கள் உண்டு. தமிழ்நாட்டில் சூரியனார் கோயில் என்ற ஒரு தலம் இருக்கிறது. வடக்கே கோணார்க்கம் என்ற தலத்தில் சூரியனுக்குத் தனிக் கோயில் இருக்கிறது. பிற நாடுகளில் சூரியனை வழிபட்டு நலம் பெறுகிறவர்கள் பலர்.*

*சூரியனுடைய வணக்கத்தைப் பழங்கால நூல்கள் நன்கு தெரிவிக்கின்றன. வேதத்திலுள்ள ஆருணம் என்பது சூரிய வணக்கத்துக்குரியது. அகத்தியர் இராமபிரானுக்கு ஆதித்திய இருதயம் என்ற கதிரவன் துதியை உபதேசம் செய்தார். தமிழில் சிறந்த காப்பியமாகிய சிலப்பதிகாரம் முதலில் சந்திரனையும், பின்பு சூரியனையும் புகழ்கிறது.*

*"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"*

*என்று தொடங்கும் கதிரவனது வாழ்த்துப் பாடல் அமைந்திருக்கிறது. அப்படிப் புலவர்கள் பலரும் புகழ் பேச விளங்குவது ஞாயிறு.*

பலர் புகழ் ஞாயிறு.

## உதய ஞாயிறு உவமை

*சூரியன் கீழ்கடலில் உதயமாகிறான். நக்கீரர் பாண்டிய நாட்டில் வாழ்ந்தவர். அவர் கீழ் கடலுக்குச் சென்று உதயத்தைக் கண்டிருக்க வேண்டும். கண்கொள்ளாப் பேரழகோடு செக்கச்செவேல் என்று அவன் தோன்றும்போது அந்த அழகில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அது அவருக்கு நெஞ்சில் நின்றிருக்கிறது. இருள் கப்பிய குகையில் இருக்கும்போது அதற்கு நேர் மாறான கதிரவனது நினைவு வருகிறது. ஞானசூரியனாகிய முருகப்பெருமானுக்கு அவனை உவமானமாகச் சொல்ல வேண்டுமென்று தோற்றுகிறது. பால சூரியன் எல்லோரும் கண்ணிலே காணும் வண்ணம் நீலப் பெரும் பரப்பாகிய கடலின் மேலே தோன்றினாற்போல முருகன் தோன்றுவான் என்ற கருத்தை முதலில் தெரிவிக்கிறார். நீல வானம் மேலே இருக்க, நீலக்கடல் கீழே பரந்து நிற்க, அவற்றினிடையே சூரியன் தோன்றுகிறான். நீலத் தோகை விரிந்து இருக்க, நீல உடம்பையுடைய மயிலின் மேல் செக்கச்செவேல் என்று முருகன் எழுந்தருளுகிறான். உதய சூரியனும், உலாவரும் முருகனும் உவமையாகிறார்கள்.*

**உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
**பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு.**

*முருகப் பெருமானை நம்முடைய உள்ளக் கண்ணில் தரிசனம் செய்வதற்குரிய வழியைக் காட்ட வருகிறார் நக்கீரர். தெரிந்ததைக் கொண்டு தெரியாததைச் சொல்வது பெரியவர்களுடைய இயல்பு, திருவள்ளுவர் முதல் குறளில் தெரிந்த உலகத்தைக் கொண்டு தெரியாத ஆதிபகவனைப் பற்றிச் சொன்னார். அதுபோல் இங்கு மயில்மேலே எழுந்தருளி வரும் முருகப் பெருமானை நமக்கு நினைப்பூட்டுவதற்குக் கடலின்மேல் உதயமாகும் கதிரவனை உவமையாக எடுத்துச் சொன்னார் நக்கீரர். அந்த உவமையைக் கொண்டு இந்த ஞாயிற்றுக்குரிய கால எல்லை, இட எல்லை ஆகியவை முருகனுக்கும் உண்டென்று எண்ணக்கூடும் அல்லவா? ஆகையால் முதலில் ஒப்புமை கூறிய பின்பு வான சூரியனுக்கும், ஞான சூரியனாக உள்ள முருகப்பெருமானுக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்ல வருகிறார்.*

## வேறுபாடு

*முருகப்பெருமான் தேசு நிறைந்த திருமேனியன். சூரியனும் சுடர் உருவன். சூரியனுடைய சுடர் புறக் கண்ணுக்குப் புலனாவது. முருகப்பெருமானுடைய திருவுருவம் அகக்கண்ணுக்குப் புலனாவது. இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. சூரியன் தன்னுடைய சுடரை வீசும் போது ஒரு குறிப்பிட்ட பகுதியில்தான் வீசலாம். நாம் இருக்கும் உலகத்தின் பக்கத்தில் கதிரவன் சுடர் வீசும் போது அமெரிக்க நாட்டில் இரவாக இருக்கும், சூரியன் இட எல்லைக்குள்*

அடங்கியவன், அப்படியே அவன் கால எல்லைக்குள்ளும் அடங்குபவன்,சூரியனை ஒரு மேகம் மறைத்து விடலாம். சூரிய கிரகணம் உண்டாகும்போது அவன் ஒளி மறைகிறது. எல்லாம் அடங்கிய மகாப்பிரளய காலத்தில் சூரியனும் அழிந்துவிடுவது உண்டு. ஆகையால் அவன் கால எல்லைக்கும், இட எல்லைக்கும் அகப்பட்டவன். முருகனோ சூரியனைப்போல் ஒளியுடையவன் என்றாலும் கால எல்லை, இடஎல்லை இரண்டுக்கும் அப்பாற்பட்டு விளங்குபவன். இந்தக் கருத்தை நக்கீரர்சொல்ல வருகிறார். முருகப்பெருமானுடைய அற்புதமான தேசு எப்படி இருக்கிறது என்பதை மூன்றாவது அடியில் சொல்கிறார்.

**ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி.**

அந்த ஒளி தியானம் பண்ணுவாருடைய உள்ளத்தில் விட்டு விளங்குகிறது. யார் யார் முருகன் திருவுருவத்தைக் காணும் பாக்கியம் பெற்றார்களோ அவர்களுடைய உள்ளத்தையும், கண்ணையும், வாழ்வையும் ஒளி மயமாக்குவது அவனுடைய திவ்ய தரிசனம். அந்த உளி ஓஅற இமைக்கின்றது. ஓஅற என்பதற்கு இடைவிடாமல், நீக்கம் இல்லாமல் என்பது பொருள். கால எல்லை இல்லாமல் அவிர்கின்ற ஒளி ஆதலின் இடைவிடாது ஒளி வீசுகின்றது. இறைவனுடைய திருவருளால் ஒளி பெறுகின்ற பொருள்கள் மூன்று. அவற்றை மூன்று சுடர்கள் என்று சொல்வார்கள். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய இந்த மூன்று சுடர்களுக்குள் சூரியன் மிகப் பெரியவன். அவனினும் சிறியது சந்திரன். இந்த இரண்டையும் விடச் சிறியது அக்கினி. இந்த மூன்றும் முற்றும் மங்கும் காலம் உண்டு. அந்தக் காலத்திலும் ஒளிவீசுவது இறைவன் திருவுருவம். அதற்குக் கால எல்லை இல்லை. துளக்கமின்றி ஒளிர்கின்ற சோதி அது. அதனால் அதை, "ஓவற இமைக்கும் அவிர் ஒளி" என்று சொன்னார்.

இட எல்லையையும் கடந்து விளங்குவது அப்பேரொளி என்று மேலே சொல்ல வருகிறார்.

**சேண் விளங்கு அவிர் ஒளி.**

சேண் என்பதற்கு நெடுந்தூரம் என்று பொருள். சூரியனுடைய ஒளி கதவை அடைந்தால் உள்ளே புகுவது இல்லை. கண்ணை மூடிக் கொண்டால் உள்ளே புகுவது இல்லை. பூமியின் மற்றொரு பாகத்திலும் சாருவது இல்லை.

மனிதனுடைய உள்ளத்தில் இருக்கும் அறியாமை என்னும் இருளைப் போக்குவதற்கு இந்த மூன்று சுடர்களாலும் முடியாது. எத்தனை ஒளியுடனும், வெப்பத்துடனும் சூரியன் கதிரை வீசினாலும் மனிதனுடைய அறியாமை இருட்டைப் போக்குவதற்கு அந்தக் கதிரினால் ஆகாது. முருகப்பெருமானுடைய அவிர் ஒளியோ எல்லை கடந்தது. நுட்பமான பொருள்களிலும் புகுந்து வீசுவது.

*உண்மையைச் சொல்லப்போனால் ஆண்டவன் மனிதனுடைய இதயக் குகைக்குள் ஒளியாக இருக்கிறான். அதனால் குகன் என்ற பெயர் வந்தது. வேறு எந்த ஒளியினாலும் அடைவதற்கரிய அந்த உள்ளிடத்தை அவனுடைய ஒளிதான் அடைந்து நிற்கிறது. அதனை நாம் உணர்வதில்லையேயொழிய அந்த ஒளி எப்போதும் அங்கே விட்டு விளங்குகிறது. விளக்கை மரக்காலைப் போட்டுக் கவிழ்ந்துவிட்டால் அதனுடைய வெளிச்சம் வெளியில் தெரியாது. அது போல நம்முடைய இதய குகையில் ஒளிர்கின்ற அந்தப் பேரோளியை அகந்தை என்னும் மரக்காலால் மறைத்து வைத்திருக்கிறோம். அதனால் அந்த ஒளி வெளிப்படுவதில்லை.*

"குகையில் வளரும் கனலே'

*என்று பாரதியார் பாடுகின்றார்.*

*மலையின்மேலே ஒரு விளக்கைப் போட்டால் அதன் கதிர் பல விடங்களுக்கு வீசும். மலையின் உள்ளே இருக்கும் குகைக்கு நடுவில் கொண்டுபோய் அதை வைத்து விட்டால் அதன் ஒளி வெளியில் பாயாது. அப்படி நம்முடைய உள்ளக் குகையில் அந்த பேரொளியை வெளியிலே பரவவிடாமல் வைத்திருக்கிறோம். அப்படிச் சொல்வதைவிட அந்த ஒளி வெளியில் பரவாமல் நாம் நம்முடைய அகந்தையினாலும், மமகாரத்தினாலும் அடக்கி வைத்திருக்கிறோம் என்று சொல்வது பொருத்தம்.*

*முருகப்பெருமானுடைய பேரொளியானது காலம் கடந்து இடம் கடந்து ஒளிர்வது என்பதை ஓர் அடியில் நக்கீரர் விளக்குகிறார்.*

**ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி.**

*முருகன் உலகம் எல்லாம் உவக்கும்படியாக எழுந்து, மயில்மேலே உலா வருகிற தோற்றத்திற்குச் சூரியன் உவமையாக எடுத்துச் சொல்லலாம். ஆனால் முருகப் பெருமானுடைய பேரொளி காலம் கடந்து, இடம் கடந்து விளங்குவதாதலின் அந்த ஒளிக்குச் சூரியனை உவமையாக்க முடியாது என்ற குறிப்பு இந்த அடிகளால் நமக்கு விளங்குகிறது.*

**உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி.**

*(உலகில் உள்ள உயிர்களெல்லாம் மகிழும்படி வலமாக எழுந்து வானத்தில் உலாவும், பல வகையான அறிஞர்களும் புகழும், கதிரவனைக் கடலின் மேலே உதயமாகும் போது கண்டாற்போல, இடையீடு இல்லாமல் சுடர் விடுகின்ற, நெடுந்தூரத்திலும் சென்று விளங்கும், பரவிய ஒளி - இதை உடைய முருகன் என்று சொல்ல வருகிறார்).*

**வாணுதல் கணவன்**

## திருவுருவம்

*நெடுந்தூரத்திலிருந்து அழகிய மனிதன் ஒருவன் வருகிறான். அவன் வரும்போது அவனுடைய முழு உருவமும் ஒருவாறு விளங்குமேயன்றி அவனுடைய அங்க அடையாளங்கள் தெளிவாக விளங்கா. நெடுந்தூரத்தில் எழுந்தருளியிருக்கிற முருகப் பெருமானை நமக்குச் சுட்டிக்காட்டுவார் போல அவனுடைய ஒளிப் பிழம்பான திருமேனியை முதலில் சொன்னார் நக்கீரர். பின்பு அந்தப் பெருமானுடைய அங்க அடையாளங்களைக் காட்ட வருகிறார். முருகன் ஒளிப் பிழம்பாக நின்றாலும் திருவுருவம் கொண்டு விளங்குகிறான். குறி குணம் கடந்த இறைவன் எண் குணத்தானாகவும், தாள் முதலிய அங்க அடையாளங்கள் உடையவனாகவும் எழுந்தருளுவது, ஆருயிர்கள் எல்லாம் உய்ய வேண்டுமென்ற பெரும் கருணையினால் தான்.*

> *“கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
> *தாளை வணங்காத் தலை”*

*என்று திருக்குறளில் இந்தத் தத்துவத்தைப் புதைத்து வைத்திருக்கிறார் வள்ளுவர். தனக்கெனக் குணமும், குறியும் இல்லாத எம்பெருமான் திருமேனியும் குணமும் கொண்டு வருவது உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு, எண்குணம் உடையவனாகவும், தாள் முதலிய அங்கங்கள், உருவ அடையாளங்கள் உடையவனாகவும் எழுந்தருளுகிறான். அதனால் மக்கள் அவனைச் சார்ந்து வணங்கி நலம் பெற முடிகிறது.*

## திருவடிச் சிறப்பு

*இப்படி எண்குணத்தானாக, குணமும் குறியும் பெற்று ஆண்டவன் எழுந்தருளுவதை நக்கீரர் இங்கே காட்டுகிறார் ஆண்டவனுடைய திருமேனியில் அடிமுதல் முடிகாறும் பல அங்கங்கள் உள்ளன, எல்லாம் அழகின் பகுதிகள்தாம். திருமேனி முழுவதும் பெரும் சோதிப் பிழம்பானால் ஒவ்வோர் உறுப்பும் அந்தச் சோதிப் பிழம்பின் சுடர்க் கீற்றுகள். அவை எல்லாமே பேரழகு பொருந்திய அங்கங்கள்.*

*அந்த உறுப்புகளுக்குள் எது சிறந்தது? இந்தக் கேள்வி சற்றுச் சங்கடமானது. மனிதனுடைய உடம்பில் 32 அங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் தலைமையானது தலைதான். தலை என்ற பெயரே அது சிறப்பான அங்கமாதலால் அமைந்திருக்கின்றது. வடமொழியில் அதை உத்தமாங்கம் என்று*

*சொல்வார்கள் . நம்முடைய உடம்பில் ஐந்து வகையான இந்திரியங்கள் இருக்கின்றன. காண்பதற்கும், கேட்பதற்கும், மணம் நுகர்வதற்கும், சுவை நுகர்வதற்கும், பரிசத்தைப் பெறுவதற்குமாக ஐந்து இந்திரியங்களை நாம் பெற்றிருக்கிறோம். கழுத்துக்கு மேலே இந்த ஐந்து பொறிகளும் இருக்கின்றன. கழுத்துக்குக் கீழே பஞ்சேந்திரியங்களில் ஒன்றுதான் இருக்கிறது. ஆதலின் எல்லா இந்திரியங்ளும் ஒருங்கே அமைந்திருக்கிற தலை சிறந்ததாயிற்று. அறிவின் நிலையமாகிய மூளை தலையில் இருக்கிறது. அதோடு மனிதன் நிமிர்ந்து நிற்கிறவன். ஆகையால் அவன் உடம்பில் உயரமாக இருப்பது தலை. இத்தனை காரணங்களால் அதனை உத்தமாங்கம் என்று சொல்வார்கள்.*

*இறைவனுடைய திருமேனியில் மிகச் சிறந்த அங்கம் எது? மனிதனைப் போல இறைவனுக்கும் தலைதான் உத்தமாங்கம் என்று சொல்லலாமா? அது பிழை. இறைவனைக் காட்டிலும் அவன் திருவடி சிறந்தது என்பதைப் பரிபாடலில் ஒரு புலவர் பாடுகிறார்.*

*"நின்னிற் சிறந்தநின் தாளிணையவை."*

*அடியார்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பது அவனுடைய தாள். அவன் மிக உயரமானவன். அவனைப் பற்றிக்கொள்வது என்பது எளிய காரியம் அன்று. தேவர்களுக்கு அடி பூமியில் பாவாது என்று சொல்வார்கள். தேவர்களுக்கு எல்லாம் சிறந்த தேவனாக ஆண்டவன் இருக்கிறான். அவன் இந்த உலகத்தில் தன் தாள் படிய வருகிறான். அதற்குக் காரணம் நாம் இந்த உலகத்தில் பிறந்து வாழ்வது தான். நம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று நமக்கு அண்மையில் உள்ள திருவடியைப் பற்றிக்கொள்ளும்படி வந்து அருளுகிறான். நமக்காகவே தாள் படைத்து நம்மை அணுகி வருகிறான். ஆதலால் அவன் திருத்தாள் அடியார்களுடைய பற்றுக் கோடாக நிலவுகிறது. இறைவனுக்குப் பலவகை அங்கங்கள் இருந்தாலும், அவற்றை எல்லாம் அடியவர்கள் கண்டு இன்புற்றாலும், அவர்கள் பெரும்பயன்பெறுவது அவனுடைய திருவடியில்தான். அடியார் என்ற பெயரே அதனைக் குறிப்பிக்கிறது.*

## ***தாங்கும் தாள்***

***ஆகவே, ஒளிப்பிழம்பாகிய முருகனைக் காட்டிய நக்கீரர் அவனுடைய அழகிய அங்கங்களைச் சுட்டிக்காட்டத் தொடங்கி, முதலில் அவனுடைய திருத்தாளைப் பற்றிச் சொல்ல வருகிறார். அது மிகவும் வலிமை பெற்ற தாள்: தன்னை அடைந்தார்க்கு நலம் செய்கின்ற தாள்.***

**உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்.**

***என்று அதைப் பாராட்டுகிறார். அந்தத் தாள் தன்பால் அடைந்தவர்களை***

எல்லாம் தாங்குகிறதாம். அவர்கள்பால் உள்ள அறியாமையை உடைத்து ஒழிக்கிறதாம். உறுநர் என்றால் அடைபவர் என்று ஒரு பொருள்.

உலகத்தில் வேறு ஒரு காப்பும் இல்லாமல், தாம் அடையும் துன்பங்களைப் போக்குவதற்கு உலகிலுள்ள யாரும் துணையில்லையென்பதனை உணர்ந்து, இறைவன் ஒருவன்தான் பாதுகாப்பு என்ற உண்மை அறிவு வரப்பெற்றவர்கள் அவனை அடைகிறார்கள்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்று திருவள்ளுவர் சொன்னார்.

உலகிலுள்ள மக்களுக்குள் அறிவாலும், ஆற்றலாலும், திருவாலும் உயர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இவற்றில் படிப்படியாக உயர்ந்து நிற்கிறவர்களைப் பார்க்கிறோம். கீழ்ப் படியில் உள்ளவர்கள் மேல்படியில் உள்ளவர்கள் சிறந்து நிற்பதாக எண்ணுகிறார்கள். ஆகவே, கீழ்ப்படியில் உள்ளவர்களுக்குக் குறை உண்டானால் அடுத்த படியில் உள்ளவர்களைச் சாருகிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுக்கு மேல்படியில் உள்ளவர்கள் சிறிது நலம் செய்தாலும், அவர்களும் குறைபாடு உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குறைகளைத் தம்மிலும் மேற்படியிலுள்ளவர்களை அண்டிப் போக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இந்த வகையில் ஒவ்வொருவரும் தத்தமக்கு மேல் உள்ளவர்களைச் சார்ந்து தம் குறைகளைப் போக்கிக் கொள்ளலாமே என்று நினைக்கிறார்கள். ஆனால், யாரும் எல்லோருடைய குறையையும் போக்க முடியாது. குறைவிலா நிறைவுடையவனாகிய ஆண்டவன் ஆருயிர்களுக்கு நலம் செய்யும் ஆற்றல் உள்ளவன். அவனே எத்தகைய குறையையும் போக்க வல்லவன்: எல்லாம் வல்லவன்: எல்லாவற்றையும் அருளுகிறவன். அவன் அருளால்தான் உலகம் இயங்குகிறது, ஆருயிர்கள் உய்கின்றன.

இந்த உண்மையை உணர்ந்த அடியார்கள் உலகில் உள்ள செல்வரையும் மற்றவரையும் சார்ந்து அடைக்கலம் புகாமல், இறைவன் ஒருவன்தான் நமக்குப் புகலாக இருப்பவன் என்று உணர்ந்து அன்போடு சாருகிறார்கள். அப்படிச் சாரும்போது ஆண்டவன் அவர்களைத்தாங்கி நிற்கிறான். தாங்குதல் என்ற சொல்லே பாரத்தைத் தாங்குதல் என்ற பொருளைத் தருகிறது. தான் தாங்குவதாக நினைத்து மனிதன் பற்றை வளர்த்துக் கொள்கிறான். மனைவி, மக்கள், உடம்பு முதலியவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்று பலபல செயல்களைச் செய்கிறான். ஆனால், அந்தப் பாதுகாப்புகளால் அவன் காப்பற்றப்படுவதில்லை. தாங்கும் திறன் மனிதனுக்கு இல்லை. வண்டியில் செல்கிறவன் ஒருவன் தன்னுடைய

*கைப்பொருளைக் கீழே வைக்காமல் தலையின் மேலேயே தாங்கிக் கொண்டிருந்தால் அது எத்தனை மடைமையோ அத்தகையதே, உலகத்தார் தாம் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிருப்பதாக நினைப்பது. உண்மையில் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு நிற்கிறவன் ஆண்டவன். இறைவனைப் பற்றிக் கொண்டு நம்முடைய மனத்திலுள்ள கவலையைப் போக்கிவிட்டால் தலையில் தூக்கிக் கொண்டு வந்த பாரத்தை வண்டி ஏறினவுடன் அதில் வைத்து நலம் பெற்றவனைப் போலாகிறான்.*

*ஆண்டவனுடைய அடியார்கள் தம்முடைய கடமை இறைவனைச் சரணாகதி அடைவது ஒன்றுதான் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். எந்தவிதமான செயலும் இல்லாமல் அவனுடைய திருவடியைப் பற்றிக்கொண்டபடியே கிடப்பது அடியார்கள் நிலை. வண்டியைப் பிடிக்கும் மட்டும் நாம் ஓடவேண்டுமேயன்றி வண்டியில் ஏறிக்கொண்ட பிறகு ஓடவேண்டிய அவசியம் இல்லை. அதுபோல இறைவனைப் பற்றுக்கோடாகப் பெறும் மட்டும் அவனுடைய திருவடியைச் சாரப் பல முயற்சிகளைச் செய்ய வேண்டும். அவன் திருவடித் தொடர்பு பெற்றுவிட்டோமானால், எனக்கு இனிச் செயல் இல்லையென்று எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்துச் சும்மா கிடத்தல்தான் முறை. அப்படிக் கிடந்தோரை ஆண்டவன் தாங்கிக் கொள்வான்.*

*"தன்க டன்அடி யேனையும் தாங்குதல்*
*என்க டன்பணி செய்து கிடப்பதே". - அப்பர்.*

## திரௌபதியின் கதை

***திரௌபதியின் கதை இதனை நன்கு தெரிவிக்கும். அறிவும், திருவும், ஆற்றலும் உள்ள கணவர் ஐந்து பேரை அவள் பெற்றாள். உலகம் போற்றுகின்ற பெருவீரர், அறம் நிறைந்த நெஞ்சினர், புகழுடையோர் அவளுடைய கணவர்கள். ஆயினும் நூற்றுவர் தலைவனாகிய துரியோதனன் அவளை மானபங்கம் செய்ய எண்ணினான். துச்சாதனனை விட்டு அவள் துகிலை உரியச் செய்தான். அரசர்கள் பலர் அந்த அவையில் அமர்ந்திருந்தார்கள் உறவினர்களும், கணவர்களும் அங்கு இருந்தார்கள். அறிவும், நீதியிலிருந்து பிறழா நேர்மையும் நிறைந்த நெஞ்சினர்கள் இருந்தார்கள். திரௌபதி தன்னுடைய கணவர்களுடைய ஆற்றலால் பாதுகாப்புப் பெறலாம் என்று எண்ணினாள். அவர்கள் வலியிழந்து போனார்கள். அறனும், நேர்மையும் உடைய பீஷ்மர் முதலியவர்கள் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணினாள். அவர்களும் பொலிவிழந்து, வலியிழந்து நின்றார்கள். அவர்களிடம் பல பேசித் தர்க்கம் செய்தாள். அவளுடைய அந்த வாய் வன்மையும் வலியிழந்து போயிற்று. தன் கையால் துகிலைப் பற்றிக் கொண்டாள். அதனாலும் பயன் இல்லை. தன் மானத்தைக்***

காக்கும் தகைமையுடையவன் கண்ணபிரான் ஒருவனே என்று உணர்ந்தாள். அவன்தான் பற்றுக்கோடு என்று தெளிந்து அவனை நினைத்து துதித்துப் புலம்பினாள். அவள் தன் உடையைக் கையினால் பற்றிக் கொள்ளும் வரைக்கும் கண்ணன்திருவருள் அவளுக்குக் கிட்டவில்லை. கடைசியில் அந்தக் கைகளையும் விட்டுத் தலைமேல் கை குவித்து, ''கோவிந்தா, கோவிந்தா. என்று அரற்றியபோதுதான், கண்ணபிரான் அவளுக்கு அருள் செய்ய முன்வந்தான்: துச்சாதனன் துகிலை உரிய உரிய, மேலும் மேலும் அவளுக்குப் பலபல வண்ண வண்ண ஆடைகளை வழங்கினான்.

இந்த கதையில் ஒரு பேருண்மை இருக்கிறது. பிறர் நம்மைத் தாங்குவார் என்று எண்ணியிருந்த திரௌபதி, அவர்கள் தன்னைத்தாங்கும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பதை உணர்ந்தாள். தன்னைத்தானே தாங்கிக் கொள்ளலாம் என்று கடைசியில் எண்ணினாள். கடைசியில் அதுவும் பயன் அற்றுப்போயிற்று. யாரும் தாங்கமாட்டார்கள். ஆண்டவன் ஒருவன்தான் துணை என்ற நினைவு அவளுக்கு வந்த போதுதான் கண்ணன் அவளைத் தாங்க முற்பட்டான்.

இறைவனுடைய திருவருளில் நம்பிக்கை வைத்து, நம்முடைய வலியின்மையை நன்கு உணர்ந்து, நம்முடைய குறையை வேறு யாரும் தீர்க்க முடியாது என்ற உண்மையையும் தெரிந்து, அவனைச் சரணாகதி அடையும்போது தான் அவனுடைய முழு அருளும் நம்மை வந்து சாருகிறது. நம்முடைய உள்ளத்தில் இறைவனிடம் உறுதியான அன்பு பூண்டு, அவன் நம்மை காப்பாற்றுவான் என்ற உறுதியான எண்ணம் வருமானால், நம்மை நாமே தாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணமும், பிறர் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணமும்போய் விடும். இந்த இரண்டு எண்ணத்தையும் அகற்ற நாம் தெரிந்து கொண்டால் அகந்தை ஒழிந்து விடும். இறைவனுடைய பேரருள் உதவியும் நமக்கு உடனே கிடைக்கும், இவற்றையெல்லாம் எண்ணி.

உறுநர்த் தாங்கிய தாள்

என்று சொன்னார். உறுநர் என்பதற்குத் துன்பத்தை அடைந்து தன்பால் வந்தவர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். உறுதல் என்பதற்குத் துன்பம் அடைதல் என்றும், அடைதல் என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. உறு என்பதன் அடியாகப் பிறந்த ஊறு என்ற சொல்லுக்குத் துன்பம் என்ற பொருள் இருத்தலைக் காண்க.

## அறியாமையை அழித்தல்

**அடுத்தபடியாக, "மதன் உடை நோன்தாள்" என்று சொல்கிறார். தன்பால் வந்தவர்களைப் பாதுகாப்பது மாத்திரம் அன்று. அப்படி வந்தவர்களுக்கு உள்ள இன்னலை அவன் மாற்றிவிடுகிறான். பிறவிக்குக் காரணமாக இருப்பது அவித்தை**

*அல்லது அறியாமை, பிரபஞ்சமாயையினின்றும் மக்கள் மீளுவது இல்லை. இறைவன் அருளால் ஞானம் பெற்ற பிறகே அவர்கள் பேரானந்தப் பெருவாழ்வை அடைகிறார்கள்.*

*அறிவுக்கு எதிர்மாறான அறியாமை நம்மிடத்தில் இருக்கிறது. அது பலபல பிறவிகளில் படலம் படலமாக வந்து செறிந்து கிடக்கிறது. கணக்கில்லலாத பிறவியைப் பெற்றுப் பெற்று அந்த அந்தப் பிறவிதோறும் அடைந்த வாசனைகள் எல்லாம் படலம் படலமாகச் சார்ந்ததனால் பாறையைப் போல அறியாமை செறிந்து கிடக்கிறது. அதனை எளிதில் உடைக்க முடியாது. ஆண்டவன் தாள் ஒன்றுதான் அதை உடைக்க வல்லது. தன்னை அடைந்தவர்களை எல்லாம் காலால் தாங்கும் பெருமான் அவன்தான். இறைவன் தாளை நாம் அடையாமல் நிற்பதற்குக் காரணமான அறியாமையையும் அவனுடைய தாளினால் உடைத்து விடலாம். ஆண்டவன் தாள் ஞானமயமானது என்று சொல்வார்கள். பிறரைத் தாங்குவதற்குரிய வல்லமையும் அவர்களுடைய அறியாமையை உடைப்பதற்கு உரிய வல்லமையும் படைத்த தாள் அது. அது ஞானத் தேசு படைத்தது.*

“தொண்டர்கண்டு அண்டிமொண் டுண்டிருக்கும் சுத்த
ஞானமெனும்
*தண்டையம் புண்டரிகம்”*

*என்பது கந்தர் அலங்காரம். அறியாமையை உடைப்பதற்குரிய ஞான சொரூபமாக இருப்பது அந்தத் திருவடி. ஆகையால் தன்பால் அடைந்தவர்களைத்தாங்குவது மட்டுமன்று: அவர்களுடைய அழுக்காகிய அறியாமையை அடியோடு போக்குகின்ற ஆற்றலும் அந்தத் திருவடித்தாமரை பெற்றிருக்கிறது.*

*சோதிப் பிழம்பாக முருகப் பெருமானை நமக்கு அறிமுகப்படுத்திய நக்கீரர், நம்முடைய கவலை எல்லாம் போக்கி நமக்கு அரணாக நின்று, நம்மிடத்தில் பெரிய நோயாக இருக்கும் அறியாமையைப் போக்குவதற்குரிய புகல் இடமாகிய திருவடித் தாமரையை, இதோ பார் அப்பா என்று காட்டுகிறார்.*

**உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்.**

*மனிதர்கள் இன்பத்தை விரும்புவார்கள்: துன்பத்தை வெறுப்பார்கள். இன்ப ஆக்கமும், துன்ப நீக்கமும் மனிதர்கள் விரும்புவன. ஆண்டவன் தன்பால் வந்தவர்களுக்கு இன்பத்தைத் தந்து பாதுகாக்கிறான். அவர்களுக்குக் கவலை இல்லாமல் தாங்குகிறான். கண்ணன் கீதையில் “ எல்லாப் பற்றையும் விட்டு என் திருவடியைப் பற்றிக் கொள்கிறதை மட்டும் செய்: நான் உன்னைத் தாங்குகிறேன்” என்று சொன்னான். அதுபோல் ஆண்டவன் தன்னுடைய திருவடியைப் பற்றிக் கொண்டவர்களுடைய கவலைகளைப் போக்கி, அவர்களுடைய பொறுப்பை*

*எல்லாம் ஏற்றுக்கொண்டு நலம் செய்கிறான். ஆதலின் அவனுடைய தாள் உறுநர்த் தாங்கும் தன்மையுடையது.*

## திருக்கரம்

*அடுத்தபடியாக முருகப்பெருமானுடைய கையைப் பற்றிச் சொல்ல வருகிறார் நக்கீரர். அது துன்பத்தை நீக்குகிறதாம். தன்பால் வந்து செறுபவர்களை அடியோடு இல்லையாக்கி இடி போல முழங்குகின்ற கை அது.*

### செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை

*ஆண்டவனுக்குப் பகையும் இல்லை. நட்பும் இல்லை. ஆனாலும் அவனுடன் வந்து போர் செய்பவர்களை அவனுடைய கைகள் தேய்த்துவிடுகின்றன. செல் என்பது இடிக்குப் பெயர். பகைவர்களை அடியோடு அழிக்கும் பராக்கிரமத்தை உடையன அவன் கைகள். அருளும் பராக்கிரமும் அவனுடைய அறக்கருணைக்கும். மறக்கருணைக்கும் அடையாளங்கள். இறைவன் அடியார்களுக்கு அருள் செய்தும், அல்லாதார்களுக்கு மருள் செய்தும் இரண்டு பேருக்கும் வழிகாட்டுகிறான். இந்த இரண்டும் அவன் கருணைச் செயல்களே. காலால் மறக்கருணை செய்து, கையால் அறக்கருணை செய்கிறான். உறுநரல்களைத் தாங்குகிறவன். செறுநர்களைத் தேய்க்கிறான். உறுநரைத் தாங்கிய நோன்றாளையும். செறுநரைத் தேய்த்த தடக்கையையும் உடைய முருகப்பெருமானை நக்கீரர் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.*

## தாள் தாங்குதல்

*இங்கே தாள் தாங்குகிறது என்றும், தடக்கை தேய்க்கிறது என்றும் சொன்னார். நமக்கோ நம் கைகள் பொருளைத் தாங்கும். கால்தான் தேய்க்கும். இங்கே கால் தாங்குவது என்று சொன்னது எப்படிப் பொருந்தும்? இதனை ஆராய வேண்டும். பெரிய கொட்டகை போட்டிருக்கிறார்கள். அந்தக் கொட்டகையில் பல கால்களை நட்டு மேலே கூரை வேய்ந்திருக்கிறார்கள். ஓரிடத்தில் இரண்டு கால்களுக்கு மேலே விட்டம் போட்டு ஓர் ஊஞ்சல் போட்டிருக்கிறார்கள். அந்த ஊஞ்சலில் நான்கைந்து பேர் உட்கார்ந்து ஆடுகின்றார்கள். ஊஞ்சல் பாரத்தைத் தாங்குகிறது. உண்மையைச் சொல்லப் போனால் ஊஞ்சல் தாங்குகிறதில்லை. அந்தப் பாரத்தைச் சங்கிலியின் வழியாக விட்டம் தாங்குகிறதென்று சொல்லலாம். நன்கு ஆராய்ந்தால் அந்த விட்டமும் தாங்குவதில்லை. விட்டத்தைத் தாங்குகிற கால்களே எல்லாப் பாரத்தையும் தாங்குகின்றன. ஊஞ்சலின் மேலே உட்கார்ந்திருக்கிறவர் ஊஞ்சலை அமிழ்த்தினாலும் அதனுடைய பாரம் முழுவதும் கால்களினால் தாங்கப்படுகிறது.*

அதுபோல எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருந்து தாங்குகிற கால்களை உடையவன் ஆண்டவன். அவனுடைய காலுக்குக் கீழே பொருள் இல்லை.

"பாதாளம் ஏழினும்கீழ் சொல்கழிவு பாதமலர்"

என்று மணிவாசகர் பாடுவார். எல்லாப் பொருளுக்கும் ஆதாரமாக இருக்கிறதனால் அது எல்லாவற்றையும் தாங்குகிறதேயன்றி: அது தாங்கப்படும் பொருள் அல்ல. இறைவனுடைய அடி எல்லாப் பொருளுக்கும் அடியில், எல்லாவற்றையும் தன்மேலே நிறுத்தித் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தாள் தாங்குகின்றது என்று சொன்னார்.

நமக்கோ நம்முடைய காலைத் தாங்குவதற்குத் தரை வேண்டும். தாங்குவதற்குரிய பொருள் இல்லாவிட்டால் நாம் கீழே விழுந்துவிடுவோம். ஆண்டவனுடைய திருவடி அத்ததகையது அன்று. ஆதலின் நம்முடைய கால் தாங்கப்படுவது: ஆண்டவனுடைய கால் தாங்குகிறது.

## தேய்க்கும் கை

அடுத்தபடியாகக் கையினால் ஆண்டவன் தேய்க்கிறான் என்று சொன்னார். தேய்த்தல்-அடியோடு அழித்தல். இத்தகைய காரியத்தில் கையும், தோளும் தொடர்புடையன. பராக்கிரமத்திற்கு இடமாக இருப்பது தாள் அல்ல: கை அல்லது புயம் தான், புஜபலம் என்று சொல்வார்கள். பகைவர்களை அடியோடு அழித்து வீரத்தைக் காட்டுவன இறைவனுடைய புயங்கள் அல்லது கைகள். ஆதலால் தேய்க்கும் தன்மையுடையன அந்தத் தடக்கைகள் என்று சொன்னார். எந்தத் திசையில் பகை இருந்தாலும் அங்கே நீண்டு அதனைத் தேய்த்து இல்லையாக்கும் கைகள் அவை.

ஆண்டவனுடைய திருவடி கருணை பில்குவது. அவன் திருப்புயம் வீரம் மலிந்தது. கருணையும் ஆண்மையும் ஒருங்கே பொருந்தியவன் முருகன். அவன் திருவடியைப் பற்றிக் கொண்டவர்களுக்கு அவனுடைய கருணை பயன்படும். அவனை நேருக்கு நேர் நின்று எதிர்ப்பவர்களுக்கு அவன் கைகள் ஆண்மையைக் காட்டி அகந்தையை அழிக்கும்.

**உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்**
**செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை.**

முருகப் பெருமானுடைய ஒளிப் பிழம்பாகிய திருவுருவத்தை முதலில் காட்டி, பின்பு உருவத்தில் முதலில் தரிசனம் செய்வதற்குரிய திருவடியைக் காட்டி, அப்பால் திருக்கரத்தைக் காட்டினார் நக்கீரர்.

## தேவயானை

அடுத்தபடி அந்தப் பெருமானுடைய அருகில் வீற்றிருக்கும்

தேவயானையைக் காட்ட வருகிறார். ஆறுபடை வீடுகள் இன்னவை என்று சொல்லப் புகந்த நக்கீரர் முதலில் தோற்றுவாய் செய்யும்போது திருப்பரங்குன்றமாகிய முதல் வீட்டைச் சொல்கிறார். திருப்பரங்குன்றம் தேவயானை திருமணம் நடந்த இடம். ஆதலின் அங்கே ஆண்டவனுடைய தேவிமார் இருவருள் தேவயானையை மாத்திரம் சொல்ல வருகிறார்.

மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்

என்று அடையாளம் காட்டுகிறார். எம்பெருமானுடைய அருகில் வீற்றிருக்கும் தேவயானை தன்னுடைய உள்ளக் களிப்பை யாவரும் அறியும்படியாக ஒளிபொருந்திய நெற்றியோடு விளங்குகிறாள். உள்ளத்தில் துன்பம் இருந்தால் முகம் வாட்டமுற்றுத் தோன்றும். உள்ளத்தில் பூரிப்பும் இன்பமும் இருந்தால் முகம் ஒளிபெற்றுத் தோன்றும். இங்கே தேவயானையினுடைய நெற்றி அல்லது முகம் ஒளி பொருந்தியதாக நிலவுகிறது. ஆகவே,

வாள் நுதல்

என்று சொன்னார். பாட்டில் தேவயானை என்று குறிப்பதற்குத் தனியே அடையாளம் இல்லாவிட்டாலும்,

மறுஇல் கற்பின் வாள்நுதல்

என்ற குறிப்பும், முதலில் பரங்குன்றத்தைச் சொல்வதும் தேவயானையை அடையாளம் கண்டுகொள்ளச் செய்கின்றன. குற்றமற்ற, கற்புடைய தேவயானையின் கணவன் என்று பொருள். கற்பு என்பது இங்கே மணத்தைக் குறிப்பது. களவு மணம், கற்பு மணம் என்று இரண்டு வகை உண்டு. களவின் வழிவந்த மணம் தமிழில் மிகச் சிறப்பாகச் சொல்லப்படும். முருகப்பெருமான் தமிழ்இலக்கணத்திற்கு அமைய வள்ளியம் பெருமாட்டியைக் களவு மண வழிப்படி மணந்து கொண்டிருக்கிறான். களவின் வழியே வள்ளியம் பெருமாட்டியை மணம்புரிந்து கொண்டவன், கற்பு மணத்தைத் தேவயானையின் பால் நிகழ்த்தினான். அவள் குற்றமற்றவள்: கற்புடையவள். மறுவில் என்பது கற்பைச் சிறப்பிக்க வந்தது அன்று. மறுவில்லாத வாள்நுதல், கற்புடைய வாள்நுதல் என்று தனிதனியே கூட்டவேண்டும். வாள் நுதல்ஒளி பொருந்திய நெற்றியை உடையவள்: அன்மொழித்தொகை.

உலகத்தாருடைய தொடர்பு இல்லாமல் வானுலகத்தில் வளர்ந்தவள் தேவயானை. இந்திரன் முதலியவர்கள் தங்களுக்கு முருகன் செய்த பேருபகாரத்தை எண்ணித் தங்கள் நன்றி அறிவின் அடையாளமாகத் திருமணம் செய்த கொண்டருளவேண்டுமென்று சொல்ல, அதனால் ஆண்டவன் தேவயானையை ஏற்றுக் கொண்டான். அவள் எல்லாவகையிலும் தூய்மை உடையவள்: மாசு மறு அற்றவள். வள்ளியை அடுப்பாரும் கொடுப்பாரும்

*இல்லாமல் களவு மணத்தில் முருகன் ஏற்றுக் கொண்டான். யாரும் காண அடுப்பாறும் கொடுப்பாரும் இருக்கத் தேவயானையை ஏற்றுக் கொண்டான். ஆதலின் அப்பெருமாட்டி கற்புமணப் பெருமாட்டியானாள். இந்தக் கற்பு மணத்தை நினைந்து,*

**கற்பின் வாள்நுதல்**

*என்று சொன்னார். மறு இல்லாத வாள் நுதல், கற்பின் வாள் நுதல் ஆகிய தேவயானையின் கணவனாக விளங்குகிறவன் முருகன். தேவயானை முருகப்பெருமானுடைய அருகில் அமர்ந்திருக்கிறாள். இரண்டு பேரையும் ஒருசேர வைத்து நமக்குக் காட்டுகிறார் நக்கீரர். முதலில் ஒளிப்பிழம்பைக் காட்டி, பிறகு திருவடியைக் காட்டி, திருக்கரத்தைக் காட்டி, அந்தக் கரத்தினால் பற்றிக்கொண்டு மணம் செய்துகொண்ட தேவயானையைக் காட்டி, அந்தப் பெருமாட்டியின் கணவன் முருகன் என்று சொல்கிறான். இனி, அடுத்தபடியாக அவன் திருமார்பில் அணிந்துள்ள கடம்ப மாலையையும் காந்தட் கண்ணியையும் சொல்ல வருகிறார்.*

### 8. பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

*திணை :* ***பாடாண்*** *துறை :* ***ஆற்றுப்படை***

***(1) உலகம் என்பது தொடங்கி (66) இன்னே பெறுதி நீ முன்னிய வினையே என்னுந் துணையும் ஒரு தொடர்; இதன்கண் - முருகப் பெருமானுடைய திருவருட்செல்வம் நிரம்பப் பெற்று இம்மையிலேயே சீவன் முத்தத்தன்மை யெய்திய சான்றோன் ஒருவன், அத்தகைய பேற்றைப் பெறுந் தகுதியுடையனாய், அதனைப் பெறுதற் கவாவித் தன் எதிர்ப்பட்ட ஒருவனை அளவளாவும் வாயிலாய், முருகப்பெருமானுடைய இறையியல் முதலியவற்றையும், அவ் விறைவன் அடையாளப் பூமாலையினையும், சூரரமகளிர் அப் பெருமான் சீர்த்தியைப் பாடி ஆடுமாற்றையும், அப் பெருமானுடைய தெறற் சிறப்பையும், பிறவற்றையும் விரித்தோதுகின்றார்.***

## *முருகப்பெருமானுடைய இறைமைத்தன்மை*

*(1-3) :* **உலகம் . . . . . . . அவிரொளி**

***பொருளுரை : உலகம் உவப்ப - உயிர்கள் மகிழும் பொருட்டு, வலன் ஏர்பு திரிதரு - மேருவை வலமாக எழுந்து திரிதலைச் செய்யும்: பலர் புகழ் ஞாயிறு கண்டாங்கு - பற்பல சமயத்தினரும் புகழா நின்ற ஞாயிற்று மண்டிலம் கீழ்கடலிடத்தே எழக் கண்டாற் போன்று, ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி - இருவகைக் கருவிகளும் தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேற்***

*சென்று தங்குதல் இல்லையாக உள்ளத்துள்ளே ஒளிர்வதும் உள்ளத்திற்குச் சேய்த்தாய் நின்றே எங்கும் இயல்பாகவே விளங்குவதுமாகிய ஒளியானவனும்,*

***கருத்துரை :*** *உயிர்கள் மகிழும் பொருட்டு மேருவை வலஞ்சூழ எழுந்து திரிதலைச் செய்யும் ஞாயிற்று மண்டிலத்தைக் கீழ்கடலிடத்தே எழுகின்ற செவ்வியிலே கண்டாற்போன்று, அன்பர்கள் தம் பத்துக் கருவிகளும் தத்தமக்குரிய பொருள்களிடத்தே செல்லாதனவாய் அடக்கிய பொழுது, அவர்தம் உள்ளத்தே ஒளிர்வதும் அவர் கருத்திற்கு சேய்த்தாய் நின்றே விளங்குவதுமாகிய இயற்கை ஒளியாகியவனும் என்பதாம்.*

***அகலவுரை :*** *உலகம் என்பது பூமி. அஃது அதன் கூறுபாடுகள், சான்றோர், உயிர், ஒழுக்கம் முதலிய பல பொருள் குறித்த ஒரு சொல்லாயினும் ஈண்டு உவப்ப என்னும் வினையினால் உயிர் என்னும் பொருட்டாய் நின்றமை உணரலாம். என்னை? உயிரற்ற சடவுலகிற்கு உவத்தற்றொழில் இன்மையான்.*

*பேரிருள் சூழ்ந்த இரவின்கண் அனைத்துயிரும் உறங்கிக் கிடப்பனவாகக் கீழ்க்கடலிடத்தே ஞாயிற்று மண்டிலந் தோன்றியவுடன், அவை விழிப்புற்றுத் தத்தம் வினையிடத்தே சென்று மகிழ்தலும், ஆணவப் பேரிருளிற்பட்டுத் தம்முண்மையும் உணரமாட்டாதனவாய்ச் சடம் போலக் கிடந்த உயிர்ப் பொருள்கள் இறைவன் அருள் கூர்ந்து அவையிற்றை விழிப்பூட்டுவான் உலகத்தைப் படைத்தருளி அவ்வுயிர்களைச் சகலாவத்தையிலேற்றி விழிப்பூட்டியவுடன் தம்மியல்பாகிய இன்ப உணர்வு விளங்கப்பெற்று அதனை நாடிச் சுத்தாவத்தை எய்தி அழிவில்லாத வீட்டின்கண் மகிழ்தலும் என உவமை யிடத்தும், பொருளிடத்தும் உயிர்கள் உவத்தற்குரிய ஏதுக்கள் ஒப்ப உண்மை நுண்ணிதிற்கண்டுகொள்க. வலன் என்னும் சொற்கு ஆற்றல் என்னும் பொருளுண்மையானே ஞாயிற்று மண்டிலத்திற்குக் கொள்ளுங்கால், மேருவை வலமாகச் சூழ்ந்தென்றும் இறைவனுக்கு ஓதுங்கால் தனது சத்தி மேலிட்டெழுந்து படைத்தன் முதலிய தொழில்களிடத்தே (உள் முகப்பட்டு) ஈடுபட்டு இயங்குதலைச் செய்யும் ஒளி என்றும் பொருள் காண்க.*

*இனி, ஞாயிற்று மண்டிலத்தையும், இறைப்பொருளையும் பல சமயத்தாரும் போற்றுதல் இயல்பாதலும் அறிக.*

*இங்ஙனம் இறைப் பொருள் தனது திருவருளாகிய சத்திமேலிட்ட காலத்தே அவ்வருள் காரணமாகவே உயிர்கள் ஆணவமல இருளினின்றும் நீங்கித் தனது திருவடி ஒளியாகிய வீடுபெற்று மகிழும் பொருட்டுப் படைப்பு முதலிய தொழில்களைச் செய்வன் என்பதனை,*

*"நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்*
*நிறைகிரியை தர அதனை நிமலன் மேவி*

*நாடரிய கருணை திரு உருவ மாகி*
*நவின்றுபல கலைநாத விந்து வாதி*
*கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்*
*கொடுவினைகொள் தனுகரண புவன போகம்*
*பீடுபெற நிறுவியவை ஒடுக்கு மேனி*
*பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே"* *(கச)*

*எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளானும் உணர்க.*

***ஓ :*** *தங்குதல் என்னும் பொருளுடைய ஓரெழுத் தொருமொழி. ஓவற இமைக்கும் ஒளி, என்றது உயிர் மனமுதலிய கருவிகளிலே சென்று தங்குதலில்லையாய்த் தனித்தவழி அதன்கண் விளங்குகின்ற அறிவொளி என்றவாறு. எனவே, உயிர் எல்லாம் இறைப் பொருளின் செயலேயன்றித் தன் செயல் ஒரு சிறிதும் இல்லை என்றுணர்ந்து முனைப்படங்கி அவ் விறையருளில் மூழ்கி நிற்கும் காலத்தே அவ்வுயிரின் கண் இறைவனின் அருளொளி விளங்குவதாம் என்றவாறு. இதனை,*

*"அவனே தானே ஆகிய அந்நெறி*
*ஏக னாகி இறைபணி நிற்க*
*மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"*

*எனவரும் சிவஞான போதத்துப் பத்தாஞ் சூத்திரத்தானும் உணர்க.*

*இனிப் புறக்கண்ணை மறைக்கும் புறவிருளைக் கெடுத்துப் புறப்பொருளை உயிர்கட்குத் தெரித்துணர்த்தும் பூதவொளியாகிய ஞாயிற்று மண்டிலமே உயிர்களின் அகக்கண்ணை மறைக்கும் ஆவணப் பேரிருளை அகற்றி மெய்ப்பொருளைத் தெரித்துணர்த்து அறிவுப் பேரொளியாகிய இறைப் பொருட்கு முற்றுவமையாய் நின்று சிறத்தல் அறிக.*

*இறைப் பொருளை ஒளியென்றே மெய்ந்நூல்கள் ஓதுவதனை "ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி" (சிவப்பிரகாசம் - க) என்றும், "பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானை" (திருநாவு - தேவா - சு க - க0) என்றும் "மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்" (திருவாசகம்-அ-கரு) என்றும் வரும் சான்றோர் மெய்ம்மொழிகளானே உணர்க.*

*இனி, தன்முனைப்படங்கிய உயிரின்கண் அவ்விறைப்பொருள் ஒளியாயே விளங்கும் என்பதை,*

*"எங்குந்தான் நிறைந்துசிவன் நின்றா னாகில்*
*எல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னில்*

*இங்குந்தான் அந்தகருக் கிரவியிரு ளாகும்*
*ஈசனருட் கண்ணிலார்க் கொளியாயே யிருளாம்*
*பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்*
*பரிதியலர்த் திடுவதுபோல் பருவஞ்சேர் உயிர்க்குத்*
*துங்கஅரன் ஞானக்கண் கொடுத்தருளி னாலே*
*சோதிக்குட்சோதியாய்த் தோன்றிடுவன் காணே"*
*(சிவ. சித்தி - 217)*

*என்றும்,*

*"தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே*
*சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னாகும்"* *(சிவ. சித்தி - 313)*

*என்றும், பிற சான்றோர் கூறுமாற்றானும் உணர்க.*

*இமைத்தல் - ஒளிர்தல். "மாசற இமைக்கும் உருவினர்" (முருகு - 128) என்புழியும் அஃதப்பொருட்டாத லுணர்க.*

*இங்ஙனம் பொருள் பார்த்தற்குக் கூறாது ஆசிரியர் நச்சினார்க்கினியர் இமைக்கும் என்றதற்கு, இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும் எனவும், இமைத்தல்-கண்களின் இதழ்கள் இரண்டினையும் குவித்தல் என்றும் வேண்டாதே உரைவிரித்தல் உணர்க.*

*இனி, ''இது வினையெச்சவுவமம்: விரவியும் வரும் மரபின என்ப, என்பதனால் தொழிலுவமமும் வண்ணுவுவமமும் பற்றி வந்தது என்னை? ஞாயிறு இருளைக் கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலிற் றொழிலுவமும், தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக் கிடந்தமை காண்க," என ஆசிரியர் நச்சினார்க்கினியர் ஓதிய இனிய விளக்கமும் காண்க.*

*இனி இறைவன் உவமையிறந்தவன் ஆயினும் அன்பர்கள் தம் ஆராமையாலே இவ்வுலகின்கண் உள்ள பொருள்களிலே சாலச் சிறந்த பொருள்களை அவ் விறைவனுக்கு உவமையாக எடுத்தோதி வாழ்த்தும் வழக்கமுண்மையை ஆன்றோர் நூல்கள் பலவற்றுள்ளும் கண்டு தெளிக. மேலும், திருக்கோவையாரில் ஐந்தாஞ் செய்யுட்குப் பேராசிரியர்"அணியும் அமிழ்தும் என்னாவியும் ஆயவன்," என்னும் அடிக்கு "இவை இறப்ப இழிந்தன வாயினும் பொருளது புரைவே, புணர்ப்போன் குறிப்பின், மருளற வரூஉம் மரபிற் றென்ப" என்பதனான் ''ஈண்டுச் சொல்வானது கருத்துவகையானும், உலகத்துப் பொருள்களுள் அவற்றினூஉங்கு மிக்கன இன்மையானும் உயர்ந்தனவாய் உவமையாயின" என நுண்ணிதின் விளக்கிச் சேறலான் உணர்க.*

*இனி, இவ்வுலகப் பொருள்களிலே ஒளிப்பிழம்பாகிய ஞாயிற்று மண்டிலத்தின் மிக்கதின்மையானும் ஞாயிற்று மண்டிலத்தே உலகை ஆக்கல் அளித்தல் அழித்தலாகிய இறைத்தொழில் மூன்றும் அமைந்திருத்தலானும், இறைவனுக்கோதிய எட்டு வடிவங்களுள் ஞாயிற்று மண்டிலமும் ஒன்றாதலானும், அதனினும் சிறந்துயர்ந்த உவமை இறைப் பொருட்குக் காண்டல் அரிதென்க. இறைவிளக்கம் மிக்குத்தோன்றுதல் பற்றியன்றே ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் இறைவனுக்குச் சுதந்திர வடிவமாய்த் திகழும் சுத்தமாயையின் விருத்தியாதல் பற்றி,*

*"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு"* *(குறள் - 1)*

*என எழுத்தினை உவமையாக எடுத்தோதியதும் என்க.*

*இனி, இவ்வுலகத்துப் பொருள்களுள் ஞாயிற்று மண்டிலத்தின் கண் இறைமைத்தன்மை மிக்குத் தோன்றுதல் பற்றி அதனையே இறைவனாக வைத்து வணங்குதலின் சான்றோர் வழக்கமாதலை,*

### *தரவு*

***ஆயிரங் கதிராழி ஒருபுறந்தோன் றகலத்தான்***
***மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த***
***மனக்கமல மலரினையும் மலர்த்துவான் தானாதல்***
***இனக்கமலம் உணர்த்துவன்போன் றெவ்வாயும் வாய்திறப்பக்***
***குட திசையின் மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்***
***கடவுளர்தம் உறங்காத கண்மலரே கரிபோக***
***ஆரிருளும் புலப்படுப்பான் அவனே என் றுலகறியப்***
***பாரகலத் திருள்பருகும் பரிதியஞ் செல்வகேள்;***

### *தாழிசை*

***மண்டலத்தி னிடைநின்றும் வாங்குவார் வைப்பாராய்***
***விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிப்படுவார்***
***ஆங்குலகம் முழுதுபோர்த் திருவுருவி னொன்றாக்கி***
***ஆங்கவரை வேறுவே றளித்தியென் றறியாரால்;***
***மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்***
***நின்னுருவத் தொடுங்குதலால் நெடுவிசும்பிற் காணாதார்***
***எம்மீனுங் காலைவா யிடைகரந்து மாலைவாய்***
***அம்மீனை வெளிப்படுப்பாய் நீயேஎன் றறியாரால்;***
***தவாமதியந் தொறுநிறைந்த தண்கலைகள் தலைதேய்ந்து***
***உவாமதிய நின்னொடுவந் தொன்றாகும் என உணரார்***

*தண்மதியின் நின்னொளிபுக் கிருள்அகற்றாத் தவற்றாற்கொல்*
*அம்மதியம் படைத்தாயும் நீயேஎன் றறியாரால்:*

**இருசீர் நான்கு**

*நீராகி நிலம்படைத்தனை நெருப்பாகி நீர்பயந்தனை*
*ஊழியிற் காற்றெழுவினை ஒளிகாட்டி வெளிகாட்டினை*

**ஒருசீரெட்டு**

*கருவாயினை விடராயினை*
*கதியாயினை விதியாயினை*
*உருவாயினை அருவாயினை*
*ஒன்றாயினை பலவாயினை*

**தனிச் சொல்**

*எனவாங்கு,*

**சுரிதகம்**

*விரிதிரைப் பெருங்கடல் அமிழ்தத் தன்ன*
*ஒருமுதற் கடவுள்நிற் பரவுதும் திருவொடு*
*சுற்றந் தழீஇக் குற்ற, நீக்கித்*
*துன்பந் தொடரா இன்ப மெய்திக்*
*கூற்றுத்தலை பனிக்கும் ஆற்றல் சான்று*
*கழிபெருஞ் சிறப்பின் வழிவழிப் பெருகி*
*நன்றறி புலவர் நாப்பண்*
*வென்றியொடு விளங்கி மிகுகம்யாம் எனவே"*

*(தொல். பொருள்)*

*எனவரும் அமிழ்தினுமினிய பழம்பெருந் தமிழ்ப்பனுவலானே அறிக.*

*இனிச் சேண் விளங்கு ஒளியென்றதனை ஞாயிற்றுமண்டிலத்திற்குக் கொள்ளுங்கால், வானத்தின்கண் நனிசேய்த்தாய் நின்று விளங்குதலையும், முருகபெருமானுக்குக் கொள்ளுங்கால் அன்பர் உளத்தே விளங்கும்பொழுதும் அவர் கருத்திற்குச் சேமனாய் நின்றே விளங்குதலையும் கொள்க. என்னை?*

*"கடல்அலைக்கே ஆடுதற்குக் கைவந்து நின்றும்*
*கடல்அளக்க வாராதாற் போலப் - படியில்*

*அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்*
*கருத்துக்குச் சேயனாய்க் காண்"* *(திருக்களிற்றுப்படியார், கூ0)*

*என ஆன்றோர் ஓதுதலான் என்க.*

*அவிர் ஒளி - இயல்பானே விளங்கும் ஒளி என்க.*

*இனி இம்மூன்றடிகளிலே நல்லிசைப்புலவரான நக்கீரனார் முருகப்பெருமானுடைய இறைமைத்தன்மையை நன்கு எடுத்தோதி விளக்கினமையை அறிக. இதனைப் "பரத்துவம்" என்பர் வடநூலார். ஈண்டு நக்கீரர் தாம் வழிபடும் முருகப்பெருமானைப் பரத்துவமுடைய முழுமுதலாகவே கொண்டனர். இல்லை எனின் அந்தமில் இன்பத்து அழியாவீடு நல்குதல் அமையா தாகும் என்க.*

## முருகபெருமானுடைய அளியும் தெறலும்

***(4 - 6) : உறுநர் . . . . . . . . . . . கணவன்***

***பொருளுரை :*** *உறுநர் தாங்கிய - தன்னைச் சேர்ந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்குகின்ற, மதன் உடை நோன்றாள் - அவர்தம் அறியாமையை உடைத்தற்குக் காரணமான வலிய திருவடிகளையும், செறுநர் தேய்த்த - அழித்தற் குரியாரை அழித்த, செல் உறழ் தடக்கை - இடியோடு மாறுபட்ட பெரிய கையினையும் உடையவனும், மறுஇல் கற்பின் - குற்றமற்ற கற்பினையும், வாணுதல் - ஒளியுடைய நெற்றியினையும் உடைய தெய்வ யானையார்க்கு, கணவன் - கொழுநன் ஆகியவனும்,*

***கருத்துரை :*** *தன்னைச் சேர்ந்த அன்பர்களின் மாசுபோக்கி வீட்டின்பத்தினை நல்கித் தாங்கும் வலிய திருவடிகளையும், அழித்தற் குரியாரை அழிக்கும் இடியோடே மாறுபட்ட பெரிய கையினையும் உடையவனும் குற்றமற்ற கற்பினையுடைய தெய்வயானையார்க்குக் கணவன் ஆகியவனும் என்பதாம்.*

***அகலவுரை :*** *உறுநர், அவனுடைய திருவருளாலே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் எய்தப்பெற்று,*

*"உலகினில்என் செயலெல்லாம் உன்விதியே நீயே*
*உண்ணின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்*
*நிலவுவதோர் செயல் எனக்கின் றுன்செயலே என்றும்"*

*(சித்.)*

*நினைவாராய் மெய்யுணர்ந்து தனது திருவடியில் தஞ்சம்புக்க சான்றோர்கள்.*

*அங்ஙனம் தற்செயலற்றுத் தான் அற்றுத் தன் அடியின்கட் புகல் புக்க அன்பரை, அவர் செயலெல்லாம் தன்செயலாக ஏற்றுக்கொண்டு அவரைத் தானாக்கி அவர்தம் பழவினைக்கட்டை எல்லாம் தானே முன் நின்று போக்கும் பெருமை தோன்றத் தாங்கிய தாள் என்றார். என்னை!*

*"சலமிலனாய் ஞானத்தால் தனையடைந்தார் தம்மைத்*
*தானாக்கித் தலைவன்அவர் தாஞ்செய்வினை தன்னால்*
*நலமுடனே பிறர்செய்வினை ஊட்டிஒழிப் பானாய்*
*நணுகாமல் வினையவரை நாடிக் காப்பான்" (சித்.)*

*என்றும்,*

*"இவனுலகின் இதமகிதம் செய்த வெல்லாம்*
*இதமகிதம் இவனுக்குச் செய்தார்பால் இயையும்*
*அவனிவனாய் நின்றமுறை ஏக னாகி*
*அரன்பணியின் நின்றிடவும் அகலும் குற்றம்*
*சிவனும்இவன் செய்திஎல்லாம் என்செய்தி என்றும்*
*செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்*
*பவமகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்*
*பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"*
*(சித்தியார் சுபக்.)*

*என்றும்,*

*"கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லால்*
*எடுத்துச் சுமப்பானை இன்று" (திருவருட்பயன்)*

*என்றும், அடியாரை முழுதும் தாங்கும் இறைவன் திருவருள் மாண்பினைச் சான்றோர் பிறரும் எடுத்தோதுதலானும் உணர்க.*

*மதன் - அறியாமை: ஈண்டு ஆணவமலம். அம் மலத்தை அகற்றுதல் அரிதுஎன்பது தோன்ற உடை நோன்றாள் என்றார்: உடைத்தல். திண்ணிய பொருள்களை யாகலின். திருவடியே வீடாகலின் தாங்கிய தாள் என்றார். திருவடியே வீடாயிருக்கும் என்பதை,*

*"யானெனதென் றற்ற இடமே திருவடியா" (கந்தர் கலி.)*

*எனவரும் குமரகுருபர அடிகளார் திருமொழியானும் உணர்க.*

*உலகத்தைப் படைத்தன் முதலிய ஐந்தொழிலையும் விளையாட்டாக நிகழ்த்தும் அப் பெருமானது பேராற்றலைத் திருவடிமேல் வைத்து 'நோன்றாள்' என்றார். அத் திருவடியை அல்லால் உயிர்களின் துயர்போக்குதல் பிறிதொன்றான்*

*ஆகாமையான் தாளின் பெருமையை விதந்து முதற்கட் கூறினார். ஆசிரியர் திருவள்ளுவனாரும்.*

*"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது.* *(திருக்குறள் - 7)*

*என்றோதுதல் அறிக. இது,*

*"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு*
*நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்*
*செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்*
*நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப*
*இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"* *(முருகு. 63-67)*

*எனப் பின்னர்ச் செவியறிவுறுத்தற்கு ஈண்டு ஏதுக் கூறியவாறாதலும் உணர்க. இது முருகப்பெருமானுடைய திருவருளில் அறத்திருவருளை விதந்தோதிய வாறாம். இனி, அப் பெருமானுடைய மறத்திருவருளை எடுத்தோதுகின்றார் என்க.*

*செறுநர் - அழிக்கத்தக்கவர். இவராவார், இறைவன் திருவருட் குறிப்பினின் றொழுகாது, தீவினையை நயந்து, பிறர்க்கும் தமக்கும் கேடு சூழ்விக்கும் அசுரரும், மானிடருள், அவ் வசுரத்தன்மையுடைய தீவினைமாக்களும் ஆவர் என்க.*

*இங்ஙனம் நல்லொழுக்க நெறியின் வழீஇக் கெடுவார், மேலும் கெட்டழியா வண்ணம், அவர் உடற்பொறையை மாற்றி அவரை உய்யக் கோடலும் இன்றியமையாமையின், இறைவற்கு அழித்தற் செயலும் அருள்பற்றிய செயலே ஆயிற்றென்க. இதனை,*

*'நிக்கிர கங்கள் தானும் நேசத்தா லீசன் செய்வது*
*அக்கிர மத்தாற் குற்றம் அழித்துத்தீர்த் தச்சம் பண்ணி*
*இக்கிர மத்தி னாலே ஈண்டறம் இயற்றி டென்பன்*
*எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே என்றும்"*

*(சித்தியார் சுபக்.)*

*என்றும்,*

*"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொ லாற்றின்*
*வந்திடா விடின்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய*
*பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்*
*இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும்"*

*(சித்தியார் சுபக்.)*

*என்றும் வரும் சிவஞான சித்தியாரான் உணர்க.*

*இனி உறுநர்த்தாங்கும் என்றதற் கேற்ப, ஈண்டுச் செறுநர்த் தேய்த்த என்று பொருந்திய வினைகொடுத்தோ துதல் உணர்க.*

*செல் - முகில்; ஈண்டு இடிக்கு ஆகுபெயராய் நின்றது. முகில் மழைபெய்து உலகை ஓம்புதலே இயற்கைக் கடப்பாடாக உள்ளதன்றி அழிப்பது அதன் செயலன்று, ஒரோவழி அஃது இடியெறிந்து ஒருவனைக் கொல்லுமாயின், அது கொல்லப்பட்டான் தீவினைப்பயன் அன்றி முகிலின் செயல் அன்று. எனவே, இறைவன் தடக்கையும் அம் முகில்போல உயிரை ஓம்புதற்றொழிலையே பெரிதும் செய்யும் என்றும், அழிக்கத்தக்கார் உளராவழி இடி போல அழிக்கும் என்றும் கொள்ளக்கிடந்தமை நுண்ணுணர்வான் அறிக. ஒன்றனை விரைந்தழிப்பதன்கண் இடியினும் சிறந்தது பிறிதின்மையும் உணர்க.*

*இனி மறுவில் கற்பின் வாணுதல் கணவன் என்றது, அவ்விறைப் பொருள் ஒன்றே உலகத்தை நடத்துங்கால் தன்னுள்ளே ஆணும் பெண்ணுமாகிய இருவேறு தன்மைகளை அமைத்துக்கொண்டு நடத்துதல். அவ்வாறு தன்னுள் இருவேறு தன்மைகள் வையாவழி உலகின் உயிர்களும் தம்முள் ஆண் பெண் என்னும் இருவேறு வடிவமுடையவாய்க் களித்து வாழ இடமின்றாதல்பற்றி உயிர்கள் காதலாற் கூடிக்களித்து வாழும் பொருட்டே ஆகலான், இன்றியமையா அத் திருக்கோலத்தை விதந்து கூறியபடியாம். மரமும் காழ்ப்பும்போல இறைவனும் இறைவியும் ஒன்றே என்பார், வாணுதல் கணவன் என்னுந்தொடர் முருகன் என்னும் பெயர்ப்பொருட்டாய் நிற்குமாற்றானே அமைத்தனர். இதனை,*

> *"சத்தியும் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்*
> *ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி*
> *வைத்தனன்* ***அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்***
> ***இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பு மோரார்"***
>
> ***(சித்தியார் சுபக்.)***

***என்றும்,***

> ***"அருளது சத்தி யாகும் அரன்தனக் கருளை யின்றித்***
> ***தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை"***
>
> ***(சித்தியார் சுபக்.)***

***என்றும் வருதலான் அறிக.***

***இறைவன் கருத்தோடு எட்டுனையும் இறைவி மாறுபாடின்றி இயைந்து நடத்தலின் மறுவில் கற்பின் வாணுதல் என்றார். "எத்திறன் நின்றான் ஈசன் அத் திறம் அவளும் நிற்பள்" (சித்தி - எச) என்றார் பிறரும். கற்புடைமையால் அக அழகும் வாணுதல் உடைமையால் புற அழகும் சேரக் கூறிய நுணுக்கம் உணர்க.***

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்(து)
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்(து)
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்

---

முருகனுடைய மாலை

**1. நச்சினார்க்கினியர்**

*கார்கோள் என்பது முதல் மார்பினன் (11) என்னுந் துணையும் ஒரு தொடர்.*

*கார்கோள் முகந்த கமஞ்சூல் மா மழை - கடலிலே முகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத் தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை.*

*கார் முகக்கப்படுதலிற் கடல் கார்கோளென்று பெயர் பெற்றது. ஆகுபெயர்.*

*வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி - திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச்சிதறி. வாள்-ஆகு பெயர்.*

*தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து-கார்காலத்து முதற் பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து.*

*இருள் படப் பொதுளிய பராரை மராஅத்து-இருட்சி யுண்டாகத் தழைத்த பரிய அடியினையுடைய செங்கடம்பினது.*

*பராரை-பண்புத்தொகைச் சந்திமுடிபு வேற்றுமை யென்றுணர்க.*

*உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன்-தேருருள் போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலையசையும் மார்பினையுடையவன்:*

*உருள் பூ உவமத் தொகையாகலின், உருள் பூ உருட் பூவென உறழ்ச்சி முடிபெய்தும். இனி உருளும் பூ உருண்ட பூவென வினைத் தொகையுமாம்.*

*மழை சிதறித் தலைஇய கானத்து மராஅத்துத் தார் புரளும் மார்பினனென முடிக்க.*

*இது போகத்திற்குரிய தார்; இதனை முற்கூறினார் வாணுதல் கணவனென்றதனை நோக்கி.*

**2. உரையாசிரியர்**

*கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை - கடலிலே நீர் முகந்ததனாலாகிய நிறைந்த சூலையுடைய கரிய மேகமானது.*

*வாள்போழ் விசும்பின் வள் உறை சிதறித் தலைப் பெயல் தலைஇய தண் நறுங் கானத்து - சந்திராதித் தருடைய ஒளியை நீக்கி ஆகாசத்திலே வளவிய துளிகளைச் சிந்தி முதன்மழை பெய்து அம்மழை விட்ட குளிர்ந்த மனமுடைய காட்டிடத்து.*

*இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து-இருளுண்டாம்படி தழை நெருங்கிய பருத்த அரையையுடைய செங்கடம்பினது.*

*உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன் - வட்டம் பொருந்திய பூவால் செய்த குளிர்ந்த மாலை அசையும் மார்பினையுடையவன்.*

### 3. பரிமேலழகர்

*கார்கோள் முகந்த கமம்சூல் மாமழை - கடலில் முகந்து முதிர்ந்த கருக்கொண்ட மேகங்களானவை பெரிய மழைகளை,*

*வாள் போழ் விசும்பின் வள் உறை சிதறி-சந்திராதித்தர்களாலே யளவிடப் பட்டாற் போன்ற விசும்பினிடத்தில் நின்று மேகமானது வளப்பமுடைய பெரிய மழைகளைத் தூவி,*

*தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து-முதற் பெய்த நீர் நிலத்துக் குளிர்ந்த நறு நாற்றத்தினையுடைய பொழிலிடத்து: இதுவன்றித் 'தலைஇய' எனற்குத் தழைத்த எனினுமமையும்.*

*இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து-இருளுண்டாக நெருங்கிப் பருத்த அரையினையுடைய மரமாகிய கடம்பின்,*

*உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன் - வட்டப்பூவால் சமைந்து தட்பமுடைத்தாய திருமாலை அசை தருகின்ற மார்பினையுடையனு மாய்:*

### 4. கவிப்பெருமாள்

*கடலிலே நீர் முகந்த முதிர்ந்த சினையையுடைய கரிய மேகங்களானவை வாளாலே பிளந்தாற் போல மின்னுகின்ற வானத்திலே நின்று வளவிய நீர்த்துளிகளைச் சிந்தி முதற்பெயலைப் பெய்து விட்ட தட்பத்தையும் நறுநாற்றத்தையும் உடைத்தாய காட்டிடத்து இருளுண்டாகும்படி நெருங்கித் தழைத்த பருத்த அரைவடிவினையுடைய திருக்கடம்பின் வட்டப் பூவாலே தொடுத்த குளிர்ந்த மாலை அசைகின்ற திருமார்பினை யுடையவன்:*

### 5. பரிதியார்

*தலைப்பெயல் தலைஇய - மாரிக்காலத்து மழை போலப் பொழிய. இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து - இருளையுற்றுச் சாகைகளையு முடைத்தான செங்கடம்பு. உருள் பூ-உருண்ட பூ.*

**6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்**

*கார்-மேகம்: ஈண்டு அதனால் முகக்கப்படும் கடற்கு ஆயினமையின் ஆகுபெயராயிற்று.*

*கமம்-நிறைவு: 'கமம் நிறைவாகும்' என்னும் தொல்காப்பியமும். வாள்-ஒளி: ஈண்டு அதனையுடைய ஞாயிற்றிற்கும் திங்களுக்கும் ஆயினமையின் ஆகுபெயராயிற்று. 'வாள் ஒளியாகும்' என்னும் தொல்காப்பியமும். உரையாசிரியர்கள் அனைவரும் வாள் என்பதற்கு ஞாயிறும் திங்களும் என்றே உரை காணக் கவிப் பெருமாள் மட்டும் வாளாலே பிளந்தாற் போல என உரை காணுகிறார். இதுவே ஆசிரியர் உளத்தொடுபட்ட கருத்தாகும்.*

*பருமை + அரை = பராரை. பருத்ததாகிய அடியினையுடைய. உருள்பூ - உருண்டபூ என்றே அனைவரும் உரைகாண, இதனை உவமத் தொகையாகக் கொண்டு தேர்உருள் போன்ற பூ என உரைத்தது நயனுடையதாகும். உருள் தேர்உருள் ஆதல் 'உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னாருடைத்து' என்பதனானும் அறிக. தார்: இதனை போகத்துக்குரிய மாலையாகக் கூறியதும் சிறப்புடைத்தாம்.*

**7. கி.வா. ஜகன்னாதன்**

**மாலையும் கண்ணியும்**

***கடம்ப மாலை***

***எப்போதும் போகத்துக்குரிய மாலையாக முருகன் அணிந்திருப்பது கடம்பாலை. அவன் போர்க்காலத்தில் அடையாள மாலையாக அணிவது காந்தளங் கண்ணி, மார்பில் அணிகின்ற மாலைக்குத் தார் என்று பெயர். ஆடவர்கள் அணிவது தார். மகளிர் அணிவது கோதை. வீரமும் காதலும் நிறைந்த ஆடவர்கள் எப்போதும் தங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள். பல விதமான உடையாலும், அணியாலும், அழகு செய்து கொள்வதோடு மலர் மாலையை மார்பில் அணிந்திருப்பார்கள். முருகன் கடம்ப மலர் மண மாலையை அணிந்து கொண்டிருக்கிறான். எத்தகைய கடம்ப மலர்? இங்கே கடம்ப மரத்தையே வருணனை செய்யப் புகுகிறார் நக்கீரர்.***

***பெரிய மரத்தில் அருமையாக மலர்ந்தது அந்தக் கடம்ப மலர். முருகன் எப்போதும் முதன்மையாக இருக்கிற பொருளை எல்லாம் கொள்கிறவன், ஐந்திணையில் முதல் திணையாகிய குறிஞ்சி அவன் நிலம். அந்த நிலத்தில் கார் காலத்தில் பூப்பது கடம்ப மலர். இதோ கார்காலம் வந்துவிட்டது: மேகங்கள் வெள்ளையாகப் படர்ந்து சென்று கடலில் தண்ணீரை முகந்து கொண்ட***

*நிறைந்த கருப்பத்தோடு வானில் வந்த குளிர்ச்சி பெற்று மழையைப் பொழிகின்றன. கன்னங்கரேல் என்று படர்ந்த மேகத்தில் மின்னல் வீசுகிறது.: ஆகாயத்தையே வாளினால் கிழிப்பதுபோல இருக்கிறது அந்த மின்னல். இடித்து மின்னி மழையைப் பொழிகிறது மேகம்: எடுத்த எடுப்பில் பெரிய பெரிய துளிகளாகச் சிதறுகிறது. இப்போது பெய்கிற மழை முதல் மழை,*

*அந்தப் பெரிய மழை பெய்ததனால் காட்டிலுள்ள மரங்கள் எல்லாம் நன்றாக வளர்கின்றன. மலர் மரங்கள் நிரம்பிய காடு ஆதலின் அது நறுங்கானமாக, மணம் வீசும் காடாக விளங்குகிறது. இப்போது மழை பெய்தமையினால் தண்மையாக இருக்கிறது. முதல் மழை பெய்த அந்தக் காட்டிலே பெரிய கடம்ப மரம் செறிந்து வளர்ந்து அடர்ந்து படர்ந்து நிற்கின்றது. தழையின் செறிவு எங்கும் இருளைப் பரப்பியிருக்கிறது. கதிரவனுடைய கதிர்கள் உள்ளே புகமாட்டாமல் அவ்வளவு அடர்த்தியாக இருக்கிறது. எங்கும் இருள் உண்டாகும்படியாகக் கிளையும், கொம்பும், தழையும் படர்ந்திருக்கின்றன. பல காலமாக வளர்ந்த கடம்ப மரம் ஆதலின் அது மிகப் பருத்த அடியை உடையதாக இருக்கிறது. அந்த அடியைக் கண்டு அதனுடைய பிராயத்தை வரையறுத்து விடலாம். பருத்த அரையையுடைய கடம்ப மரம் அது: பரா அரை மராஅம்.*

*அது தண்ணறும் கானத்தில் வளர்ந்து நிற்கின்றது. தலைப்பெயல் பெய்தமையினால் அந்த மரம் தழைத்துப் பூத்து அழகுபெற நிற்கின்றது. கடம்ப மலர் உருளை வடிவில் இருக்கும். வட்டமாக இருக்கும். மாலை மாலையாகப் பூத்து இருக்கும். அந்த மலரைக் கட்டி அணிந்திருக்கிறான் முருகன். அது அவனுடைய மார்பிலே புரளுகிறது.*

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்

*(கடலை முகந்த நிறைந்த கருப்பத்தை உடைய கரிய மேகம் மின் ஒளி வெட்டும் வானத்தில் வளப்பமான மழைத் துளியைச் சிதறி முதல் மழையைப் பெய்த தண்ணிய மணம் வீசும் காட்டில், இருள் உண்டாகும்படியாகச் செறிந்து படர்ந்த பருத்த அடிமரத்தையுடைய செங்கடம்பினது உருளும் பூவினால் கட்டிய மாலை புரளும் திருமார்பை உடையவன்).*

*கார்கோள்-கடல். கம-நிறைவு. வாள்-ஒளி. உறை-துளி. பெயல்-மழை. தலைஇய-பெய்த. பொதுளிய-செழித்த. பராஅரை-பருஅரை: பருத்த அடிமரம். மரா அம்-செங்கடம்பு).*

## 8. பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

### முருகக் கடவுளின் தார்

*7 - 11 :* **கார் கோள் . . . . ... . .. . மார்பினன்**

***பொருளுரை:*** *கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை - கடலிலே நீர்முகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத்தாகிய சூலினையுடைய முகில். வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறி-ஞாயிறுந் திங்களும் இருளைநீக்கும் வானிடத்தே பெருமையுடைய துளியை முற்படச் சிதறி, தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து-கார்காலத்து முதற்பெயலைப் பொழிந்த தண்ணிய நறிய காட்டிடத்தே, இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து-இருட்சியுண்டாகத் தழைத்த பெரிய அடியையுடைய செங்கடம்பினது, உருள்பூந் தண் தார் புரளும் மார்பினன்-தேருருள் போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலையசையும் மார்பினையுடையவனும்;*

***கருத்துரை :*** *கடலின்கண் நீர் முகந்து நிறைந்த சூல் மேகங்கள் ஞாயிறுந் திங்களும் இருளை நீக்கும் விண்ணிடத்தே பெரிய துளியை முற்படச் சொரிந்து, கார்காலத்து முதற்பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்தே, இருட்சியுண்டாகத் தழைத்த பெரிய அடியினையுடைய செங்கடம்பினது தேருருள்போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலை அசையும் மார்பினையுடையவனும் என்பதாம்.*

***அகலவுரை :*** *மழை சிதறித் தலைஇய கானத்து மராஅத்துத் தார்புரளும் மார்பினன் என்க.*

*கார்கோள் - கடல்: காரராலே கொள்ளப்படுவது என்னும் பொருட்டு: கார்-முகில்: கோள் - கொள்ளப்படுவது. முகந்த - நீரைப் பருகிய என்க. கடனீரே முகிலாக மாறுதலின், முகில்கள் கடனீரை முகந்து கொண்டுவந்து மழை பெய்வதாகக் கூறுவது புலவர் மரபென்க. கமம்-நிறைவு. "கமம் நிறைந்தியலும்" (உரி - குஎ) என்பது தொல்காப்பியம். சூல் - கரு. மழை பெய்தற்குரிய செவ்விமுகிலைச் சூல் முகில் என்ப. "முழங்கு கடன் முகந்த கமஞ்சூன் மரமழை' (நற் - கூசஎ:க) என்றும், "கமஞ்சூன் மாமழை கார்பயந்திறுத் தென" (அகம் - ககூச:உ) என்றும் பிறரும் ஓதுதல் காண்க.*

*வாள் - ஒளி; ஈண்டு ஞாயிற்றையும் திங்களையும் குறித்து நிற்றலின் ஆகுபெயர் என்க. போழ்தல் - பிளத்தல்; ஈண்டு அகற்றுதல் என்னும்*

பொருட்டாய் நின்றது. விசும்பு- வானம். வள்ளுறை சிதறி - பெரிய பெரிய துளிகளை வீழ்த்து என்றவாறு.

காட்டின்கண் மரங்கள் தழைத்தற்கு மழைமட்டும் போதிய தாகாது: ஒளியும் மழைபோல இன்றியமையாது வேண்டப்படும் ஆதலின், வெப்பமும் தட்பமும் வேண்டியாங்குப் பெற்றுத் தழைத்த செங்கடம்பு என்பார், வாளா விசும்பென்னாது 'வாள் போழ்வீசும்"யென்றார். வாள் போழ்தலும் மழை சிதறலும் உயிர்கள் தழைத்தலும் அவனருளாலே என்பதும் குறிப்பாற் கொள்க.

இறையருளாலே மழை பொழிதலும் அம் மழையாலே உலகின்கண் தவமும் அறமுதற் பொருள்களும் மிகுதலும் குறிப்பாற் கூறுவார், தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும், தம் திருக்குறளில் கடவுள் வாழ்த்திற்குப்பின் வான்சிறப்பையும், நீத்தார்பெருமையையும், அறன் வலியுறுத்தலையும் நிரலே வைத்தோதுதல் அறிக. ஈண்டும் அக்கடவுள் அருள்வெளிப்பாடாகிய வான்சிறப்பே ஆசிரியர் நக்கீரனார் குறிப்பாற் கூறினர் என்க.

உறை-மழைத்துளி. சிதறுதல்-துளித்தல். "வள்ளுறை . . . தலைஇய கானம்" (ஙரு) என்றார். குறுந்தொகையினும். தலைப்பெயல் - கார்காலத்தொடக்கத்தே பெய்யும் முதல்மழை என்க. தலைஇய - பெய்த: தலையல் என்பதன் எச்சம். "தலைய லென்பது மழைபெய்து விடுதல்" (கசக) என்பது திவாகரச் சூத்திரம்.

தண்ணறுங் கானமாதற்கு வாள் விசும்பு போழ்தலும் மாமழை தலைதலும் ஏதுக்கள் என்க. தண்ணறுங் கானம் என்றார் தழைமிகுதியாலே குளிர்ச்சியும், மலர் மிகுதியாலே நறுமணமும் ஒருங்கே உடைத்தாகிய காடு என்றற்கு. இலை நெருக்கத்தாலே இருள் உண்டாகும்படி தழைத்த காடு என்க. பொதுளிய - தழைத்த. பருமை அரை என்பன பராரை எனப் புணர்ந்தது செய்யுள் முடிபென்க. இது வழக்கின்கட் பருவரை என முடியும். மராம்-கடப்ப மரம். மராவத்து என்பது, மராஅத்தெனத் திரிந்து நின்றது.

இனிக் கொன்றை போன்று கடம்பும், மாலைபோல இயல்பாகவே மலர்தல் அறிக. இது முருகக் கடவுளுக்குரிய போகமாலை என்ப. இதனால் முருகக் கடவுளைக் கடம்பன் என்று வழங்குதலும் அறிக. "காரலர் கடம்பள் அல்லன் என்பதை, ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்'' (ச:சக ரு0) என மணிமேகலையினுங் "கார்க் கடம்பந்தார் எங்கடவுள்" எனச் சிலப்பதிகாரத்தும். "கார் நறுங்கடம்பின் கண்ணி சூடி ..... முருகே" (ஙச-அ:கக) என நற்றிணையினும், "கார்நறுங் கடம்பின் ...... தெரியற் சூர்நவை முருகன்" எனப் புறத்தினும் வருதல் அறிக. இக் கடம்பு கொன்றைபோன்று கார்காலத்தே மலரும் இயல்புடைய தென்பதனை, இதனோடு கார் என்னும் அடைபுணர்த்தே சான்றோர் பலரும் கூறுமாற்றானறிக

*உருள் - தேருருள். இம் மலர் தேருருள் போன்ற வடிவுடைத்தாதலை நோக்கியறிக. இனி, உருட்சியையுடைய பூ எனினுமாம். உருள்பூ என்பது, உருள்பூ என இயல்பாகவும் உருட்பூ எனத் திரிந்தும் உறழ்ச்சி முடிபெய்தும், ஆதலின் உருள்பூ என இயல்பாக நின்ற தென்க. தண்டார் - குளிர்ந்த மாலை. தார் என்பது மார்பிலணிவதற்குரிய மாலை. தலையிலணிவதைக் கண்ணி என்ப. இதனைக், "கண்ணி கார்நறுங் கொன்றை காமர், வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறம்-கடவுள்.) என வேறுபடுத் தோதுமாற்றான் உணர்க.*

*இனி, முருகன் குறிஞ்சிநிலத் தெய்வமாகலின் அவனது கண்ணியாகிய செங்காந்தளின் சிறப்புரைக்கு முகத்தானே அப்பெருமான் உவந்துறையும் மலைவளஞ் சோலைவளம் ஆண்டுச் சூரர மகளிர் செயல் முதலியவெல்லாம் கஉ-மால்வரை என்பது தொடங்கி, சச-சென்னியன் என்னுந் துணையும் விரித்தோதுகின்றார்.*

## *சூரர மகளிர் தோற்றம், செயல் விளையாட்டு*

**மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்குஞ் செயிர் தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்(டு)
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்(பு)
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்**

நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்

---

**1. நச்சினார்க்கினியர்**

*மால்வரை (12) என்பது முதற் சென்னியன் (44) என்னுந் துணையும் ஒரு தொடர்.*

*மால்வரை நிவந்தசேண் உயர் வெற்பில் - பெருமையையுடைய மூங்கில் வளர்ந்த தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில். வரை - மலை. மால் - திருமால்.*

*வரைகளை யுடைமையின், வரையாயிற்று இஃது ஆகுபெயர். "பெரிய வரைவயிரங் கொண்டு" (யாப்பிருங்கலவிருத்தி: நூற் 607) என்றார் பிறரும். இனித் திருமால் போலும் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம். 'மாயோனன்ன மால்வரைக் கவாஅன்" (நற்-32) என்றார் பிறரும்.*

*கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி - சிறு சதங்கை சூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும்,*

*கணைக்கால் - திரண்ட காலினையும்,*
*வாங்கிய நுசுப்பின் - வளைந்து நுடங்கிய இடையினையும்,*
*பணைத்தோள் - பெருமையையுடைய தோளினையும்,*
*மூங்கில் போலும் தோளென்றுமாம்.*

*கோபத்து அன்ன தோயாப் பூந்துகில் - இந்திர கோபத்தை யொத்த நிறம்பிடியாத இயல்பான சிவப்பாகிய பூத் தொழிலினையுடைய துகிலினையும்,*

*தெய்வத்தின் ஆணையால் தானே சிவந்திருத்தலில் தோயாத்துகிலென்றார். பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பலமணிகள் கோத்த ஏழு வடமாகிய மேகலையையணிந்த அல்குலினையும்,*

அஃது “எண்கோவை காஞ்சி யெழு கோவை மேகலை - பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள் - பருமம் பதினெட்டு முப்பத்திரண்டு- விரிசிகை யென்றுணரற் பாற்று” என்பதனானுணர்க.

கை புனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின் - ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப் பெறுகின்ற அழகினையும்,

என்றது; மானிட மகளிர்க்குத் தாயார் பலருங்கை செய்து பிறப்பிக்கும் அழகன்றி இவர் தெய்வத் தன்மையான் இயல்பாகப் பெற்ற அழகினையுடைய ரென்றவாறு,

நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை-சாம்புநதமென்று நாவலோடடுத்துப் பெயர் பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூணினையும்,

பொலம் - “பொன்னென் கிளவி” (தொல்-புள்ளி - 61 நூற்) என்பதனான் முடிக்க.

சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி-சேய்நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந் தீர்ந்த நிறத்தினையு முடைய சூரரமகளிர் (41) என்க.

துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி-ஆயத்தார் நன்றென்றாராய்ந்த கடை யொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே, ஆயம் - சுற்றம்.

(செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு. பைந்தாட் குவளைத்தூ இதழ் கிள்ளி) செங்கால் வெட்சிச் சீர் இதழ் இடை பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளி இடுபு-சிவந்த காலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை விடு பூவாகத்தூவி அதற்கு நடுவே பசுத்த தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளிவிட்டு,

தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து-சீதேவி யென்னுந் தலைக்கோலத்துடனே வலம்புரி வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து,

திலகம் தைஇய தேங்கமழ் திரு நுதல் மகரப்பகு வாய் தாழ மண்ணுறுத்து -திலகமிட்ட மண நாறுகின்ற அழகினையுடைய நெற்றியின் கண்ணே சுறாவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலம் தங்கப் பண்ணி,

மகரப் பகுவாய்-ஆகுபெயர். மண்ணுறுத்தலை, ‘ஆவுதி மண்ணி’ (மதுரைக் காஞ்சி - 494) என்றாற் போலக் கொள்க. இனி மண்ணுறுத்துத் துவர முடித்தவென மேலே கூட்டிக் கழுவி முடித்த வென்றுமாம்.

துவர முடித்த துகள் அறும் முச்சிப் பெருந் தண் சண்பகம் செரீஇ-

வேண்டுவனகூட்டி முற்ற முடித்த குற்ற மறுகின்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த செண்பகப் பூவைக் செருகி.

கருந் தகட்டு உளைப் பூ மருதின் ஒள் இணர் அட்டி-கரிய புறவிதழினையும் மேலிற் றுய்யினையு முடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்கள் அதன் மேலேயிட்டு,

இது, முதலாகிய பொருட்கேற்ற அடையடுத்து நின்றது,

கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு இணைப்புறு பிணையல் வளைஇய - பச்சென்ற அரும்புகளினின்றும் மேலே போந்து அழகு பெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுதலுறுகின்ற மாலையை வளைய வைத்து,

கவினென்னும் பண்படியாகக் கவின்றென்னுந் தொழில் பிறந்தது. கீழ்நீர்-நீர்க்கீழென்னும் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ. அது மிகச்சிவத்தலின், ஒப்பனைக்குக் கொள்வர்.

(துணைத்தக, வண் காது நிறைந்த பிண்டி யொண்டளிர் நுண் பூணாகந் திளைப்ப) வண் காது துணைத்தக நிறைந்த பிண்டி ஒண் தளிர் நுண் பூண் ஆகம் திளைப்ப-வளவிய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்தபிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையா நிற்க,

திண் காழ் நறுங் குறடு உரிஞ்சிய பூங் கேழ்த் தேய்வை தேங்கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின் குவிமுகிழ் இள முலைக்கொட்டி - திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தை யுரைத்த பொலிவினையுடைய நிறத்தை யுடைத்தாகிய குழம்பை மணநாறுகின்ற மருதம் பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பையொத்த இளமுலையிலே யப்பி,

மருதிணர் - நிறத்திற்குவமம்.

விரி மலர் வேங்கை நுண் தாது அப்பி-அவ்வீரம் புலர்வதற்கு முன்னே விரிந்த மலரையுடைய வேங்கைப் பூவினது நுண்ணிய தாதையும் அதன் மேலே யப்பி,

(காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா) வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு காண் வரத்தெரியா - விளவினது சிறிய தளிரைக் கிள்ளி அழகு வர ஒருவர் மேல் ஒருவர் தெறித்துத் தப்பாமற் பட்ட பொழுது.

(கோழி யோங்கிய ஏன்றடு விறற்கொடி, வாழிய பெரிதென் றேத்தி) ஏன்று அடு விறல் கோழி ஓங்கிய கொடி பெரிது வாழிய என்று ஏத்தி-வஞ்சியாது

*எதிர் நின்று அடுகின்ற வெற்றியையுடைய கோழி மேலாய் நின்ற கொடி நெடுங்காலம் வாழ்வதாக வென்று வாழ்த்தி.*

*(பலருடன், சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச் சூரர மகளி ராடுஞ் சோலை) சூர் அரமகளிர் பலருடன் சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப்பாடி ஆடும் சோலை-கொடுமையையுடைய தெய்வ மகளிர் பலரும் கூடிச் சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி ஆடுஞ் சோலையினையுடைய.*

*மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து - மர மேறுதற் றொழிலிற் சிறப்புடைய மந்திகளும் மரங்களினீட்டத்தால் ஏறியறியாத மரநெருங்கின பக்கமலையிடத்து நின்ற. உம்மை - சிறப்பும்மை.*

*சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தட் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் - தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத நெருப்புப் போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திரு முடியை யுடையவன்.*

*அடியினையும் (13) காலினையும் நுசுப்பினையும் தோளினையும் (14) துகிலினையும் (15) அல்குலினையும் (16) வனப்பினையும் (17) இழையினையும் (18) மேனியினையும் (19) உடையசூரரமகளிர் (41) பலருங்கூடி (39) இடையிட்டு (21) வைத்துத் (23) தாழப்பண்ணிச் (25) செரீஇ (27) இணரட்டி (28) வளைஇத் (30) திளையாநிற்கக் (32) கொட்டி (35) அப்பித் (36) தெறித்து (37) ஏத்திப் (39) பாடி (40) ஆடுஞ் சோலையையுடைய (41) வெற்பில் (12) அடுக்கத்துக் (42) காந்தட் கண்ணிமிலைந்த சென்னி யென முடிக்க.*

*இதனால் அடையாளப் பூக் கூறினார். இது வெறியாட்டயர்ந்த காந்தளும் (தொல் - பொருள் புறத் - 5 ) என்பதனானுணர்க.*

*“அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும் இயன்று பொருண் முடியத் தந்தனருணர்த்தல் மாட்டெடன மொழிப் பாட்டியல் வழக்கின்” (தொல் செய் - 211) என்னும் பாட்டிலக்கணத்தான் இப்பாட்டுக்கள் பத்துஞ் செய்தார்களாதலின் இவ்வாறே மாட்டி முடித்தல் யாண்டும் வரமென்றுணர்க.*

**உ. உரையாசிரியர்**

*மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்-பெரிய மூங்கில்கள் உயர வளர்ந்த தூரஉயர்ந்த மலையிடத்து,*

*கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி - சில சதங்கையைச் சூடிக்கட்டின ஒள்ளிய சிவந்த சிறிய அடியினையும்*

*கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத் தோள் - திரண்ட காலையும் நுடக்கத்தால்[1] வளைந்த இடையையும் மூங்கில் போன்ற தோளையும்*

*கோபத்தன்ன தோயாப் பூந்துகில் - இந்திர கோபத்தையொத்த சிவப்பையுடைய சாயம் பிடியாத பூத்தொழில்களை யுடைய தெய்வத் தன்மையான துகிலையும்,*

*பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பல மணிகளாற் கோத்த இரண்டு வடம் பொருந்திய காஞ்சியை யணிந்த அல்குலினையும்,*

*கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின் - கையால் அலங்கரித்துப் பிறப்பியாத தெய்வத்தன்மையான அழகைத் தமக்கு இயல்பாகவே பெறுகின்ற அழகினையும்,*

*நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழை - சாம்புநத மென்னும் பெயரைப் பெற்ற பொன்னாற் செய்யப்பட்ட விளங்கா நின்ற பூணினையும்,*

*சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி-தூர நிலத்தைக் கடந்து விளங்குங் குற்றமில்லாத வடிவையும்,*

*துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி - தோழியர் நன்றென்றாராய்ந்த கடை யொத்த நெய்ப்புடைய மயிரிலே,*

*செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு பைந்தாட் குவளைத்தூ இதழ் கிள்ளி - சிவந்த தாளையுடைய வெட்சிப் பூவினது சிறிய இதழ்களின் நடுவே பசுத்த தண்டினையுடைய நெய்தற் குவளையினது தூய இதழைக் கிள்ளிவிட்டு,*

*தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து - சீதேவி வடிவாகச் சமைத்த தலைக்கோலத்துடனே வலம்புரிச் சங்கு வடிவான அணியையும் வைத்தற்குரிய இடங்களிலே தலைக்கோலமாக வைத்து,*

*திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல்-திலக மணிந்த மணநாறுகின்ற அழகிய நெற்றியிலே,*

*மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து - சுறாவினது பெரிய வாயினது வடிவாகச் செய்த பணியைத் தங்கும் வண்ணம் அலங்காரம் பெறச் செய்து,*

*துவர முடித்த துகள் அறு முச்சி-செய்தொழில் முற்றுப்பெற முடித்த குற்ற மற்ற கொண்டையிலே,*

*பெருந் தண் சண்பகம் செரீஇ-பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் சொருகி,*

---

*1. அடக்கத்தால் என்பதும் பாடம்.*

*கருந் தகட்டு உளைப்பூ மருதின் ஒள் இணர் அட்டி* - கரிய தகடு போன்ற இலைகளையுடைய உளை போன்ற மருதம் பூவினது ஒள்ளிய கொத்துக்களைச் செண்பகப் பூவின் நடுவேயிட்டு,

*கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு*-பலவான கிளையரும்பீன்று அழகு பெற்று மேலே தோன்றுகின்ற நீர்க்கீழ்ச் சிவந்த அரும்பினாலே,

*இணைப்பு உறு பிணையல் வளைஇ*-கட்டுதலுற்ற மாலையைக் கொண்டையைச் சூழக் கட்டி,

*துணைத்தக வண்காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்* - இணையொத்த வளவிய காதிலே நிறைந்த அசோகினது ஒள்ளிய தளிர்களை,

*நுண் பூண் ஆகம் திளைப்ப* - நுண்ணிதான அணிகளையுடைய மார்பிலே செறியும் வண்ணம் அணிந்து,

*திண் காழ் நறுங் குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை* - திண்ணிய வயிரத்தை யுடைய சந்தனக் குறடு அரைத்த அழகிய நிறத்தையுடைய குழம்பை.

*தேம் கமழ் மருதிணர் கடுப்ப* - மணம் நாறுகின்ற மருதினது பூங்கொத்தை அப்பினாற் போல,

*கோங்கின் குவிமுகிழ் இளமுலைக் கொட்டி*-கோங்கினது குவிந்த அரும்பு போன்ற இளைய முலைகளிலே அப்பி,

*விரிமலர் வேங்கை நுண் தாது அப்பிக் காண் வர*-விரிந்த மலரையுடைய வேங்கையினது நுண்ணிய பூந்தாதுகளையும் அச்சந்தனக் குழம்பின் மேலே அழுத்தி அழகு காட்சிவர.

*வெள்ளிற் குறு முறி கிள்ளுபு தெறியா*- விளாவினது இளந்தளிர்களைக் கிள்ளி யொருவர்மே லொருவர் தெறித்து,

*கோழி யோங்கிய வென்று அடு விறற் கொடி* - கோழியை உயரக் கொண்டிருக்கிற வெற்றிப் பாட்டாற் கொன்றெடுத்த வீரக்கொடி,

*வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்*-மிகவும் வாழ்வதாக என்று வாழ்த்திப் பல பெண்கள் கூட,

*சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி* - அழகு ஒளிபெற்ற மலையிடத்து ஆரவாரிக்கப் பாடி,

*சூர் அரமகளிர் ஆடுஞ் சோலை* - கொடிய வஞ்சனைகள் வல்ல தெய்வ மகளிர் விளையாடிய சோலையினையுடைய.

*மந்தியும் அறியா மரம் பயில் அடுக்கத்து - ஆதித் தனையுங் காணாத மரம் நெருங்கின் பக்க வரையிடத்து,*

*சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள் - வண்டுகள் மொய்யாத நெருப்பை யொத்த காந்தட் பூவினது,*

*பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன் - மிகவும் குளிர்ந்த மாலையைச் சூடிய திருமுடியை உடையவன்.*

### 3. பரிமேலழகர்

*மால்வரை நிவந்த சேண் உயர் வெற்பில் - பெரிய கழைகளினாலே பரக்கப்பட்டு ஆகாயத்தினோங்கிய மலையிடத்து,*

*கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி - சிறு சதங்கைகளாலே கட்டப்பட்டு அழகினையும் சிறப்பினையு முடைத்தாய சிறிய வடியினையுமுடையராய்,*

*கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள் - கணைக்கால் சுருங்கிய இடையையும் வேய் போன்ற தோளினையு முடையவராய்,*

*கோபத்தன்ன தோயாப் பூந்துகில் - இந்திர கோபம் போன்ற தற்சுபாவமான தானையும்,*

*பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பலமணி நிறைக்கப்பட்ட சிற்பத் தொழிலமைந்த மேகலை புனைந்த நிதம்பத்தையு முடையராய்,*

*இதற்குப் பல்காசு நிரைந்த சில்காழ் அல்குல் எனப் பாடங்கொண்டு பல மணிகள் நிறைக்கப்பட்டு மாறுபடச்சேர்ந்த சிற்பத்தொழில் பொருந்திய அரைப்பட்டிகையும் அமர்த்த அரையினையு முடையராய் என்பாருமுளர்.*

*கைபுனைந் தியற்றாக் கவின்பெற வனப்பின் - கையாலியற்ற முடியாத அழகு பெற்று இளமை நிறத்தினையு முடையராய்,*

*நாவலொடு பெரிய பொலம்புனை அவிரிழை - நாவற் பழத்துச் சாறுபட்டுப் பேதமான பொன்னாற் செய்யப்பட்ட விளக்கமான ஆபரணங்களையு முடையராய்,*

*சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி - அதிதூரத்தைக் கடந்து விட்டு விளங்கிக் குற்றந் தீர்ந்த உடம்பினையு முடையராய்,*

*துணையோர் ஆய்ந்த இணையீரோதிச் செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு - ஆயத்தார் வகிர்ந்து திருத்தின கூட்டமுங் குளிர்ச்சியு முடைய மயிரிலே வெட்சியின் சிறிய இதழ்களை யிடையிட்டு,*

*பைந்தாட் குவளை துவிதழ் கிள்ளி - பச்சென்ற தாளினையுடைய நீலோற்பலத்தினது தூய இதழ்களையுங் கிள்ளியிட்டு,*

*தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து (23) - -சீதேவி என்னும் தலைக் கோலத்துடனே சங்கீன்ற முத்தின் மாலையும் அவ்விடத் தணிந்து,*

*திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல், மகரம் பருவாய் தாழ மண்ணுறுத்து - பொட்டூன்றி நறுநாற்றம் கமழ்வதான நெற்றியையும் சுறவின் பெரிய வாய்போல் சரிய விளக்குறுத்தி,*

*இதுவன்றிச் "சுறவின் பகுவாய் தாழும்படி தழுவி முறுக்கி வைத்தழகு பெறமுடித்த" தென்பாருமுளர்,*

*துவர முடித்த துகளறு முச்சிப் பெருந்தண் சண்பகம் செரீஇ (26-27)-பெருக முடித்துச் சிம்பறக் கோதிப் பெருத்துக் குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகி,*

*கருந்தகட்டு உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டி-கரிய புறவிதழ் விரிந்த மருதின் அழகிய பூங்கொத்துக்களைப் பரப்பி,*

*கிளை கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு (29)-கிளையை நெருங்கி எழுகின்ற நீர்க்கீழ் நிற்கும் சிவந்து அரும்பாகிய பூவினாலே,*

*இணைப்புறு பிணையல் வளைஇ-இணைக்கப்பட்ட மாலை கொண்டையிலே வளையச் சுற்றி,*

*துணைத்தக வண்காது நிறைந்த பிண்டி ஒண்டளிர் நுண்பூண் ஆகம் திளைப்ப - ஒத்த அழகிய காது நிரம்பின அசோகினது அழகிய தளிரானது நுண்ணிய தொழில் புனைந்த அணிகள் மார்பிலே கிடந்தசைதர,*

*திண்காழ் நறுங் குறடு உறிஞ்சிய பூங்கேழ் தெய்வை - செறிந்த வயிரம்பொருந்திய நறு நாற்றத்தையுடைய சந்தனக் குறடு தேய்த்த குழம்பு,*

*தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின் குவி முகிழ் இளமுலைக் கொட்டி - மணங் கமழ்கின்ற மருதப்பூங் கொத்தை ஒத்த சந்தனக் குழம்பைக் கோங்கினது அரும்பிய மொட்டுப் போன்ற இளமுலைகளிலே அப்பி,*

*விரிமலர் வேங்கை நுண்தாது அப்பி - அதன் மேலே விரிந்த வேங்கைப் பூவின் நுண்ணிய தாதுகளை அப்பி,*

*காண்வர, வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா-காட்சி பெற விளவினது சிறிய தளிரை ஆய்ந்து நறுக்கித் தெறித்துப் பிள்ளையார் சீ பாதங்களை யுள்ளித் தெறித்து,*

*கோழி ஓங்கிய வென்றடு விறல் கொடி, வாழிய பெரிதென் றேத்தி-கோழி*

*எழுந்துயர்ந்த வெற்றி மிகுந்த வீரத்துவசம் நெடுங்காலம் வாழ்வதாக என்று வாழ்த்தி,*

*பலவுடன், சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி - பல தோத்திரங்களினாலே அழகு பட்டு விளங்கிய மலையிடம் ஆரவாரிக்கப் பாடி,*

*சூரர மகளிர் ஆடுஞ்சோலை - தெய்வ மடவாராயுள்ளார் கூத்தாடுகின்ற சோலை,*

*மந்தியு மறியா மரம்பயிலடுக்கத்து- அருக்கனும் அறியாத மரங்கள் நெருங்கிய சிலமலை யிடத்து,*

*'மந்தியும் அறியா' என்பதற்குக் 'குரங்குகளுமறியா' என்பாருமுளர். சுரும்பு மூசாச் சுடர்ப் பூங்காந்தள்-வண்டு மொய்யாத சிவந்த காந்தட் பூவாற்றொடுத்த,*

*பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் - மிகவும் குளிர்ந்த மாலை சூடின திருமுடியை யுடையனுமாய்,*

### 4. கவிப்பெருமாள்

*பெரிய மூங்கில்கள் ஓங்கின மிகவும் உயர்ந்த மலையில் பாதசாலம் பொருந்தின அழகிதாகச் சிவந்த சிறிய அடிகளையும் அம்புக் குதையடி போன்ற சுருங்கிய இடையையும் பணைத்த தோள்களையும் இந்திர கோபத்தை யொத்த சிவந்த தோய்க்கப்படாத பூத்தொழிற் பட்டினையும் பலவித ரத்தினங்களை நிறைக்கப்பட்ட நுண்தொழிலாற் சிறந்த மேகலையணிந்த அல்குலையும்:*

*கையாலே திருத்திச் செய்ய வேண்டாத நன்மை பெற்ற வழகினையும் நாவலாலே பேர்பெற்ற சாம்பூநத மென்கிற பொன்னாலே செய்யப்பட்ட விளங்குகின்ற ஆபரணங்களையும் அதிதூரம் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த மேனியையும் உடையவராய்ப் பாங்கிமாராலே வகிரப்பட்ட இணையொத்த குளிர்ச்சியை யுடைத்தாகிய மயிரிலே:*

*சிவந்த தாளையுடைத்தாகிய வெட்சியின் சிறிய விதழையும் இடையிட்டுப் பச்சென்ற தாளையுடைத்தாகிய நீலப்பூவின் துய்ய விதழையுங் கிள்ளி (இதனையும் இடையிலிட்டு)ச் சீதேவியென்னும் தலைக்கோலத்துடனே வலம்புரிச் சங்கு வடிவான அணியையும் இடம் வாய்க்க வைத்துத் திலகத்தை யணிந்த நறுநாற்றங் கமழாநின்ற நெற்றியிலே சுறாமீனின் அங்காந்த வாய் தோற்கும்படி செய்த அணியை அலங்காரம் பெற அணிந்து முற்றுப் பெற முடித்த குற்றமற்ற உச்சிக் கொண்டையிலே மிகவுங் குளிர்ந்த சண்பகப்பூவையும் சொருகிப் பச்சென்ற புறவிதழினையும் துய்யினையும் உடைய மலர்களைப் பொருந்திய மருதினது ஒள்ளிய கொத்துக்களையும், இட்டு (சண்பகக் பூவின்*

*நடுவே) கிளையரும்பீன்று அழகி தாய் மேல்நோக்கின நீர்க்கீழ்ச் சிவந்த அரும்பினாலே, தொடுக்கலுற்ற மாலையை நெற்றிமாலையாகச் சுற்றி இணையொத்த வளவிய காதிலே நிறையவிட்ட அசோகினது அழகியதளிர் நுண்தொழிலால் சிறந்த ஆபரணம் அணிந்த மார்பிலே வந்தலைய:*

*திண்ணிய வயிரத்தை யுடைய நறுநாற்ற முடைத்தாகிய சந்தனக் குறட்டைத் தேய்த்த பொலிவினையும் நிறத்தினையும் உடைத்தாகிய குழம்பை நறுநாற்றங் கமழாநின்ற மருதின் பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பை யொத்த இளமுலைகளிலே யப்பி வேங்கையினது இதழ் விரிந்த பூவிலேயுள்ள நுண்ணிய தாதையும் குழம்பின் மேலதாய் அப்பி அழகு பெற விளாவின் இளந்தளிரையுங் கிள்ளிப் பிள்ளையார் சீர் பாதங்களுக்குப் பத்திரியாகத் தெறித்துக் கோழியை உயரக் கொண்டிருக்கின்ற மிக்க வெற்றியை உடைய உயர்ந்த கொடியை மிகவும் வாழ்வதாக என்று வாழ்த்தி மகளிர் பலருடனே, சிறப்புமிக்க மலையிடமெல்லாம் எதிராய் ஆரவாரிக்கும்படி பாடித் தெய்வப் பெண்கள் விளையாடுகின்ற சோலையினையுடைய, குரங்குகளாலும் ஏறி அறியப்படாத நீண்ட மரங்கள் நெருங்கின பக்கவரையாகிய காட்டிடத்துள்ள, வண்டுகள் மொய்யாத சுடரையொத்த காந்தட் பூவாலே தொடுத்த மிகவுங்குளிர்ந்த மாலையைச் சூடிய திருமுடியையுடையவன்.*

### 5. பரிதியார்

*வெற்பு - திருப்பரங்குன்றத்து மலைமேல். கிண்கிணி-சிறு சதங்கைகள். கணைக்கால் - கணைக்கால் கோபத்தன்ன தோயாப் பூந்துகில்- இந்திரகோபப் பட்டுப் போல ஒன்றினாலுஞ் சாயங்கட்டப்படாத புடவை.*

*கைபுனைந் . . . வனப்பு - கைகளினாலே ஒன்றைக் கொண்டு வந்து சாயங் கட்டாத அழகு: பிறக்கும் பொழுதே யுண்டான அழகு. நாவலொடு . . . . . . பொலம் - மாத்ததிகமான தங்கம். செயிர்தீர் மேனி-நீலமுங்கருமையுந் தள்ளிப் பிரகாசமான திருமேனி.*

*குவளை - செங்கழுநீர்ப்பூ. தூஇதழ் கிள்ளி-உதிரிப் பூவுங் கூட்டி இடைக்கிடையழுத்தி. மகரப் பகுவாய் - மகரத்தின் வாய்போன்ற ஆபரணம். துவர முடித்த துகள் அறு முச்சி - நாலுதிக்குங் கட்டிய மயிரை எடுத்து உச்சிக் கொண்டையாக முடித்து. ஆகம் பூண் திளைப்ப-மார்பில் அணிந்த ஆபரணங்களை மறைக்க.*

*வயிர முற்று வாசனையுண்டான சந்தனக் குறடு அப்பி - சந்தனக் குழம்பு புலர்வதற்கு முன்னே முலைகளிலே அப்பி. காண்வர - பெண்களெல்லாரும் சுவாமியைக் காண வரவும். தெறியா - ஒருத்தி மேல் ஒருத்தியெறிந்து. பலருடன்*

- எண்ணொணாத தேவ மாதர்கள் காந்தருவப் பெண்களுடன். சுரும்பு. . . . . . சென்னியன் - வண்டுகளானவை நெருப்பினுள் கொழுந்தென்று மொய்க்கப்பயந்த காந்தட்பூ மிகவும் குளிர்ச்சியான திருமுடியையுடையவன்.

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*வரை - கணு: ஈண்டு அதனை உடைய மூங்கிற்கு ஆயினமையின் ஆகுபெயராயிற்று.*

*பணை - பெருமை: பணையே பிழைப்பும் பெருப்புமாகும் என்னும் தொல்காப்பியமும்.*

*தற்சுபாவமான - தன்னியல்பான.*
*தானை - ஆடை.*

*'எண்கோவை மேகலை காஞ்சி யிறாகோவை. பண்கொள் கலாபமிறா பத்தொன்று - கண்கொள். பருமம் பதினான்கு முப்பத்திரண்டு, விரிசிகை யென்றுணரற்பாற்று, எனவும் பாடம்.*

*இச் செய்யுளின் பொருண் முறை திவாகரம், பிங்கலம், சூடாமணி என்பவற்றிலும், இதன் பாட வேறுபாடுடைய செய்யுளின் பொருண் முறை "எண்ணிரண்டிரட்டி" (திருவிளை - திருமண: 158) என்னும் செய்யுளிலும் காணப்படுகின்றன என்பர் உ.வே.சா., அவர்கள். சில்காழ்-இரண்டு வடம் பொருந்திய காஞ்சி என்பர் உரையாசிரியர். ஏழுவடமாகிய மேகலை என்பர் நச்சினார்க்கினியர். சிற்பத் தொழில் அமைந்த என்பர் பரிமேலழகர்.*

*மகரப்பகுவாய் - சுறாவினது அங்காந்தவாய் ஈண்டு அவ்வடிவினதாகச் செய்யப்பட்ட தலைக் கோலத்திற்காயினமையின் ஆகுபெயராயிற்று.*

*அங்காந்த -திறந்த. மண்ணுறுத்தல் - செய்தல்: நெற்றியின் கண் தலைக்கோலம் தங்குமாறு செய்து*

*மண்ணி - கழுவி என்றுமாம்.*

*துவர - முற்ற, 'மாறல்ல துய்க்கத் துவரப் பசித்து'*

*என்புழியும் இப் பொருள் படுதல் காண்க.*

*இணைப்புறு பிணையல் - கட்டப்பட்ட மாலை: இம்மாலை கொண்டையில் வைத்தற்குரியது என்பர் பலரும். கவிப்பெருமாள் மட்டும் நெற்றியில் வைக்கப்பட்ட மாலை என்பர்.*

*பிண்டி - அசோகந் தளிர்.*

*வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா - விளவினது தளிரைக் கிள்ளி ஒருவர்மேல் ஒருவர் தெறித்துக் கொள்ள என நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும் கூறப் பரிமேலழகரும் கவிப்பெருமாளும் வெள்ளிய விளவின் தளிரை முருகன் திருவடியில் தெளித்து என உரை காண்பர்.*

*ஏன்றடு எனப்பாடங்கொண்டு அதற்கேற்ப உரை காண்பர் நச்சினார்க்கினியர். பிறரெல்லாம் வென்று அடு எனப் பாடங்கொண்டு அதற்கேற்ப உரை காண்பர். பலருடன் - சூரர மகளிர் பலருடன் என்பர் நச்சினார்க்கினியர். மகளிர் பலருடன் என உரை காண்பர் உரையாசிரியரும் கவிப் பெருமாளும், கந்தர்வப் பெண்களுடன் என உரை காண்பர் பரிதியார். பரிமேலழகர் மட்டும் பலருடன் எனப்பாடங்கொண்டு பல தோத்திரங்களினால் என உரை காண்பர். சூரர மகளிர்-கொடுமையையுடைய தெய்வ மகளிர் என்பர் நச்சினார்க்கினியர். கொடிய வஞ்சனைகள் வல்ல தெய்வ மகளிர் என்பர் உரையாசிரியர். தெய்வ மகளிர் என்பர் பிற உரையாசிரியர்கள். மந்தி-குரங்கு என்பர் நச்சினார்க்கினியரும், கவிப்பெருமாளும், கதிரவன் என்பர் உரையாசிரியரும் பரிமேலழகரும்.*

*எயிலுந் துண்டமும் ........... மந்தியும் வாணியும் குழப்பு (ஞான 33,6)*

*என்ற விடத்தும் இப்பொருள்படக் காணலாம்.*

*குரங்கு எனில் மரங்களின் உயர மேம்பாடு புலப்படும். கதிரவன் எனின் மரங்கள் ஒன்றோடொன்று செறிந்து நிற்கும் செறிவு மேம்பாடு புலப்படும். 'வெயில் நுழைபு அறியா குயில் நுழை பொதும்பர்' (மணிமேகலை), (பெரும்பாண் 374), 'வெயிலொளி அறியாத விரிமலர்த் தண்காவில்" (கலி 30), 'வெயில்கண் போழாப்பயில்பூம் பொதும்பு' (பெருங் 1-33) எனவரும் இலக்கியவழக்கும் ஈண்டு நினைபுகூரத் தகுவன. உம்மை-சிறப்பும்மை என்றல் இரண்டற்கும் ஒக்கும்.*

*சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங்காந்தள் - காந்தட் பூவை வண்டுகள் மொய்யாமைக்குக் காரணம் அது நெருப்பின் கொழுந்தென விளங்குதலால் ஆம் என்பர் பரிதியார், எனினும் முருகன் அணிந்திருத்தலால் ஆய தெய்வத்தன்மையே அதற்குக் காரணம் என்றல் சிறக்கும்.*

## 7. கி.வா. ஜகன்னாதன்

### *காந்தளங் கண்ணி*

***'கடலில் தோன்றும் ஞாயிற்றைப் போன்று நெடுந்தூரம் விளங்கும் பேரொளியையும், தன்னை அணுகுவாரைப் பாதுகாக்கும் வலிய தாளையும் பகைவரை அழிக்கும் விசாலமான கைகளையுமுடைய, தேவயானை கணவன்,***

*உருளுகின்ற பூவாகிய கடம்ப மலர் மாலையை அணிந்த மார்பை உடையவன் என்று முருகனுடைய அடையாளங்களைச் சொன்னார் நக்கீரர். மார்பிலுள்ள மாலையைச் சொன்ன பிறகு அவனுடைய திருமுடியில் உள்ள காந்தளங் கண்ணியைப் பற்றிச் சொல்ல வருகிறார். முருகன் காந்தட் கண்ணி அணிந்தவன் என்று மட்டும் சொன்னால் அடையாளம் காட்டின அளவோடு நிற்கும். காந்தளங்கண்ணியின் பெருமையைச் சொல்லும் வாயிலாக அது வளருகின்ற காட்டின் எழில் ஓவியத்தைக் காட்டுகிறார் நக்கீரர்.*

## தேவமகளிரின் ஆசை

*முருகப் பெருமானுடைய அடையாள மாலை காந்தள். அது வளரும் காடு எத்தகையது தெரியுமா? தேவலோக மகளிர் தம்மை மலர்களால் அலங்கரித்துக் கொள்ள விரும்புகிறார்கள். தேவலோகத்திலுள்ள கற்பக மரத்தில் பொன்னிற மலர்கள் இருக்கின்றன. ஆனால் பன்னிற மலர்கள் இல்லை. முருகப்பெருமானது ஆட்சிக்குரிய குறிஞ்சி நிலத்தில் மலையின்மேல் பல பல வடிவமும் வண்ணமுமுடைய மலர்கள் இருக்கின்றன தேவலோகத்தில் காணவொண்ணாத அத்தகைய மலர்களை அணிந்து அழகு பார்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆசை அமரலோகத்து அணங்கினர்களுக்கு உண்டாகிறது. தங்களால் வணங்கபெறும் முருகப்பெருமானுடைய அருள் ஆட்சியில் வளம் பெறுகின்ற குறிஞ்சி நிலமாதலின் அவர்கள் உரிமையோடு வானிலிருந்து இறங்கி வருகிறார்கள். இயல்பாகவே அவர்கள் ஒளியும், எழிலுமுடைய திருமேனியைப் படைத்தவர்கள். ஆடையும் அணியும் தேவலோகத்தில் பெற்று அணிந்து கொண்டிருப்பார்கள். அங்கே கிடையாத மலரலங்காரத்தை இங்கே செய்து கொள்ள வருகிறார்கள். அவர்கள் தம்மை மலர்களால் அலங்கரித்துக் கொண்டு மிக்க களிப்புடன் முருகப் பெருமானை வாழ்த்தி, மலையிலுள்ள சோலையில் ஆடுகிறார்கள். 'அத்தகைய சோலையில் விளைகிறது காந்தள்' என்று விரிவாகச் சொல்ல வருகிறார் நக்கீரர்.*

## அணங்கினர் அழகு

*சூரர மகளிர் என்பது தேவப் பெண்களுக்கு ஒரு பெயர். அவர்களைக் கண்டால் அவர்களுடைய அழகே அச்சத்தை உண்டாக்கும்: சூர் என்பது அச்சத்திற்கு ஒரு பெயர். அவர்கள் வந்து தங்களை அலங்கரித்துக் கொள்ளும் இடம் பெரிய மலை. அந்த மலைகளில் மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்திருக்கின்றன.*

**மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்.**

*(பெரிய மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்த மிக உயரமாகிய மலையில்.)*

*அங்கே வருகின்ற அணங்கினருடைய அழகு எத்தகையது? அவர்கள் வரும்போது கிண்கிணென்று அவர்கள் காலிலுள்ள கிண்கிணி ஒலிக்கிறது. அந்தப் பதம் அழகாக, சிறியதாக, விளக்கம் தருவதாக இருக்கிறது.*

**கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி.**

*(கிண்கிணியால் சுற்றப்பெற்ற ஒளிபொருந்திய சிவந்த சிறு அடி)*

*அவர்களுடைய கால் திரட்சி பொருந்தியதாக இருக்கிறது. நல்ல வளம் பொருந்திய திருமேனி உடையவர்கள் ஆதலின் அவர்களுடைய உறுப்புக்கள் நல்ல வளர்ச்சி பெற்று விளங்குகின்றன. திரட்சியான காலும், உள்வாங்கிச் சிறுத்திருக்கும் இடையும், பருத்த தோள்களும் உடையவர்களாக அவர்கள் விளங்குகிறார்கள்.*

**கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்.**

*(திரண்ட காலையும், உள்வாங்கிய இடையையும் பருத்த தோளையும்-உடையவர்கள் என்று சொல்ல வருகிறார். கணை-திரட்சி.)*

*அவர்கள் தம்முடைய இடையில் அழகிய பூந்துகிலை அணிந்திருக்கிறார்கள். அது செக்கச்செவேல் என்று இருக்கிறது. தேவலோகத்து மகளிராதலின் அந்தத் துகில் மனிதர்களின் கைத்திறனால் உண்டானது அன்று. இயற்கையாகவே மென்மையும், சிவப்பு வண்ணமும் அமைந்த துகில் அது. கற்பகமரம் தந்தது போலும், வண்ணம் தோய்க்காத பூந்துகில். இந்திர கோலப் பூச்சி என்று ஒன்று உண்டு. அதைப் பட்டுப்பூச்சி என்றும் சொல்வார்கள். கார் காலத்தில் நிலத்தில் ஊர்ந்து கொண்டிருக்கும், அதைப் போன்ற சிவப்பையுடைய துகிலை இந்த அணங்கினர் அணிந்திருக்கிறார்கள்.*

**கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்**

*(இந்திர கோபப் பூச்சியைப் போன்ற, வண்ணத்தில் தோய்க்காமல் இயல்பாகவே சிவந்துள்ள மெல்லிய துகில்.)*

*பெண்கள் தம்முடைய இடையில் மேகலை என்ற அணிகலனை அணிந்திருப்பார்கள். மேகலையில் பல வகைகள் உண்டு. பல வடிவங்கள் உண்டு. அந்த வடிவங்களுக்கு ஏற்றபடி அவை பெயர் பெறும். காஞ்சி என்னும் மேகலை எட்டுக் கோவைகளையுடையது. மேகலை என்ற பெயரையுடையது ஏழு கோவைகளைப் பெற்றது. பதினாறு கோவைகளையுடையது கலாபம் என்று பெயர் பெறும். பதினெட்டுக் கோவைகளையுடையது பருமம். முப்பத்திரண்டு கோவைகளையுடையது விரிசிகை. மென்மை உடையவராதலின் மிகக் குறைந்த வடங்கள் ஆகிய ஏழு கோவைகளைக் கொண்ட மேகலை என்பதை*

*அணிந்திருக்கிறார்கள். ஏழு வடமாக இருந்தாலும் ஒவ்வொரு வடத்திலும் பற்பல மணிகளைக் கோத்திருக்கிறார்கள்.*

**பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்**

*(பல மணிகளைக் கோத்த ஏழு வடமாகிய மேகலையை அணிந்த இரகசிய உறுப்பை-உடையவர்கள் என்று சொல்ல வருகிறார்.)*

*ஆடைக்குள்ளேயே மேகலையை அணிவது உண்டு. அது அவர்களுடைய இரகசிய உறுப்பை மறைத்து நிற்கும். அவர்களுடைய பேரழகைப் பார்த்தால் யாரோ அலங்காரம் செய்ததுபோலத் தோன்றாது, அவர்கள் செய்துகொண்ட அலங்காரம் அத்தனையும் பிறக்கும் போதே ஒட்டிவந்தன போலத் தோற்றும்.*

**பைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்**

*(ஒருவருடைய கையால் அழகாகப் புனைந்து அமைக்காத அலங்காரத்தைப் பெற்ற அழகை-உடையவர்கள் அவர்கள்.)*

*அவர்கள் ஆபரணங்களை அணிந்திருக்கிறார்கள். அந்த ஆபரணங்கள் நல்ல ஒளியுடன் விளங்குகின்றன. பொன்னாபரணங்கள்தாம். பொன்னில் பலவகை உண்டு. இங்கே சாம்பூநதம் என்று பெயர்பெற்ற பொன்னால் அமைந்த அணிகளை அவர்கள் அணிந்திருக்கிறார்கள். சாம்பூநதம் என்பது நாவற்பழத்தின் சார்பூ பெற்று விளங்குகின்ற பொன். பாரதநாட்டுக்கு வடக்கே நாவல்மரம் ஒன்று பழையதாக இருக்கிறது என்றும். அதனுடைய பழம் நன்றாகக் கனிந்து சாற்றை ஒழுக விடுகிறது என்றும், அந்தச் சாறு சென்ற இடங்கள் எல்லாம் சிறந்த பொன் ஆகின்றன என்றும் சொல்வார்கள். ஜம்பூ என்பது நாவலுக்குப் பெயர். நாவல் பழத்தின் சாறு ஆறாக ஓட. அதனால் சிறப்புற்றதனால் சாம்பூநதம் என்ற பெயர் பெற்றது. நாவல்பழத்தோடு சேர்ந்து பெயர் பெற்ற பொன்னாகிய சாம்பூ நதத்தினால் செய்த ஆபரணங்களை அவர்கள் அணிந்திருக்கிறார்கள்.*

**நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழை**

*(சாம்பூநதம் என்று நாவல் பழத்தோடு பெயர் பெற்ற பொன்னால் அமைந்து விளங்கும் ஆபரணத்தை உடையவர்கள்.)*

*அவர்களுடைய இயற்கையான நிறம் நெடுந்தூரம் கடந்து விளங்குகின்றது. சிறிதளவும் மாசு இல்லாத திருமேனியை உடையவர்கள் அவர்கள்.*

**சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி**

*(நெடுந்தூரத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றம் தீர்ந்த நிறத்தினை-உடையவர்கள்.)*

*இனி, அவர்களுடைய தலை அலங்காரத்தைச் சொல்ல வருகிறார். இங்கே மலைச்சாரலில் கிடைக்கின்ற மலர்களை எல்லாம் பறித்துத் தம்முடைய தலையை அலங்கரித்துக் கொள்கிறார்கள். அந்த அலங்காரத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுடைய கூந்தல் சிறப்பாக விளங்குகிறது. அவர்களுடைய கூந்தலின் சிறப்பை அவர்களுடைய தோழிமார்கள் எடுத்துப் பாராட்டுகிறார்கள். அந்த ஓதி ஈரமாக, தடையொத்து இருக்கிறது.*

**துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி**

*(தோழிமார்கள் நன்றாக ஆராய்ந்து பாராட்டுகிற கடையொத்த, நெய்ப்புடைய கூந்தல்)*

## தலை அலங்காரம்

***இனி, அந்தக் கூந்தலில் செய்யும் அலங்கார வகைகளை விரிவாகச் சொல்ல வருகிறார். வெட்சிப் பூ என்பது ஒரு பூ. அது சிவப்பாக இருக்கும். அதனுடைய இதழ்கள் சிறியவை. அந்த வெட்சிப் பூக்களைச் சுற்றி வைத்து, அவற்றிற்கு நடுவில் நீலநிறம் பெற்ற குவளை இதழ்களைக் கிள்ளியிடுகிறார்கள். சிவப்புக்கு பக்கத்தில் நீலம் இருந்தால் விட்டு விளங்கும் அல்லவா? நடுவில் குவளை இதழ்களும், அவற்றைச் சுற்றி வெட்சி இதழ்களும் நன்றாக இணைந்து அமைந்திருக்கின்றன. அதற்கு மேல் தலையின் ஒரு பக்கத்தில் சீதேவி என்னும் தலையாபரணத்தைச் சூட்டிக் கொள்கிறார்கள். வலம்புரி என்ற மற்றோர் ஆபரணைத்தை வேறு பக்கத்தில் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய நெற்றியில் மற்றொரு தலைக்கோலம் வந்து தொங்குகிறது. அந்த நெற்றியில் திலகம் இட்டிருக்கிறார்கள். அது நல்ல மணத்தை வீசுகிறது. அங்கே வந்து தொங்கும் தலைக்கோலம் வாயைத் திறந்து கொண்ட மகர மீனைப்போல விளங்குகிறது. இப்போது சுட்டி என்று சொல்கிறார்களே அதைப்போன்ற ஆபரணம் அது. மகர மீனின் அங்காந்த வாய்போல இருப்பதனால் அதற்கு மகரப் பகுவாய் என்றே பெயர்.***

***அவர்கள் தம்முடைய கூந்தலை நன்றாக வாரி உச்சியில் கொண்டையாக முடித்திருக்கிறார்கள். அந்தக் கொண்டைக்கு நடுவில் குளிர்ந்தச் சண்பகப் பூவைச் செருகியிருக்கிறார்கள். கொண்டையின் மேலே கரிய புற இதழையும், மேலே பிசிரையும் உடைய மருதம் பூக்களை அணிந்திருக்கிறார்கள். அவற்றை கொத்தாகவே கொண்டையின் மேலே வைத்திருக்கிறார்கள். கொண்டை நடுவில் சண்பகப் பூவும், மேலே மருதம் பூக்கொத்தும் சேர்ந்து ஒளிவிடுகின்றன. இனி, அவற்றையும் சுற்றிச் செக்கச்செவேல் என்ற அரும்புகளை மாலையாகக் கட்டி, எல்லை கோலி வைத்தாற் போல அணிந்திருக்கிறார்கள். அந்தச் செவ்வரும்பு நன்றாக மலர்வதற்கு முன் நீருக்குள்ளே இருந்தவை. நன்றாக மலர்ந்தால் அதன் சிவப்புக் கொஞ்சம் குறையும். அரும்புப் பருவத்தில் சிவப்பு மிகுதியாக இருக்கும்.***

*அந்த அரும்புகளை மாலையாகக் கட்டிக் கொண்டையின் கீழேயுள்ள பரப்புக்கு எல்லையாகக் கோலிக் கட்டியிருக்கிறார்கள்.*

துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇ கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழுதருச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇ.

*(தோழிமார் சிறந்ததென்று ஆய்ந்து பாராட்டும் கடை ஒத்து நெய்ப்புடன் உள்ள கூந்தலில், சிவந்த காம்பையுடைய வெட்சி மலரின் சிறிய இதழ்களை இடையிலே வைத்து, பசிய தண்டையுடைய குவளைமலரின் தூய இதழ்களைக் கிள்ளி இட்டு, சீதேவி யென்னும் தலைக்கோலத்தோடு வலம்புரி யென்னும் தலைக்கோலத்தையும் பக்கத்தில் வைத்து, திலகத்தை அணிந்த மணங்கமழும் அழகிய நெற்றியில் வந்து மகரவாய் என்னும் அணிகலன் தாழும்படியாகப் புனைந்து, நன்றாக முடித்த குற்றமற்ற உச்சிக்கொண்டையில் பெரிய குளிர்ந்த சண்பகமலரைச் செருகி, கரிய புற இதழையும் பிசிரையும் உடைய மருதம்பூங் கொத்துக்களையும் வைத்து, கிளையினின்று அழகுபெறப் பிரிந்து எழுந்து நீரின்கீழ் உள்ள சிவந்த அரும்பை இணைத்துக் கட்டிய மாலையை வளைய வைத்துக் கட்டி.)*

## பிற அலங்காரம்

***அவர்கள் தங்களுடைய காதுகளில் குழைகளை அணிந்திருக்கிறார்கள். குழை என்பது தளிருக்கு ஒரு பெயர். குறிஞ்சி நிலப் பெண்கள் காதில் குழையைச் செருகிக் கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் அதற்குப் பதிலாக வேறு வகை வந்துவிட்டது. ஆனாலும் குழையென்ற பெயர் மாறவில்லை. இங்கே சூரர மகளிர் தங்களுடைய வளப்பமான காதுகளில் அசோகத்தின் தளிர்களைச் செருகிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு காதுகளிலும் ஒன்றுக்கொன்று ஒப்பாக நிற்க அந்தத்தளிர்கள் தொங்குகின்றன. அவர்களுடைய மார்பில் வந்து அவை அசைகின்றன. தழைத்த காது ஆதலின் அங்கே அணிந்திருக்கும் அசோகத் தளிர்கள் மார்பில் வந்து புரள்கின்றன.***

***துணைத்தக, வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்***
***நுண்பூண் ஆகம் திளைப்ப***

*(ஒன்றுக்கு ஒன்று ஒப்பாக நிற்கும்படி, வளப்பமான இரு காதுகளிலும் நிறையச் செருகிய அசோகத்தின் ஒள்ளிய தளிர் நுண்ணிய அணிகலன்களை அணிந்தமார்பில் புரள)*

*அவர்கள் தங்கள் மார்பில் சந்தனத்தை அணிந்திருக்கிறார்கள். மலையில் சந்தனத்திற்குக் குறைவு ஏது? பல காலம் வளர்ந்து உரமேறிய சந்தனம் அது. அந்தச் சந்தனக் கட்டையை நன்கு அரைத்து மேலே அப்பியிருக்கிறார்கள். மிக மென்மையான சந்தனக் குழம்பைத் தங்களுடைய நகில்களின் மேலே அப்பி அழகு செய்திருக்கிறார்கள். அந்தத் தனங்கள் கோங்கு அரும்பைப் போலத் தோற்றுகின்றன. அப்பின சந்தனப் படலம் மருதம்பூவின் இதழ்களை வைத்தது போல மெல்லிதாகத் தோற்றுகிறது. மருதம் பூவையே மேலே அப்பினால் எப்படியிருக்குமோ, அத்தகைய தோற்றத்தை அது தருகிறது.*

**திண்காழ், நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை**
**தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்**
**குவிமுகிழ் இளமுலைக் கொட்டி**

*(திண்ணிய வயிரமேறிய நறுமணமுடைய சந்தனக் கட்டையை அரைத்த குழம்பை வாசனை வீசும் மருதம் பூவைப் போலத் தோன்றும்படி, கோங்கமரத்தின் குவிந்த அரும்பு போன்ற இளைய நகில்களின்மேல் பூசி)*

*இப்படிச் சந்தனக் குழம்பை அணிந்த மார்பில் வேங்கைப் பூவின் மகரந்தப் பொடியை அப்பிக் கொள்கிறார்கள். விரிந்த மலருடைய வேங்கை மரங்கள் மலைச் சாரலில் வளர்ந்திருக்கும். அங்கிருந்து அந்தத் தாதைப் பெற்றுச் சந்தனக் குழம்பின் மேலே அப்பியிருக்கிறார்கள். அதற்கும் மேலே விளாமரத்தின் தளிர்களைக் கிள்ளி ஒருவர் மேல் ஒருவர் தெறித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை அழகிய சித்திரம் வனைந்தாற்போல் மார்பில் சந்தனக் குழம்பில் பதிந்து அழகு செய்கின்றன.*

### ***விரிமலர்***

*வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர*
*வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா.*

*(அதன்மேல் வேங்கை மரத்தில் மலர்ந்த மலரிலுள்ள நுண்ணிய மகரந்தப் பொடியை அப்பி, அழகு உண்டாகும் படி விளாமரத்தின் சிறிய தளிர்களைக் கிள்ளி மேலே தூவி.)*

## *கொடியை வாழ்த்துதல்*

*இப்படித் தலையில் பல நிறங்களையுடைய மலர்களைச் சூடி, காதில் அசோகத் தளிரைச் செருகி, மார்பில் நல்ல சந்தனத்தையும், அதன்மேல் வேங்கைப் பூந்தாதையும், அதன்மேல் விளாவின் தளிரையும் அப்பிக் கொண்டு அழகுப் பிழம்பாக விளங்குகின்ற அணங்கினருக்கு ஆனந்தம் மேலிடுகிறது. பொதுவாக மகளிர்களுக்கு அலங்காரம் என்றால் மிக்க விருப்பம். தேவ மகளிரைப்பற்றிச் சொல்வானேன்? அழகில் சிறந்த அவர்கள் அலங்காரத்தில் சிறந்து நிற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். தங்கள் அழகை மிகுந்துக் காட்டும் மலரலங்காரத்தைப் பெறுவதற்கு வேறு நிலம் இன்மையின் இந்தக் குறிஞ்சி நிலத்திற்கு வந்து இங்கே கிடைக்கும் பல வகை மலர்களைத் தொகுத்து தங்களைப் புனைந்து கொள்கின்றார்கள். இப்போது அவர்கள் உள்ள நிறைவு பெற்று விளங்குகிறார்கள். இத்தகைய மலர்களை எப்போதும் விளைவிக்கும் குறிஞ்சியின் வளம் அவர்கள் உள்ளத்தை அள்ளுகிறது. அவர்கள் அறிவு உடையவர்கள் ஆதலின், குறிஞ்சிநில வளப்பத்திற்கு மூல காரணம் முருகப் பெருமான் என்பதை உணர்கிறார்கள். அவனுடைய அருளால் குறிஞ்சி நிலத்தில் வளரும் பூக்கள் அவர்களுடைய அழகைப் பின்னும் எடுத்துக் காட்டுகின்றன. ஆதலின், உள்ள நிறைவு பெற்ற அவர்கள் குறிஞ்சிக்குத் தலைவனாகிய முருகப் பெருமானை நினைத்துத் துதிக்கிறார்கள்.*

*அவன் தன் கையில் எடுத்திருக்கின்ற கோழியை அவர்கள் வாழ்த்துகிறார்கள். யாரேனும் ஒரு வீரனையோ, மன்னனையோ வாழ்த்தும்போது பல வகையில் வாழ்த்துவது மரபு. அவனுடைய நாட்டை வாழ்த்தலாம்: கொடியை வாழ்த்தலாம். இங்கே சூரர மகளிர் முருகப் பெருமானுடைய கோழிக் கொடியை வாழ்த்துகிறார்கள். அந்தக் கொடி பல போர்களில் பகைவர்களை அழித்த வெற்றியைக் காட்டிக்கொண்டு நிற்கிறது. முருகனுக்கு யாரையும் வஞ்சமாக அழிக்கும் வழக்கம் இல்லை. நேரே நின்று தன்னுடைய வீரத்தைக் காட்டிப் போரில் வெற்றி பெறுவான். அந்த வெற்றிக்கு அறிகுறியாகக் கோழிக் கொடி மேலே நின்று விளங்கும். அந்தக் கோழிக்கொடி வாழ்க, என்று அலங்காரம் பெற்ற அணங்கினர் வாழ்த்துகின்றனர்.*

**கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி**
**வாழிய பெரிதென்று ஏத்தி**

*(கோழி உயர்ந்து தோன்றும், வஞ்சியாது எதிர் நின்று கொன்ற வெற்றியைப் புலப்படுத்தும், கொடி நெடிது வாழ்க என்று துதித்து.)*

## சோலையும் கண்ணியும்

*இப்படித் தங்களை அலங்கரித்துக்கொண்டு பாட்டுப் பாடி முருகனை வாழ்த்திய அணங்கினர் ஒருவர் இருவர் அல்லர்: பல பேர். அவர்களுடைய பாட்டு மலைச்சாரலில் எதிரொலியை எழுப்புகிறது. அவர்களுடைய உள்ளத்தை நிறைவித்து, அவர் மேனியில் அலங்காரம் உண்டாகும்படி செய்து, எழிலுடன் விளங்குகின்ற சோலை அது. அத்தகைய சோலையில் மரங்கள் செறிந்திருக்கின்ற சூழலில் முருகனுக்குரிய காந்தள் வளர்கிறது. மிக உயரமான இடத்தில் அந்தக் காந்தள் வளர்ந்திருக்கிறது. அங்கே உள்ள மரங்களில் குரங்குகள் கூட ஏறுவது இல்லை. அவ்விடத்தில் மலரும் காந்தளை வண்டுகள் அணுகுவது இல்லை* ***பொதுவாக, தெய்வத்திற்குரிய பூக்களை வண்டுகள் மொய்ப்பதில்லையென்று சொல்வார்கள்***. *தெய்வ மகளிர் பயில்கின்ற இந்தச் சோலையில் வண்டுகள் வருவது இல்லை. மிகமிக உயரத்தில் இருக்கும் சோலை அது: தெய்வத் தன்மை பொருந்திய சோலை. அங்கே மந்தியும் அறியா மரங்கள் செறிந்த சூழ்நிலையில், வண்டுகளும் மொய்க்காமல் அலர்ந்திருக்கிற காந்தள் மலராகிய கண்ணியை அணிந்திருக்கிறவன் முருகன்.*

**பலருடன்**
**சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்**
**சூரர மகளிர் ஆடும் சோலை**
**மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்**
**சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தட்**
**பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்**

*(பலரும் ஒருங்கே கூடி அழகு விளங்குகிற மலைப்பக்கங்கள் எதிரொலி செய்யும்படிப் பாடித் தேவமகளிர் ஆடுகின்ற சோலையில், குரங்கும் அறியாத மரங்கள் செறிந்திருக்கின்ற சூழலில், வண்டுகளும் மொய்க்காத விளக்குப் போன்று ஒளிவிடும் காந்தள் மலராகிய பெரிய குளிர்ந்த கண்ணியை அணிந்த தலையை உடையவன். கண்ணி-தலையில் சூடும் சிறிய அடையாள மாலை.)*

*காந்தள் என்பது சிவப்பாக வேலிக்காலில் முளைத்திருக்கும். அதன் மலர் கார்த்திகைப் பூ என்றும் சொல்வதுண்டு.*

*முருகப்பெருமான் தன்னுடைய சென்னியில் பெரிய குளிர்ந்த காந்தளங் கண்ணியைப் புனைந்திருக்கிறான். அந்தக்கண்ணி மலையிலுள்ள சோலையிலுள்ள சோலையில் வளருவது, அந்தச் சோலை சூரர மகளிர் ஆடுவது. அந்தச் சூரர மகளிர் இங்குள்ள மலர்களை எல்லாம் பறித்துத் தங்களுடைய கூந்தலையும், காதையும், உடம்பையும் புனைந்து கொள்கிறார்கள்.*

*இப்படி ஒன்றினோடு ஒன்று தொடர்புடைய செய்திகளைச் சொல்லி ஒரு பெரிய ஓவியத்தை நக்கீரர் காட்டுகிறார். சூரர மகளிரின் இயற்கை அழகையும், ஆடை அணிகலன்களையும், தலைக் கோலத்தையும் நன்றி அறிவினால் அவர்கள் முருகனைப் பாடி ஆடும் திறத்தையும் காட்டி, அத்தகையவர்கள் ஆடுகின்ற சோலையில் வளர்வது முருகப்பெருமான் அணியும் காந்தளங்கண்ணி என்று சொல்லி இந்த வருணனையை முடிக்கிறார்.*

## 8. பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

### *சூரரமகளிர் மாண்பு*

*12 - 19 :* **மால்வரை . . . . . . மேனி**

***பொருளுரை :*** *மால்வரை நிவந்த சேண் உயர்வெற்பில் - பெரிய மூங்கில் வளர்ந்துள்ள வானளாவிய மலையிடத்தே, கிண்கிணி கவைஇய ஒள்செஞ் சீறடி - சிறு சதங்கை சூழ்ந்த ஒள்ளிதாகிய அடியினையும், கணைக்கால் - திரட்சியுடைய காலினையும், வாங்கிய நுசுப்பின் - வளைந்து நுடங்கிய இடையினையும், பணைத்தோள் - பெருமையுடைய தோளினையும், கோபத்து அன்ன தோயா பூ துகில் - இந்திரகோபத்தை ஒத்து நிறம் பிடியாது இயல்பாகவே சிவந்த பூத்தொழிலையுடைய துகிலினையும், பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பலமணிகள் கோத்த ஏழுவடமாகிய மேகலையை அணிந்த அல்குலினையும், கைபுனைந்து இயற்றா கவின்பெறு வனப்பின் - ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப் பெற்ற அழகினையும், நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை - சாம்பூநதமென்று நாவலோடடுத்துப் பெயர்பெற்ற பொன்னாலியற்றி விளங்குகின்ற அணிகலன்களையும், சேண் இகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனி-சேய்நிலத்தையும் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடையவராகிய சூரர மகளிர்:*

***கருத்துரை :*** *மூங்கில் வளர்ந்துள்ள வானளாவிய மலையிடத்தே சிறு சதங்கை சூழ்ந்த ஒள்ளிதாகிய அடியினையும், கணைக்காலையும், வளைந்து நுடங்குமிடையினையும், பருத்த தோளினையும் இந்திர கோபத்தைப் போன்று இயல்பாகவே சிவந்த ஒருவரால் நிறம்பிடிப்பியாத பூத்தொழில் உடைய துகிலினையும், பலமணிகள் கோத்த மேகலையினை அணிந்த அல்குலினையும், ஒருவர் கையால் ஒப்பனை செய்து தோற்றவியாது இயல்பாகவே பெற்ற அழகினையும், சாம்பூநதமென்னும் பொன்னாலியற்றிய அணிகலன்களையும், தொலைவினுஞ் சென்று ஒளிரும் நிறத்தினையும் உடையவர் ஆகிய சூரர மகளிர் என்பதாம்.*

***அகலவுரை :*** *ஈண்டு எண்ணும்மையாற் றொடர்ந்தவற்றையும் மேலே தொடருபவற்றையும் (சக) சூரரமகளிர்க்கு அடையாக்கி முடித்திடுக.*

*மால்வரை - பெரிய மூங்கில். வரை - கோடு: கணு. கணு உடைமையால் வரை என்பது ஆகுபெயராய் மூங்கிலைக் குறிக்கும். இது மலைக்குப் பெயராங்காலும் ஆகுபெயரே என்க. ஈண்டு - வரை என்பதன் பின்னர் வெற்பு என வருதலால் மூங்கில் வளர்ந்த மலை என்க. இனி மால்வரை நிவந்த வெற்பென்பதற்குத் திருமால்போலும் குவடுகள் ஓங்கிய வெற்பென்றுமாம். "மாயோன் அன்ன மால்வரைக் கவான்" என்றார் பிறரும்.*

*வெற்பு - மலை: வெற்பிடத்தே (சக) சூரரமகளிர் ஆடுஞ்சோலை என இயையும். கிண்கிணி - சதங்கை என்னுமொரு காலணி-"கிண்கிணி களைந்த தால்" (எஎ) என்றார் புறத்தினும், ஒண்செஞ்சீறடி-ஒளியும் சிவப்பு நிறமும் உடைய சிறிய அடி என்க. கணை - திரட்சி. "கருவிசைக் கணைக்கோல் " (மலைபடு கூஅ0) என்புழியும் அஃதப் பொருட்டாதலறிக. வாங்கிய - வளைந்த: நுசுப்பு- இடை. பணை-மூங்கிலுமாம். கோபம் - இந்திர கோபப்புழு - இது துகிலின்நிறத்திற் குவமை. இந்திரகோபம், சிவப்புநிறமுடையது ஆதல் காண்க. தெய்வப்பூந்துகில் ஆதலின் மாந்தர் துகில்போன்று ஒருவரால் நிறம்பிடிப்பிக்கப்பட்டன அல்ல, இயல்பாகவே செந்நிற முடையது என்பார், தோயாப் பூந்துகில் என்றார். பூந்துகில் - பூத்தொழியுடைய துகில் என்க.*

*பல்காசு - பல மணிகள். நிரைத்தல் - நிரல்பட அமைத்தல். சில்காழ் - சிலவாகிய வடம். காழ் - ஈண்டு வடம் என்னும் பொருட்டு. "எழுகோவையுடைய மேகலை' என்றார் நச்சினார்க்கினியர்.*

*சில்காழ் என்றதனால் இருவடமுடைத்தாகிய காஞ்சி என்பாருமுளர். அவர்,*

*"எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை*
*பண்கொள் கலாபமிரு பத்தொன்று - கண்கொள்*
*பருமம் பதினான்கு முப்பத் திரண்டு*
*விரிசிகை என்றுணரற் பாற்று"*

*எனக் காட்டுவர்.*

*இவ் வெண்பாவே,*

*"எண்கோவை காஞ்சி எழுகோவை மேகலை*
*பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள்*
*பருமம் பதினெட்டு முப்பத்திரண்டு*
*விரிசிகை யென்றுணரற் பாற்று"*

*எனப் பாடபேதமாகவும் ஓதப்படுதலின் நச்சினார்க்கினியர் இதனையே கொண்ட மேகலை என்று பொருள் கூறுவாராயினர்.*

*காழ் - வடம், "ஆயிதழ் அலரி அந்தொடை ஒரு காழ்" (ககஅ) என்னும்*

*குறிஞ்சியினும் காழ் அப் பொருட்டாதல் அறிக. மானிடமகளிர்க்குச் செவிலிமுதலியோர் கைசெய்து பிறப்பிக்கும் அழகு போலன்றி இவர் தெய்வ மகளிராதலின் இயல்பாகவே அழகினையுடையார் என்பார், "கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு" என்றார். கவின் - அழகு. வனப்பென்பது பல உறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் அழகென்ப.*

*சம்பு என்பது, நாவல்மரத்தின் பெயர் (வடமொழி). நாவற் கனிச்சாறு பாயும் சம்புநதியின்கண் தோன்றும் பொன் என்னும் கொள்கைபற்றி நால்வகைப் பொன்னுள் வைத்து ஒன்றனைச் சாம்பூ நதம் என்ப, சம்புவின் தொடர்புடையது என்னும் பொருட்டு. இதனை,*

> *"சாத ரூபங் கிளிச்சிறை ஆடகம்*
> *சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்*
> *பொலந்தெரி மாக்கள்"* (சிலப்.)

*எனவரும் இளங்கோவடிகளார் கூற்றானும் அறிக. நால்வகைப் பொன்னுள்ளும் சாம்பூநதமே சிறந்ததென்ப: இதனை,*

> *"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்"*
> (திருவள்ளுவமாலை)

*என்னும் வெண்பாவானும் அறிக.*

*ஆதலால் சாம்பூநதப் பொன் என்பார், நாவலொடு பெயரிய பொலம் என்றார். "நாவலம் பொலந்தகடென" (அரங் - ககஎ)ச் சிலப்பதிகாரத்தினும் கூறப்படுதலறிக.*

*பொலம்-பொன்.*

> *"பொன்னென் கிளவி யீறுகெட முறையின்*
> *முன்னர்த் தோன்றும் லகார மகாரம்*
> *செய்யுண் மருங்கிற் றொடரிய லான"* (தொல். எழுத்.)

*என்னும் தொல்காப்பிய விதிப்படி பொன் என்பது பொலம் என வந்தது.*

*பொலம்புனை அவிர் இழை என்றது, பொன்னாலியற்றி மணிகள் வைத்திழைத்த விளக்கமுடைய அணிகலன் என்றவாறு. இழைக்கப் படுதலால் அணிகலனை, இழை என்ப. தெய்வங்களின் திருமேனி ஒளியுடையன என்ப. இதனை,*

> *"பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்*
> *மூவா இளநலங் காட்டி"* (சிலப்.)

*என்னும் அடிகளானும் இவற்றிற்கு, தெய்வயாக்கை யாதலாற் பொறாதென்று பொறுப்பித்தான் என்க" என அரும்பதவுரையாசிரியரும்,*

*''பூவின் தன்மை தலைவந்த மையுண்ட கண்கள் இதனைப் பொறுப்பனவாகவென நிருமித்துக் கொண்டு பின்பு அவளை மேவித்தனது எக்காலத்தும் முதிராத இளைய அழகினது நலத்தை வெளிப்படுத்தி" என உரை வகுத்து, மேலும், "மக்கள் கண்ணிற்குத் தெய்வயாக்கை காணப் பொறாதாகலின் இவள் கண்ணுக்குப் பொறுக்கக் கடவதென்று நிருமித்துக் கொண்டான்." என அடியார்க்கு நல்லார் விளக்கிச் சேறலானும் அறிக. மக்கள் யாக்கை போன்று மலமூத்திரங்கள் உடைமையும் எழுவகைத் தாதுக்கள் முதலியவற்றான் ஆதலும் இன்மையின், இக்குற்றந் தீர்ந்த திருமேனி என்பார், 'செயிர்தீர்மேனி' என்றார். இவ்வடை மொழிகளைத் துணையோர்க் கேற்றி யுரைப்பாருமுளர். அங்ஙனம் ஏற்றி மொழிதல் சிறப்பன்மை உணர்க.*

## சூரரமகளிரின் செயல்களும் விளையாட்டும்

### *20-30 :* துணையோர் . . . . . .வளைஇ

***பொருளுரை :*** *துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதி - தோழியர் நன்றென்று ஆராய்ந்த கடையொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே, செங்கால் வெட்சி சீறிதழ் இடைஇடுபு - சிவந்த காலையுடைய வெட்சியினது சிறிய பூக்களை நடுவே விடுபூவாக இட்டு, பைந்தாள் குவளை தூஇதழ் கிள்ளி - பசிய தண்டினையுடைய குவளையினது தூயஇதழ்களைக் கிள்ளியிட்டு, தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து - சீதேவி என்னும் தலைக்கோலத்துடனே வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்திலே வைத்து, திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல் மகரப் பகுவாய் தாழ் மண்ணுறுத்து - திலகமிட்ட மணம் நாறுகின்ற அழகினையுடைய நெற்றியின்கண்ணே சுறாவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலம் தங்கச்செய்து, துவர முடித்த துகள் அறும் முச்சி-முற்ற முடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே, பெருந்தண் சண்பகம் செரீஇ-பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகி, கரும் தகட்டு உள்ஐபூ மருதின் ஒள்இணர் அட்டி-கரிய புறவிதழினையும் அகத்தே துய்யினையும் உடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்களை அதன் மேலே இட்டு, கிளை கவின்று எழுதரு கீழ் நீர் செவ்வரும்பு இணைப்புஉற பிணையல் வளைஇ - கிளையினின்றும் தோன்றி அழகுற்று வளராநின்ற நீர்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுதலுறுகின்ற மாலையை வளைய வைத்து:*

***கருத்துரை :*** *தோழியராலே இவை நன்றென்று ஆராய்தற்குரிய அழகுடைய கடையொத்த நெய்ப்பினையுடைய கூந்தலிலே செங்கால் வெட்சியின் சிறிய பூக்களை நடுவே விடுபூவாக இட்டுப் பசிய தண்டினை உடைய குவளை மலரின் இதழ்களையும் கிள்ளியிட்டு சீதேவி வலம்புரி என்னுந்*

தலைக்கோலங்களை அவ்வவற்றிற்குரிய இடத்திலே வைத்துத் திலகமிட்ட மணங்கமழும் அழகிய நெற்றியின்கண்ணே மகரமீனின் அங்காந்த வாய் வடிவிற்றாகச் செய்த தலைக்கோலம் தங்கும்படி செய்து, முற்ற முடித்த குற்றமற்ற கொண்டையிலே பரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகி, மருதம் பூங்கொத்துக்களை அதன் மேலே இட்டு நீர்க்கீழ் அரும்புகளைக் கட்டிய மாலையினை அக் கொண்டையை வளையச் சுற்றி என்பதாம்.

**அகலவுரை :** துணையோர் - தோழியர்: இனித் துணையோர் என்பதற்குத் தம்மோடொத்த மகளிர் எனக் கொண்டு அவர் பாராட்டுதற்குரிய கூந்தல் எனினுமாம். இனி, தங்காதலராலே இவை நன்றென்று பாராட்டிய அழகுடைய கூந்தல் எனினுமாம். ஆய்தல் - ஆராய்தல். இணைதல் - கடையொத்தல். ஈரோதி - நெய்ப்புடைய கூந்தல். வெட்சிமலரின் காம்பு சிவந்த நிறமுடையத்தாகலின், 'செங்கால் வெட்சி' என்றார். "செங்கால் வெட்சியும் நரந்தமும் நாகமும்" (3 : 115-2) என்றார் மணிமேகலையினும்.

சீறிதழ் - சிறிய இதழ்: சிறிய இதழை விடுபூவாக இட்டென்க. இடுபு - இட்டு: செய்பு என்னெச்சம்: செங்கால் வெட்சி, பைந்தாட்குவளை என்பவற்றுள் முரண்தோன்றிச் செய்யுளின்பம் மிகுதலுணர்க. பைந்தாள்- பசிய தண்டு, கிள்ளி என்பதனோடும் இடுபு என்னும் எச்சத்தைக் கூட்டுக, தெய்வவுத்தி - ஒருவகைத் தலைக்கோலம். வலம்புரி. வலம்புரிச் சங்கின் வடிவிற்றாகச் செய்ததொரு தலைக்கோலம் என்க இதனை,

> "தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
> தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
> மையீ ரோதிக்கு மாண்புற அணிந்து" (சிலப் சா: க0சு - அ)

என்னும் இளங்கோவடிகள் கூற்றானும் அதனைச் "சீதேவி என்றும் "சீதேவியார்" என்றுங் கூறுப. இச் சிலப்பதிகார அடிகட்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார் "சீதேவியார் என்னும் பணியுடனே வலம்புரிச் சங்கும், பூரப்பாளையும், தென்பல்லி வடபல்லி யென்னும் இவையும் தம்மில் தொடர்ந்த ஒன்றான தலைக்கோலம்" என உரை வகுத்துள்ளார். அவ்வத் தலைக்கோலமும் வைத்தற்குரிய இடத்திலே வைத்தென்பார், வயின் வைத்தென்றார். வயின் - இடம்.

திலகம் - நுதற் பொட்டு. தைஇய - இட்ட. தேம் - மணம். திரு நுதல் - அழகிய நெற்றி. மகரம் - சுறாமீன் - சுறாமீனின் அங்காந்த வாயையுடைய தலைவடிவிற்றாகச் செய்ததொரு தலைக்கோலம் என்க. நெற்றியிலே தங்கும்படி செய்தென்பார், 'தாழமண்ணுறுத்து' என்றார்: ஈண்டு மண்ணுறுத்தல் - கைசெய்தல் என்னும் பொருட்டு, மண்ணுதல் - செய்தல் என்க "ஆவுதி மண்ணி" (மதுரைக் - சகூச) என்புழியும் அஃதப் பொருட்டாதலறிக. துவர - முற்ற.

*இலக்கணமெல்லாம் முற்றுப்பெறும்படி மூடித்த முச்சி என்க. முச்சி - கொண்டை. சண்பகம் - ஒருவகைப்பூ. செரீஇ - செருகி. கருந்தகடு - கருநிறமுடைய புறவிதழ். உளைப்பூ என்பதனை உள் ஐ பூ என்க. கண்ணழித்து உள்ளே தூய்மை உடைய பூ என்க. மருதின் ஒள்ளிணர் எனப் பின்வருதலால் உளைப் பூ மருதம் என்றது பொருட்கேற்ற அடையாய் நின்றதென்பர் நச்சினார்க்கினியர். ஒள்ளிணர் - ஒள்ளிய பூங்கொத்து, அட்டி - இட்டு.*

*கிளைக்கவின் றெழுதரு என்றதற்குக் கிளையாக அழகுபெற்று வளர்ந்த எனினுமாம். கீழ்நீர் - நீர்க்கீழ் என்பதன் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ. கவின் - அழகு. கவின் என்னும் பண்படியாகக் கவின்று என்னும் வினை தோன்றிற்று. இணைப்புறு பிணையல் - தொடுத்தலுற்ற மாலை. துளைஇ - வளையவைத்து: கொண்டைய வளைக்கட்டி என்றவாறு. "நீர்க்கீழரும்பு மிகச் சிவந்திருத்தலாலே ஒப்பனைக்குக் கொள்வர்" என்பர் நச்சினார்க்கினியர். நீர்க்கீழரும்பு மிகச் சிவந்த நிறமுடைத்தாகலை, "கண்ணும் நீர்க்கீழரும்பினது சிவப்பினும் சிவந்தது" என்னும் (நச்சி) சீவக சிந்தாமணி க0கசு - உரையானும் உணர்க.*

## இதுவுமது

### *30 - 41 :* துணைத்தக . . . . . . . . சோலை

***பொருளுரை :* *துணைத்தக வள்காது நிறைந்த பிண்டி ஒள்தளிர் நுண்பூண் ஆகம் திளைப்ப - தம்மில் ஒத்தற்குப் பொருத்த வளவிய காதிலே இட்டுநிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையாநிற்க, திண்காழ் நறு குறடு உரிஞ்சிய பூகேழ் தேய்வை தேம் கமழ் மருதிணம் கடுப்ப கோங்கின் குவிமுகிழ் இளமுலை கொட்டி - திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தை உரைத்த பொலிவினையுடைய நிறத்தையுடைத்தாகிய குழம்பை மணம் நாறுகின்ற மருதம்பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பை ஒத்த இளமுளையிலே அப்பி, விரிமலர் வேங்கை நுண் தாது அப்பி-அந்த ஈரம் புலருமுன்னே விரிந்த மலரையுடைய வேங்கைப் பூவினது நுண்ணிய தாதையும் அதன்மேல் அப்பி, காண்வர - மேலும் அழகுண்டாகும்படி, வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா - விளவினது சிறிய தளிரைக் கிள்ளித் தெறித்துக் கொண்டு, கோழி ஓங்கிய ஏன்று அடு விறற்கொடி வாழிய பெரிது என்று ஏத்தி - கோழியின் உருவத்தைத் தன்னிடத்தே கொண்டு, உயர்ந்த வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வெற்றியையுடைய கொடி நெடுங்காலம் வாழ்வதாக என்று வாழ்த்தி, பலருடன் சீர்தகழ் சிலம்பம் சிலம்பப் பாடி-பலரும் ஒருங்கே கூடிச் சீர்மை விளங்குகின்ற மலையிட மெல்லாம் எதிரொலிசெய்யுமாறு பாடி, சூரரமகளிர் ஆடுஞ் சோலை****

- கொடுமையுடைய தெய்வமகளிர் ஆடாநிற்கும் சோலையினை யுடைய:

***கருத்துரை :*** *தம்மில் ஒத்த தகுதியுடைத்தாம்படி வளவிய காதிலே இட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்பூணணிந்த தம் மார்பிலே அசையாநிற்பவும், திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தை உரைத்த அழகிய நிறத்தையுடைய குழம்பை மணமிக்க மருதம்பூவை அப்பினாற்போலக் கோங்கரும்பை ஒத்த இளமுலை மேலே கொட்டி அவ் வீரம் புலரு முன்னே அதன்மேலே வேங்கைமலரின் நுண்ணிய தாதை அப்பி மேலும் அழகுண்டாகும்படி விளவின் குறுந்தளிரைக் கிள்ளிச் சிதறிக்கொண்டு வஞ்சமின்றி எதிர்நின்று வென்றடுகின்ற கோழிக்கொடி நெடுங்காலம் வாழ்வதாக என்று வாழ்த்திப் பலரும் ஒருங்கே கூடிச் சீர்மை விளங்கும் மலையிடமெல்லாம் எதிரொலி செய்யும்படி பாடிச் சூரரமகளிர் ஆடாநின்ற சோலையினையுடைய என்பதாம்.*

***அகலவுரை :*** *சோலையினையுடைய (சஉ) அடுக்கம் என இயையும், துணைத்தக என்றது - இரண்டு காதினும் இடப்படும் தளிர் இரண்டும் தம்மில் ஒத்திருத்தற்குத் தகுதியாக என்றவாறு, வண்காது - வளமுடைய செவிகள். பிண்டி- அசோகு. அசோகந்தளிரைக் காதிற்செருகி அணிசெய்யும் வழக்கத்தை இப்பாட்டிலேயே, (உ0எ) "செயலைக் தண்டளிர் துயல்வரும் காதினன்" எனப் பின்னர் ஓதுதலானும், "சாய்குழைப் பிண்டித் தளிர் காதிற்றையினுள்" எனவும், "கடிமலர்ப் பிண்டிதன் காதிற் செரீஇ" (பரி - கக: கரு, கஉ:அஅ) எனவும், "செந்தீ யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ" (ககஅ-கூ) எனக்குறிஞ்சியினும் வருதலா னறிக. நுண்பூண்- நுணுகிய தொழிற்றிற மமைந்த அணிகலன்கள். ஆகம்-மார்பு. தளிர் நுண்பூணாகம் திளைப்ப என்றதனால் அசோகந்தளிர் காதிற் செருகப்பட்டது மார்பிற் கிடந்து திளைக்குமளவு நீளிதாதலறிக. திண்காழ் நறுங்குறடு என்றது, சந்தனக் கட்டையை. சந்தனக் கட்டையின் சிறப்பியல்புகளை அழகாக அடுக்கி அடையாக்கிய அழகினை உணர்க. திண்ணிதாதலும் வயிர முடைத்தாதலும் மணமுடைத்தாதலும் சந்தனக்கட்டையின் சிறப்புக்களாம். குறடு - கட்டை. ஈண்டுக் குறிப்பாற் சந்தனக்கட்டையை உணர்த்திற்று. உரிஞ்சுதல் - உரைத்தல்.*

*திண்காழ் நறுங்குறடு என்றாங்கே சந்தனக் குழம்பைப் பூங்கேழ்த் தேய்வை என்றதன்கண்ணும் தமிழின்பம் ததும்புதலறிக. பொலிவுடைய நிறமமைந்த குழம்பென்றவாறு. கேழ் - நிறம். தேய்க்கப் படுதலால், குழம்பு தேய்வை எனப்பட்டது. மருதம்பூ - சந்தனக் குழம்பிற்கு நிற வுவமை என்க. தேங்கமழ் மருது என்பதன்கண் சொல்லின்பம் உணர்க. இணர் - மலர்: ஆகுபெயர். கோங்கரும்பு, முலைக்குவமை.*

> *"யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்*

*பூணகத் தொடுங்கிய வெம்முலை"* *(சிறுபாண்.)*

*என்றும்,*

*"முலையேர் மென்முகை அவிழ்ந்த கோங்கின்"* *(குறுந்.உருச-உ)*

*என்றும்,*

*"கோங்கு முகைத்தன்ன குவிமுலை"* *(அகம். உச0 - கக)*

*என்றும், பிறரும் ஓதுதல் காண்க. கொட்டுதல் - ஈண்டு அப்புதல் என்னும் பொருட்டென்க.*

*அச் சந்தனக் குழம்பின்மேல் வேங்கைப்பூந்தாதை அப்பி என்க. காண் - ஈண்டு அழகு என்னும் பொருட்டு, காண்வர என்றது, மேலும் அழகு உண்டாகும்பொருட்டு என்றவாறு. குவிமுலையின்மேற் சந்தனக்குழம்பை நீவி அதன்மேல் வேங்கைப்பூந்தாதப்பி மேலும் அழகுண்டாம் பொருட்டு விளவின் சிறிய தளிரைக் கிள்ளி அம் முலையின்மேற் சிதறினர் என்றவாறு. கோழி யோங்கிய - கோழியின் உருவம் எழுதப்பட்டுயர்ந்த என்க. ஏன்றடு விறற்கொடி-வஞ்சியாமல் எதிர்நின்று அடுங்கொடி என்க. "வென்றடு விறற் கொடி" என்றும் பாடம். நச்சினார்க்கினியர் "ஏன்றடு விறற் கொடி" என்றே பாடங்கொண்டனர் என்பதனை அவர் உரைநோக்கி அறிக. விறல்-வெற்றி. முருகக்கடவுளுக்குக் கோழிக்கொடி அடையாளக்கொடி என்க. முன்னர், முருகனுக்குரிய கடம்பந்தார் கூறியவர், ஈண்டு அக் கடவுட்குரிய அடையாளக்கொடி கூறியலாறறிக. சீர்-சிறப்பு, சிலம்பகம் சிலம்ப-மலையிடம் எதிரொலிசெய்யும்படி என்க. சிலம்பு-மலை. சிலம்ப-ஒலிப்ப.*

## முருகக் கடவுட்குரிய அடையாளப்பூ

### *42 - 44 :* மந்தியும் ................ சென்னியன்

***பொருளுரை :*** ***மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கத்து - மரமேறுதற் றொழிலில் சிறப்புடைய மந்திகளும் மரங்களின் நீட்டத்தால் ஏறியறியாத மரம் நெருங்கின பக்கமலையிடத்து நின்ற, சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங் காந்தள் பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன் - தான் விரும்புதலாலே வண்டுகளும் மொய்த்தலில்லாத நெருப்புப் போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திருமுடியை யுடையவனும்.***

***கருத்துரை :*** ***குரங்குகளும் ஏறியறிதற்கியலாத நீட்சியையுடைய மரங்கள் செறிந்த பக்கமலையிடத்து நின்ற வண்டுகள் மொய்த்தலில்லாத நெருப்புப்போன்ற பூவினையுடைய செங்காந்தளின் பரிய குளிந்த கண்ணியைச் சூடிய திருமுடியை உடையவனும் என்பதாம்.***

**அகலவுரை :** மந்தி-குரங்கு. மந்தியும் அறியா, என்றதன்கண் உம்மை சிறப்பும்மை, “குறவரு மருளும் குன்றம்” (மலைபடு-உஎரு) என்புழிப் போல. கடவுள் மாலையாதலின் வண்டுகள் மொய்த்தில என்க. **கடவுளர்க்குரிய மாலையில் வண்டுகள் மொய்க்கமாட்டா** என்பதனை, “வண்டே இழையே” என்னுந் தொல்காப்பிய நூற்பாவா னறிக. என்னை? இவள் தெய்வமகள் அல்லள் எனக் காண்டற்கு அவள் மாலையில் வண்டு மொய்த்தல் அறிகருவி என்றாராகலான். சுரும்பு - வண்டு, மூசா - மொய்யாத. சுடர் - தீ. “தீயினன்ன ஒண் செங்காந்தள்” (கசரு) என்றார் மலைபடு கடாத்தினும். “கார்த்திகை விளக்கிற் பூத்தன தோன்றி” (கார் - உசு) என்றும், “தண்காந்தளம்பூத் தழல்போல் விரியும்” (பாண்டிக்கோவை) என்றும், பிறரும் ஓதுதல் காண்க.

“இதனான் அடையாளப்பூக் கூறினார். இதனை, வெறியாட்டயர்ந்த காந்தளும் என்பதனானும் உணர்க” என்பர் நச்சினார்க்கினியர்.

அடையாளப்பூவாவது: சிவனுக்குக் கொன்றை, திருமாலுக்குத் துளவம், சோழனுக்கு ஆத்தி, பாண்டியனுக்கு வேம்பு என்றாற்போல் இம் மாலை இன்னவர்க்கே உரியது என்றாற்போல்வது.

இனி, அடியினையும் காலினையும் நுசுப்பினையும் தோளினையும், துகிலினையும் அல்குலினையும், வனப்பினையும் இழையினையும் மேனியினையும் உடையராய், இடையிடுபு இட்டு வைத்துத் தாழப்பண்ணிச் செரீஇ அட்டி வளைஇத் திளைப்பக் கொட்டி அப்பித் தெறித்து ஏத்திப் பாடிச் சூரரமகளிர் ஆடுஞ் சோலையை உடைய அடுக்கத்துக் காந்தட் கண்ணி மிலைந்த சென்னியன் என முடிவு காண்க.

இனி, ‘பார்முதிர்’ என்பது முதல் “சேஎய்” என்னுந் துணையும் ஒரு தொடர். இதன்கண் முருகக்கடவுளின் தெறற்சிறப்பு விரித்தோதப்படும்.

### முருகன் சூரனைத் தடிந்த வகை, பேய்மகளின் துணங்கைக் கூத்து

பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்(டு)
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை

ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்(து)
எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்

**1. நச்சினார்க்கினியர்**

*பார் என்பது முதல் சேய் (61) என்னுந் துணையு மொரு தொடர்.*

*பார் முதிர் பனிக்கடல் கலங்க உள் புக்கு-பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் தன் நிலை குலையும்படி உள்ளே சென்று,*

*பார் - பாறை, மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.*

*சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்-சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே,*

*உலறிய கதுப்பின் - காய்ந்த மயிரினையும்,*

*பிறழ்பல் - நிரை யொவ்வாத பல்லினையும்,*

*பேழ் வாய் - பெருமையையுடைய வாயினையும்,*

*சூழல் விழிப் பசுங் கண் - கோபத்தாற் சுழலும் விழியையுடைய பசிய கண்ணினையும்,*

*சூர்த்த நோக்கின் - கொடுமை செய்த பார்வையினையும்,*

*கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப் பெருமுலை அலைக்கும் காதின் - பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குகையினாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும்,*

*பிணர்மோட்டு - சருச்சரையையுடைய பெரிய உடலினையும், மோடு-வயிறுமாம்.*

*உரு கெழு செலவின் - கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையுமுடைய, அஞ்சு வரு பேய்மகள் - கண்டார்க்கு அச்சந் தோன்றுகின்ற பேயாகிய மகள்,*

*குருதி ஆடிய கூர்உகிர்க் கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந்தலை - உதிரத்தையளைந்த கூரிய உகிரினையுடைய கொடிய விரலாலே*

கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடை நாற்றத்தையுடைய கரிய தலையை,

இனித் தொட்டென்பதனை வினையெச்சமாக்காது தொழிற்பெயராக்கிக் கண் தோண்டுதலுண்டவென்று கூறுதலுமாம்.

ஒண்தொடித் தடக் கையின் ஏந்தி- ஒள்ளிய தொடியினையுடைய பெருமையையுடைய கையிலே எடுத்து,

வெருவர ஏன்று அடு விறற் களம் பாடி - அவுணர்க்கு அச்சந்தோன்ற வஞ்சியாது எதிர் நின்று கொல்கின்ற வெற்றிக் களத்தைப் பாடி,

தோள் பெயரா - தோளையசைத்து,

நிணம் தின் வாயள் - நிணத்தைத் தின்கின்ற வாயினை யுடையளாய்

வாயள் வினையெச்சமுற்று,

துணங்கை தூங்க - துணங்கைக் கூத்தாட,

''பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத் துடக்கிய நடையது துணங்கையாகும்" 'திவாகரம்'.

கதுப்பு (47) முதலியவற்றையுடைய பேய்மகள் (51) தலையை (53) ஏந்தி (54) வாயளாய்ப் (56) பாடித் (55) தூங்கவென முடிக்க

இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை - மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்,

அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி - ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே அச்சந் தோன்ற மிக்குச் சென்று.

என்றதனால், இறைவன் உமையை வதுவை செய்து கொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையில் கொடுக்க அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து அதனைத் தம்மனைவியர் கையிற் கொடுப்ப அருந்ததி யொழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன்தான் இருடியர்களுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய அவ்ஆறு வடிவு மொன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே

மண்டிச் சென்றதென்று புராணங்கூறிற்று. அதனைப் "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறு வேறு புராணங் கூறுவாருமுளர்.

இனி அவனுடல் அற்று வேறு வேறாம் வகையாலென்றுமாம்.

அவுணர் நல்வலம் அடங்க - அவனையொழிந்த அவுணருடைய நல்ல வெற்றி இல்லையாம்படி,

அடங்க என்றது "களமடங்க" என்றாற்போலக் கொள்க.

கவிழ் இணர் மா முதல் தடிந்த - கீழ் நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின,

என்றது - அவுணரெல்லாருந் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங் கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டின வென்றவாறு.

மறு இல் கொற்றத்து - குற்றமில்லாத வெற்றியினையும்,

எய்யா நல்லிசை - ஒருவரானும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையு முடைய,

செவ்வேற் சேஎய் - செய்ய வேலையுடைய சேய்,

எக்காலமும் போர் செய்கலிற் செவ்வேலென்றார். செய்யவனென்பது சேயென விகாரத்தால் நீண்ட தென்றுமாம்.

கடல்கலங்க உள்புக்குச் (45), சூர்முதலுடைய ஒரு பேரியாக்கை (57), அறுவேறுவகையின் அஞ்சுவர மண்டிச் சென்று (58), பேய் மகள் (51), துணங்கை தூங்கும்படியாக (56), அச்சூர்முதல்தடிந்த வேலானே (46), பின்னும் அவுணர் நல்வலமடங்க (59), மாமுதல்தடிந்த கொற்றத்தினையும் (60), நல்லிசையினையு முடைய சேயென முடிக்க.

கணவன் (6) மார்பினன் (11) சென்னியனாகிய (44) சேயென ஒருபொருள் குறித்த வேறு பெயராய் நின்றன.

## 2. உரையாசிரியர்

பார் முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு - பூமியைச் சூழ்ந்த குளிர்ந்த கடல் கலங்கும் வண்ணம் உள்ளே சென்று,

சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல் - சூரபன் மாவாகிய தலைவனைக் கொன்ற எரிகின்ற இலைத் தொழிலையுடைய நெடிய வேலாலே,

*உலறிய கதுப்பில் பிறழ் பல் பேழ் வாய் - காய்ந்த மயிரினையும் நிரையொவ்வாத பல்லையும் பெரிய வாயையும்,*

*சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின் - சுழன்ற விழியையும் பசுத்த கண்ணையுமுடைய கொடிய வஞ்சனையாகிய பார்வையோடு,*

*விழி - மிண்டை.*

*கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்க - கழல் போன்ற கண்ணினையுடைய கோட்டானுடனே கடிய பாம்பு தூங்குதலால்,*

*கண் - எண்ணுமாம் (?).*

*பெருமுலையலைக்குங் காதிற்பிணர் மொட்டு - பெரியமுலைகளை யசைக்குங் காதினையும் சற்சரையும் பெருமையு முடைய,*

*உரு கெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள் - வடிவைப் பொருந்தின நடையினாலே கண்டார்க்கு அச்சமுண்டாம் பெண் பேய்கள்,*

*குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல் - உதிரந்தோய்ந்த கூரிய உகிரினையுடைய கொடிய விரலாலே,*

*கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை - கண்களைத் தோண்டி யுண்ணப்பட்ட மிக்க நாற்றத்தையுமுடைய பெரிய தலையை,*

*ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர - ஒள்ளிய வளையும் பெருமையுமுடைய அங்கையிலேந்தி அச்சமுண்டாக,*

*வென்று அடு விறற் களம் பாடித்தோள் பெயரா-வெற்றிப் பாட்டாற் கொன்ற வெற்றிக் களத்தைப் பாடித் தோளை அசைத்து,*

*நிணம் தின் வாயள் துணங்கை தூங்க - நிணந்தின்னப்பட்ட வாயையுடையளாகித் துணங்கைக் கூத்தை யாட,*

இரு பேர் உருவின் ஒருபேர் யாக்கை - மக்கள் வடிவும் விலங்கு வடிவுமான இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாயிருக்கிற பெரிய சூரனுடல்,

*அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி - வேறு வேறாக அறும்படி அதற்குப் பொருந்திய கூறுபாட்டாலே சூரன் அஞ்சும் வண்ணம் நெருங்கிச் சென்று,*

*அவுணர் நல் வலம் அடங்க - அவுணரெல்லார்க்கும் நல்ல வெற்றி இல்லையாக, கவிழ் இணர் - கீழ் நோக்கின பூங்கொத்தையுடைய,*

*மா முதல் தடிந்த - மாவடிவாகிய சூரபத்மா வென்னும் முதல்வனைக் கொன்ற,*

*இந்த மாவை அவுணர்க்கு வரங்கொடுக்கும் தனிமா வென்று சொல்லுவார்கள்.*

*மறு இல் கொற்றத்து எய்யா நல்லிசைச் செவ்வேற்சேஎய் - குற்றமில்லாத வெற்றியையும் ஒருவராலும் அளந்தறியப்படாத நல்ல புகழையும் சிவந்த வேலினையும் உடைய முதிராவடிவையு முடையவன்.*

### 3. பரிமேலழகர்

*பார் முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு - பூமி சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய கடல் கலங்கும்படி உள்புகுந்து,*

*சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்-சூரபன்மாவை முதலுடனே கெடுத்த ஒளிபொருந்தி அகன்ற பெரிய வேலானது,*

*உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச் சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின் - காய்ந்த மயிரினையும், தோன்றிய எயிற்றினையும், பெரிய வாயினையும், சுழன்ற விழியினையும் பச்சென்ற கண்ணினையும், நடுங்கிய பார்வையினையு முடைத்தாய்,*

*கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்க - கழன்று விழுவது போலும் கண்ணையுடைய பேராந்தையுடனே விடத்தால் கோபத்தையுடைய பாம்பையும் நால,*

*பெருமுலை அலைக்கும் காதில் - மிக நான்ற முலைகளிலே சென்றலைக்கின்ற காதிலே தூக்கிக் கொண்டு,*

*பிணர் மோட்டு, உருகெழு செலவின் - சர்ச்சரை, உயர்ச்சி, இருளுருப் பொருந்திய நடக்கையிலே,*

*அஞ்சு வரு பேய் மகள் - அச்சந்தரும் பெண்பேய்,*

*இதுவன்றியும், "பனையினுயரம் போன்று கெழுமிய வடிவும் அஞ்சத்தக்க பெண் பேய்" என்பாரும் உளர்.*

*குருதியாடிய கூர்உகிர்க் கொடுவிரல் - உதிரந்தோய்ந்த கூர்த்த நகம் பொருந்திய வளைந்த விரல் கொண்டு,*

*கண் தொட்டுண்ட கழிமுடைக் கருந்தலை, ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி - கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட பொல்லாத நாற்றத்தையுடைய பசுந் தலையை அழகிய வளை பொருந்திய பெரிய கையிலே ஏந்திக் கொண்டு,*

*வெருவர, வென்றடு விறல்களம் பாடி-கண்டவர்கள் பயப்பட வென்று கொன்ற வெற்றிக் களத்தைப் புகழ்ந்து,*

*தோள்பெயரா, நிணத்தின் வாயள் துணங்கை தூங்க - நிணந்தின்கின்ற வாயுடனே தோளை யசைத்துச் சிங்கிக் கூத்தையும் ஆடிக் கொண்டு,*

*இருபே ருருவின் ஒருபேர் யாக்கை, அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி-சூரன் என்றும் பதுமன் என்றும் இரண்டு பேரையுடைய வடிவமாய் ஒரு பெரிய உடம்பையுடைய அவனது மூலப்படை, கூலிப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை, நாட்டுப்படை, என்று சொல்லப்பட்ட அறுவகைப் படையும் அஞ்சும் மேற்சென்று,*

*அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர் மாமுதல் தடிந்த - அசுரனது சிறந்த வெற்றி மடிய மாயையிலே கீழ்நோக்கிப் பூத்த மாவாய் நிற்கும் சூரபன்மனை முதலோடே தடிந்த,*

*மறுவில் கொற்றத்து எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்-குற்றமில்லாத வெற்றியினை இளையாத நல்ல கீர்த்தி பொருந்திய சிவந்த வேலையுடைய சுப்பிரமணியனே,*

**4. கவிப்பெருமாள்**

*பூமியைச் சூழ்ந்த குளிர்ந்த கடல் கலங்கும்படி அதன் உள்ளே புகுந்து சூரனை வேரோடே வெட்டின ஒளியினையும் இலைத் தொழிலையும் உடைத்தாகிய மிக்க திருக்கை வேலினாலே:*

*இனித் திருக்கை வேலாலே வெற்றி செய்து கொல்லுகிற போர்க்களத்தைப் பாடிவருகிற பேய்ப் பெண்களைச் சொல்லப்புகுகின்றார்.*

*உலர்ந்த மயிரினையும் பிறழ்ந்த பல்லினையும் பெரிய வாயினையும் வட்ட விழியாலாகிய பச்சைக் கண்ணால் கண்டோர் பயப்படும்படி பார்க்கின்ற பார்வையினையும் கழன்று விழுவது போன்ற கண்களையுடைய கோட்டானுடனே கடுகோபத்தையுடைய பாம்பு தொங்குதலால் பெரிய முலைகளை வருத்துகின்ற காதினையும் சருச்சரை பொருந்திய முதுகினையும் வெப்பங் கெழுமின நடையினையும் உடைய கண்டார் அஞ்சத்தக பேய்ப்பெண் உதிரந் தோய்ந்த கூரிய உகிரினையுடைய வளைந்த விரலாலே கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட ஊன்கழிந்த முடை நாற்றத்தையுடைய பெரிய தலையை அழகிய வளையிட்ட பெரிய கையிலேந்தி அஞ்சகத்தக்க திருக்கை வேலாலே வெற்றி செய்து கொண்டு அருள்கின்ற பிள்ளையாருடைய போர்க்களத்தைப் பாடித் தோளோடு தோளிட்டு நிணந்தின்கின்ற வாயினையுடையவளாய்ப் பேய்க்கூத்தை இடை விடாதே யாடச் சூரனென்றும் பதுமனென்றும் இரண்டு பெயரினையும் பிறர் அஞ்சத் தக்க வடிவினையும் ஒப்பற்ற பெரிய உடம்பினையும் உடைய சூரனானவன் ஆறு வேறுவகைப்பட்ட*

*வடிவினாலும் அஞ்சும்படி அடுக்கச் சென்று அசுரருடைய நல்ல வெற்றி அழியும்படி மாயையினால் கீழ்நோக்கிக் கவிழ்ந்த கொத்தினையுடைய மாவை வேரோடே வெட்டின குற்றமில்லாத வெற்றியினையும் ஒருவராலும் அறியப்படாத நல்ல கீர்த்தியுனையும் சிவந்த வேலையுமுடைய பிள்ளையாரின்.*

**5. பரிதியார்**

*பார்முதிர் பனிக்கடல் - பூமியை ஆதரவாய்க் கொண்டு குளிர்ச்சியான கடல். சூர்முதல் - அவுணர் குலம் உலறிய . . . பிறழ் பல் - சிவந்த தலைமயிரும் உதட்டுக்குளடங்காத நீண்ட பற்களும். கழல்கண் .. . . .காதில் - பிதுங்கிய விழிகளையுடைய கோட்டானையும் பெரும்பாம்பையும் பெரிய முலைகளிலே விழுந்து புரளும்படி யிரண்டு காதிலுந் தரித்து, பிணர்மோடு உரு - மேனியெங்கும் மேடு பள்ளமான உருவம். கழிமுடை - தலை நாற்றம். நிணம் தின்வாயள் துணங்கை தூங்க - நிணங்களைத் தின்று இரண்டு கால்களையு மடித்துக் கைகொட்டிக் கூத்தாடுகின்ற ரணகாளி. இரு பேருருவின் . . . . மண்டி. . . மானிடவுயிரும் விலங்கினுயிரும் ஒன்றான பரத்தினிடத்திலே ஆறுவகைத் தீபமாக எங்கும் பயங்கரம் வரும்படி உற்பவித்து. எய்யா - தேயாத.*

**6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்**

*பார்முதிர் - பாராகிய நிலம் முற்றுப்பெற்ற என உரைகண்டனர் நச்சினார்க்கினியர். கடலின்கண் ஆங்காங்குப் பாறைகள் முதிர்ந்து கிடத்தலின் இவ்வாறு கூறினர். மேலும் இவர் மண்ணிடத்தே முதிர்ந்த கடல் என்றுமாம் எனக் கூறிய திறம் ஆழமுடையதாம். நிலத்தினும் நீர் முன்னே தோன்றியது என்பது இதன் கருத்தாகும். இதனைக்*

*கருவளர் வானத் திசையில் தோன்றி*
*உருவறி வாரா ஒன்றன் ஊழியும்*
*உந்துவளி கிளர்ந்த ஊழுழ் ஊழியும்*
*செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு*
*தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்*
*றுண்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு*
*மீண்டும் பீடுயர் மண்டி அவற்றிற்கும்*
*உள்ளீடாகிய இருநிலத் தூழியும் (பரிபாடல்: ரு - கஉ)*

*எனவரும் பகுதியும், பரம் பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனின்றும் காற்றுத் தோன்றி, அதனினின்றும் தீத்தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி அதனினின்றும் நிலந்தோன்றிற்று என வரும் வேதக்குறிப்பும் அரண் செய்யும்.*

*பிறரெல்லாம் முதிர்தல் என்பதற்குச் சூழ்தல் எனப் பொருள் கொண்டு*

நிலம் சூழ்ந்த கடல் எனப் பொருளுடைத்தனர். இதனினும் நச்சினார்க்கினியர் உரையே சிறப்புடைத்தாம்.

சூர் முதல் - சூரபன்மனாகிய தலைவன் என உரை காண்பர் நச்சினார்க்கினியரும், உரையாசிரியரும், சூரபன்மனை வேரோடு என உரைகாண்பர் பரிமேலழகரும், கவிப்பெருமாளும், அவுணர் குலம் என்பர் பரிதியார். பனிக் கடலுள் சூரபதுமன், மாவாய்க் கிடந்தமையின் வேரோடு தடிந்த என்றவுரை சிறக்கும்.

பேழ்வாய் - பிளந்தவாய்: எஞ்ஞான்றும் திறந்த வாய் என உரைகாண்டல் சிறக்கும். பிணர்மோடு - சருச்சரையை உடைய உடல் அல்லது வயிறு என்றனர் நச்சினார்க்கினியர். சருச்சரை பொருந்திய முதுகு என்பர் கவிப்பெருமாள். மேடு பள்ளம் பொருந்திய உருவம் என்பர் பரிதியார். சருச்சரை-சொரசொரப்பு. வெருவர - அவுணர்க்கு அச்சந் தோன்ற என்பர் நச்சினார்க்கினியர். கண்டவர்கள் அஞ்ச என்பர் பரிமேலழகர். அஞ்சத்தக்க திருக்கைவேலாலே என்பர் கவிப்பெருமாள்.

ஏன்று-எதிர்நின்று என உரைகாண்பர் நச்சினார்க்கினியர். பிற உரையாசிரியர்கள் அனைவரும் வென்று எனப் பாடங்கொண்டு அதற்கேற்ப உரைவகுத்தனர். துணங்கை - சிங்கிக் கூத்து என்பர் பரிமேலழகர். பேய்க்கூத்து என்பர் கவிப்பெருமாள்.

இரு பேர் உரு - மக்கள் வடிவம் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவு என்பர் நச்சினார்க்கினியரும், உரையாசிரியரும், சூரனென்றும் பதுமன் என்றும் இரண்டு பேரையுடைய வடிவம் என்பர் பரிமேலழகரும், கவிப்பெருமாளும், மானிடவுயிரும், விலங்கினுயிரும், ஒன்றான பரத்தினிடத்தே என்பர் பரிதியார்.

ஈண்டுப் பரம் என்பது பரம் பொருளைக் குறிக்கின்றது. இறைவன், உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதங்களைப் படைத்து அவற்றின் உயிர்க் குயிராய் அங்கங்கே நிற்பவன் ஆதலின் மக்கள் விலங்கு ஆகிய இருவகை உயிரினங்களில் ஒன்றான பரமன் என்றல் அத்துணைப் பொருத்தமுடைத்தன்றாம்.

சூரபதுமன் இருபேருருவின் ஒருபேரியாக்கை கொண்டு விளங்குதற்குக் காரணம் அவனது முற்பிறவியேயாம், அவ்வரலாறு.

“சாகத் தீவை யாண்ட பிரபாகர அரசனுடைய மனைவிக்கு ஒரு கருப்பத்தில் இரு பிள்ளைகளும், மற்றிரண்டு கருப்பங்களில் இரு பிள்ளைகளுமாகப் பிறந்தவர்கள் சூரன், பதுமன், சிங்கன், தாரகன் எனும் நால்வருமாவர். இவர்களுள்

சூரனும் பதுமனும் அகத்திய முனிவரின் அருளுரைப்படி முருகவேளின் மயில் ஊர்தியாகவும் கோழிக் கொடியாகவும் விளங்க விரும்பினர். சிங்கன் திரணபிந்து முனிவரின் அருளுரைப்படி காளியின் சிங்கவூர்தியாகவும், தாரகன் விருடப யோகி முனிவரின் அருளுரைப்படி மகாசாத்தாவின் யானை ஊர்தியாகவும் விளங்க விரும்பினர். நாற்பதினாயிரம் ஆண்டுகள் தவங்கிடந்தனர். அவ்வமயம் கருடனும், அன்னமும், மயில், சேவல், சிங்கம், யானை, ஆகியவற்றைப் பார்த்துச் சூரன் முதலிய நால்வரும் தவம் செய்யும் கருத்தைத் தெரிவித்தன. அது கேட்ட அந்நான்கும் அந்நால்வரின் தவத்தைக் கெடுத்து நீவீர் எம்பெரும் பேற்றினை விரும்பியமையால் எங்கள் முகங்கொண்டு பூதங்களாகக் கடவீர் என்று சபித்தன.

அவ்வண்ணமே ஆய அந்நாற் பூதங்களும் கயிலையில் தங்கியிருந்த மயில் முதலிய நான்கையும் கண்டு வழிபட்டு அடியோங்களின் கருத்து முற்றுப் பெற வேண்டும் என வேண்டின. மயில் முதலிய நான்கும் அவ்வேண்டுகோட்கிரங்கி நீவிர் இக்கயிலையில் சின்னாள் இருப்பின் நும் கருத்து நிறைவுறும் என இயம்பின. அவ்வாறிருக்குங்கால் அசுரர்களோடு பகைத்த தேவர்க்குத் துணையாக அந்நால்வரும் நிலவுலகு வந்து அசுரரைப் பொருது அழித்தனர். அசுரேந்திரனால் இச்செய்தி கேட்ட அண்டாபரணன், எம் ஆணையின்றி இதனைச் செய்தமையின் கொடிய வடிவு கொண்ட அசுரர்கள் ஆகுவீர் எனச் சபித்தனன். பின்பு ஒருகால், கயிலையில் இந்நால்வரும் கூடி அங்கிருந்த மயில் கோழி முதலிய நான்கனோடு கருடன் அன்னம் ஆகிய இரண்டற்கும் பகை மூளுமாறு கோள் இழைத்தனர். அதனுடன் அமையாது அவ் ஈரினங்களையும் அழித்தனர். மால், அயன் மூலம் இது கேட்ட முருகவேள், பூதர்களாகிய அந்நால்வரையும் அழைத்து நீவிர் ஆற்றிய குற்றத்திற்காக அசுரர் மரபில் தோன்றி இத்தேவர்களுக்குத் துன்பம் செய்மின்: அதனால் நீவிரும் அழிவீர் என்று அருளினன். அது கேட்ட நால்வரின் சூரனும், பதுமனும் யாங்கள் அவ்வாறழிந்தபின் மயிலும் கோழியுமாகி உமக்கு ஊர்தியும், கொடியுமாக வேண்டும் என வேண்ட முருகனும் அருளினான் "1 இச் சாபத்தால் மாயையினிடத்துச் சூரபதுமன் தோன்றினன், அவன் யாக்கை ஒன்றாயினும் முற்பிறவியில் இருவராயிருந்து வாழ்ந்தமையின் 'இருபேருருவின் ஒருபேரியாக்கை' என்றார். எனினும் ஈருயிர் ஒருடலில் அமைவது என்னுதற்குரியது. ஓர் உடலில் ஈருயிர் என்ற நிலை இதுவரை உலகில் எங்கும் நடந்ததாக வரலாறு இல்லை.

அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி-இத்தொடரை முருகனுக்கு உரியதாக்குவர் நச்சினார்க்கினியர், கவிப்பெருமாள், பரிதியார் ஆகிய மூவரும். இவர்களுள் கவிப்பெருமாள் ஆறுமுகமுடைய முருகன் என்ற வகையில் உரை

---

1. பாம்பன் சுவாமிகள் அருளிய சுப்பிரமணிய விலாசம் - பக். 116-118. சாது அச்சுக்கூடம். 20.7.1925.

*காண்பர். பரிதியார் சிவபெருமானின் நெற்றிக்கண்கள் ஆறினின்றும் தோன்றிய அறுவகைப் பொறி என்றவகையில் உரை காண்பர். நச்சினார்க்கினியர். சரவணப் பொய்கையில் அறுவகை வடிவுடன் தோன்றிய முருகன் என்றாரேனும் அவ்வாறு தோன்றுதற்குரிய கதை ஒன்றையும் கூறியுள்ளார். முருகனின் தோற்றம் பற்றிக் கூறும் நூல்கள் பரிபாடல், வட மொழியிலுள்ள மகாபாரதம், வால்மீகி இராமாயணம், கந்தபுராணம் ஆகிய நான்குமாம். இவற்றுள் பரிபாடல் 5, 19 ஆகிய இரு பாடல்களிலும் முருகனின் தோற்றம் விரித்துரைக்கப் படுகின்றது. சிவபெருமான் உமையம்மையுடன் நீண்ட நாட்கள் புணர்ச்சி செய்து கொண்டிருப்ப அதனைக் கண்ட இந்திரன் அச்சம் உடையனாய் அப்பெருமானின் திருமுன்பு சென்று இப்புணர்ச்சியால் தோன்றிய கருவை அழித்தருள்க என்று வேண்டினன்., அவன் வேண்டு கோட்கிணங்கிய இறைவனும் அக்கருவைச் சிதைக்க முனிவர்கள் எழுவரும் அவற்றை ஏற்றுத் தத்தம் மனைவியர் கையில் கொடுக்க அவர்களுள் அருந்ததி ஒழிய ஏனைய மகளிர் அறுவரும் உண்டு உயிர்க்கத் தோன்றிய ஆறு வடிவே ஆறு முகமுடைய முருகனாயிற்று என்பது பரிபாடல் வழி அறியப் பெறும் கதையாகும்.*

*மகாபாரதத்தில் இதனின் வேறாகக் காணப்படும் கதை வருமாறு: தீக்கடவுள், தெய்வ முனிவர் எழுவர் மனைவிமாரின் அழகைக் கண்டு அவர்மீது காதல் கொண்டனன் என்றும், அவ் அழற்கடவுள் காதல் கொண்டது போல் அவர்கள் அவன் மீது காதல் கொள்ளாராக, அவ்விருப்பத்தை விட்டுக் காட்டுக்குச் சென்றனன் என்றும், அக்காட்டுள் தக்கன் மகளாக இருந்த சுவாகா என்பாள் அத்தீக் கடவுளைக் காதலித்தனள் என்றும், அத்தீக்கடவுள் முனிவர் மனைவியரின் மேல் காதல் கொண்டிருந்தமையின் இவள் மீது காதல் கொள்ளவில்லை என்றும், அது தெரிந்த சுவாகா என்பாள் அருந்ததியின் வடிவொழித்து ஏனை அறுமுனிவரின் மனைவியராக உருவெடுத்து அத்தீக் கடவுளைப் புணர அவ்வாறு வந்த கருவே கந்தன் ஆயிற்று என்னும்.*

*இனி வால்மீகி இராமாயணத்தில் கூறப்பெறும் கதை வருமாறு: சிவபெருமான் உமையொடு பல்லாண்டுகள் புணர்ந்திருந்தும் மகவு பிறவாதாகப் பின்னொரு காலத்தில் அவர்களுக்கு மகவு பிறப்பின் அம்மகவின் பேராற்றல் பேரச்சத்திற்கு உரியதாகும் என அஞ்சிய தேவர்கள் மேலும் புணர்ச்சி செய்யாவாறு அவர்களை வேண்டிக் கொள்ள, அவர்களும் அதற்கிசைந்ததாகவும் ஆயினும் அதற்கு முன்பு போந்த கருவைக் தேவர்களின் கருத்தின்படித் தீக்கடவுளரிடமும், காற்றுக் கடவுளரிடமும் ஏற்குமாறு செய்ததாகவும், அவ்விருவரும் அவ்வாறே செய்ய அருகில் தோன்றிய தொரு வெள்ளை மலையில் கார்த்திகேயன் பிறந்ததாக ஒருகதையும் தேவர்கள் புணர்ச்சி தவிர்க்க என்று வேண்டினமையின் உமையம்மை அவர்கள் மேற் சினந்து நும் மனைவிமார்*

அனைவரும் மலடிகளாகுக எனச் சபித்ததாகவும் அதன்பின் சிவபெருமானும் தவத்தில் அமரத் தேவர்கள் அயனை அணுகி தமக்கொரு படைத்தலைவனைத் தந்தருள்க என வேண்ட, அயனும், தீக்கடவுள் மட்டும் கங்கையினிடமாக ஓர் மகனைப் பிறப்பிக்க வல்லன்: அவனே நும் படைக்குத் தலைவனாவன் என மொழிந்ததாகவும், தேவர்களின் வேண்டுகோட்கிணங்கித் தீக்கடவுளும் கங்கையினிடமாகக் கார்த்திகேயனைத் தந்ததாக ஒரு கதையும் கூறப்படுகிறது.

இப்பகுதிக்குரிய கதையை ஈண்டுக் கூறியதோடமையாது பழமுதிர்சோலைப் பகுதியில் "அங்கை ஏற்ப அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ" என்ற தொடரிலும் நினைவு கூர்ந்து எழுதுவர் நச்சினார்க்கினியர். இவ்வாறு வரும் கதைகள் அனைத்தும் சிறிதும் ஒவ்வாதாம்.

கச்சியப்பர் கந்த புராணத்தில் முருகனின் தோற்றம் பற்றிக்கூறும் வரலாறு இதனின் வேறாகும். இறைவனின் நெற்றிக்கண்ணினின்றும், தோன்றிய ஆறுபொறிகள் எங்கும் பறக்க அவற்றைக் கண்டு இமையோர் அஞ்ச அதனைக் கண்ட பெருமான் அவ்வறுபொறிகளையும் தம் அங்கையால் அடக்கி வளிக்கடவுளிடத்தில் தர அவனும் மெல்ல எடுத்துச் சென்று தொடர்ந்து எடுத்துச் செல்ல முடியாமையால், தீக் கடவுளிடத்துக் கொடுக்க. பெற்ற அவனும் அதற்கு ஆற்றாது கங்கையில் செலுத்த, அக்கங்கையும் சரவணப் பொய்கையிலிட, அப்பொய்கையில் ஆறு திருவுருவங்களாக அப்பொறிகள் எழுந்தருளி நிற்க அத்திருவுருவங்களை இறைவன் உமையம்மைக்குக் காட்டிய அளவில் அப்பெருமாட்டியும் தாயன்பு ததும்ப எடுத்தணைக்கக் கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் ஆங்கு உதித்தனன் என்பது கச்சியப்பர் காட்டும் வரலாறாகும். இதுவே பொருத்தமும், சால்பும் உடைத்தாம். "இருபேர் உருவின் ஒருபேர் ஆக்கை" எனவரும் தொடர் பரிதியார் கூறுமாறு போல முருகனைக் குறித்தல் சிறிதும் பொருந்துவதன்றாம்.

<u>அறுவகைப் படைகளாவன</u>.

<u>மூலப்படை</u> - தொன்று தொட்டு வழிவழியாக நின்று உடற்றும் படை. தொல்படை என்பதும் இதுவேயாம். <u>கூலிப்படை</u> - அவ்வப்பொழுது பொருள் கொடுத்துச் சேர்க்கும்படை <u>நாட்டுப் படை</u> - போரின் பொருட்டு நாட்டிலுள்ள வீரர்களைச் சேர்க்கும் படை. <u>காட்டுப்படை</u> - போர் செய்யும் வலிமை பெற்ற காட்டிலுள்ள வேடர்களைத் தொகுத்த படை. <u>துணைப்படை</u> - நட்புரிமையால் துணையாக அரசர்கள் தந்துதவும் படை. <u>பகைப் படை</u> - பகைவரிடத்துப் போர் செய்து, அவர்களிடமிருந்து கொண்டு வந்த படை.

மா முதல் தடிந்த: இத்தொடருக்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர் அவுணர் அனைவரும் தம்மை எதிர்ந்தார் வலியில் பாதியைப் பெறுமாறு வரம் பெற்ற

*பதுமனாகிய மா எனக் குறித்துள்ளார். சூரபதுமன் அரிய தவம் செய்வுழி சிவபெருமான் தோன்றி அவன் கேட்டவாறெல்லாம் வரமளித்தனன் என்றும், அவ்வாறு வரமளித்தபின் இத்துணை வரங்களும் அருமந்த அரசாட்சியை மேற்கொண்டிருக்கும் கால எல்லை வரையுமே நீடிக்கும் என்றும், ஏவரும் வெல்ல இயலாத நின்னை நம் சக்தி ஒன்றே வெல்லும் என்றும் கந்தபுராணம் கூறும். இதுவன்றி நச்சினார்க்கினியர் குறித்தவாறு கருதுதற் குரிய வரலாறு கந்தபுராணத்தில் இல்லை. உரையாசிரியர் குறித்தவாறு கருதற்கும் கந்தபுராணத்தில் இடம் இல்லை.*

*எய்யா - அளந்தறிய வொண்ணாத என்பர் நச்சினார்க்கினியரும், உரையாசிரியரும், கவிப்பெருமாளும், இளையாத என்பர் பரிமேலழகர். தேயாத என்பர் பரிதியார்.*

*'எய்யாமையே அறியாமையே' என்னும் தொல்காப்பியம். எனவே அளந்தறிய ஒண்ணாத என்றல் தொல்காப்பியத்தின் வழி வந்த உரையாம்.*

**7. கி.வா. ஜகன்னாதன்**

## செவ்வேற் சேய்

*முருகப்பெருமானுடைய சோதிப் பிழம்பைக் காட்டி, பின்பு அவனுடைய திருவடியையும் திருக்கரத்தையும் காட்டி, அப்பால் அவனுடைய திருமார்பிலுள்ள கடம்ப மாலையைக் காட்டி, காந்தளங் கண்ணியையும் நக்கீரர் காட்டினார். காந்தளங்கண்ணியைப் பற்றிச் சொல்லும் போது அழகுப் பிழம்பாகிய தேவலோக மகளிர் முருகனை நினைந்து, அலங்காரங்களைச் செய்து கொண்டு ஆடிப் பாடியதன் சிறப்பைச் சொன்னார். இனி, அடுத்தபடியாக ஒரு வகைக் கூத்தைச் சொல்லப் போகிறார், முருகப்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலின் பெருமையைச் சொல்ல வந்தவர், அந்த வேலோடு சார்த்திப் போர்க்களத்தின் சிறப்பை எடுத்தோதுகின்றார். அப்படிச் சொல்லும் வகையில் அங்கே ஒரு பெண் பேய் ஆடும் கூத்தை வருணிக்கிறார்.*

*முன்பு அழகு மயமாகிய சூழ்நிலையில் அழகே உருவாகிய அரம்பையர்கள் அழகனாகிய ஆண்டவனைப் பாடி ஆடும் ஆட்டத்தை அழகாக வருணித்தார் நக்கீரர். இப்போது அதற்கு நேர்மாறாக வேறு ஓர் காட்சியைக் காட்டுகிறார். அஞ்சுவதற்குரிய காட்சியைப் பெற்ற பேய்மகள் போர்க்களத்தில் தனக்கு வேண்டிய விருந்தை அயர்ந்து மகிழ்ச்சியுடன் ஆடுகிறாளாம். அவளும் தனக்குப் பசி போக்கிய போர்க்களத்தை எண்ணி அங்கே வெற்றியைப் பெற்ற முருகப்பெருமானைப் பாடி ஆடுகிறாளாம்.*

## வேலின் பெருமை

*இப்போது ஆண்டவன் திருக்கரத்திலுள்ள வேலை நினைப்பூட்டுகிறார். அது சுடரோடு கூடிய இலையையுடைய நீண்ட வேல். அது சூரனைக் குலத்தோடு கெடுத்தது. அந்தச் சூரன் கடலுக்குள் புகுந்து ஒளிந்தான். அப்போது முருகன் வேலை ஓச்சி, அந்தக் கடலிலுள்ள நீரையெல்லாம் சுவறச் செய்த சூரனைக் தடிந்தான். அந்த வேலைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லி, பின்பு அது செய்தவீரச் செயலை விரிவாகச் சொல்ல வருகிறார்.*

**பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்**

**சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்**

*(பாறைகள் முதிர்ந்த குளிர்ச்சியையுடைய கடல் கலங்கும்படி உள்ளே புகுந்து அங்கே மறைந்திருந்த சூரனாகிய அசுர குல முதல்வனைப் பிளந்த ஒளியையும் இலையையும் இடைய நீண்ட வேல்)*

*பாறைகள் முதிர்ந்திருக்கின்ற, குளிர்ச்சியையுடைய கடலுக்குள் புகுந்து இருந்தான் சூரன். அவன் மேல் எய்த வேல் அந்தக்கடலைக் கலக்கிவிட்டு உள்ளே புகுந்து மாமரமாக நின்ற சூரனை இரண்டு பிளவாகத் தடிந்தது என்பதனைச் சற்று விரிவாக மறுபடியும் சொல்கிறார்.*

*போர்க்களத்தில் பகைவர்கள் இறந்து விழ, அவர்களுடைய பிணங்கள் எங்கும் பரந்து கிடக்கும். பல காலமாக உணவைப் பெறாமல் பசியினால் வாடிய பேய்கள், எங்கே போர்க்களம் இருக்கிறது என்று நாடி ஓடும். போர் நிகழ்ந்தது என்றால் பேய்களுக்குக் கொண்டாட்டம். போரின் முடிவில் போர்க்களத்தில் விழுந்து கிடக்கும் உடம்புகளையும், அங்கங்களையும் பேய்கள் உண்டு களித்துக் கூத்தாடுவதாகச் சொல்வது கவிமரபு. பைரவர் அவ்வாறு சாபம் கொடுத்திருக்கிறார் என்பது புராண வரலாறு. அவ்வாறு பேய்க்கு உணவூட்டி விருந்துயரச் செய்யும் வேள்வியைக் களவேள்வி என்று சொல்வது வழக்கம். இது புறத்திணையில் ஒரு துறை. இங்கே முருகப்பெருமான் தன்னுடைய வீரச் செயலினால் பேய்களுக்கு உணவளித்து மகிழ்ச்சி உண்டாகும்படியாகச் செய்கிறானாம். அப்படி உள்ள போர்க்களத்தில் ஒரு பேயின் ஆட்டத்தைப் பற்றி நக்கீரர் சொல்ல வருகிறார். நாம் முன்பு பார்த்த அழகிகளாகிய அரமகளிர் நிலைக்கும், இந்தப் பேய்மகள் நிலைக்கும் நேர்மாறுபாடு. அது சுடர் உலகம்: இது இருள் உலகம். அது அழகுப்பிழம்பு: இது அவலட்சணத் திருவுருவம். அந்தப் பேய்களைத் தலையிலிருந்து வருணிக்கிறார்.*

## பேய்மகள் ஆடல்

*அவளுடைய தலை ஈரம் காணாத தலை. உலர்ந்த செடி போலப்*

*பரட்டையாக இருக்கிறது. உலறிய கதுப்பு அது. அவளுடைய பற்கள் எப்படி இருக்கின்றன? ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் முளைத்து எழுத்திருக்கின்றது. அந்தக் கோரப் பல்லைக் கண்டாலே அச்சம் உண்டாகும். அந்தப் பல்லையுடைய வாய் மிக்க ஆழமாக இருக்கிறது. முழு யானையையே உள்ளே விழுங்கிவிடும் அளவுக்குப் பேராழமுடைய வாய். பிறர் பல்லையும், பேழ்வாயையும் உடைய பேய்மகள் அவள். அவளுடைய கண்கள் எப்போதும் சுழன்று கொண்டிருக்கின்றன. அங்கிருந்து வரும் பார்வையோ கண்டவருடைய உள்ளத்தைக் கிடு கிடுக்கச் செய்கிறது. அவளுடைய காதில் அணிந்துள்ள ஆபரணம் எது தெரியுமா? அந்தக் காதில், கழன்றாற் போன்ற கண்ணுடைய கோட்டானும், நஞ்சுடைய பாம்பும் தொங்குகின்றன. சுழல் கண்ணுடைய கூகைதான் அதிலுள்ள குழை. கொடும் பாம்பு தான் அதைக் கட்டியிருக்கிற சரடு. அப்படித் தொங்குகின்ற பாம்பு மார்பு வரைக்கும் தொங்கி அந்தப் பேய் மகளின் தனங்களில் மோதுகின்றன. பேய்மகளுடைய வயிறு ஒரே சுரசுரப்பாக இருக்கின்றது. அவள் நடந்தாலே பூமி அதிர்கிறது. பார்ப்பவர்களுடைய நெஞ்சமும் அதிர்கிறது. அச்சத்தைத் தருகின்ற நடையை உடையவள் அந்தப் பேய்மகள்.*

உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்

*(உலர்ந்த கேசத்தையும், ஒன்றுக்கொன்று மாறாகக் கோணிய பற்களையும், ஆழமான வாயையும், சுழலுகின்ற விழிகளையுடைய பச்சையான கண்களையும், அச்சத்தைத் தரும் பார்வையையும், சுழன்றாற் போன்ற கண்ணையுடைய கோட்டானோடு பாம்பு தொங்கப் பெரிய தனங்களை மோதும் காதுகளையும், சுரசுரப்பான வயிற்றையும், அச்சம் பொருந்திய நடையையும் உடைய பயத்தை உண்டாக்கும் பேய்மகள்.)*

*முன்னாலே அரமகளிர்களின் அங்கங்களையும், ஆடல்களையும் வருணித்த நக்கீரர் இப்போது பேய்மகளையும் அப்படியே வருணிக்கிறார். இரண்டையும் அருகருகே வைத்துப் பார்க்கும் போதுதான் ஒன்றன் பெருமையும், மற்றதன் சிறுமையும் நன்கு விளங்குகின்றன.*

*இனி, பேய்மகள் செய்வதைப் பார்க்கலாம். அவள் போர்க்களத்தில் கிடந்த பிணங்களை எல்லாம் பார்க்கிறாள். ஒரு பிணத்தைப் பார்த்து அதற்கு அருகில் வெட்டுண்டு கிடக்கிற தலையைப் பார்த்து எடுக்கிறாள். அது பனங்காய் போல*

*இருக்கிறது: ஒரே கறுப்பாக இருக்கிறது. அசுரனுடைய தலை அல்லவா? அதனை எடுத்துப் பனங்காயிலிருந்து நுங்கைத் தோண்டி உண்ணுவது போலத் தலையில் கண்ணைத் தோண்டி உண்ணுகிறாள். அப்படி உண்டதனால் கையில் இரத்தம் பூசிக்கிடக்கிறது. அதுதான் அவளுக்கு மருதோன்றி பொலும்! கூர்மையான நகமுடைய வளைந்த விரல்கள் ஒரே இரத்தமயமாக இருக்கின்றன. அந்தத் தலையைத் தன்னுடைய கையில் ஏந்திக் கொண்டிருக்கிறாள். அவள் தன் கையில் வளை அணிந்திருக்கிறாள். ஆம், இரும்பு வளையாக இருக்கக் கூடும். முன்பு நாம் கண்ட அணங்கின் ஆட்டம் பார்க்க பார்க்க அழகு தருவது. இப்போது பேய் மகள் ஆட்டமோ நினைத்தாலும் பகீர் என்ற உணர்ச்சியைத் தருவது. கையில் கண்ணைத் தோண்டி உண்ட கருந்தலையை ஏந்திக் கொண்டு பார்ப்பவர்கள் பயப்படும்படியாகக் கையை அங்கும் இங்கும் ஆட்டிக்கொண்டு ஆடுகிறாள்: பாடுகிறாள். அந்தப் போர்க்களத்தைப் பாடுகிறாள். முருகப்பெருமானுடைய வீரத்தையும் சேர்த்துத்தான் பாடுகிறாள்: பாடியாடும் போதே அவள் வாய் மாமிசத்தை அசைபோட்டுக் கொண்டிக்கிறது. தனியாக ஆடுவது போதாது என்று வேறு பேய் மகளிரோடு கையைக் கோத்துக் கொண்டு துணங்கைக் கூத்தாடுகிறாள். இப்படி ஆடும்படியாகக் சூரபன்மாவைச் சங்காரம் செய்தது அந்தவேல்.*

குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க

*(இரத்தம் தோய்த்த கூரிய நகத்தையும் வளைந்த விரலாலே கண்ணைத் தோண்டி உண்டு எஞ்சிய மிக்க நாற்றத்தையுடைய கரிய தலையை, பளபளக்கும் வளையையணிந்த வளைந்த கையில் ஏந்திக்கொண்டு, கண்டோர் அஞ்சும்படியாக, முருகன் வென்று போர் செய்த வெற்றிக் களத்தைப் பாடித்தோளை அசைத்துக்கொண்டு தசையைத் தின்னும் வாயையுடையவளாய்த் துணங்கைக் கூத்து ஆடும்படி.)*

*போர் நிகழும்போது யார் வெல்கிறார்களோ அவர்களுக்கு அந்தக்களம் உரியதாகும். இங்கே முருகப் பெருமானுக்குரிய போர்க்களம் அது. ஆகையால் அந்தப் போர்க்களத்தைப் பாடுவது என்றால் முருகப்பெருமானைச் சேர்த்துப் பாடுவது என்பதுதான் பொருள்.*

### ***சூர சங்காரம்***

**இவ்வாறு பேய்மகள் ஒருத்தியின் ஆடலைக் காட்டிய முகத்தினால் வேறு**

*பல பேய்மகளிரும் இப்படியே ஆடி ஆனந்தம் அடைந்தனர் என்பதைக் குறிப்பாக உணரச் செய்கிறார். துணங்கைக் கூத்து என்பது கையைக் கோத்துக் கொண்டு பலர் ஆடும் ஆட்டம்.*

*சூரன் குதிரை முகமும், மனித உருவமும் இணைந்த பெரிய உடம்பை உடையவன் என்பது பழைய வரலாறு அந்தப் பெரிய உடம்பு போர்க்களத்தில் வானளாவ நின்று போர் செய்தது, முருகன் ஆறு திருமுகங்களுடன் வெவ்வேறு வகையில் சென்று பெரும் போர் செய்தான். அந்த நேரத்தில் அவுணர்கள் எல்லாம் சேர்ந்து சூரபன்மாவைத் தலைவனாகக் கொண்டு போரிட்டார்கள். பின்பு, சூரன் மாமரமாக மாறிக் கடலுள் புகுந்தான். அப்போது தன்னுடைய வேலை ஏவி முருகன் அந்த மாமரத்தைத் தடிந்தான். அந்த மரம் தலை கீழாக நின்றதாம்: காய், கனி, கொம்பு எல்லாம் கீழாகவும். வேர் மேலாகவும் இருந்தனவாம்: அசுரர்கள் எதிலும் தலைகீழாக நிற்பவர்கள் என்ற கருத்தை இது காட்டுகிறது. அத்தகைய மாமரத்தைத்தடிந்து, அவுணருடைய வெற்றி எல்லாம் அடங்கும்படியாகச் செய்தவன் முருகப்பெருமான். சேய் என்னும் பெயரை உடையவன் அவன்: சிவந்த நிறமுடையவன். அவன் புகழ் இன்னதென்று வரையறுத்துச் சொல்ல ஒண்ணாதது: அவன் கையில் ஏந்திக் கொண்டிருக்கும் வேலின் புகழும் அத்தகையது.*

*இவ்வாறு சூரபன்மனை அழித்த சிவந்த வேல் இறைவன் கையில் உள்ளது.*

இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்

*(குதிரையும் மனிதனும் ஆகிய இரண்டு பெரிய உருவம் இணைந்த ஒரு பெரிய சூரனுடைய உடம்பை, ஆறு வேறு திருவுருவங்களுடன் அவன் அஞ்சும்படி மேற் சென்று, அசுரர்களுடைய மிக்க வலிமையெல்லாம் அடங்கும்படி, கவிழ்ந்திருக்கும் கொத்துக்களையுடைய மாமரத்தின் அடி மரத்தைப் பிளந்த, குற்றமில்லாத வெற்றியையுடைய, அறிய முடியாத நல்ல புகழையுடைய செவ்வேலையுடைய முருகனுடைய திருவடி என்று பின்னாலே இணைக்கிறார்.)*

## ***பழைய வரலாறு***

***முருகப் பெருமானைப் பற்றிய கதைகள் பல பழங்காலம் முதற்கொண்டே வழங்கி வருகின்றன. காலம் மாற மாற வெவ்வேறு கதைகள் பக்தர்களிடத்தில் உலவுகின்றன. பழங்கால நூல்களில் இந்த மாமரத்தைப் பற்றின செய்தி ஒன்று***

*காணப்படுகிறது. அசுரர்கள் எல்லாம் சேர்ந்து தங்களுக்குப் பலமாக ஒருமாமரத்தை வைத்திருந்தார்கள் என்றும், தம்முடைய மந்திர சக்தியால் அதனைக் காப்பாற்றி வந்தார்கள் என்றும், அது சூரனுக்கு உயிர்நிலையாக இருந்தது என்றும், அதனை முருகப்பெருமான் வேலால் பிளந்தான் என்றும் அந்த வரலாறு சொல்கிறது.*

### காவல் மரம்

*பழங்கால மன்னர்கள் தத்தமக்குரிய காவல் மரம் ஒன்றை வளர்த்து வந்தார்கள். அதைக் கண்ணினும் உயிரினும் சிறப்பாகக் கருதிப் பாதுகாத்து வந்தார்கள். பகைவர்கள் போரிடும்போது அந்த மன்னர்களின் காவல் மரத்தை வெட்டித் தங்கள் வெற்றியை நிலை நாட்டுவார்கள். அந்தக் காவல் மரத்தால் முரசு செய்வதும் உண்டு. சங்க காலத்து நூல்களில் காவல் மரங்களைப் பற்றிய செய்திகள் பல உள்ளன. சூரபன்மா என்ற அசுர மன்னனுக்குக் காவல் மரமாக மாமரம் இருந்தது. பகையரசனுடைய காவல் மரத்தைத் தடிவது போல முருகன் தன் பகைவனாகிய சூரனது காவல் மரத்தைத் தடிந்து வெற்றியை நிலை நாட்டினான் என்பது பழைய மரபுக்கு ஒத்த செய்தி.*

*எப்படியிருப்பினும் முருகப் பெருமான் மாமரத்தை வெட்டி, வெற்றி பெற்றது பழமைக்கும் புதுமைக்கும் பொதுவான செய்தி, வேலினுடைய பெருமையைச் சொல்லும் வாயிலாகச் சூரனுடைய சங்காரத்தை இங்கே நக்கீரர் எடுத்தோதினார். ஆக முருகப்பெருமானுடைய அங்கங்களைச் சொல்லி அவனுடைய திருக்கரத்திலுள்ள வேலாயுதத்தைப் பற்றியும் சொல்லிவிட்டார்.*

### செம்மல் உள்ளம்

*இனிமேல் புலவனை ஆற்றுப்படுத்தும் பகுதி வருகிறது. இதுவரைக்கும் முருகனைப் பற்றிய செய்தியைப் பொதுவாகச் சொன்னார். அத்தகைய முருகனிடத்திலே அன்புபூண்டு, அவனுடைய திருவடியை அடைய வேண்டுமென்று விரும்பும் ஒரு புலவனைப் பார்த்து, முருகப் பெருமானுடைய திருவருள் பெற்ற மற்றொரு புலவன் "அவ்வாறு சென்றால் முருகப் பெருமானைக் கண்டு இன்புறலாம்'' என்று சொல்லும் வகையில் அமைந்திருக்கிறது திருமுருகாற்றுப்படை. அதற்கு ஏற்றபடி, இது வரைக்கும் முருகனை வருணித்த புலவர், இனி, எதிர் நின்ற புலவனைப் பார்த்து அவன் புறப்பட்டதைப் பாராட்டி, ஆற்றுப்படுத்த தொடங்குகிறார்.*

### நல்ல பயணம்

*தேசு பொருந்திய திருவுருவம், அடைந்தவரைக் காக்கும் அரணமாகிய திருவடி, தீயவரை அழிக்கும் திருத்தோள், தேவயானையாகிய கற்புடைத்தேவி*

*அமர்ந்த பக்கம், கடம்பாலை அணிந்த திருமார்பு. காந்தளங்கண்ணியை அணிந்த திருமுடி, சூரனை அழித்த சுடர் வேல் - இவற்றோடு விளங்குகிற செவ்வண்ணப் பெருமாகிய முருகனுடைய புகழ் சொல்லில் அடங்குமா? அறிந்துகொள்ளத்தான் முடியுமா? அவன் யாரும் அறிய முடியாத பெரும் புகழை உடையவன்.*

எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்

*(அறிய முடியாத நல்ல புகழையும் சிவந்த வேலையும் உடைய முருகன்)*

*இந்தக் கோலத்தோடு விளங்கும் முருகனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டு நலம் பெற வேண்டும் என்ற ஆர்வத்தோடு ஒரு புலவன் புறப்பட்டிருக்கிறான். ஆசை இருக்கிறதேயன்றி வழி தெரியாது. ஆறு இன்னதென்று தெரியாத அவனுக்கு இதுதான் வழி என்று காட்ட முன்வருகிறார் நக்கீரர்.*

## தட்டிக் கொடுத்தல்

***முருகன் திருவருளைப் பெறவேண்டும் என்று விரும்பிப் புறப்பட்டவனை வழிகாட்டும் புலவர் தட்டிக் கொடுக்கிறார். இது பெருந்தன்மை உள்ளவர்களின் இயல்பு. 'நீயா முருகனைக் காணப்போகிறாய்? உனக்கு என்ன தகுதி இருக்கிறது? தானம் செய்தாயா? தவம் செய்தாயா? பொறி புலன்களை அடக்கினாயா?' என்று கேட்டு அச்சுறுத்தி, கேட்பவனை, 'நமக்கும் முருகன் அருளுக்கும் நெடுந்தூரம்' என்று எண்ணும்படி செய்திருக்கலாம். அப்படிச் செய்கிறவர்கள், இருக்கிறார்கள், கடவுளைத் தொழுவதும், பூசை பண்ணுவதும் பாடுவதும் தங்களுக்கே உரிய தனியுரிமையென்றும் நினைக்கிறவர்கள், சிலர் இருக்கிறார்கள். இறைவனைப் போல யாவருக்கும் இரங்கும் கருணையாளன்யாரும் இல்லை. அவனுக்கு வேண்டாதவர் யாரும் இல்லை. கடவுள் இல்லை என்று சொல்கிறவர்களுக்கும் வேண்டிய வாழ்வை அளிக்கும் பரம தயாளு அவன்.***

***அவனுடைய அருள் பெற்ற பெரியவர்களுக்கு உலகமெல்லாம் நன்றாக வாழவேண்டும் என்ற கருணையே மீதூர்ந்து நிற்கும் "வையகமும் துயர் தீர்கவே ஞாலம் நின்புகழே மிக வேண்டும்" என்று ஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். ஆகவே இறைவனை நாடிச் செல்பவர்களுக்கு ஊக்கம் ஊட்டி நல்வழிப்படுத்துவது அவர்கள் இயல்பு.***

***இங்கே நக்கீரர். முருகனைக் காணச் செல்லும் புலவனுக்கு ஊக்கம் ஊட்டி உண்டாகும் வகையில் பேசுகிறார்.***

***"அப்பா நீ நல்ல காரியம் செய்தாய். நன்மையையே விரும்பி இப்படி ஒரு குறிக்கோளை நீ மேற்கொண்டாயே உன் நலம்புரி கொள்கை பாராட்டுவதற்குரியது" என்று முதலில் சொல்கிறார். அப்பால் அவனுடைய உறுதியைப் பாராட்டுகிறார்.***

## எண்ணமும் செயலும்

*நலத்தைப் பெற வேண்டும் என்னும் ஆசை யாவருக்கும் இருக்கிறது. அதற்குரிய வழி இன்னதென்று பெரியவர்கள் சொல்லக் கேட்கிறோம். அந்த வழியிற் செல்பவர்களைக் கண்டால் பாராட்டத் தயாராக இருக்கிறோம். ஆனால் அந்தக் காரியத்தை நாமே செய்ய முன் வருவதில்லை. இது பெரிய விசித்திரம்.*

*இந்த உடம்பு நிலையாது என்பது யாவருக்கும் தெரியும். இந்த வாழ்க்கையின் இறுதியில் மரணம் சம்பவிக்கும் என்பதும் யாவருக்கும் தெரிந்த செய்திதான், எப்போதும் போல் உண்டும், உடுத்தும் புலன்களுக்குரிய இன்பத்தை நுகர்ந்தும், உறங்கியும் வாழ்ந்து வந்தால் நாம் முன்னேற முடியாது. மரணத் துன்பத்தை நம்மால் மாற்றிக்கொள்ள முடியாது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், இந்த உலகியல் முயற்சிகளை விட்டோ, அல்லது இவற்றிற்கு இடையிலோ இறைவன் அருளைப் பெறத் தீவிரமாக ஏதும் நாம் செய்வதில்லை. நமக்கு எப்போதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றினால் அது புராண வைராக்கியமாகவும் பிரசவ வைராக்கியமாகவும் சிறிது நேரம் இருந்து மறைந்து போகிறது. பழையபடி எப்போதும் உள்ள வாசனைகள் வந்து கப்பிக்கொள்கின்றன. ஆகவே, நலத்தை விரும்பும் எண்ணம் இருந்தால் மட்டும் போதாது, அந்தத் துறையில் செயலாற்ற வேண்டும். எண்ணுகிறவர்களே குறைவுதான். அவர்களிலும் செயலிற் புகுபவர்கள் மிகமிகக் குறைவு.*

*இந்த உண்மையை உணர்ந்து வழிகாட்டப் புகுந்த புலவர் பெருமான், ''அப்பா உன் கொள்கை நல்லது: அதற்குமேல், நீ துணிந்து அந்தக் கொள்கையின்படி நடக்கத் துணிந்தாயே, அது மிக மிக நல்லது" என்கிறார்.*

## பிரபஞ்ச வாசனை

*நம்மிடத்தில் அநாதி காலமாக உள்ள வாசனைகள் எளிதில் நீங்குவதில்லை. பிரபஞ்ச வாசனை சேறாக நம்மிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதை இறைவன் அன்பு நீரில் கழுவிக் கொள்ள வகை உண்டு. அப்படிக் கழுவிக்கொள்ளத் துணையாக இருக்க வேண்டுமேன்றே இறைவன் இந்த உடம்பையும், இதில் பல நுட்பமான கரணங்களையும், பூமியையும், போகத்தையும் தந்திருக்கிறான். நீராடப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாக, இந்த வசதிளை வைத்துக்கொண்டு இறைவனுக்குத் தொண்டு பூண்டு வாழ்வதை விட்டுவிட்டு, மீட்டும் பிரபஞ்ச வாசனையை மிகுதிப்படுத்திக் கொள்கிறாம்.*

*இறைவன் திருவருள் நம்மை இந்தப் பிரபஞ்சச் சேற்றினின்றும் மீட்க வேண்டும். அருணகிரியார் கந்தர் அலங்காரத்தின் முதற்பாட்டில் இறைவன்*

*தமக்குப் பிரபஞ்சச் சேற்றை நீக்குவித்தான் என்று பாடுகிறார்.*

> *"பேற்றைத் தவஞ்சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சமென்னும்*
> *சேற்றைக் கழிய வழிவிட்டவா"*

*என்பது அவர் திருவாக்கு.*

*நம்மைத் தளைக்குள் அகப்படுத்தி வைத்திருக்கும் இந்தப் பிரபஞ்சத்தை விடுவதற்கு நாம் சித்தமாக இல்லை. இந்த உடம்பை நாம் கட்டுப்படுத்தாமல் உடம்புக்கும் இந்திரியங்களுக்கும் மனத்துக்கும் அடிமையாகிவிட்டோம். இந்தத் தொடர்பை விடுவதற்கு நமக்கு மனம் வருவதே இல்லை.*

*சில பேர்களுக்குத் தம் வீட்டில் தூங்கினால்தான் தூக்கம் வரும்: வேறு இடங்களுக்குச் சென்று படுத்தால் நல்ல தூக்கம் வருவதில்லை. நம் உடம்பு, நம் வீடு, நம் ஊர், நம் மனிதர்கள் என்ற சூழ்நிலை நம்மினும் வேறுன்றி இணைந்திருக்கின்றன. அவற்றை உதறித் தள்ளும் எண்ணம் நமக்கு வருவதில்லை. ஒருகால் வந்தாலும் உறுதியாக நிற்பதில்லை. பழகின இடத்தை விட்டுப் பூனை செல்லாது என்பார்கள். நாமும் அப்படித்தான் இருக்கிறாம். நாம் பல பிறவிகளில் பிறந்து பிறந்து பழகிப்போன இடம் பிரபஞ்சம். இதை விட்டுவிட நமக்கு என்றும் மனம் வருவதில்லை.*

## காதலும் பற்றும்

***ஆனால், இதனினும் சிறந்த இடம் ஒன்று கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை ஒருவனுக்கு உண்டானால் எதையும் விட்டுவிடுவான். இந்த நாட்டில் பெண்களின் வாழ்க்கையைப் பார்க்கலாம். தந்தை வீட்டில் எல்லா வகையான வசதிகளுடனும் வாழ்கிறாள் பெண். தாயையும் தந்தையும் விட்டுப் பிரிகிறதே இல்லை. எங்கே போனாலும் தாயோடுதான் செல்லுகிறாள். அவளுக்குத் திருமணம் ஆகின்றது. அப்பால் கணவனோடு வாழப்புறப்பட்டு விடுகிறாள் தாய் தந்தையரிடம் எவ்வளவு பற்றுடையவளாக இருந்தாலும் இப்போது கணவன் வீட்டுக்குப் போய் வாழவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. கணவனிடம் உள்ள காதல் பழைய பற்றையெல்லாம் போக்கி விடுகிறது. இவ்வளவு காலம் பழகிய உறவினர்களையும் தாய் தந்தையாரையும் இடத்தையும் விட்டுவிட்டு, இதுகாறும் பழகியறியாத ஆடவனோடு வாழப் போய்விடுகிறாள்.***

***அவ்வண்ணமே, ஆண்டவனிடம் காதல் மீதூர்ந்தால் எந்தப் பற்றையும் விடும்உறுதி வந்துவிடும். அவை தாமே நழுவிவிடும்.***

## 8. பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

### அஞ்சுவரு பேய்மகளின் இயற்கை

*(45 - 51)* **: பார்முதிர் ................ பேய்மகள்**

***பொருளுரை :*** *பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு - பாறை நிலம் முதிர்வு பெற்ற குளிர்ந்த கடல் தன் நிலை குலையும்படி உள்ளே சென்று, சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல் - சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற ஒளிருகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே, உலறிய கதுப்பின் - காய்ந்த மயிரினையும், பிறழ்பல் - நிரை ஒவ்வாத பல்லினையும், பேழ்வாய் - பெருமையுடைய வாயினையும், சுழல் விழிப் பசுங்கண் - சினத்தாலே சுழலும் விழினையுடைய பசிய கண்ணினையும், சூர்த்த நோக்கின் - கொடிய பார்வையினையும், கழல் கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப் பெருமுலை யலைக்குங் காதின் - பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குவதனாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும் பிணர்மோட்டு உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள் - சருச்சரையையுடைய பெரிய வயிற்றையும் கண்டோர் உட்குதல் பொருந்தும் நடையினையும் உடைய கண்டார்க்கு அச்சந் தோன்றுகின்ற பேயாகிய மகள்:*

***கருத்துரை :*** *பாறை முதிர்ந்த குளிர்ந்த கடல் கலங்கும்படி உள்ளே சென்று சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற சுடர்வேலாலே, நெய்ப்பற்ற மயிரினையும், நிறைஒவ்வாத பல்லினையும், பெரிய வாயினையும் சினத்தாலே சுழல்கின்ற பசிய கண்ணையும், கொடிய பார்வையினையும், பேராந்தையும் கடிய பாம்பும் தூங்குதலாலே பெரிய முலையிடத்தே வீழ்ந்து வருத்துகின்ற காதையும், சருச்சரையுடைய பெரிய வயிற்றையும், கண்டார் உட்கும் நடையினையும் உடைய கண்டார்க்கு அச்சந்தோன்றும் பெண்பேய் என்பதாம்.*

***அகலவுரை :*** *பார் - பாறை: "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு" என்னும் பரிபாடலினும், "பாருடைப் பனிக்கடல்' என்னும் சீவசிந்தாமணியினும், பார் இப்பொருட்டாதலறிக. இனி, பார்முதிர் என்பதற்கு உலகை வளைந்த என்பாருமுளர். மண்ணினும் முதிர்ந்த கடல் எனினுமாம். என்னை? மண்தோன்றாக் காலத்திற்குமுன் தோன்றியது கடல் ஆதலான் என்க.*

*பனிக்கடல்-குளிர்ந்த கடல். சூர்-சூரன், ஈண்டுச் சூரபதுமன் என்க. முருகக்கடவுள் சூரபதுமனைக் கொன்ற வரலாற்றைக் கந்தபுராணம் முதலியவற்றான் அறிக. "வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற பைம்பூட் சேய்" எனப் பெரும்பாணாற்றினும், "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்" என அகத்தினும் பிறாண்டும் பண்டைத் தமிழ்நூல்களினும் இவ் வரலாறு மிக்குக் காணப்படுதலறிக.*

*தடிந்த - கொன்ற. முருகக்கடவுளுக்கு வேல் அறிவுச்சத்தி யாகலின், "சுடரிலை நெடுவேல்" என்றார். நெடுவேலாலே "மாமுதல் தடிந்த சேய்" என்று இயைபு காண்க.*

*இனி, அவுணரை அட்டகளத்துப் பேய்மகள் களித்தாடும் காட்சியைச் சொல்லோவியமாக்குகின்றார் என்க.*

*எண்ணெய் முதலிய வார்த்துப் பேணப்படாத மயிர் என்பார், உலறிய கதுப்பு என்றார். உலறுதல் - நெய்ப்பின்றிக் காய்ந்து கிடத்தல். கதுப்பு - மயிர். "ஐதுவீ ழிகுபெயல் அழகுகொண்டருளி, நெய்கனிந் திருளிய கதுப்பு" (சிறுபாண்.) என்புழியும், அஃதப் பொருட்டாதல் அறிக. பிறழ்பல் - வரிசை ஒவ்வாத பல். பேழ்வாய் - பெரியவாய். சினத்தாலே சுழலும் விழி என்க. சூர்த்த - கொடுமையுடைய, கூகையின் கண் பிதுங்கியிருத்தலால் கழல் கண் என்றார். கொல்லும் நஞ்சுடைமையாலே கடும்பாம்பென்றார். கடும் பாம்பைப் பேய்மகள் காதணிகலனாய் இட்டுள்ளாள் ஆகலின் நெடிய காது முலையின்மேல் வீழ்ந்து வருத்த என்க. பேய்மகளின் செவித்தொளை வங்குபோறலின் கூகைகள் ஆண்டு அடைந்தன, பாம்புகள் புக்குறங்கின எனினுமாம். பிணர் மோட்டுருகெழு எனக் கூட்டிச் சருச்சரையுடைய வயிற்றையும் உருவத்தையும் உடைய எனினுமாம்.*

## பேய்மகளின் செயல்

### *52 - 56 :* குருதி .................... தூங்க

***பொருளுரை :*** ***குருதியாடிய கூருகிர்க் கொடுவிரல் - செந்நீரை அளைந்த கூரிய உகிரினையுடைய கொடிய விரலாலே, கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி - கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடை நாற்றத்தையுடைய கரிய தலையை ஒள்ளிய தொடியினையுடைய பெரிய கையிலே எடுத்து, வெருவர வென்று அடு விறற்களம் பாடி- அவுணர்க்கு அச்சந்தோன்ற வஞ்சியாது எதிர்நின்று கொல்கின்ற வெற்றிக் களத்தைப் பாடி, தோள் பெயரா நிணந்தின் வாயள் -தோளையசைத்து நிணத்தைத் தின்கின்ற வாயை உடையளாய், துணங்கை தூங்க - துணங்கைக் கூத்தாடாநிற்ப:***

***கருத்துரை :*** ***குருதியை அளைந்த கூரிய நகத்தையுடைய கொடிய விரலாலே கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடை நாற்றத்தையுடைய கரிய தலையைத் தொடியணிந்த கையிலேந்தி அவுணர்க்கு அச்சந்தோன்ற எதிர்நின்று கொன்ற வெற்றிக்களத்தைப் பாடித் தோளை அசைத்து நிணத்தைத் தின்கின்ற வாயையுடையளாய்த் துணங்கைக் கூத்தாட என்பதாம்.***

***அகலவுரை :*** *கதுப்பையும், பல்லையும், வாயையும், விழியையும், பார்வையினையும், காதினையும், மோட்டினையும், செலவினையும் உடைய பேய்மகள், விரலாலே கண் தொட்டு உண்ட தலையை ஏந்தி வெருவர அடுகளம் பாடித் தோள் பெயராத் துணங்கை தூங்க என்க. குருதிக்கறை படிந்த விரல்களானும் கண்ணைத் தோண்டுதலானும், கொடுஞ்செயல் செய்யும் விரல் என்பார் கொடுவிரல் என்றார். கூருகிர் - கூரிய நகம். தொட்டு-தோண்டி. கண்ணைத் தோண்டி யுண்டபின் அத்தலையைக் கையிலேந்தி நிணத்தைத் தின்று துணங்கை ஆட என்றபடி.*

*கழி : மிகுதிப் பொருள் குறித்து நின்ற உரிச்சொல். இதனை, "கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்" (தொல், உரி) என்பதனானும் அறிக. தொடி-வளையல். தடக்கை-பெரிய கை: "தடவுங்கயவும் நளியும் பெருமை" (உரி) என்பது தொல்காப்பியம். வெருவர - அச்சந் தோன்றும்படி. ஏன்றடு விறற்கொடி என்புழிப்போல ஈண்டும் ஏன்றடு விறற்களம் என்பதே நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் என்பது ஈரிடத்தும் அவர் உரை கண்டுணர்க. நிணத்தைத் தின்றுகொண்டே அக் களிப்பு மிகுதியால் பேய் துணங்கை யாடிற்று என்பது தோன்ற, 'நிணந்தின் வாயள் துணங்கை தூங்க' என்றார்.*

*"நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்*
*இணையொலியிமிழ் துணங்கைச்சீர்"*

*என்றார் மதுரைக்காஞ்சியினும்.*

*"கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி*
*இரும்பே ருவகையின் எழுந்தோர் பேய்மகள்*
*புயலோ குழலோ கயலோ கண்ணோ*
*குமிழோ மூக்கோ இதழோ கவிரோ*
*பல்லோ முத்தோ என்னா திரங்காது*
*கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்*
*தண்டாக் களிப்பின் ஆடுங் கூத்து"*

*என்றார் மணிமேகலையினும்.*

*துணங்கைக் கூத்தாவது: "பழுப்புடை இருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்" (கூ) என்னுந் திவாகரத்தான் அறிக. இதனைச் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர், "சிங்கிக் கூத்தென்பர்." தூங்க - ஆடாநிற்ப.*

## செவ்வேற் சேய்

*57 - 61 :* **இருபேருருவின் . . . . . . . . சேஎய்**

***பொருளுரை :*** *இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை-மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல், அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி-அற்று வேறாம் வகையாலே அச்சந்தோன்ற மிக்குச் சென்று, அவுணர் நல்வலம் அடங்க - அவனை யொழிந்த அவுணருடைய நல்ல வெற்றி இல்லையாம்படி, கவிழ் இணர் மாமுதல் தடிந்த - கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின, மறுஇல் கொற்றத்து எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்-குற்றமில்லாத வெற்றியினையும் ஒருவரானும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையும் செவ்விய வேலையும் உடைய முருகக்கடவுள்:*

***கருத்துரை :*** *மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவங் கலந்து ஒன்றாகிய உடல் அற்று வேறாம் வகையாலே மிக்குச்சென்று, அவுணர்களின் வெற்றியில்லையாம்படி செய்து கீழ் நோக்கின் பூங்கொத்துக்களை யுடைய மாமரத்தை வெட்டின குற்றமற்ற வெற்றியினையும், அளக்கலாகாத நல்ல புகழினையும், செவ்விய வேலினையும் உடைய முருகக் கடவுளினது, (சேவடி) என்பதாம்.*

***அகலவுரை :*** *அஞ்சி ஓடிக் கடல் கலங்கப்புக்க, சூரபன்மாவைத் தடிந்த காலை அவன் உடல் அற்று வேறாம் வகைசெய்ய மேலும் அவுணர் நல்வலமடங்க மாமரமாயினானையும் தடிந்த கொற்றத்துச் சேய் என்று சொற்கிடந்தவாறே இயைபு காண்க. "மா" என்பதற்கு "அவுணரெல்லாம் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாமரம்" என்பர் நச்சினார்க்கினியர்.*

*அறுவேறு வகையின் என்பதற்கு "ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே" என்றார் நச்சினார்க்கினியர். அறுவேறு வகையின் என்ற தொடரில் அறு என்பது முதனிலைத் தனிவினை யென்றும், அஃது அற்று எனப்பொருள்பட்டு வினையெச்சம் ஆயிற்றென்றும், பிறரும் (நன்-விருத்தி) கூறுதலான் அவரெல்லாம் இதனை ஆறு என்னும் எண்ணுப் பெயராகக் கொள்ளாமல் வினைச் சொல்லாகவே கொண்டமை உணரலாம்.*

*இனி ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே அச்சந்தோன்ற மிக்குச் சென்றெனப் பொருள் கூறி, ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் கதை வருமாறு:*

*"என்றதனான், இறைவன் உமையை வதுவை செய்துகொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிர வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து*

*கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப, அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து, அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப, அருந்ததி யொழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய, அவ்வாறு வடிவும் ஒன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ் வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்றதென்று புராணங்கூறிற்று: இதனைப் 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பரிபாடற் பாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறு வேறு புராணம் கூறுவாருமுளர்," என்பதாம்: அவுணர் - அசுரர். நல்வலம் - நல்ல வெற்றி-அவுணர் அதுகாறும் எய்தியுள்ள சிறந்த வெற்றியெல்லாம் அழிய என்பார், 'அவுணர் நல்வலம் அடங்க' என்றார்.*

*உலகில் அரசர்கள் ஒருவர்பால் ஒருவர் காம முதலியவற்றால் இகல் கொண்டு போர் செய்து வெல்லுதல் போலாது, அவுணர்பாலும் அருள் கூர்ந்து அவ்வருள் காரணமாகப் போர் செய்தடர்த்து வெல்லுதலாலே 'மறுஇல் கொற்றம்' என்றார். மறு - அவா முதலியன உண்மை என்க. போர் செய்து கொல்லற்கு அருள் காரணமாதல் யாண்டையதென்னிற் கூறுதும். இறைப்பொருள் உலகினைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளிச் செய்யும் ஐந்தொழிலும் அருளாலே செய்தலன்றி உயிர்கள் போன்று அவாவாலே செய்தலில்லை. அங்ஙனம் ஐந்தொழில் செய்யுமிடத்தே யாதனுமோர் உயிர் அறியாமையாலே தீநெறிக்கண் மிக்குச் செல்லுங்கால், அதனை அந் நெறிக்கண் போகாமற் றடுத்தற் பொருட்டு அவ் வுடற்பொறையை அகற்றி, அச் செலவினை நீக்கியருளுதலல்லால் அவர்பால் செற்றங் கொள்வதில்லை. அதனை,*

*"நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது*
*அக்கிர மத்தால் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி*
*இக்கிர மத்தி னாலே இண்டறம் இயற்றி டென்பன்*
***எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே என்றும்"***

***(சித்தியார் சுபக்.)***

***எனவும்,***

***"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ லாற்றின்***
***வந்திடா விடின்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய***
***பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்***
***இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும்"***

***(சித்தியார் சுபக்.)***

***எனவும், வரும் மெய்கண்ட மொழிகளானும் உணர்க.***

*இப் பகுதியால் முருகக்கடவுளின் மறத்திருவருளைச் சிறப்பித் தோதியவாறறிக.*

*தலைகீழாய் நின்ற மாமரம் என்றதும் நன்னெறிக்கண் நில்லாது தீநெறிப்படர்ந்த உயிர் என்னும் குறிப்புடைத்தாகும் என்க.*

*எய்யா நல்லிசை என்றது, ஓரளவானே உணர்தலன்றி முற்ற உணரலாகாப் பெருமையன் என்றவாறு, என்னை?*

*“பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்கள் அல்லான்*
*அந்தமும் ஆதி யில்லான் அளப்பில னாத லாலே*
*எந்தைதான் இன்ன னென்றும் இன்னதாம் இன்ன தாகி*

*வந்திடான் என்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே”*

*(சித்தியார் சுபக்.)*

*என்றும், அளவைகளானே அளக்கப் படாதவனென்றும், அறிவுக்கும் அப்பாற்பட்டவனென்றும் சான்றோர் ஓதுதலான், அவன்புகழ் முழுதும் உயிர்களால் அறியப்படா தாயிற்றென்க.*

*செவ்வேல் - செவ்விய வேல். ஞானசத்தியே முருகன் வேலாதலின் செம்மையுடைய வேல் என்றார். செய்ய வேல் என்பர் நச்சினார்க்கினியர்.*

*இனி நானிலத் தெய்வமாகிய முருகன், திருமால், இந்திரன், வருணன் என்னும் நான்கு தெய்வங்களுள்ளும் குறிஞ்சித் தெய்வமாகிய முருகனையே சங்க காலத்து நல்லிசைப்புலவர்கள் யாண்டும் கிளந்தெடுத்துப் போற்றிக் கூறுதலையும் முருகக்கடவுள் கடலினின்ற மாமரத்தை வெட்டின வரலாற்றினை யாண்டும் பயில வழங்குதலையும் காணலாம். அவற்றுட் சில வருமாறு:*

*“மாக்கடல் முன்னி அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும் சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக் கடுஞ்சின விறல்வேள்” (பதிற்றுப்பத்து) என்றும், “கடுஞ்சூர் மாமுதல் தடிந்தறுத்த வேலடு போரான” (பரி.) என்றும், “நீர்நிரந் தேற்ற நிலந்தாங்கழுவத்துச் சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்” (பரி.) என்றும், “உரவு நீர் மாகொன்ற வென்வேலான்” (கலி.) என்றும், “மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காகப் போர் வேல்வல்லான்” (கலி.) என்றும் “உரவுநீர் மாகொன்ற வேல்,” (சிலப்.) என்றும், “பாரிரும் பௌவத்தினுன்புக்குப் பண்டொரு நாள் சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே’, (சிலப்.) “அகறிரைப் பரப்பிற் சடையசைந் தலையாது கீழிணர் நின்ற மேற்பகை மாவின் ஓருடல் இரண்டு கூறுபட விடுத்த அமையா வென்றி யரத்த நெடுவேலோய்,” “கட்டுடைச் சூருடல் காமங்கொண்டு பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு மாவுடல் கொன்ற மணிநெடுந் திருவேல்” “கடன்மாக் கொன்ற தீப்படர் நெடுவேல்” “கருங்கடல்*

*குடித்தலிற் பெருந்தழற் கொழுந்து மாவுயிர் வெளவலிற் றீவழிக் கூற்றும் . . . . . . ஆகிய மணிவேற் சேவலங் கொடியோன்" "மணிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த களவுடல் பிளந்த வொளிகெழு திருவேல்" (கல்) என்றும், "கடலுண் மாத்தடிந்தான்" (பு வெ.) என்றும் வரும்.*

## ஆற்றுப்படுத்தல்

**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்**
**செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப**
**இன்னே பெறுதி நீ முன்னிய வினையே**

### 1. நச்சினார்க்கினியர்

***(சேவடி படரும் செம்மல் உள்ளமொடு, நலம் புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்:)***

***புலம் பிரிந்து உரையும் அடி - மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டுத் தங்குந் திருவடி.***

***திருவடியே வீடாயிருக்குமென்றார்: அது தென்னன் பெருந்துறையான் காட்டா தனவெல்லாங்காட்டிச் சிவங் காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன் காட்டி" (திருவாசகம் - திருவம் மானை - 6) என்பதனானும், பிறருந் திருவடியைக் கூறு மாற்றானு முணர்க.***

***சேவடி படரும் நலம் புரி கொள்கைச் செம்மல் உள்ளமொடு - அத்திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தின் கோட்பாட்டானே தலைமையினை யுடைத்தாகிய உள்ளத்தோடே,***

***செலவு நீ நயந்தனை யாயின் - செல்லுஞ் செலவை நீ விரும்பியே விட்டாயாயின்,***

***(பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப, இன்னே பெறுதி நீ முன்னிய வினையே:) நீ முன்னிய வினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்ன சை வாய்ப்ப இன்னே பெறுதி - நீ முற்பிறப்பிற் கருதிச் செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக் கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை:***

**2. உரையாசிரியர்**

*சேவடி படரும் செம்மல் உள்ளமொடு-அவனது சிவந்த திருவடியிலே செல்லும் தலைமையான உள்ளமொடு.*

*நலம்புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும்-நன்றான அறங்களைச் செய்யாநின்ற கோட்பாட்டினாலே அவன் விரும்பித் தங்குமிடத்துக்கு.*

*செலவு நீ நயந்தனையாயின் - வழியை விரும்பினை யாயில்.*

*பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப-நற்குணங்கள் பலவு முடைய உன் மனத்தில் இனிய ஆசைப்படியே பேறாக.*

*இன்னே பெறுதி நீ முன்னிய வினையே - இப்பொழுதே பெறுவை நீ கருதிய கருமம்:*

**3. பரிமேலழகர்**

*“சேவடி” என்பது முதல் “வினையே” என்பது வரையில் ஒரு தொடர்:*

*சேவடி படரும் செம்ம லுள்ளமொடு-சிவந்த பாதத்தைத் தேடிச் செல்லும் பெருமை பெற்ற உள்ளத்தோடே,*

*நலம்புரி கொள்கை புலம் பிரிந்துறையும் செலவு நீ நயந்தனை ஆயின்- தங்கும் அத்தேசத்தை விட்டு நம்மை மிக்க கோட்பாட்டோடே போக்கைப் புலவனே நீ விரும்பினையாயின்.*

*பலருடன், நன்னர் நெஞ்சத்து இன்னகை வாய்ப்ப, இன்னே பெறுதி நீ முன்னிய வினையே-பரிசிலாளருடனே நல்ல நெஞ்சத்தோடே இனிய ஆசை பாடுபெற இப்படியே பெறுவை நீ நினைந்த கோட்பாடுகள்,*

*இது பரிசில் பெற்று வழியிலே திரிபட்டு, வருகின்ற புலவன் பரிசிலுக்குப் போகின்ற புலவனுக்குச் சொல்லியது.*

*இனிப் பிள்ளையாரைக் காணுமிடம் சொல்லுவர்:*

**4. கவிப்பெருமாள்**

*சிவந்த திருவடிகளைத் தேடிச் செல்லுகிற செம்மாந்த உள்ளத்தோடே நன்மை புரிந்த கோட்பாட்டினையுமுடைய நீ அவன் விரும்பி வாழுகிற நிலத்திலே செல்லுகைக்கு விரும்பினாயானால் நற்குணங்கள் பலவும் வாய்க்கபெற்ற அழகிய நெஞ்சத்து இனிதாக நச்சின பொருள்களெல்லாம் வாய்க்கும்படி இப்பொழுதே பெறுவை நீ நினைத்த காரியங்களே:*

*இனி மதுரை வளப்பஞ் சொல்லுகிறார்:*

### 5. பரிதியார்

சுவாமி யிருக்கிற தலங்களெல்லாம் தேடிக் கண்டு மோட்சம் பெற்றுவருகிற பாணனை இனிமேல் சுவாமியைத் தேடிக் கண்டு மோட்சம் பெற வேண்டுமென்று தேடிக்கொண்டு வருகிற பாணன் கண்டு சந்திக்க மோட்சம் பெற்று வருகிறவன் இவனுடனே சொல்லுகிறது.

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

'சேவடி ........... உறையும்' இப்பகுதிக்கு நச்சினார்க்கினியர் பெரிதும்கொண்டு கூட்டி உரை காண்கின்றார்.

புலம் பிரிந்து - மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டு என உரை காண்கின்றார். **அறிபவனும் அறியப்படும் பொருளும் என்பதின்றி அப்பொருளினிடமாகவே அழுந்தி விடுதல் திருவடி எனக் கூறுவது ஆழமானது.** எனினும் கொண்டு கூட்டிப் பொருள் காண்டல் ஆசிரியர் கருத்தொடுபடுமாறில்லை.

புலம் பிரிந்து - திருவடியைக் காணும் பெருவேட் கையொடு தான் தங்குமிடத்தினின்றும் பிரிந்து என உரைகாண்பர் பரிமேலழகர். புலம் புரிந்து உறையும் எனப் பாடங்கொண்டு அவன் (முருகன்) விரும்பித் தங்குமிடத்தே என உரைகாண்பர் உரையாசிரியரும் கவிப்பெருமாளும். புரிதல் - விரும்புதல். இவர்கள் அனைவரும் புலம் என்பதற்கு இடம் என்றே உரை காண நச்சினார்க்கினியர் மட்டும் மெய்ஞ்ஞானத்தால் அறிந்து நிற்கும் நிலை என உரை காண்கின்றார். இது அத்துணைச் சிறப்பதாயில்லை.

இன் நசை-இனிய வீடுபேறு என்பர் நச்சினார்க்கினியர்.

நசை - விருப்பம். விரும்புதற்கு ஏதுவாகிய பொருள்களுள் தலையாயதும் நிலையாயதும் ஆயது வீடு பேறாதலின் இவ்வாறு உரை கண்டார். 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. இனிதாகவிரும்பும் பொருள்கள் எல்லாம் என உரை கண்டனர் பிற உரையாசிரியர்கள். 'பலவுடன்' என்றே அனைவரும் பாடங் கொள்ள. பரிமேலழகர் மட்டும் 'பலருடன்' எனப் பாடங்கொண்டு பரிசிலாளருடன் என உரை காண்கின்றார்.

### 7. கி.வா. ஜகன்னாதன்

விரதமாக விருப்பம் உறுதி பெற்றால், அந்தக் கொள்கையைச் சாதித்துக்கொள்ளும் முயற்சி உடனே தோன்றுகிறது. ஒரு லட்சியத்தை முன் வைத்து அது தோன்றுகிறது. அதனால் இதுகாறும் இருந்த இடத்தையும் நிலையையும் விட்டுப் புறப்பட்டு விடுகிறான்.

## *பழகிய பகை*

*சேறும் சகதியும் நிறைந்த இடத்தில் ஒருவன் வசிக்கிறான். அதுவே அவனுக்குப் பழக்கப்பட்டுப் போகிறது. அதை விட்டு வா என்றால் அதற்குத் துணிவு உண்டாவதில்லை. இது போனால் இன்னும் மட்டமான இடமாகக் கிடைத்தால் என்ன செய்வது என்ற பயம் வேறு இருக்கிறது.*

*சென்ம வாசனை செருப்பாலடித்தாலும் போகாது என்பார்கள், எத்தனை படித்தாலும் கேட்டாலும் நம்மிடம் ஊறியிருக்கும் பழக்கத்தை விடவும், நாம் பழகிய இடத்தை விடவும் மனம் எளிதில் வராது. நற்றிணை யென்னும் சங்க நூலில் ஓர் அருமையான தொடர் வருகிறது.*

*"பழகிய பகையும் பிரிவு இன்னாதே"*

*என்கின்றார் ஒரு புலவர். பகையாக இருந்தாலும் பல காலம் பழகிவிட்டால் அதைச் சகிப்பதே வழக்கமாகிவிடும். அது இல்லாவிட்டால் நம்வாழ்க்கையில் ஏதோ குறைந்து விட்டது போன்ற உணர்ச்சி உண்டாகும்.*

*நாள்தோறும் எதிர் வீட்டுக்காரன் நம்மை மறைமுகமாகத் திட்டிக்கொண்டே இருக்கிறான். வாசலில் வந்து காறித் துப்புகிறான். காலையில் வேலைக்குப் போகுமுன்பு அரைமணி நேரம் அவனுடைய பகை முழக்கம் கேட்பது வழக்கமாகிவிடுகிறது. திடீரென்று அவன் இறந்து போகிறான். நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் அவனது வசவுகளைக் காதுகேட்டுப் பழக்கமாகி விட்டமையால், இப்போது அந்த நேரத்தில் ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. "தினமும் எழுந்தால் அவன் ஏதாவது குரைத்துக்கொட்டிருப்பான். இப்போது வெறிச் சென்றிருக்கிறது." என்று கூடச் சொல்கிறோம். அப்படி வெறிச் சென்றிருப்பது, எதையோ இழந்த உணர்ச்சி இன்னாமையால் அது ஒருவகை, இந்த உலகியலை நினைந்தே*

*அந்தச் சங்க காலத்துப் புலவர்,*

*"பழகிய பகையும் பிரிவு இன்னாதே"*

*என்றார்*

*இன்னும் ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். நாம் நம் உடம்பைக் கண்டு அருவருப்புக் கொள்கிறதில்லை. ஆனால் கடுமையான நோய்வாய்ப்பட்டு அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழு நோயை உடையவர்களுக்கு இந்த உடம்பு நிச்சயமாக இன்பம் தருவதில்லை: துன்பமே தருகிறது. பிறர் கண்டால் அருவருக்கவும், தமக்குக் கணந்தோறும் துன்பத்தை உண்டாக்கவும் காரணமாக இருக்கும் அதை விடப்பெரிய பகை ஒன்று உண்டா? அதை வைத்துக் கொண்டு*

*துன்புறுகின்றவன் அதை விட்டுவிட மனம்கொள்வதில்லை. தற்கொலை செய்துகொள்ள வழியா இல்லை? நாகரிகம் மலிய மலிய அதற்கு எத்தனையோ வழிகள் உண்டாகியிருக்கின்றன. மலையை நாட வேண்டாம்; கடலைக் காண வேண்டாம். ரெயில் இருக்கிறது; கார்கள் இருக்கின்றன; ஒரு கணத்தில் வேலையை முடித்து விடும். ஆனால் அந்த உடம்பாகிய பகையைப் பெற்றிருப்பவர்களுக்கு அதைப் பிரிவதற்கு மனம் வருவதில்லை. இதைவிட வியப்பு வேறு உண்டா? இதை எண்ணிப் பார்த்தால்,*

*பழகிய பகையும் பிரிவு இன்னாதே*

*என்பது எவ்வளவு சிறந்த உண்மை என்று புலனாகும்.*

*ஆகவே, பழகிய இடத்தை விட்டு நிரந்தரமாக வேறு இடத்துக்குச் சென்று தங்குவது என்பது எளிதில் ஏற்றுக் கொள்ள முடியாத காரியம். அதைச் செய்யத் தொடங்கியிருக்கிறான் புலவன். அழுக்கான இடத்தை விட்டு அழகான இடத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டான். ஆதலால் இந்தப் பயணம்,*

செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவு

*ஆகிவிட்டது. இப்படித் துணிந்து புறப்பட்டவனைப் பாராட்டத்தானே வேண்டும்?*

*"அப்பா, நீ எண்ணிய காரியம் கைகூடும்" என்று வாழ்த்துகிறார் நக்கீரர். உன்னுடைய நெஞ்சம், நல்ல நெஞ்சம் அதில் உண்டாகிய விருப்பம் இனிய விருப்பம். அது நன்கு நிறைவேறும். நீ நினைத்ததற்குப் பன்மடங்கு நன்மைகளுடன் உனக்கு வந்து வாய்க்கும் என்று ஊக்க மூட்டுகிறார்.*

## விரைவில் நிறைவேறும்

***இப்போதுதானே நான் வீட்டை விட்டுப் புறப்பட்டிருக்கிறேன்? இன்னும் எத்தனை காலம் ஆகுமோ, அந்த இடத்தை அடைய? வழியும் தெரியாது: வழக்கும் தெரியாது. அத்தகைய நிலையில் இருக்கும் நான், போய்ச்சேர வேண்டிய இடத்தை அடைய என் வாழ்நாளுக்குள்ளே முடியுமா? என்று ஏங்குகிறான் பிரயாணி.***

***நக்கீரன், "அஞ்சாதே அப்பா, நீ நினைத்த காரியம் விரைவிலே கைகூடும்?" என்று சொல்லப் புகுகிறார். விரைவு என்பதற்கு ஒரு கால எல்லை வேண்டாமா? "நீ எப்படியும் உன் வாழ்நாளுக்குள் முருகன் சேவடியை அடைந்து விடலாம்"***

*என்று சொல்லலாம். எத்தனையோ பிறவிகளை எடுத்துக் காலம் போக்கிய உயிருக்கு இந்தப் பிறவிக்குள்ளே, புண்டரிகத்தினும் செக்கக் சிவந்த கழல் வீடு கிடைக்கும் என்றாலே அதிசயந்தான். இன்னும் பக்குவம் பெற்றுப் பல பிறவிகளில் சாதனை செய்து அவனை அடையலாம், என்று சொன்னால் நிச்சயம் என்றே தோன்றும் அப்படியன்றி, "இந்த உடம்பு இருக்கும்போதே காணலாம்" என்பது மிக மிக விரைவில் கிடைக்கும் வெற்றி என்பதில் ஐயம் இல்லை.*

*"இத் தேகமொடு காண்பனோ?"*

*என்று தாயுமானவர் ஏங்குகிறார்.*

*"இன்னும் இருபதாண்டுக்குள் கிடைக்கும்" என்றால் இன்னும் பெரிய ஆச்சரியம். "இந்த ஆண்டு முடிவுக்குள் கிடைத்துவிடும்" என்பது நம்பவே முடியாத வியப்பு. இந்த மாதம் இந்த வாரம், இன்றைக்கே என்று குறுக்கிக் கொண்டே வந்தால் கால அளவு சுருங்கக் சுருங்க வியப்பின் அளவு பெருகிக்கொண்டே வரும்.*

## இறைவன் அருள்

***இறைவனே திருவருள் செய்தால் இந்த விரைவு உண்டாகும். நம் முயற்சியினால் சாதிப்பதாக எண்ணிக் கொண்டால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். நம்முயற்சியைக் கொண்டு நம் வெற்றியை அளவிட இங்கே வகை இல்லை: நம் முயற்சி மாத்திரம் இருப்பதனால் நாம் என்றைக்கும் இறைவன் சேவடியை அடைய முடியாது, அவனுடைய அருள் வேண்டும். அவன் ஆர்வத்துடன் வந்து அருள் செய்வதனால் தான் நாம் உய்கிறோம். நாம் அவன்பால் வைக்கும் அன்பைவிட அவன் நம்பால் வைக்கும் அருள் கோடி கோடி மடங்கு பெரியது: நம்முடைய அன்பு, குழந்தை பெருஞ் சுமையைத் தூக்க ஆசைப்படுவது போன்றது. அதைத் தூக்க வேண்டுமென்று குழந்தை முயலும்போது, அம்மா ஒருகை கொடுத்துத் தூக்கி வைத்து விடுகிறாள். ஆனால் குழந்தை தூக்கி வைத்ததாகவே சொல்கிறாள். அதுபோல் நாம் அவனை அடைய வேண்டும் என்ற முயற்சியைத் தொடங்கினாலே ஆண்டவன் அருள் கூர்ந்து நமக்கு உதவி செய்ய ஓடி வருகிறான். நாம் அவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவன் நம்மை நோக்கி நூறடி எடுத்து வைத்து வருகிறான். நம் அன்பைவிட அது எத்தனையோ பங்கு பெரிது.***

***"தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு அவரினும் அன்பபோற்றி"***

***என்பது திருவாசகம்,***

***நம் முயற்சியை மட்டும் கணக்குப் பண்ணினால் நாம் அவனை அடைவது இன்ன காலம் என்று சொல்ல இயலாது. அவன் அருள் வந்து***

அணைக்கும் என்றால், அதற்குக் கால தாமதமே வேண்டாம். எந்தக் கணத்திலும் அவனை அடையலாம். ஆதலின் இந்தப் பயணம் நிறைவு பெறுவதென்பது அவன் திருவுள்ளத்தைப் பொறுத்தது. அவன் நினைத்தால் இந்தப் பிறவியிலே, இந்த ஆண்டிலே, இந்த மாதத்திலே, இந்த வாரத்திலே, இன்றாகிய ஒரு நாளிலே நமக்கு நலம் உண்டாகும் என்று சொல்வது கூடப்பிழை : இந்தக் கணத்திலே கிடைக்கும். அதை எண்ணியே பயணம் புறப்பட்ட புலவனைப் பார்த்து,

இன்னே பெறுதி நீ முன்னிய வினையே

என்று கூறுகிறார். இன்னே-இப்பொழுதே. இதைக்காட்டிலும் விரைவான காலம் இல்லை. இது நம்முடைய முயற்சி வேகத்தை எண்ணிச் சொன்னது அன்று.: முருகனுடைய கருணை வேகத்தை நினைந்து சொன்னது.

இவ்வாறு இறைவன் திருவடியை அடைவதை இலட்சியமாகக் கொண்ட உண்மையான அறிவொளியைப் பார்த்து, அவன் முயற்சிக்கு ஊக்கம் ஊட்டுவாராகி, "இப்போதே நீ நினைத்த காரியத்தின் பயனை அடைவாய்" என்று சொல்லி, மேலே வழிகாட்டப் புகுகிறார் நக்கீரர்.

செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப,
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே!

(சிவந்த வேலையுடைய செந்நிறப் பிரானாகிய முருகனுடைய செம்மையான திருவடியைச் சென்று அடையும் பெருமை பெற்ற உள்ளத்தோடு, நன்மையை விரும்புகின்ற கடைப்பிடியோடு, இதுகாறும் பழகிய இடத்தைப் பிரிந்து சென்று வாழ்வதற்குரிய யாத்திரையை நீ விரும்பினாயானால், பலவகையான நன்மைகளுடன் நன்றாக உன்னுடைய நெஞ்சத்திலுள்ள இனிய விருப்பம் நிறைவேறும் வகையில், இப்போதே நீ நினைந்து முற்பட்ட காரியத்தின் பயனை அடைவாய்.

செம்மல் -பெருமை, நிறைவு. உள்ளம்-ஊக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். புரி-விரும்பும் கொள்கை-மேற்கோள்: லட்சியம். புலம் - இடம். செலவு-பயணம். நன்னர்-நன்றாக. நசை-விருப்பம். வாய்ப்ப-எண்ணியபடியே கிடைக்க. இன்னே-இப்போதே. பெறுதி-அடைவாய். முன்னிய-எண்ணி முற்பட்ட வினை-செயலின் பயன்: ஆகுபெயர்.)

முருகன் நிறம் செம்மை: அவன் திருவடி செம்மை: அவன் கைவேல் செம்மை: அவனை அடைய நினைக்கும் உள்ளமும் செம்மையானது. செம்மை

*என்பதற்கு நேர்மை, நிறைவு, தூய்மை சிவப்பு என்று பல பொருள்கள் உண்டு. இங்கே எல்லாம் செம்மையாக இருக்கின்றன.*

*முருகப் பெருமானை அடைய வேண்டுமென்ற ஆசை உள்ள ஒருவனுக்கு, அந்தப் பெருமானது திருவருளை முன்னே பெற்ற புலவன் வழிகாட்டுவது திருமுறுகாற்றுப்படை என்பதைப் பார்த்தோம். "இறைவனைக் காணவேண்டும்" என்ற ஆர்வத்தோடு புறப்பட்ட புலவனுடைய தகுதியை,*

நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை

*என்று காட்டினார். இறைவனுடைய திருவருளைப் பெற விரும்புகிறவர்கள் அங்கு ஒருகாலும், இங்கு ஒரு காலும் வைத்தால் அதனை அடைய முடியாது. ஏதேனும் ஒன்றையே திண்மையாக எண்ணிப் பற்றிக்கொள்ள வேண்டும். உலகத்தில் பற்றும் இறைவனிடத்தில் பற்றும் ஒன்றுக்கொன்று மாறுபாடானாது. உலகத்தில் வாழ்வது வேறு, பற்று வைத்தல் வேறு. இறைவனிடத்தில் பற்று உடையவர்கள் எல்லாப் பொருள்களிடமும் உறவு கொண்டாடலாம். ஆனால் உலகத்தில் பற்றுள்ளோர்கள், இறைவனோடு பற்றுக் கொண்டாடுவது இயலாது எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செய்து ஒரு நெறிப்பட்டு வாழ்பவனுக்கு அந்த உயிர்களுக்கு எல்லாம் தலைவனாகிய ஆண்டவனிடத்தில் சிறந்து பற்று இருக்க வேண்டும். அப்போதுதான் உயிர்களிடத்திலுள்ள அன்பும் நிரந்தரமாக இருக்க முடியும். ஆகையால் "பல காலமாக இருந்த பற்றை விட்டுவிட்டு இறைவனை அடையவேண்டுமென்ற காதலோடு புறப்பட்டாயே! நீ உன் பயணத்தை வெற்றியுடன் முடிப்பாய்" என்று கூறுவது போல ஆசி கூறுகிறார் நக்கீரர்.*

## வலமான பயணம்

***இனி முருகப் பெருமான் இருக்கிற இடங்கள் இன்னவை என்று சுட்டிக்காட்ட வருகிறார். எடுத்தவுடன் திருப்பரங்குன்றத்தைச் சொல்கிறார். மதுரை மாநகரில் வாழ்ந்தவர் நக்கீரர். ஆகையால் அவர் திருமுருகாற்றுப்படைப் பயணத்தை அங்கே இருந்து திருப்பரங்குன்றத்தில் தொடங்குகிறார். அங்கே இருந்து திருச்சீரலைவாய் சென்று, அப்பால் வடக்கே சென்று திருவாவினன் குடியை அடைந்து, அங்கிருந்து கிழக்கே சென்று திருவேரகத்தை வணங்கி, பல மலைகளையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, கடைசியில் மதுரையை அடுத்த பழமுதிர் சோலையில் வந்து முடிக்கிறார். இது வலமாக வரும் பயணமாக இருக்கிறது.***

## 8. பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

சேவடி ............ வினையே *(62 - 66)*

***பொருளுரை :*** *சேவடி படரும் செம்மல் உள்ளமொடு - திரு வடியிற் செல்லுதற்குரிய தலைமை பெற்ற உள்ளத்தோடே, நலம்புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும் செலவு நீ நயந்தனையாயின் - நன்மைகளையே செய்யும் மேற்கோளுடனே மெய்யறிதலையே செய்து எஞ்ஞான்றும் தங்குதற்குரிய நெறியிற் செல்லும் செலவை நீ விரும்பியே விட்டாயாயின், பலவுடல் நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப - கழிந்த பற்பல பிறப்புக்களினும் தொடர்ந்து முதிர்ந்தமையாலே நன்றாகிய நெஞ்சத்திற் கிடந்த இனிதாகிய வீடுபேற்றின்கண் விருப்பம் நிறைவுறும்படி*

*இன்னே பெறுதிநீ முன்னிய வினையே-இப்பொழுதே பெறுவாய் நீ கருதிய வினையின் பயனை:*

***கருத்துரை :*** *திருவடியிற் செல்லுதற்குரிய தலைமை பெற்ற உள்ளத்தோடே நன்மைகளையே செய்யும் மேற்கோளுடனே மெய்யுணர்ந்து எஞ்ஞான்றும் தங்குதற்குரிய நெறியிற் செல்லும் செலவை நீ விரும்பியே விட்டாயாயின், கழிந்த பற்பல உடல்களிலும் தொடர்ந்து முதிர்ந்தமையாலே அவ்வாறு நன்றாகிய நின் நெஞ்சத்திற் கிடந்த இனிதாகிய வீடுபேற்றவா நிறைவுறும்படி இப்பொழுதே பெறுவாய் நீ கருதிய வினையின் பயனை என்பதாம்.*

***அகலவுரை :*** *"திருவடியே வீடாயிருக்கும் என்றார், அது,*

> *'............ தென்னன் பெருந்துறையான்*
> *காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித்*
> *தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி'*
>
> *(திருவா - திருவம்மானை)*

*என்பதனாலும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க" என்று விளக்கங் கூறினர் நச்சினார்க்கினியர்.*

*படர்தல் - செல்லுதல்.*

> *"இறுமாந் திருப்பன்கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்*
> *சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்சென்றங்கு*
> *இறுமாந் திருப்பன் கொலோ"*

*என்றும்,*

> *"புண்ணியனே நின்னடிக்கே போதுகின்றேன்*
> *பூம்புகலூர் மேவிய புண்ணியனே"*

*என்றும் திருநாவுக்கரசரும் திருவடியை ஓதுதல் காண்க.*

இனி,

> "புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
> புகன்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
> அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
> அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
>
> சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
> சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றாற் சைவத்
> திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
> செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

(சித்தியார் சுபக்.)

எனச் சான்றோர் கூறியாங்கு, ஒருவற்கு வீடுபேற்றின்கண் விருப்ப முண்டாதலும் விருப்பமுண்டாயவழி அவ்வழி முயன்று அதனைப் பெறத் தகுதி எய்துதலும் படிமுறையானே பல பிறவிகளினும் ஏற்பட்டு நிகழ்ந்து முற்றுப்பெறுவதன்றி ஒருங்கே ஒரு காலத்து முற்றுப்பெறுதல் இல்லையாகலின் சேவடிபடரும் உள்ளத்தைச் செம்மல் உள்ளம் என்றும், அவ்வழி நல்வினைசெய்தலை நலம்புரி கொள்கை என்றும், ஞானம் எய்துதலைப் புலம்புரிதல் என்றும், இறையடி எய்துதலை உறையும் என்றும், அச்செலவு நயத்தல் அரிதாகலின் நயந்தனையாயின் என்றும், நயந்தனை எனில் அது பலவுடல்களில் தொடர்ந்து முற்றிய நன்னர் நெஞ்சமுடையை ஆதலைக் காட்டும் என்பார், நன்னர் நெஞ்சம் என்றும், உலகப்பொருள்களிற் செலுத்தும் ஆசைபோலாது இது வீட்டிற்கு செலுத்தும் ஆசையாகலான், இன்னசை என்றும், அதனைப் பெறற்கு நீ நயத்தலே காரணமாகலின் நயந்தவுடனே பெறுவாய் என்பார், இன்னே பெறுதி என்றும் இயம்பினார்.

செம்மல் - தலைமை. ஈண்டு வீடுபேற்றினைப் பெறத்தக்க பருவம் உடைமையைத் தலைமை என்றார். நலம் புரிதலாவது, சரியை முதலிய இறைபணியிலே நிற்றல். புலம்புரிதல் - ஞானத்தை மேற்கோடல், சரியை முதலிய மூன்றும் ஞானத்தை நல்க ஞானம் ஒன்றே வீடுபேறு நல்குதலின், புலம்புரிந்து உறையும் செலவு என்றார். ஞானத்தை விரும்புமாற்றானே சென்று உறைதற்குக் காரணமான செலவென்க. ஞானத்தான் மட்டுமே வீடு எய்தற்பாலது என்பதனை,

> "பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
> பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே"

(சித்தியார் சுபக்.)

என்றும்,

"மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்"

*(சித்தியார் சுபக்.)*

என்றும்,

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லஆ கமம்சொல்ல அல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவர் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர்"

*(சித்தியார் சுபக்.)*

என்றும் வரும் சான்றோர் மெய்ம்மொழிகளானும் அறிக.

எனவே, ஈண்டு முருகன் சேவடியின்கண் ஆற்றுப்படுத்தப் படுவோன் பல பிறவிகளினும் இறைபணி நின்று அறம் நிரம்பிய அருளுடை நெஞ்சத்தி யுடையவனாய்த் தக்க பருவம் பெற்றுழி, இறைவனே நல்லாசிரியன் வடிவுகொண்டு அருளாலே அவனை வலிந்து எதிர்ப்பட்டு அவ் வீடுபேற்றிற்குரிய நெறிகூறி ஆற்றுப்படுத்துகின்றான் என்க. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றார் மாணிக்கவாசகப் பெருமானும், மேலும்,

இங்ஙனம் உயிரின் பருவமறிந்து நல்லாசிரியனாய் எதிர்வந்து செவியறிவுறுத்து வீட்டிற் செலுத்துதல் இறைவன் செயல் என்பதனை,

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்" *(சித்தியார் சுபக். உசுஅ)*

என்றும்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே"

*(சிவஞானபோ. சூ. 7)*

என்றும் ஆன்றோர் கூறுமாற்றால் உணர்க.

*புலம்பிரிந்துறையும் என்பதும் பாடம். இதற்கு, சுவை முதலிய ஐம்புலங்களினின்றும் பிரிந்து தங்குகின்ற எனப் பொருள் கொள்க.*

*இனி, வாணுதல் கணவனும், மார்பினனும், சென்னியனும் ஆகிய சேயின் சேவடி படரும் உள்ளமொடு செலவு நீ நயந்தனையாயின் இன்னே பெறுதி நீ முன்னிய வினை என அணுக இணைத்துக் காண்க.*

*இனி, அவ்விறைவனை யாண்டுக் காண்பல் எனக் குறிப்பான் வினாய மாணவனுக்கு நல்லாசிரியன், அவ் விறைவன் உறையும் இடங்களைக் கூறுவான் புகுந்து முன்னர் அம் முருகக்கடவுள் உவந்துறையும் திருப்பரங்குன்றத்தைப் பற்றிக் கூறுகின்றான் என்க.*

## திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருத்தல்

**செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம்மலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன், அதாஅன்று;**

### 1. நச்சினார்க்கினியர்

*செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி - போரை வென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்று உயர்ந்த நெடிய கொடிக்கருகே.*

*வரிப்புனை பந்தொடு பாவை தூங்க - நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின் மையில் தூங்கியேவிடும்படி,*

*என்றது: பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின வென்றவாறு,*

*பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில் - பொருவாரை இல்லை யாக்குகையினாலே எக்காலமும் போர்த்தொழிலரிதாகிய வாயிலினையும்,*

*திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து - திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந்தீர்ந்த அங்காடித் தெரு வினையும்,*

*மாடம் மலி மறுகிற் கூடல் குடவயின் - மாடங்கள் மிக்க ஏனைத் தெருக்களையுமுடைய மதுரையின் மேல்திசையிடத்து,*

*அம் சிறை வண்டின் அரிக் கணம் - அழகினையுடைத் தாகிய சிறகை யுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள்.*

*இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த - கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே முறுக்கு நெகிழ்ந்து பின்பு தாதும் அல்லியுந் தோன்ற மலர்ந்த,*

*முள் தாள் தாமரை துஞ்சி - முள்ளையுடைத் தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது துயில் கொண்டு,*

*வைகறைக் கள்கமழ் நெய்தல் ஊதி - விடியற் காலத்தே தேன் நாறுகின்ற பூவை யூதி,*

*எற்பட - ஞாயிறு தோன்றின காலத்தே,*

*(காண்போல் மலர்ந்த காமர் சுனைமலர் அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்றமர்ந் துறைதலு முரியன்:)*

*அஞ்சிறை வண்டி னரிக்கண் மென்பது முன்னே கூட்டிற்று.*

*கண்போல் மலர்ந்த காமர் சுனை மலர் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - கண்ணை யொக்க விரிந்த விருப்பமருவின் சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்குந் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந் திருத்தலு முரியன்.*

*உம்மை - எதிரதுதழீஇய எச்சவும்மை. கூடற் குடவயிற் குன்று: வண்டி னரிக்கணம் துஞ்சி ஊதி ஒலிக்குங் குன்று.*

*அதாஅன்று - அதுவன்றி,*

*அதாஅன்றென அகரமிட்டெழுதுக. இதனை "அன்று வரு காலை" என்பதனானும் ''இன்றி யென்னும் வினையெஞ்சிறுதி'' என்பதனுள் "தொன்றியன் மருங்கின்" என்பதனானு முடிக்க.*

## 2. உரையாசிரியர்

*செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி - போரைக் கருதி யெடுக்கப்பட்ட தூரத்திலே ஓங்கிய நீண்ட கொடியும்,*

*வரிப் புனை பந்தொடு பாவை தூங்க - வரிந்து ஊசித் தொழிலாற் புனையப்பட்ட பந்தும் பாவையும் தூங்க,*

*பகைவரை மகளிராக்கி அவர்கள் கொண்டு விளையாடுதற்குத் தூங்கியது.*

*பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில் - பொருவாரை யழித்து விடுதலால் போர்த்தொழில் இல்லையான மதில் வாயிலையும்,*

*திரு வீற்றிருந்த தீதுதீர் நியமத்து - திருமகள் மற்றுமுள்ள இடங்களினின்றும் நீங்கிவந்திருந்த குற்றமற்ற அங்காடித் தெருவையும்,*

*மாடம் மலி மறுகிற் கூடற் குடவயின் - மாடங்கள் நெருங்கி மற்றுள்ள தெருக்களையுமுடைய மதுரைக்கு மேற்றிசையிடத்து:*

*இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த - பெருமையையும் சேற்றையும் உடைய அகன்ற வயலிலே இதழ் முறுக்கு நெகிழ்ந்து தாது தோன்ற மலர்ந்த.*

*முள் தாள் தாமரைத் துஞ்சி - முள்ளைத் தண்டிலே யுடைய தாமரைப்பூவிலே துயின்று: வைகறை - இருள் புலருங்காலை,*

*இருள்புலருங்காலை யென்றது நாலாஞ்சாமம்,*

*கள் கமழ் நெய்தல் ஊதி - தேனாறுகின்ற நெய்தலின் பூவின் மதுவுண்டு : எற்பட - ஞாயிறு தோன்றும் பொழுது,*

*கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர் - கண்ணைப் போல் மலர்ந்த அழகிய சுனைப்பூக்களிலே,*

*அம் சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும் - அழகிய சிறகையுடைய வண்டினது அழகிய திரட்சி ஆரவாரிக்கும்.*

*குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - திருப்பரங்குன்றிலே திருவுள்ளம் பொருந்தித் தங்குதலும் உரிய தன்மையன்.*

*அத்தன்மையாகச் சொல்லப்பட்ட ஒளியையும் (3) தாளையும் (4) கையையும் (5) உடையனாகித் தேவயானையார் கணவனாகி (6) மாலையசையும் மார்பனாகி (11) காந்தள் மாலையைச் சூடிய திருமுடியையுடையனாகி (44) நெடிய வேலாலே பெண்பேய் களித்துப் பாடியாடும் வண்ணம் (56) அசுரனைக் கொன்ற வெற்றியினையும் (60) புகழையும் சிவந்த வேலையும் உடைய முதிரா வடிவுடைய பிள்ளையார் (61) திருவடியிலே செல்ல வேணுமென்கிற மனத்தோடு (62) நீ செய்த நல்லறத்தினாலே அவன் விரும்பித் தங்குமிடத்துக்கு (63) நீவழியை விரும்பினையாகில் (64) உன்னுடைய ஆசைப்படியே (65)*

*இப்பொழுதே பெறுவை நீ நினைத்த கருமம் (66) (இதற்கு அவன் உறையுமிடம்) மதுரைக்கு மேற்குத் (71) திருப்பரங்குன்றிலே தங்குதலும் உரிய தன்மையன (77):*

*அதாஅன்று - அதுவன்றி.*

### 3. பரிமேலழகர்

*"செருப்புகன்று " என்பது முதல் "உரியன்" என்பது வரையில் ஒரு தொடர்:*

*செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி வரிப்புனை பந்தொடு பாவை தூங்க - போர் கூறி எடுத்த அதி தூரமாக உயர்ந்த நெடியகொடி வகைந்து செய்யப்பட்ட பந்துடனே செம்மகளான பாவை தூங்க,*

*பொருநர்த் தேய்த்த போரரு வாயில் - சத்துருக்கள் கெடுத்த அவர்களால் பொருந்தற்கு அரிதான வாயினையுடைய,*

*திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து, மாடமலி மறுகின் கூடல் - தேவி வீற்றிருந்த (குற்றந் தீர்ந்த) திருப்பதியான மாடம் நெருங்கிய தெருவையுடைய மதுரைக்கு.*

*குடவயின், இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாய் அவிழ்ந்த முள்தாள் தாமரை துஞ்சி - மேற்கே மிகுந்த சேற்றினையுடைய அகன்ற வயலிடத்தே வாய்மலர்ந்து விரிந்த முள்ளைத் தாளிலேயுடைய தாமரையி னிடத்தே நித்திரை பொருந்தி,*

*வைகறைக் கள்கமழ் நெய்தல் ஊதி - விடியற் காலத்திலே தேன் நாறுகின்ற நெய்தற்பூவை ஊதி,*

*ஏற்படக், கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர் - பகரப்பட்ட கண்ணை யொக்க மலர்ந்த அழகிய சுனையிற் செங்கழு நீர் பூவின்,*

*அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும். குன்றமர்ந்து உறைதலும் உரியன் - அழகிதான சிறகினையுடைய வண்டினங்கள் சத்திக்கும் திருப்பரங்குன்றிடத்துப் பொருந்தி எழுந்தருளியிருத்தலும் உரியன் என்றவாறு,*

*அதாஅன்று - அதுவன்றியும்,*

*சுப்பிரமணியரின் திருவடிமுன் செல்லுவான்;*

*திருப்பரங்குன்றச் சிறப்பு: படைத்தற்கும் காத்தற்கும் அழித்தற்கும் உரிமையுடைய ஒளியினையும், தாளினையும், கையினையும், உடைய தெய்வயானையார் கணவன், குளிர்ந்த கடப்பமாலை அசையா நின்ற மார்பினையுடையவன், செங்காந்தட் கண்ணியைச் சூடிய திருமுடியுடையவன், வெற்றியும் புகழும் உடையவனுமாகிய ஸ்ரீ முருகக் கடவுளைத் தலைமை பெற்ற*

*உள்ளத்தோடு நீ விரும்பினையானால் வீடு பேற்றைத் தவறாமல் இப்பொழுதே பெறுவை: அது பெறுவதற்கு அவன் யாண்டுறையு மென்னின் திருப்பரங் குன்றமர்ந்து உறைதலுமுரியன்.*

**4. கவிப்பெருமாள்**

*பூசலைக் கூறி எடுத்த அதிதூரத்திலே உயர்ந்து தோன்றுகிற மிகுந்த கொடிகளினருகில் அழகிதாகச் செய்த பந்துடனே வீரத்துக்கு அறிகுறியாகப் பன்னிரண்டு பாவைகளும் தூங்கும்படி:*

*பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குப் பந்தும் பாவையும் தொங்கவிடுவர்.*

*பொருவாரை அழித்ததினால் போர் செய்தற்கு அரிதாகிய மதில் வாயிலினையும், திருமகள் சிறப்போடு அமர்ந்திருந்த குற்றந்தீர்ந்த அங்காடி வீதியினையும் மாடங்கள் மிகுந்த மற்றத் தெருக்களையுமுடைய திருவாலவாய்க்கு மேற் பாரிசத்திடத்திலே,*

*இனி, திருப்பரங்குன்றின் வளஞ் சொல்லப் புகுகின்றார்,*

*பெரிய சேற்றிடத்தே அகன்ற வயலின் கண் கிண்கிணி போல வாய்செய்துமலர்ந்த (செய்து - விரிந்த) முள்ளுடைத்தாகிய தாளாற்சிறந்த தாமரைப்பூவிலே உறங்கி விடியாமத்து (நாலாஞ்சாமம்) மதுக்கமழுகின்ற நெய்தற் பூவிலே ஊதி (ஊதி - பூவின் தேனையுண்டு) ஒளியுண்டாகும்படி மகளிர்கண் போல மலர்ந்த அழகிய சுனையிற் குவளைப் பூவிலே (நீலப் பூவிலே) அழகிய சிறகை உடைத்தாகிய வண்டுத் திரள் ஆரவாரிக்கும்: இப்படிக் கொத்த திருப்பரங்குன்றம் என்கிற திருமலையிடத்தே விரும்பி வாழ்தற்குரியன்: அங்கேறிச் செல்க. அதாஅன்று - அங்கன்றாயின்னமும் பிள்ளையாரைக் காணலாமிடம் சொல்லப் புகுகின்றார்;*

**5. பரிதியார்**

*செருப்புகன் றெடுத்த . . . . . . . தூங்க - யுத்தகளத்திலே ராட்சதரை வென்று ஆகாயம் அளாவிய கோழிக் கொடியிலே வெற்றிப் பந்தும் சத்துருக்கள் வந்தார்களென்று சொல்லும்படி பாவையும் கட்டித் தொங்க. இருஞ்சேறு - கரியசேறு. நியமம் - அங்காடி வீதிகள். அதாஅன்று - இனிமேலுஞ் சொல்லுகிறேன் என்றவாறு.*

**6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்**

*தூங்குதல் - தொங்கவிடுதல், பகைவரை - மகளிராய் பாவையாக்கிக்*

*கொடியில் தொங்கவிடுதல் தமது ஆண்மை மீதூர்தலால் ஆம். அவ்வாறாய பாவைகள் பன்னிரண்டென வரையறுப்பர் கவிப்பெருமாள், இவ்வரையறை யாண்டையது எனத் தெரிந்திலது.*

*செருவென்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி எனப் பாடங்கொண்டு யுத்தகளத்திலே இராட்சதரை வென்று ஆகாயம் அளாவிய கோழிக் கொடியில் என உரைகாண்பர் பரிதியார். இப்பாடமும் இவர் கொண்ட உரையும் ஏனைய உரையாசிரியர்கள் உரையினும் வேறுபட்டதாகும். இத்தொடர் பொதுவாய வெற்றிச் சிறப்பையே கூறுவதாகப் பிறர் கொள்ள இவர் மட்டும் முருகப் பெருமானின் போர்ச் செயலோடு இயைபு படுத்திக் கூறுவது எண்ணற்குரியது. இவ்வுரை ஆசிரியர் கருத்தொடு படுதல் அரிதாம்.*

*வீற்றிருந்த - வருத்தமின்றி இருந்த என்பர் நச்சினார்க்கினியர். 'அகனமர்ந்து செய்யாள் உறையும்' என்பது கருத்து, மற்றுமுள்ள இடங்களினின்று நீங்கி வந்திருந்த என்பர் உரையாசிரியர்.*

*நியமம் - அங்காடித் தெரு என்பர் அனைவரும், பரிமேலழகர் மட்டும் திருப்பதி என்பர்.*

*இருஞ்சேறு - கரிய சேறு என்பர் நச்சினார்க்கினியர். உரையாசிரியர் பெருமையையும் சேற்றையும் கொண்ட என்பர். மிகுந்த சேறு என்பர் பிறர், இவ்வாறு உரை காண்டலே அமைவுடைத்தாம்.*

*எற்பட ஞாயிறு தோன்றிய காலத்தே என்பர் அனைவரும், கவிப்பெருமாள் மட்டும் ஒளியுண்டாகும்படி எனப்பொருள் கொண்டு இதனைச் சுனைப்பூவிற்கு ஏற்றி உரைப்பர். ஏற்பட எனப் பாடங்கொண்டு பரிமேலழகர் பகரப்பட்ட என உரை காண்பர், இவ்வுரை அத்துணைச் சிறப்புடைத்தன்று.*

*அதாஅன்று - அங்கன்றாயின்னமும் எனப் பொருள் காண்பர் கவிப்பெருமாள். பரிதியார் அஃதான்று எனப் பாடங்கொள்வர்.*

### 7. கி.வா. ஜகன்னாதன்

## செம்மல் உள்ளம்

***இங்கே, தான் பலகாலும் பயின்று வாழ்ந்த இடத்தை விட்டுப் புறப்பட்டிருக்கிறான் புலவன். அந்தப் புலத்தைப் பிரிந்து எப்போதுமே வேறு இடம் சென்று தங்கிவிடும் துணிவோடு இந்தச் செலவை மேற்கொண்டிருக்கிறான். அப்படிப் பிரிவதற்கு முன்னால் வேறு ஒன்றைப் பற்றிக் கொள்ளும் உறுதி அவனுக்கு உண்டாகியிருக்கிறது. செவ்வேலைத் திருக்கரத்தில் ஏந்திய செம்மேனிப் பெருமானாகிய முருகனுடைய திருவடியைப்***

*புகலிடமாகப் பற்றி வாழ வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் வேரூன்றியிருக்கிறது.* ***வெறும் எண்ணமாக முளைத்தது, வலிபெற்றுக் கொள்கையாக, கடைப்பிடியாக, இலட்சியமாக விளைந்திருக்கிறது. முருகனுடைய சேவடியை விருப்பத்துடன் சென்று சேரவேண்டும் என்ற எண்ணம் ஓர் உள்ளத்தில் எழுமானால் அது பெரிய உள்ளம்.***

*"உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்"*

*என்பது திருக்குறள். உயர்ந்தவற்றையே உள்ளத்தால் நாட வேண்டும். உயர்ந்தவற்றில் எல்லாம் உயர்ந்தது பரம்பொருள். அதனைப் பற்றிக்கொள்ள எண்ணும் உள்ளம் உயர்ந்துகொண்டே இருக்கும். அது பெருமை பெற்ற, நிறைவு பெற்ற உள்ளம்; அதைச் செம்மல் உள்ளம் என்று சொல்கிறார் நக்கீரர். இறைவன் சேவடியாகிய நிரந்தரமான வீட்டை அடைந்து வாழ வேண்டும் என்ற பெருமையையுடைய எண்ணத்தை உடைய உள்ளம் அது.*

**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**

*(செம்மையாகிய திருவடியைச் சென்று அடையும் பெருமையான உள்ளத்தோடு)*

*உள்ளத்தில் இருந்த விருப்பம் கொள்கையாக, இதைச் செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்க வேண்டும் என்ற விரதமாக மாறியது. அந்த விரதம் நன்மையை விரும்பி மேற்கொண்டது.*

**நலம்புரி கொள்கை**

*(நன்மையையே விரும்பி மேற்கொண்ட கடைப்பிடியையுடைய)*

# திருப்பரங்குன்றம்

*முதலில் திருப்பரங்குன்றமாகிய படைவீட்டைப் பற்றிச் சொல்கிறார். முருகப் பெருமான் ஆறு படைவீடுகளில் எழுந்தருளியிருக்கிறான் என்ற வழக்கு பலகாலமாகத் தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்த வழக்குக்கு அடிப்படை திருமுருகாற்றுப்படையே, பிற்காலத்தில் அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்பாடல்களிலும், முருகனைப் பற்றிய துதி நூல்களிலும் ஆறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் நிரம்ப வருகின்றன. நக்கீரர் ஆறு படைவீடுகள் என்று குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் ஆறு இடங்களைத் தனியே வைத்துச் சுட்டிக்காட்டுவதால் ஆறபடை வீடுகள் என்ற அமைப்பு உண்டாயிற்று. வேறு பல இடங்களிலும் முருகன் இருந்தாலும் ஆறு என்ற எண்ணிக்கைக்கும் அவனுக்கும் தொடர்பு மிகுதி. ஆகையால் ஆறு படைவீடு என்ற வழக்கு நிலையாக நின்றுவிட்டது. அந்தப் படைவீடுகளில் முதலாவது திருப்பரக்குன்றம்.*

## பரங்குன்றின் பழம் பெருமை

***திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொல்ல வருகிறார் நக்கீரர். அதைப் பற்றிய செய்தி சுருக்கமாகவே இருக்கிறது. மதுரையைப் பற்றிய வருணனையே முதலில் இருக்கிறது. ஏதேனும் ஓர் ஊரைப் பிறருக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமானால் அது சிற்றூராக இருந்தால், அதன் அருகிலுள்ள பேரூரைச் சொல்லிப் பின்பு அதனைச் சொல்வது ஒரு வழக்கம். அவ்வாறு திருப்பரங்குன்றத்தை நேரே சொல்லாமல் அதன் அருகிலுள்ள மதுரை மாநகரைச் சொல்லி, அப்பால் திருப்பரங்குன்றத்தைச் சொல்கிறார் நக்கீரர்.***

***மதுரை மாநகருக்கு மேற்கே இருப்பது திருப்பரங்குன்றம், அந்தக் காலத்தில் திருப்பரங்குன்றம் தனி ஊராக இல்லை. மதுரை மாநகரிலுள்ள மக்கள் பேரன்போடு திருப்பரங்குன்றத்திற்குச் சென்று வழிபட்டு வந்தார்கள். பரிபாடல் என்ற சங்க நூலில் அதைப்பற்றிய செய்திகள் வருகின்றன. திருப்பரக்குன்றத்தில் அந்தக் காலத்தில் இருந்த இயற்கை எழிலையும், மதுரை மாநகரிலுள்ள மக்கள் திரளாகச் சென்று முருகனை வழிபட்ட செய்தியையும் அதில் காணலாம். குகைகளில் பல வகையான சித்திரங்கள் எழுதி இருந்தார்கள் என்பதை அந்த நூல் சொல்கிறது. அவ்விடத்தை எழுதெழிலம்பலம் என்று சொல்வார்கள். தொன்றுதொட்டே திருப்பரங்குன்றம் புகழுடையதாக நிலவுகிறது. முருகப்பெருமானுக்குரிய முதல் படைவீடு என்பதோடு, அது ஒரு சிவத்தலமுமாகும். பரங்குன்றம் என்ற பெயரே பரனாகிய சிவபெருமான் இருக்கின்ற குன்று என்ற பொருளுடையது: அந்தத் தலத்துக்குத் தேவாரம் உண்டு. ஆகவே சிவத்தலமும், முருகன் திருப்பதியும் ஒன்றாக இணைந்து அமைந்தது***

அவ்விடம். முருகப் பெருமானின் புகழ் அங்கே மிகுதியாக இருப்பதனால் பலருக்கு அது பாடல் பெற்ற சிவத்தலம் என்பது தெரியாது. சிவத்தலம் என்பதை அதன் பெயரே நன்கு காட்டுகிறது.

## மதுரையின் சிறப்பு

இனி நக்கீரர் சொல்கின்றதைப் பார்க்கலாம். அவர் முதலில் நமக்கு மதுரையை அறிமுகப்படுத்துகிறார். அவர் மதுரையில் வாழ்பவரானாலும் நம்மை நோக்கிப் பாடுபவராகையால், புறத்திலிருந்து மதுரைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் மதுரை மாநகர் பாண்டிய அரசர்கள் அரசாண்ட இடம். பல காலமாகப் பரம்பரை பரம்பரையாகப் பாண்டிய மன்னர்கள் இருந்து தம்முடைய வீரத்தையும், கொடையையும் புலப்படுத்திய இடம். அது அன்றியும் தமிழ்ச் சங்கத்தில் பல புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வந்த இடமும் அதுதான். பழங்காலத்தில் மன்னர்கள் இருந்து வாழ்ந்து அரசோச்சிய நகரங்களுள் இன்றும் சிறப்புடன் இருப்பவை காஞ்சிபுரமும் மதுரையுமே ஆகும். ஆனால் இந்த இரண்டிலும் மதுரை பழஞ்சிறப்புக் குன்றாமல் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று வருகிறது. மன்னர் உறைவிடம் ஆதலின் அந்த நகருக்கு மதில்கள் உண்டு: கோட்டைகளும் உண்டு. பழங்காலத்தில் மதிலின் வெளியிலே காவலர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். மதிலின்மேல் கொடிகள் ஆடிக்கொண்டிருக்கும். மதுரையில் அடிக்கடி போர் நிகழ்வது இல்லை, அந்தத் திருமதில்வாயில் போர் இல்லாத வாயில். பாண்டியன் மிக்க வீரத்துடன் பகைவர்களை அழித்து ஒடுக்கி விட்டமையினால் மதுரையை முற்றுகை இடுபவர் யாரும் இல்லை.

மதிலின் வாயிலில் பந்தையும், பாவைகளையும் தொங்க விட்டிருப்பார்கள். அது ஒரு குறிப்பையுடையது. பகைவர்கள் இந்த மதிலினூடே புகுந்து வரமுடியாது. அப்படிப் புகுந்துவர வேண்டுமானால் ஆண்மையை இழந்து, தாங்கள் பெண்களைப் போன்றவர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும். அதற்கு அடையாளமாக மதில்வாயிலிலே கட்டித்தொங்கவிட்டிருக்கும். பந்தையும், பாவையையும் எடுத்து விளையாடிப் பின்பு உள்ளே போக வேண்டும். பெண்கள் பந்தாடுவதும் பாவையை வைத்துக் கொண்டு விளையாடுவதும் இயல்பு. வீரமுடையவர்கள் வெளியில் நின்று கோட்டையை முற்றுகையிடலாம். பெண்களைப் போன்றவர்கள் வீரம் இழந்து உள்ளே போகலாம். இதுதான் குறிப்பு.

மதிலை நெடுந்தூரத்திலிருந்து பார்க்கும்போது 'பகைவர்கள் வேண்டுமானால் முற்றுகையிட்டுப் போர் செய்யலாம்' என்று உணர்த்துகின்ற பாண்டியனது கொடி அதன் மேல் உயர்ந்து விளங்குகிறது.

செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி

*(போரை விரும்பி உயர்த்திக்கட்டிய மிக உயரமாக உள்ள நீண்ட கொடிகளை உடைய)*

*மதிலைப் பார்த்து, அதன்மேல் உயர்ந்து பறந்து கொண்டிருக்கும் கொடியைப் பார்த்து, பின்னர் வாயிலை அணுகுகிறோம். அங்கேதான் பந்தும் பாவையும் தொங்குகின்றன. அந்த வாயில் இப்போது மங்கல வாயிலாக இருக்கிறது. திறந்து இருக்கின்ற வாயில் அது. பகைவர்களாகிய வீரர்களை அடியோடு அழித்துவிட்ட சிறப்பை உடையவன் பாண்டியன், ஆதலின் அந்த வாயிலில் இப்போது போருக்குரிய அறிகுறிகள் இல்லை.*

வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்

*(வரிந்து புனையப்பட்ட பந்தோடு பொம்மைகள் தொங்க, பகை வீரர்களை அழித்துப் போர் அருமையாகப் போன வாயிலையும்-உடைய மதுரை என்று சொல்ல வருகிறார்.)*

## கடைவீதி

***அந்த வாசலின் வழியே மதுரைக்குள்ளே புகுகிறோம். எங்கே பார்த்தாலும் விசாலமான தெருக்கள்: அழகான அங்காடிகள் இருக்கின்றன. பழங்காலத்தில் மதுரையிலும் காவிரிப்பூம் பட்டினத்திலும் இருந்த அங்காடிகள் மிக்க சிறப்பைப் பெற்றவை: பிற நாட்டிலிருந்து வந்தவர்களும் பண்டங்களைப் பெற்றுத் தம் ஊருக்குச் செல்லும் பெருமையை உடையவை. மதுரையில் அந்தக் காலத்தில் பகல் நேரத்தில் வியாபாரத்தைச் செய்யும் இடத்தை நாள் அங்காடி என்றும், மாலையில் வியாபாரிகள் வாணிகம் செய்யும் இடத்தை அல்லங்காடி என்றும் கூறுவார்கள். அந்த இரண்டு கடைத்தெருவுகளும் மிக விரிவாக அமைந்திருந்தன என்று பழைய நூல்கள் கூறுகின்றன. அந்த அங்காடிகளில் வஞ்சகம் என்பதே கிடையாது. உள்ளதை உள்ளபடியே சொல்லி வியாபாரிகள் வியாபாரத்தை நடத்துவார்கள்: கொள்முதல் இது, லாபம் இது என்று வெளிப்படையாகச் சொல்லிவிற்பனை செய்வார்கள்: போலிச்சரக்கு வியாபாரமோ, அநியாய விலையைச் சொல்கின்ற முறையோ, ஏமாற்றோ, திருட்டோ அங்கே இருப்பது இல்லை. அது எந்த வகையான தீமையும் இல்லாத அங்காடி அதனை நக்கீரர்,***

**தீது தீர் நியமம்**

***என்று சொல்கிறார்,***

***அந்தத் தெருக்களில் எப்போதும் திருமகள் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறாள்: உலகத்திலேயுள்ள பல நாட்டு மக்களும் வந்து சேர்ந்த***

*பண்டங்களைக் கொடுத்தும் கொண்டும் வாணிகம் செய்யும் இடம் அது: மக்கள் கூட்டமும் பொருளின் சிறப்பும் சிறிதும் குறையாமல் நிற்கின்ற இடம்: அங்கே திருமகள் கொலு வீற்றிருக்கிறாள் என்றே சொல்ல வேண்டும். ஆகவே,*

திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

*(திருமகள் சிறப்புடன் எழுந்தருளியிருக்கும், தீமை தீர்ந்த கடைகளையும்.)*

*என்று சொல்கிறார். தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் மற்ற நகரங்களைவிடச் சிறந்த மாட மாளிகைகள் மதுரையில் அதிகமாக இருந்தன. அதனால் அதை "மாடக் கூடல்" என்று சொல்வார்கள். "நான்மாடக் கூடல்" என்பது மதுரைக்குரிய ஒரு பெயர். ஒரு காலத்தில் இறைவன் தன்னுடைய தலையில் இருந்த நான்கு மேகங்களையே மாடமாக நிறுத்தி, வருணன் இடையறாது பெய்த மழையிலிருந்து அவ்வூரைக் காப்பாற்றினான் என்பது புராண வரலாறு. பொதுவாகவே செல்வம் நிரம்பிய நகரமாதலின் செல்வர்கள் பெரிய மாடங்களை எழுப்பியிருந்தார்கள். அதனால் மாக்கூடல் என்ற பெயர் வந்தது. ஒவ்வொரு வீதியிலும் பல பல மாடங்கள் இருந்தன.*

மாடம்மலி மறுகின் கூடல்

*(மாடங்கள் மலிந்த தெருக்களையும் உடைய மதுரை)*

*வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கோட்டையும், கொடிகளும், சமாதானத்தை வெளிப்படுத்தும் மதில் வாயிலும், செல்வச் சிறப்பையும் நியாயமான வாணிகச் சிறப்பையும் புலப்படுத்தும் அங்காடிகளும், வளத்தைக் காட்டும் மாடங்களும் உடைய மதுரைமா நகருக்கு மேற்கே திருப்பரக்குன்றம் இருக்கிறது என்று சொல்ல வருகிறார்.*

மாடம்மலி மறுகின் கூடல் குடவயின்

*(மாடங்கள் மலிந்த தெருக்களையும் உடைய மதுரைக்கு மேற்கே.)*

## வண்டுகளின் மகிழ்ச்சி

***இனி, திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொல்கிறார். திருப்பரங்குன்றத்தின் அடிவாரத்தில் வயல்கள் இருக்கின்றன. மலையின் மேலே சுனைகள் இருக்கின்றன. வளப்பமுடைய நிலமாதலின் அங்கங்கே உழுது பயிரிட்டிருக்கிறார்கள். வளம் நிரம்பிய வயல்கள் அங்கே உண்டு. வயல் வளம் சேற்றினால் அமைவது. நல்ல பூமி ஆதலால் அந்தச் சேறு கறுப்பாக இருக்கிறது. துண்டு துண்டாக அங்கங்கே சிதறுண்டு கிடக்கும் வயலாக இல்லை. எங்கே பார்த்தாலும் அகன்ற நிலப் பரப்புகள் எல்லாம் கரிய சேற்றையுடைய வயலாகக் காட்சி தருகின்றன.***

இருஞ்சேற்று அகல் வயல்

என்று நக்கீரர் பாடுகிறார். வயலின் ஓரங்களில் தண்ணீர் தேங்கும் இடங்களில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. முள்ளைத் தண்டிலேயுடைய தாமரை வாய் அவிழ்ந்து விரிந்திருக்கிறது.

மலர் இருக்கும் இடத்தில் வண்டு வரவேற்பு இல்லாமல் போய்ச் சேரும். முதல் நாள் இரவிலே வண்டுகள் வந்து ஒரு தாமரை மலரில் புகுந்தன. அது மூடிக்கொண்டது. இரவு முழுவதும் அந்தத் தாமரை மலரையே படுக்கையாகக் கொண்டு அந்த வண்டுகள் அங்கே தூங்கின. ஆண் வண்டும் பெண் வண்டுமாகத்தான் இருக்க வேண்டும். காலையில் வாயில் கதவைத் திறப்பதுபோல அந்தத் தாமரை இதழ்கள் விரிந்தன. அப்போது அங்கு இருந்த வண்டுகள் புறப்பட்டன. முதல் நாள் மாலையில் தாமரைத் தேனை உண்ட வண்டுகள் இன்று காலையில் நெய்தல் மலரை ஊதுகின்றன. வைகறை நேரமாகையால் அது இன்னும் மூடிக்கொள்ளவில்லை. அந்த நெய்தலில் உள்ள கள்ளையும் குடித்து மறுபடியும் பூரிக்கின்றன. காலையில் சுறுசுறுப்பை ஊட்டும் வகையில் இருக்கிறது, நெய்தல் தேன்: அதனால் அதைக் கள் என்றே சொல்கிறார்.

இப்போது சூரியன் நன்றாகத் தன்னுடைய கிரணங்களைப் பரப்பிவிட்டான். களிப்பில் மிதந்த அந்த வண்டுகள் மெல்ல மெல்லப் பறந்து மேலே செல்கின்றன. மலையில் மலர்ந்திருக்கின்றன. கண்களைப் போன்ற சின்னஞ்சிறிய பூக்கள் அங்கே உள்ளன. அவற்றிலும் தேன் இருக்கின்றது. முதல் நாள் தாமரைத் தேனை நுகர்ந்து விட்டு, விடியற்காலையில் நெய்தல் கள்ளை உண்டு புறப்பட்ட வண்டுகள், நல்ல சிறிய பூக்கள் மலர்கின்ற மலையின் மேலுள்ள சுனைக்கு வந்து விட்டன. அங்குள்ள மலர்களில் புகுந்து அங்கேயுள்ள தேனையும் உண்டு ரீங்காரம் செய்கின்றன. இப்படி வேறு வேறு வண்டுகள் ஒலிக்கின்றன. அழகிய சிறகுகளை உடைய வண்டுக் கூட்டங்கள் சேர்ந்தால் போல் முரலும்போது ஒருவகை இனிமையான ஒலி எழும்புகிறது. வயிறு நிரம்பத் தேனை உண்ட சிறப்பினாலே அந்த வண்டுகள் இடைவிடாமல் மலையின் மேலேயுள்ள சுனைகளில் ரீங்காரம் செய்கின்றன. அத்தகையது பரங்குன்றம்.

இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி ஏற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைதலும் உரியன்.

*(கரிய சேற்றையுடைய அகன்ற வயலில் விரிந்து மலர்ந்த முள்ளைத் தண்டிலே உடைய தாமரையில் உறங்கி, விடியற்காலையில் கள் மணம் வீசுகின்ற நெய்தல் மலரை ஊதி, பகல் நேரம் வந்தவுடன், கண்ணைப் போல மலர்ந்த அழகிய சுனைகளிலுள்ள மலர்களில், உள்ளே சிறகுகளையுடைய வண்டுகளின் கூட்டம் ரீங்காரம் செய்யும் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பதற்கும் உரியவன்.)*

*இரவிலே தங்கிய வண்டுகள் தாமரையில் தூங்குகின்றன என்று சொல்ல வந்தவர்,*

முள்தாள் தாமரைத் துஞ்சி

*என்றார், இங்கே முள்ளையுடைய தாமரை என்று சொல்வதற்கு ஏதேனும் சிறப்பு உண்டா என்று பார்க்க வேண்டும். இரவில் தூங்குபவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் அல்லவா? ஆகையால் இயற்கையிலேயே வண்டுகள் துஞ்சுகிற படுக்கையாகிய மலருக்கு முள் பாதுகாப்பாக இருக்கிறது. வேறு எந்தப் பிராணியும் அந்தத் தண்டின் மேல் ஏறித் தாமரையில் புக முடியாது. தாமரையின் இதழாகிய கதவு தானே காலையில் திறந்து கொள்ளுமேயன்றி வேறு ஒருவராலும் திறக்க முடியாது.*

*வண்டுகளுக்கே இத்தனை இன்பமாக வாழ்வு அமையும் போது மற்றவர்களுக்கு எவ்வளவு இன்பம் உண்டாகும் என்று நாம் வியக்கிறோம்.*

*வீரமும், செல்வமும், சமாதானமும் ஒருங்கேயுடைய மதுரை மாநகருக்கு அருகில் இயற்கையான எழில் நிலங்கள் நிறைந்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கிறான். அடியார்களுக்கு அருள் செய்வதற்காக வந்து அமர்ந்த இடம் ஆகையால் மிக்க விருப்போடு அங்கே தங்கியிருக்கிறான்.*

**குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன்.**

*அங்கே உறைதலும் உரியன் என்று நக்கீரர் சொன்னார். அந்த ஓர் இடம் மாத்திரம் ஆண்டவனுக்கு உரியது அன்று: இன்னும் பல இடங்கள் உண்டு என்பதை அந்தக் குறிப்புக் காட்டுகிறது. அதுமட்டுமன்று என்று சொல்லி மேலே தொடர்ந்து சொல்கிறார்.*

**குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன், அதாஅன்று.**

*(அதோ அன்று - அதுவல்லாமல்.)*

*திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பற்றிச் சொன்ன பிறகு. "அதோடு மட்டுமன்று, இன்னும் சொல்கிறேன்" என்ற குறிப்பை வைத்துப் பேசினார் நக்கீரர். மேலே*

*திருச்சீரலைவாயின் பெருமையைச் சொல்ல வருகிறார், முருகப் பெருமான். ஆறு முகங்களோடும், பன்னிரண்டு திருக்கரங்களோடும் எழுந்தருளும் கோலத்தை அந்தப் பகுதியில் விரிவாக எடுத்துக் காட்டுகிறார்.*

**பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார்**

## *திருப்பரங்குன்றம்*

**செருப்புகன்று ............ உரியன்** *(67-77)*

***பொருளுரை :*** *செரு புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி - போரை விரும்பிக்கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக்கு அருகே, வரிப்புனை பந்தொடு பாவை தூங்க - நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியே கிடப்ப, பொருநர்த் தேய்த்த போர் அருவாயில் - பொருவாரை இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த்தொழில் அரிதாகிய வாயிலினையும், திருவீற்றிருந்த தீதுதீர் நியமத்து - திருமகள் வருத்தமின்றி இருந்த குற்றந்தீர்ந்த அங்காடித் தெருவினையும், மாடம் மலிமறுகிற் கூடற் குடவயின் மாடங்கள் மிக்க ஏனைத் தெருக்களையும் உடைய மதுரையின் மேற்றிசையிடத்து, இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாய் அவிழ்ந்த - கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே முறுக்கவிழ்ந்து மலர்ந்த, முள் தாள் தாமரை துஞ்சி - முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப் பூவிலே இராப்பொழுது துயில் கொண்டு, வைகறை கள் கமழ் நெய்தல் ஊதி - விடியற்காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற்பூவை ஊதி, எல் பட - ஞாயிறு தோன்றிய காலத்தே, கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர் அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் - கண்ணைப்போன்று விரிந்த விருப்பம் மருவின சுனைப்பூக்களிலே அழகிய சிறகையுடைய வண்டினுடைய அழகிய திரள் சென்று ஆரவாரிக்கும், குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்து இருத்தலும் உரியன்.*

***கருத்துரை :*** *போரை விரும்பிக் கட்டின நெடிய கொடியின் அருகே தொங்கவிட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையாலே தூங்கியே கிடக்கும்படி போர்செய்வோர் இல்லையாம்படி செய்ததனாலே எக்காலமும் போர்த்தொழில் அரிதாகிய வாயிலையும், திருமகள் வீற்றிருந்த குற்றமற்ற அங்காடித் தெருவினையும், மாடங்கள் மிக்க ஏனைத் தெருக்களையும் உடைய மதுரையின் மேற்றிசைக் கண்ணே, கரிய சேற்றையுடைய அகன்ற வயலிலே மலர்ந்த தாமரைப் பூவிலே இரவில் துயில் கொண்டு, வைகறைப்போதிலே தேன்மணக்கும் நெய்தற் பூவை ஊதி, ஞாயிறு தோன்றின பின்னர்க் கண்போன்று மலர்ந்த சுனை மலரின்கண் சென்று, அழகிய சிறையுடைய வண்டுக்கூட்டம் ஆரவாரியாநின்ற திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்து தங்குதலும் உரியன் என்பதாம்.*

***அகலவுரை :*** *செரு - போர். புகன்று - விரும்பி; கூறி எனினுமாம். சேண் - சேய்நிலம். கொடியின் அருகே தூங்கவிட்ட பந்தும், பாவையும் அறுப்பார் இன்மையின் எப்பொழுதும் தூங்கியே கிடக்க என்க. எனவே, பண்டைக்காலத்தே மன்னர்கள் பகைவரைப் பெறுதற்பொருட்டுத் தம்மரண்மனை முற்றத்தே கொடியுயர்த்து அதன் அருகே பந்தையும் பாவையையும் தொங்கவிட்டிருப்பர் என்றும், அப்பந்தும் பாவையும் தொங்கவிடுதலின் கருத்து, எம்மை வெல்லும் ஆண்மையாளர் யாருமிலர்; எம் பகைவரை யாம் பெண்டிர்போலக் கருதுகின்றோம்; ஆண்மையாளர் உளீரேல் இவற்றை அறுமின் என்னும் குறிப்பே என்றும் அறியலாம். ஆசிரியர் நச்சினார்க்கினியர் "பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின என்றவாறு" என்பர். இங்ஙனம் தூக்கும் வழக்கத்தை,*

*"பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்*
*என்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியும்*
*முந்தை மகளிரை இயற்றி"* *(தொல். புற.)*

*என்றும்,*

*"பகைவரைப் பாவை மாரெனத் தெரிப்பப் பந்தொடு பாவைக டூங்கித்*
*தகைசிறி தறியா வாயில்சா னாஞ்சிற் றடப்பெரு நொச்சியும்"*

*(திருநாகை - திருநகர.)*

*என்றும்,*

*"பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும் பலவுஞ்சென் றெறிகிற்கும்*
*முந்தை மாதரை யியற்றுபு பின்றைமொய்ப் பகழி வாயிலிற் றூக்கி"*

*(தணிகை. சீபரி-58)*

*என்றும், பிறசான்றோர் கூறுமாற்றானும் உணர்க.*

*வரி என்னும் முதனிலைத் தனிவினை வரிந்து எனப் பொருள் பட்டு வினையெச்சமாய் நின்றது.*

*பாவையும் பந்தும் அறுப்போரிலராம்படி தம்மோடு போர் செய்வாரை இல்லையாக்கின என்க. இங்ஙனம் இல்லையாக்குதல் போர் எக்காலமும் அரிதாதற்கு ஏது வென்க.*

*தீரு - திருமகள். திருமகள் வீற்றிருத்தலாவது - எல்லாப் பொருளும் மிக்குக் கிடத்தல்.*

*நியமம் - அங்காடித் தெரு.*

*''தமவும் பிறவும் ஒப்பநாடிக், கொள்வதூஉம் மிகைகொளாது*

*கொடுப்பதூஉம் குறைகொடாது, பல்பண்டம் பகர்ந்துவீசும்" அங்காடித் தெரு வென்பார் தீதுதீர் நியமம் என்றார்; "திருநிலைபெற்ற தீது தீர் சிறப்பின்" (நெடுநல்-89) என்றார் இவ்வாசிரியரே நெடுநல்வாடையினும். மதுரைக்கு நான்மாடக்கூடல் என்னும் பெயருண்மையின் "மாடம் மலிமறுகிற் கூடல்" என்றார். "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" (மதுரைக் - 321) என்றும், 'மாடமலி மறுகிற் கூட லாங்கண்' (அகநா. 435 : 20) என்றும், 'நான்மாடக் கூடல் நகர்' (பரி. 20 : 35) என்றும் பிற சான்றோரும் மதுரையை மாடத்தாலே சிறப்புடையதாய் ஓதுதலறிக. இங்ஙனம் மதுரையை விதந்தெடுத்தோதியதன் காரணம் பாண்டியனையும் ஒருமுகத்தால் இதனுட் சார்த்துதலை விரும்பும் விருப்பமே என்பர் இளம்பூரண அடிகளார். குடவயின் - மேற்றிசைக் கண்ணே.*

> *"கொடி நுடங்கு மறுகிற் கூடற் குடாஅது*
> *பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய*
> *ஒடியா விழவின் நெடியோன் குன்றத்து*
> *வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து"* *(அகம். 139:13-8)*

*என்றார் அகத்தினும்.*

*இனி, வண்டுகளின் செயற்கண் வைத்துத் திருப்பரங்குன்றத்தின் வளத்தினை அழகாக ஓதும் நக்கீரனார் நல்லிசைப் புலமை மாண்பினை உணர்ந்தின்புறுக. துஞ்சி - துயில்கொண்டு. எல்-ஞாயிறு. காமரு என்பதனைக் காமம் வரும் என்பதன் மரூஉ என்பர் அடியார்க்கு நல்லார். அரி - அழகு. குன்று - திருப்பரங்குன்றம். அமர்ந்து - நெஞ்சாலே விரும்பி. உரியன் - தனக்குரிய செயலாகக் கொண்டவன்.*

*அங்கிங்கெனாதபடி எங்கும் உளனாகிய இறைவனை ஒருசில இடங்களைச் சுட்டி ஆண்டுறைவன் என்றல் என்னையோ எனின்?*

*இறைப் பொருள் உயிர் அறிவால் சுட்டியுணரப்படாததேயாயினும் இவ் வுயிர்களின்பால் வைத்த அருளாலே அருளுருக் கொண்டு தன் அன்பர்கள் கருதிய வடிவிற் சென்று காட்சி நல்குவன் என்பதும், தோற்ற முதலிய ஐந்தொழில் செய்தற்கும் அவ்வருள்மேனி இன்றியமையாதென்பதும்,*

> *"படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும் பாவனையும் நூலும்*
> *இடப்பாக மாத ராளோடு இயைந்துயிர்க்கு இன்பம் என்றும்*
> *அடைப்பானாம் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசந்*
> *துடைப்பானாந் தொழிலும் மேனிதொடக்கானேற் சொல்லொ ணாதே"*
>
> *(சித்தியார் சுபக். 153)*

*என்னும் மெய்ம்மொழியான் அறிக. மேலும் இச்செய்யுட்கு மாதவச் சிவஞான*

*யோகியார், ''படைப்புக்கு வாதுளாகமத்தின் ஓதியவாறே இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய உலகங்கள் முதல்வனது திருமேனியில் ஒவ்வோர் உறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்யவேண்டுதலானும், மறைப்புக்கு ஊனநடனம் இயற்றவேண்டுதலானும் திதிக்கு மாதராளோடியைய வேண்டுதலானும் அழிப்பிற்குத் தோன்றின முறையே அவ்வவ் வுறுப்புக்களின் ஒடுக்க வேண்டுதலானும் செவியறிவுறுத்தற்பொருட்டு ஆசிரிய உருக்கோடல் வேண்டுதலானும் உருவத்திருமேனி இன்றியமையாச் சிறப்பின" என விளக்கிச் சேறலும் உணர்க.*

*இனி,*

*"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா*
*அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே"*

*எனவரும் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்திற்கு,*

*இஃது "அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று" என்றும், "அவன் மற்றிவ் விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாதவிடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்" என்றும்,*

*"கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்கிவே*
*றுண்டல்போல் நின்றங் குளதாமாற் - கண்டவுருத்*
*தானதுவா யன்றானான் றானதுவாய்த் தோன்றானோ*
*தான துவாய்க் காணுந் தவர்க்கு" (சிவஞானபோதம், 12-42)*

*என்றும், மெய்கண்டாரடிகளும்,*

*"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்*
*சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே*
*உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்*
*உளனெங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்*
*விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்*
*மந்திரத்தில் வந்துதித்து மிகும்சுரபிக் கெங்கும்*
*உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி*
*ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன் அன்பர்க்கே"*

*(சித்தியார் சுபக்.)*

*என்று, அருள்நந்தி சிவாசாரியாரும் உணர்த்தி, ஆதலானே, "இவ்விடங்களின் வழிபடுக" என, அருளிப் போதலானும், சின்னாட்பல் பிணிச் சிற்றறிவினராகிய*

*மக்கள் அவ்விறைப் பொருளைத் திருக்கோயில் திருவுருவ வழிபாடு செய்தன்றி எய்துதல் எவ்வாற்றானும் இயலாதென்க. எனவே, ஈண்டு மாணவனை ஆற்றுப்படுத்தும் ஆசிரியர், திருப்பரங்குன்றம் முதலிய திருக்கோயில்களையும் ஆண்டுறையும் முருகப் பெருமானையும் வழிபடுமாறுணர்த்தியருளுகின்றார் என்க.*

*சிவபெருமானும் முருகப்பெருமானும் வெவ்வேறு உருவங்களும் செயலும் உடையராக ஓதப்படினும் இரண்டுருவமும் ஒரே முழுமுதலின் இருவேறு அருளுருவங்கள் ஆகலான், சிவபெருமானுக்கோதிய அளவை நூலோர் மொழிகள் முழுதும் முருகக்கடவுளுக்கும் ஒக்கும் என்பதறிந்து கடைப்பிடிக்க. இதனை,*

*"ஆதலின் நமது சத்தி யறுமுகன் அவனும் யாமும்*
*பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்*
*ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்*
*போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"*

*(கந்த. திருவினை. 19)*

*எனவரும் கந்தபுராணச் செய்யுளானும் அறிக.*

## திருப்பரங்கிரியைப் போற்றும் 40 நூல்கள்

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| 2. | அகநானூறு பாடல் எண் 59 | மருதனிள நாகனார் |
| 3. | அகநானூறு பாடல் எண் 149 | எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் |
| 4. | கலித்தொகை பாடல் எண் 27 | மருதனிள நாகனார் |
| 5. | கலித்தொகை பாடல் எண் 93 | பெருங்கடுங்கோன் |
| 6. | பரிபாடல் பாடல் எண் 5 | கடுவன் இளவெயினனார் செவ்வேள் பற்றிய முதல் பாடல். பிறப்பைத் தெரிவிக்கிறது |
| 7. | பரிபாடல் பாடல் எண் 6 | நல்லந்துவனார் |
| 8. | பரிபாடல் பாடல் எண் 8 (130 அடிகள் கொண்ட நீண்ட பாடல்) | நல்லந்துவனார் |
| 9. | பரிபாடல் பாடல் எண் 9 | குன்றம்பூதனார் |
| 10. | பரிபாடல் பாடல் எண் 14 | கேசவனார் |
| 11. | பரிபாடல் பாடல் எண் 17 | நல்லழிசியார் |
| 12. | பரிபாடல் பாடல் எண் 18 | குன்றம்பூதனார் |
| 13. | பரிபாடல் பாடல் எண் 19 | நப்பண்ணனார் |
| 14. | மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |
| 15. | தேவாரம் | திருஞானசம்பந்தர், சுந்தரர். |
| 16. | கந்தபுராணம் | கச்சியப்ப சிவாசாரியார் |
| 17. | கல்லாடம் | கல்லாடனார் |
| 18. | திருப்பரங்கிரிப் புராணம் | நிரம்பஅழகிய தேசிகர் |
| 19. | கந்தர் சஷ்டிக் கவசம் (திருப்பரங்குன்றம்) | தேவராய சுவாமிகள் |
| 20. | திருப்புகழ் | அருணகிரிநாதர் |

| | | |
|---|---|---|
| 21. | திருவகுப்பு | அருணகிரிநாதர் |
| 22. | தனிப்பாடல் | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் |
| 23. | சத்தியகிரி மகாத்மியம் | |
| 24. | திருப்பரங்கிரிப் புராணம் | நிரம்ப அழகிய தேசிகர் |
| 25. | பரங்கிரிப் பிள்ளைத்தமிழ் | |
| 26. | பரங்கிரிப் பாமாலை | |
| 27. | பரங்கிரி கலித்துறை அந்தாதி | |
| 28. | பரங்கிரிப் பதிற்றுப் பத்தந்தாதி | |
| 29. | பரங்கிரி வெண்பா அந்தாதி | |
| 30. | பரங்கிரி அலங்காரம் | |
| 31. | பரங்கிரி மும்மணிக் கோவை | |
| 32. | பரங்கிரி அனுபூதி | |
| 33. | பரங்கிரி கோவை | |
| 34. | பஞ்சமப் பண்ணில் அமைந்த<br>திருவலங்கற்றிரட்டு<br>திருப்பரங்கிரிப் பதிகங்கள் | பாம்பன் சுவாமிகள் |
| 35. | முருகன் அருள் வேட்டல் | |
| 36. | முருகன் வரப்பிரசாத மாலை | |
| 37. | சீவாட்சர தீபம் | |
| 38. | தேவாரச்சந்தப் பாமாலை | |
| 39. | திருவருள் விலாசம் | |
| 40. | திருப்பரங்கிரி மும்மணிக்கோவை | |

## அகநானூற்றில் திருப்பரங்குன்றம்

### பாடல் எண் 59–மருதனிள நாகனார்

சூர் மருங்கு அறுத்த சுடர் இலை நெடுவேல்
சினம் மிகுமுருகன் தண்பரங்குன்றத்து
அந்துவன் பாடிய சந்து கெழு நெடுவரை
இன்தீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த
தண் நறுங் கழுநீர்ச் செண் இயற் சிறுபுறம்
தாம் பாராட்டிய காலையும் உள்ளார்.

*சூரபன்மனையும் அவனுடைய உறவினரையும் அழித்த ஒளி பொருந்திய இலை போன்ற நீண்ட வேலையுடைய சினம் மிக்க முருகப்பெருமானின் குளிர்ந்த திருப்பரங்குன்றம். அது நல்லந்துவனாரால் பாடப்பட்டது. (பரிபாடல் 8ம் செய்யுள்) சந்தன மரங்கள் மிக்க உயர்ந்த அம்மலையில் உள்ள இனிய சுனையிலே பொருந்திய நறுமணப்பூவுடன் இயன்ற அழகுடன் விளங்கும் கொண்டை அசைதலையுடைய நின்முதுகை நம் தலைவர் பாராட்டியுள்ளார். இவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டினர்.*

### அகநானூறு 149–ஆம் பாடல் – எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

யவனர் தந்த வினைமாண் நன்கலம்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகின் கூடற் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெங்கொடி உயரிய

ஓடியா விழவின், நெடியோன் குன்றத்து
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்ன இவள்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.

*சேர மன்னரின் சுள்ளி என்ற பேராற்றின் நுரை சிதற யவனர் கொண்டு வந்த நல்ல மரக்கலம் பொன்னுடன் வந்து மிளகுடனே மீண்டு செல்லும் இத்தகைய வளம் வாய்ந்த முசிறி என்னும் பட்டினத்தை ஆரவாரம் மிக வளைத்து*

*அரிய போரை வென்று, அங்குள்ள பொற்பாவையைக் கவர்ந்து கொண்டான், யானையையும், போரையும் உடைய செழியன். அவனது கொடிகள் அசையும் தெருவினை உடைய மதுரையின் மேற்பகுதியில் உள்ள மயிற்கொடிகள் உயர்த்தப்பட்ட இடையறாத விழாவை உடையது முருகப் பெருமானின் திருப்பரங்குன்றம். அதில் வண்டுகள் மொய்க்கும் சுனையில் பூத்த நீல மலரின் புதிய மலர் இரண்டின் சேர்க்கை போன்ற இவளது செவ்வரி படர்ந்த கண்கள். நீரினைச்சிந்த நான் வாரேன். இப்புலவர் 2-ஆம் நூற்றாண்டினர்.*

## கலித்தொகையில் திருப்பரங்குன்றம்

## 27. மருதனிள நாகனார்

கல்மிசை மயில் ஆல, கறங்கி ஊர் அலர் தூற்ற 13
தொல்நலம் நனி சாய, நம்மையோ மறந்தைக்க
ஒன்னாதார்க் கடந்து அடூஉம், உரவு நீர் மா கொன்ற
வென் வேலான் குன்றின் மேல் விளையாட்டும் விரும்பார் கொல். 16

*நம் சாயல் கெட்டதைப் பார்த்து மலை மீது மயில்கள் ஆடுகின்றன. ஊரில் உள்ளவர் அலர் கூறுகின்றனர். நம் இயற்கை நலமும் கெடுகின்றது. இங்ஙனமாக அவர் விரும்பாத எம்மை மறப்பினும் மறப்பாராக. பகைவரை மாயம் செய்து கொல்லாது வென்று கொல்லும் பரந்த கடலில் தோன்றிய மாமரத்தை வெட்டிய வெற்றி பொருந்திய வேலையுடைய முருகப் பெருமானின் திருப்பரங்குன்றின் மீது பரத்தையருடன் விளையாடும் விளையாட்டையும் தலைவர் விரும்பாரோ விரும்பினால் வந்திருப்பாரே.*

## கலித்தொகை – 93. பெருங்கடுங்கோன்

*ஈர் அணிக்கு ஏற்ற ஓடியாப் படிவத்துச் (25) சூர் கொன்ற செவ்வேலாற் பாடி, பல நாளும் ஆராக்கனை காமாம் குன்றத்து, நின்னொடு மாரிஇறுத்த கடவுளைக் கண்டாயோ. 28*

*கெடாத விரதத்தால் குதிரை முகமும் மக்கள் உடலும் ஆகிய இரண்டு அழகுக்கும் பொருந்திய சூரபன்மாவைக் கொன்ற சிவந்த வேலையுடைய முருகப் பெருமானைப் புகழ்ந்து நிறையாத காம வேட்கையினால், திருப்பரங் குன்றத்தினிடத்தில் உன்னுடன் மாரிக்காலத்தில் பல நாட்களும் தங்கியிருந்த கடவுளைக் கண்டாயோ? என்றாள் தலைவி.*

## பரிபாடல் காட்டும் செவ்வேள்

*எட்டுத்தொகையுள் ஐந்தாவதாக இடம் பெற்றுள்ள நூல் பரிபாடல்*

*ஆகும். இப்பரிபாடல் 'ஓங்கு' என்னும் அடைமொழியைப் பெற்றும் அடிகள் மிகுந்தும் தனிச்சிறப்புப்பெற்று விளங்குகிறது. பரிபாட்டு என்பதும் இசை பரிபாடல் என்பதும் பரிபாடலைக் குறிக்கும் பிற பெயர்கள் ஆகும்.*

*"பரிபாட்டாவது பரிந்த பாட்டாம். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலன்றிப் பலவுறுப்புகளோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது" (தொல். பொருள். 423 இளம்) என்று இளம்பூரணர் பரிபாடலுக்கு உரை வழங்கியுள்ளார்.*

*பரிபாடல் நால்வகைப் பாக்களாலும் அமையும் என்பதைத் தொல்காப்பியர்,*

*"பரிபாடல்லே தொகைநிலை வகையின்*
*இதுபா என்னும் இயனெறி இன்றிப்*
*பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப"*

*- (தொல். பொருள். 425)*

*என்று தெரிவித்துள்ளார்.*

*தொல்காப்பியத்தின் பேராசிரியர் உரை (தொல். செய் : 14. பேரா), இறையனார் அகப்பொருள் உரை ஆகியவற்றால் பரிபாடல் எழுபது பாடல்களைக் கொண்டது என அறிய இயல்கிறது. அவற்றுள் திருமாலுக்கு 8, செவ்வேளுக்கு 31, கொற்றவைக்கு 1, வையைக்கு 26, மதுரைக்கு 4 எனப் பாடல்கள் அமைக்கப்பட்டிருந்தமையை,*

*"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்*
*தொருபாட்டு காடுகாட்கு ஒன்று - மருவினிய*
*வையை யிருபத்தாறு மாமதுரை நான்கென்ப*
*செய்யபரி பாடற் றிறம்"*

*என்னும் வெண்பா தெரிவிக்கிறது. தற்போது 22 பாடல்களே கிடைக்கின்றன. அவை, திருமாலுக்கு 6, செவ்வேட்கு 8, வையைக்கு 8 ஆகியவை ஆகும். இவை தவிர உரையாசிரியர்களின் மேற்கோளால் இரு முழுப்பாடல்களும் (திருமால் 1, வையை 1) சில குறைப்பாடல்களும் கிடைத்துள்ளன.*

*செவ்வேள் பற்றித் தற்போது கிடைக்கும் 5, 6, 8, 9, 14, 17, 18, 19 என்ற எட்டுப் பாடல்கள் வழியாகச் செவ்வேளின் திறத்தை இக்கட்டுரை ஆய்கிறது.*

*முருகனைப் பரிபாடல் செவ்வேள் எனச் சுட்டுகிறது. செவ்வேள் என்ற சொல் செம்மை, வேள் என்னும் இரு சொற்களைத் தன்னகத்தே கொண்டது ஆகும். செம்மை என்பது சிவந்த நிறத்தையும் வேள் என்பது விருப்பத்தையும்*

*உணர்த்தும். சிவந்த நிறம் கொண்டு அனைவரும் விரும்பத்தக்கவனாய் முருகன் விளங்குவதால் அவன் செவ்வேள் என்று அழைக்கப்பட்டான்.*

## செவ்வேள் பிறப்பு

*பரிபாடலின் ஐந்தாம் பாடல் செவ்வேளின் பிறப்பை விரிவாக எடுத்து இயம்புகிறது. கடுவன் இளவெயினனார் பாடிய இப்பாடல் செவ்வேள் பற்றிய முதற் பாடல் ஆகும். இம்முதற்பாடல் செவ்வேளின் பிறப்பைப் பற்றித் தெரிவிப்பதுடன் நாம் இரக்க வேண்டியவற்றையும் பற்றிக் குறிப்பிடுகிறது.*

### பரிபாடல் 5–ஆம் பாடல் – கடுவன் இளவெயினனார்
### வேண்டும் வரங்கள் (79–81)

*யாஅம் இரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால்*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்*
*உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!*

### பரிபாடல் 6–ஆம் பாடல் – நல்லந்துவனார்

*எவளோ ஒருத்தி குளத்தகத்தே ஆழமான இடத்தில் இறங்கி அதில் முழுகிப் போனாள். நான் அவளை மீட்கப் போனேன். அவளே எழுந்துவிட்டாள். பின்பு மயங்கி என் மீது விழுந்தாள். அவளையன்றி என்னை அணைந்தாள் வேறு ஒருத்தியும் இல்லை. நான் ஆடிய ஆறு தான் ஏது? என்றான். காதற் பரத்தை அந்த ஆறு இந்த வையையாறுதான் என்றாள். தலைவன் ஏடி! இத்திருப்பரங்குன்றின் தலையைத் தொட்டு ஆணையிடுகின்றேன் யான் அவ்வாறு செய்யவில்லை என்றான்.*

*எவளோ தோய்ந்தது யாது என* 91
*தேறித் தெரிய உணர்நீ பிரிதும் ஓர்*
*யாறு உண்டோ? இவ்வையை யாறு*
*இவ்வையை யாறு என்ற மாறு என்னைக் கையால்*
*தலை தொட்டேன் தண் பரங்குன்று.* 95

### பரிபாடல் 8–ஆம் பாடல் – நல்லந்துவனார்
### பரங்குன்றம் இமயம் ஒக்கும்

*130 அடிகளைக் கொண்ட நீண்ட பாடல். இப்பாடலின் பொழிப்புரை மட்டும் இங்கே தரப்படுகின்றது.*

*கிரௌஞ்ச குன்றத்தைப் பிளந்த வேலையுடையவனே! முதல்வர் திருமால், சிவபெருமான், நான்முகன், ஆதித்தர் பன்னிருவர், அசுவினி, மருத்துவர் இருவர்,*

*வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், திக்குப் பாலகர் எண்மர் மற்றத் தேவர்கள், அசுரர், முனிவர் ஆகியவர் நின்னைக் காண்பதற்காக மண்ணுலகில் வந்து வழிபடற்கு விளங்கும் இடமாக நின் திருப்பரங்குன்றம் இமயமலை போல் விளங்குகின்றது.*

*அப்பரங்குன்றத்தில் உள்ள சுனை, நின்னை ஈன்ற சரவணப் பூம்பொய்கையை ஒக்கும். அந்தக் குன்றத்திலே உள்ள மேக ஒலியானது நின் யானையினது முழக்கத்தை ஒத்ததாகும்.*

*அத்திருப்பரங்குன்றத்துக்கும் மதுரைக்கும் இடையே கிடந்த வழியில் குழல், யாழ் போல் வண்டுகள் இசைபாடின. சுனைப் பூக்களும், கொன்றைப் பூக்களும், கொடிப்பூக்களும், காந்தள் மலர்களும் பூத்து மணம் கமழ்ந்தன.*

*மதுரையில் முரசு கடல் போலவும், மேகம் போலவும், இடி போலவும் ஒலிக்கும் போதெல்லாம் நின் மலையின் அதற்கு மாறாக எதிரொலி எழுந்து ஒலிக்கும்.*

*ஒருவன் பரத்தையின் சேரியினின்றும் வந்தான். அவன் மேனியில் அயல் மங்கையர் மேனி மணம் கமழ்கின்றது. நீ காலையில் என்னைப் பிரிந்து மாலையில் இங்கு வருகின்றாய் என்றாள்.*

*அதைக்கேட்ட தலைவன், இந்த வையையைச் சார்ந்து உள்ள பொழில் மீது ஆணை! திருப்பரங்குன்றத்தில் உள்ள சாரல் மீது ஆணை! பார்ப்பர் மீது ஆணை. என்மேல் கமழும் இந்த நறுமணம் திருப்பரங்குன்றத்தில் உள்ள கனியினும் மலரினும் பொருந்து வந்த காற்று என்மீது வீசியதால் ஏற்பட்டது என்றான்.*

*அவ்வுரையாடலைக் கேட்ட தோழீ, 'ஏடா நில்! நினக்கு இந்தச் சூளால் துன்பம் உண்டானால் இவள் தாய்க்கு ஒரே பெண்ணான இவள் இறந்து படுவாள். நீ இடும் ஆணையால் இவளுக்கு ஏதம் உண்டாகும் என்றாள். அதைக் கேட்ட தலைவன் 'வையை மணலைத் தொடுகின்றேன். திருப்பரங்குன்றத்தின் அடியைத் தொடுகின்றேன்' என்று சூள் உரைத்தான்.*

*அதைச் செவிமடுத்த தோழி 'நீ இப்படி ஆணையிடின் முருகப் பெருமானைச் சார்ந்த அணங்கும், அவன் வேற்படையும் உன்னை வருத்தும். பார்ப்பாரின் அடியைத் தொட்டு ஆணையிட்டாலும் ஆணையிடலாம் அம் முருகவேளின் மயிலையும், வேலையும் நோக்கி ஆணையிடாதே. வள்ளி மேலும் ஆணையிடாதே' என்றாள்.*

*'நின்பொய்ச்சூளான துன்பம் நின்னை மேற்கொள்ளும் கூற்றுவனின் ஆணையையும் இகழும் ஆற்றலையுடைய முருகப் பெருமான் திருவுள்ளம்*

*வேறுபடுவதற்கு முன்பே இத்தலைவி போய் மணியை அடித்து முருகப் பெருமானை வணங்கி நின் பொய்யான சூளால் உண்டாக இருக்கும் துன்பத்தை ஆற்றுவாள்' என்று கூறினாள் தோழி.*

*மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்துப் போகும் வழியில் பூசனையைச் செய்ய எழுந்து சந்தனம், தூபத்துக்குரியவை, காற்றில் அவியாத விளக்கு, நறுமணம் பொருந்திய மலர்கள், முழவம், மணி, பாசம், மயில், கோடாரி, பிணிமுகம் என்பனவற்றையும் பின்னும் முருகப்பெருமானுக்கு உகந்த பல பொருள்களையும் ஏந்தித் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்து தொழுபவர், 'யாம் எம் காதலரோடு அளவளாவியதை கண்ட கனவு பொய்த்துவிடாது அவர் நனவில் எய்தி நீராடும் பொருட்டாக நின்வையையாறு புது வெள்ளத்தைப் பெறுக' என்று வரம் கொள்வார். எமக்குக் கருப்பம் உண்டாக என்று பல பொருள்களையும் காணிக்கையாகச் செலுத்துவர். எம் கணவர் மேற்கொண்ட போரில் வெற்றி பெறுக என்று வழிபட்டுத் தலைமகளிர் நின்றனர். பாடுபவர் பாட்டுக்குத் தாளமும், ஆடுபவரின் ஆடலுக்குரிய தாளமும் மலையில் எழும் எதிரொலியும் ஒன்றாகக் கலந்து அதனால் பெருமுழக்கம் உண்டாகியது. மடைத் தொழிலர் சமைத்த உணவை மங்கையருக்குத் தந்தனர்.*

*திருப்பரங்குன்றமே! இங்ஙனம் பிரியாத மகளிரும் மைந்தரும் இவரையல்லாத வரம் வேண்டுவோரும் கூடிச் சிவபெருமானுக்கும், உமையம்மைக்கும் மகனான கடம்ப மரத்தின் கீழ் வீற்றிருக்கும் செல்வன் திருக்கோயிலை வழிபட்டு நிற்ப, மண்ணகம் வருந்துமாறு மழை பெய்யாது போனாலும், அருவியானது மிக்கிருக்கும் செல்வமானது நிலைபெற விளங்குவதாகுக!*

*பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்*
*இமயக் குன்றினில் சிறந்து*
*நின் ஈன்ற நிரை இதழ்த் தாமரை*
*மின் ஈன்ற விளங்கு இணர் ஊழா*
*ஒரு நிலைப் பொய்கையோடு ஒக்கும் நின்குன்றின்*

*கடம்பு அமர் செல்வன் கடிநகர் பேண*
*மறு மிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த*
*நெறி நீர் அருவி அசும்பு உறுசெல்வ!*
*மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா*
*தண் பரங்குன்றம் நினக்கு.*

## பரிபாடல் 9–ஆம் பாடல் – குன்றம்பூதனார்

*இப்பாடல் 85 அடிகளை உடையது. அதன் பொழிப்புரை மட்டும் இங்கே தரப்பட்டுள்ளது.*

*இமயமலை உச்சியில் கார்த்திகை மகளிர் அறுவரிடத்தே மணிமிடற்று அண்ணலான சிவ பெருமானுக்கு மகனாய்த் தோன்றிய செவ்வேளே! நீ மை பூசிய கண்களையுடைய மான்மகளான வள்ளி நாச்சியாரைக் களவில் அணைந்தீர். அன்று இந்திரன் மகளான தேவசேனையினது கண் நீரைப் பொழிந்தது. அதைப்போன்று திருப்பரங்குன்றத்தில் முதுவேனிற் பருவத்தில் கார்ப்பருவத்தில் பெய்வது போல் மழை பெய்தது.*

*மணிமிடற்று அண்ணற்கு மதி ஆரல் பிறந்தோய் நீ* 7
*மைஇரு நூற்று இமை உண்கண் மான் மறி தோள்*
*மணந்த ஞான்று*
*ஐஇருநூற்று மெய்ந் நயனத்தவன் மகள் மலர் உண்கண்*
*மணிமழை தலைஇயென, மா வேனில் கார் ஏற்றுத்*
*தணிமழை தலையின்று தன் பரங்குன்று* 11
*நான்மறை விரித்து நல்இசை விளக்கும்*
*வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது*
*காதற் காமம் காமத்துச் சிறந்தது*
*விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி* 15
*புலத்தலின் சிறந்தது கற்பே அது தான்*
*இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்*
*பரத்தை உள்ளதுவே பண்புறு கழறல்.* 18

*இக்களவுப் புணர்ச்சி தானும் களவு கற்பு என்னும் இரண்டினுள் சிறந்தது என்று பாராட்டுகின்ற குன்றாத பொருள் இலக்கணத்தை உடைய தமிழினை ஆராயாத தலைவரே! குறிஞ்சியில் நிகழும் இக்களவொழுக்கத்தை மேற்கொள்ள மாட்டார்.*

*முத்து மாலை அழகு செய்ய வள்ளியின் பக்கத்தினின்று தன்பக்கம் வந்த முருகப் பெருமானிடம் தேவயானை ஊடிக் கூறினாள். நின்குணம் தெரியாமல் நினது மையலில் சிக்கியவரும் ஆகிய மங்கையரின் தன்மை, மழை வேண்டி நிற்கின்ற சோலையைப் போன்றதாகும். நின் குணத்தை அறியாமல் நின் காதலில் பட்டு மயங்கிய மகளிரே தவறு உடையவர். ஆதலால் என் மாட்சியையுடைய நலத்தை அனுபவிக்கக் கடவேனோ அனுபவியேன் என்றாள். வள்ளி காரணமாய் ஊடினாள், அகன்றார்.*

*அப்போது முருகப் பெருமான் தேவசேனையை நெருங்கித் தன் தலையில் அணிந்த மாலை அவள் அடியில் படும்படியாக வணங்கினான். அதனால் தேவசேனை சினம் தணிந்தாள். இனி வருந்தாதே என்று அவளை அணைத்தான். ஊடல் தீர்ந்தது.*

*இகலின் இகந்தாளை அவ்வேள் தலைக்கண்ணி*
*திருந்து அடி தோயத் திறை கொடுப்பானை*
*வருந்தல் என, அவற்கு மார்பு அளிப்பாளை*
*குறுகல் என்று ஒள்ளிழை கோதை கோலாக*
*இறுகிறுக யாத்துப்புடைப்ப.*

*அச்செய்தியை வள்ளியம்மை அறிந்தாள். அவள் முருகன் தேவசேனையை வணங்கியதை எண்ணிச் சினம் கொண்டாள். இனி அவளிடம் செல்லாதே என்று முருகனுக்குச் சொல்லினாள். அப்பெருமானின் கைகளைக் கட்டி, மாலையால் புடைத்தாள். அதனைக் கண்டதும் தேவசேனையின் மயில், அது வள்ளியின் மயிலை எதிர்த்தது. ஒருவரது கிளி மற்றவரது கிளியை எதிர்த்தது. வள்ளியின் குன்றம் வாழ் வண்டு தேவசேனை கொண்டை மேல் உள்ள வண்டின் மீது சென்று பாய்ந்தது. தேவசேனையின் தோழியர் வள்ளியின் தோழியரைப் பகைத்தனர். ஒருவரோடொருவர் போரிட்டனர். வள்ளியின் தோழியரே வென்றனர். அதனால் திருப்பரங்குன்றம் முருகவேளுக்கு இயைந்தது.*

*சூரனான மாமரத்தைத் தடித்த வீரனே! நின் திருப்பரங் குன்றத்தில் ஆடல் பயின்றோர் அவ்வாடல் கற்றவரை வென்றனர் - பாடல் கற்றவர் பாடல் கற்றவரை வென்றனர் - சூதாடுவோரைச் சூதாடுவோர் வென்றனர். இப்படியே பிற கல்வியுடையவர் பிற கல்வியுடையவரை வெற்றி கண்டனர். இவ்வெற்றிக்கு அறிகுறியாகச் சுனையிடத்தே வள்ளிப் பெருமாட்டியின் வெற்றிக்கொடி உயர்த்து நிறுத்தப்பட்டது.*

*கற்பு இணை நெறியூடு அற்பு இணைக்கிழமை*
*நயத்தகு மரபின் வியத்தகு குமர*
*வாழ்த்தினேம் பரவுதும் தாழ்த்துத் தலை நினையா*
*நயத்தலின் சிறந்த எம் அடியுறை*
*பயத்தலின் சிறக்க நாள்தொறும் பொலிந்தே.*

## பரிபாடல் 14ஆம் பாடல் – கேசவனார்
## பரங்குன்றின் கார்காலத்தன்மை

*கார்மலி கதழ் பெயல் தலைஇ ஏற்ற*
*நீர்மலி நிறை சுனை பூ மலர்ந்தனவே*
*தண் நறுங் கடம்பின் கமழ்தாது ஊதும்*

*வண்ண வண்டு இமிர்குரல் பண்ணை போன்றனவே*
*அடியுறை மகளிர் ஆடும்தோளே*

*நெடுவரை அடுக்கத்து வேய் போன்றனவே*
*வாகை ஒண்பூப் புரையும் முச்சிய*
*தோகை ஆர்குரல் மணந்து தணந்தோரை*
*நீடன்மின் வாரும் என்பவர் சொல் போன்றனவே*
*நாள் மலர்க் கொன்றையும் பொலந்தார் போன்றன*

*மெல்இணர் வேங்கை வியல் அறைத்தாயின*
*அழுகை மகளிர்க்கு உழுவை செப்ப*
*நீர் இயல் கலித்த நெரிமுகைக் காந்தள்*
*வார்குலை அவிழ்ந்தவள் இதழ் நிரைதொறும்*
*விடுகொடிப் பிறந்த மென் தகைத்தோன்றிப்*

*பவழத்து அன்ன செம்பூத் தாஅய்*
*கார் மலிந்தன்று நின்குன்று போர் மலிந்து*
*சூர் மருங்கு அறுத்த சுடர்ப் படையோயே!*
*கறை இல் கார்மழை பொங்கி அன்ன*
*நறையின் நறும் புகை நனி அமர்ந்தோயே.*

***பொருள் :*** *மேகம் மிக்க மழை பெய்தது. அதனால் அந்நீரை ஏற்றமையால் நீர் மிகவும் நிறைந்த சுனைகள் மலர்களை மலரச் செய்தன. குளிர்ந்த நறிய கடம்ப மரத்தின் மணம் கமழும் மலரில் தாதை உண்ணும் வண்டுகள் எழுப்பும் இசை பண்களைப் போல் விளங்கின. பெருமையுடையவனே! நின் நெடிய திருப்பரங்குன்றத்தின் சாரலில் தழைத்த மூங்கில்கள் நின்திருமுன்பு கூத்தாடும் அடியுறை மகளிர் தோள்கள் போல் உள்ளன. வாகையின் ஒள்ளிய மலரைப் போன்ற சூட்டையுடைய மயில்களின் நிறைவான அகவல் குரல் தலைவியரைப் புணர்ந்து பின் பிரிந்து சென்ற தலைவரைக் காலம் தாழ்த்தாமல் வாருங்கள் என்று அழைப்பாரின் சொல்லை ஒத்தன.*

*பெருமானே! நின் திருப்பரங்குன்றத்தின் கொன்றையின் புதிய மலர்கள் பொன் மாலை போல் உள்ளன. அழும் சிறுமியர்க்கு அந்த அழுகை நீங்குதற் பொருட்டு அன்னையர், 'அதோ புலி, புலி' எனச் சுட்டிச் சொல்லிக் காட்டும்படி மென்மையான பூங்கொத்துக்களையுடைய வேங்கை மரத்தின் மலர், அகன்ற பாறை மீது உதிர்ந்து பரவின. இவற்றுடன் நீர் நிலையின் பக்கத்தில் தழைத்த நெரிப்புடைய அரும்புகளையுடைய காந்தளின் பெரிய மலர்க்கொத்துகள் மலர்ந்த இதழ்கள் தோறும் தோன்றிய பின் மென்மையான அழகுடைய பவழம் போன்ற செந்நிற மலர் பரவ, நின்குன்றம் கார்காலத் தன்மை மிக்கு விளங்கியது.*

*போரில் மிக்குச் சென்று சூரபன்மன் என்ற மாமரத்தைச் சுற்றத்துடன் அறுத்தருளிய ஒளியையுடைய வேற்படையை உடைய இறைவ! களங்கம் இல்லாத கார்காலத்து வெண்மேகம் கிளர்ச்சி பெற்று எழுந்ததைப் போன்று நறுமணம் உடைய அகில் முதலியவற்றால் எழும் புகையை விரும்பியவனே!*

*இருபிறப்பு இருபெயர் ஈர நெஞ்சத்து* *27*
*ஒரு பெயர் அந்தணர் அறன் அமர்ந்தோயே*
*அன்னை ஆகலின் அமர்ந்து யாம் நின்னை*
*துன்னித் துன்னி வழிபடுவதன் பயம்*
*இன்னும் இன்னும் அவை ஆகுக*
*தொன் முதிர் மரபின் நின் புகழினும் பலவே.* *32*

## பரிபாடல் 17–ஆம் பாடல் – நல்லழிசியார்
## பரங்குன்றத்து அன்பர்

*இப்பாடல் 53 அடிகளைக் கொண்டது. விரிவஞ்சி பாட்டின் பொருள் மட்டும் தரப்படுகிறது.*

*தீவர்த்தியையும் இசைக் கருவிகளையும் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களையும், புகையையும், கொடிகளையும், சிலர் ஏந்தி வரத்தாம் மலர்தளிர் ஆடை மணிவேல் முதலியவற்றை சுமந்து வந்து கடப்ப மரத்தை ஏத்தி இசைபாடி மாலைதோறும் திருப்பரங்குன்றத்தின் அடியில் தங்குபவர் பலர். அவருள் எவரேனும் தேவர் உலகத்தின் உறைதலை விரும்புவர் உளரோ?*

*அம்மலையில் ஒரு பக்கம் பாணர்கள் எழுப்பும் யாழோசை எழும். அதன் எதிர் வண்டு எழுப்பும் இன்னிசை எழும். ஒரு பக்கத்தில் முழவின் முழக்கம் உண்டாக, அதன் எதிர் அருவிநீர் ஒலி செய்யும். ஒரு பக்கம் ஆடல் மகளிர் அசைய அவர் எதிர் பூங்கொடிகள் வாடையால் அசையும் ஒரு பக்கத்தில் பாடல் மகள் பாலைப்பண் ஒலிக்கும். அதற்கு எதிராக ஆடல் மயிலின் அகவும் ஓசை எழும். இப்படி அம்மலை சிறப்புப் பெற்று விளங்கும்.*

*புகழ் உடைய மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையே உள்ள இடம் அருகில் உள்ள தாயினும் மங்கையரும் ஆடவரும் நெருங்கி விளையாடுதலால் மிகவும் சேய்மையில் உள்ளதாக விளங்குகிறது.*

*அம்மைந்தர் மகளிரின் மாலைகள் வீழ்ந்தமையால் செல்லும் வழி இல்லையாயிற்று. முருகப் பெருமான் அத்தகைய திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி உலகத்தில் அங்கங்கே செய்யப்படும் பூசையில் ஆவியாய்க் கொள்ளும் அகிற்புகைவான் உலகில் பரவும். அதனால் தேவர்கள் கண் இமைக்காமல் நின்றனர். ஞாயிறும் புகையால் மறையும்.*

*மங்கையரும் ஆடவரும் சுனையில் பாய்ந்து விளையாடினர். அதனால் வண்டுகள் அஞ்சிச் சுனை மலர்த்தாதினை ஊதின. திருப்பரங்குன்றத்தின் அலங்காரங்கள் அத்தகையன.*

*மலையில் உள்ள அருவி பரந்து மலைக்குக் கீழ் உள்ள வயலில் பாயும்.*

*அந்த அருவியிலே விளையாடும் மங்கையர் அணிகளினின்றும் விழுந்த நீலமணி உழு நிலத்தைக் கெடுக்கும்.*

*தெய்வ விழாவும் விருந்து உபசரித்தலும் ஆகிய இவை திருப்பரங் குன்றத்துக்கும் மதுரைக்கும் வருதல் நல்ல ஒழுக்கமாயிற்று.*

*மயிலையும் உயர்ந்த கோழிக் கொடியையும் உடைய பெருமானே! பிணி முகத்தின் மீது இவர்ந்து போர் செய்து வெல்லும் முருக! பிறவித்துன்பம் நீங்கிய இன்பம் மலிந்த நாட்களை யாம் பெறுக என்று வேண்டி, யாங்களும் எம் சுற்றத்தாரும் மக்களைப் பணிந்து ஒழுகாமல் நின் புகழை ஏத்தி நின் திருப்பரங்குன்றத்தை வணங்குகின்றோம்.*

*மணிநிற மஞ்ஞை ஓங்கிய புட்கொடிப்*
*பிணிமுகம் ஊர்ந்த வெல் போர் இறைவ*
*பணியொரீ இ நின்புகழ் ஏத்தி*
*அணிநெடுங் குன்றம் பாடுதும் தொழுதும்*
*அவை யாமும் எம் சுற்றமும் பரவலும்*
*ஏம வைகல் பெறுக யாம் எனவே*

## பரிபாடல் 18 – குன்றம் பூதனார்

## வேலவன் குன்றம்

*போர் எதிர்ந்து ஏற்றார் மதுகை மதம் தபக்*
*கார் எதிர்ந்து ஏற்ற கமஞ்சூல் எழிலிபோல்*
*நீர் நிரந்து ஏற்ற நிலம் தாங்கு அழுவத்து*
*சூர் நிரந்து சுற்றிய மா தபுத்த வேலோய் நின்*
*சீர் நிரந்து ஏந்திய குன்றொடு நேர் நிரந்து*
*ஏறுமாறு ஏற்கும் இக்குன்று*

*தம்முடன் கூடி நின்று நின்னுடன் போர்த் தொழிலை ஏற்றுப் போரிட்ட அவுணர்களின் வலிமை காரணமாக உண்டான செருக்குக் கெட நீர்பரந்து ஏற்ற நிலத்தால் தாங்கப்படும் கடல் கார் காலத்தில் நிறைந்த சூல் கொண்ட மேகம் போல் இருண்டு பரந்து சுற்றிய சூரபன்மாவை அழித்தவனே! நின்னைப் பெற்றதால் உண்டாகிய புகழினைத் தான் பரவி நின்று ஏறுமாறாதலை ஏற்பை*

*நீ விரும்புவதால் நீ விரும்பி எழுந்தருளியது இத்திருப்பரங்குன்று. நீ விரும்புவதால் இக்குன்று நின்னை ஈன்ற இமயமலையைப் போன்று புகழைப் பெற்றது.*

*ஆய்தேரான் குன்ற இயல்பு*
*ஐ வளம் பூத்த அணிதிகழ் குன்றின்மேல்*

*நன்று என்று ஆராய்வதற்குக் காரணமான தேரையுடைய முருகப் பெருமானின் திருப்பரங்குன்றின் இயல்பு இது. தனக்குரிய ஐந்து வளமும் மிக்குப் பொலிந்த அழகுடைய திருப்பரங்குன்றின் மேல் சுவாமி அருளாட்சி புரிகின்றார்.*

## தெளிவுரை (22–43) அடிவரை

*வெண்மையான கதிரையுடைய செவ்வேளே! விரைந்து வரும் மயிலின்மேல் வரும் ஞாயிறே! குளிர்ந்த தளிரை மரங்களில் தளிர்க்கச் செய்து அதை உலகத்தவர்க்கு கூறுவதைப் போல் இருண்ட மேகம் முழங்கும் சிகரமும் காண்பர் கண்களை மழுங்கிச் சுடர்விட்டு நெருங்கி இருளைப் பிளக்கும்படி மின்னலும், நின்பிணிமுகம் என்னும் யானையையும் அதில் அணியப்பட்ட ஒளியையுடைய நெற்றிப் பட்டத்தையும் ஒத்தற்கு இடமான நின் திருப்பரங்குன்றத்தில் ஓவியம் வரையப்பட்ட அழகையுடைய அம்பலம் மன்மதனின் அம்பின் தொழில் நிலைபெற்ற சிலம்புக்கூடம் போன்றதாகும்.*

*இக்குன்றில் தீண்டி வருத்தும் தெய்வங்கள் நிறைந்த சிகரங்களில் உள்ள சோலைகளும், மேகங்கள் துளித்த நீர் நிறைந்து நிற்கும் அணைகளும், மலர்களை அணிந்த செறிவினால் அழகு துளும்புபவை. அவை அழகு ஒழுகும் கூர்த்த மலர் அம்பு நிறைந்த காமவேளின் அம்பறாத்தூளியை ஒக்கும். கார்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட காந்தள் குலைகள் நெருங்கிய அழகால் அக்காமவேளின் போரில் தோற்றுவிக்கப்பட்டவரின் கைகளைப் போன்ற வண்டுகளால் மலர்த்தப்பட்டு அழகிய காந்தள் அரும்புகள் யாழின் நரம்பின் புரியை நெகிழ்பவரின் கைகளைப் போன்றவை.*

*அழகுடைய மேகம் முன்பனிக்காலத்தில் முழங்கி வச்சிராயுதத்தையுடைய இந்திரனின் வானவில்லை வளைத்தது. சூதுப் போரில் வல்ல முருகப் பெருமானே! நின் மலையின் மீதுள்ள மரங்கள் அந்த இந்திரவில் சொரியும் அம்பு உண்டாயின் அந்த அம்புகள் பரவுமாறு போல மேன்மையான மலர்களை எங்கும் பரப்பின. சூதுப் போரில் உருண்டை உருட்டுதல் தொழிலில் வல்ல பெருமானே! நின் மலையிடத்து, கோட்டத்தில் போரில் உண்டாகும் முழக்கம் போல், இசைக்கருவிகள் தாளம் ஒலிக்கும் ஒலியுடன் கூடிச் சிறப்புற்று முழங்க மேகக் கூட்டமும் அம்முழக்கத்தோடு ஒத்து முழங்கின.*

*போர்த்ததும்பும் அரவம் போலக்*
*கருவி ஆர்ப்ப கருவி நின்றன குன்றம்*
*அருவி ஆர்ப்ப முத்து அணிந்தன வரை*
*குருவி ஆர்ப்ப குரல் குவிந்தன தினை*
*எருவை கோப்ப எழில் அணிதிருவில்*
*வானில் அணித்த ஒரி ஊதும் பல் மலரால்*
*கூனி வளைத்த சுனை*
*புரி உறு நரம்பும் இயலும் புணர்ந்து*
*சுருதியும் பூவும் சுடரும் கூடி*
*எரி உருகு அகிலோடு ஆரமும் கமழும்*
*செருவேல் தானைச் செல்வநின் அடிஉறை*
*உரிதினின் உறை பதிச் சேர்ந்தாங்குப்*
*பிரியாது இருக்க எம் சுற்றமோடு உடனே*

## பரிபாடல் 19ஆம் பாடல் – நப்பண்ணனார்

*இப்பாடல் 105 அடிகளை உடையது. எனவே பாடற் சுருக்கம் மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது. முருகப் பெருமானே! வான் உலகத்தில் நீ எழுந்தருளி யிருப்பது போன்றே இம்மண்ணுலகத்திலும் எழுந்தருளும் விருப்பம்கொண்டு, அறிவு எல்லையால் அறியப்படாத கடப்ப மரத்தைப் பொருந்தித் தேவர் அடையும் இன்பத்தை மக்களும் அடைக என்று திருவுள்ளம் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றத்தில் (துறக்கத்தவள்) இந்திரன் மகளான தேவ சேனையை மணந்தது போல ஆடும் அழகிய மயிலும், கொடியும் போன்ற வள்ளியையும் மணந்து இருவருடனும் உறவு கொண்டாய்.*

*அறிவினாலும் வீரத்தாலும் பிறரை வெல்லும் மதுரையில் உள்ள ஆடவரும் மகளிரும் வைகறைப் பொழுதில் பரங்குன்றத்திற்கு புறப்பட்டனர். அறப்பயனை நுகர வேண்டிய தேவர் உலகத்துக்குச் செல்பவரைப் போல் சென்றனர்.*

*புடை வருசூழல் புலம்மாண் வழுதி*
*மட மயில் ஒரும் மனையவரோடும்*
*கடன் அறி காரியக் கண்ணவரோடும் நின்*
*சூர் உறை குன்றின் தடவரை ஏறி மேல்*
*பாடு வலம் திரி பண்பின் பழமதிச்*
*சூடி அசையும் சுவன் மிசைத் தானையின்*
*பாடிய நாவின் பரந்த உவகையின்*
*நாடும் நகரும் அடைய அடைந்தனைத்தே*

*படுமணி யானை நெடியாய் நீ மேய*
*கடிநகர் சூழ் நுவலுங்கால்*

*ஒலிக்கும் மணியையுடைய பிணிமுகம் என்னும் யானையையும் புகழையும் உடைய பெருமானே! அறிவு மாண்பை உடைய பாண்டியன் மயில் போன்ற சாயலையுடைய மனைவியுடனும், செயல் கடமைகளை அறிந்த தன் கண் ஆன அமைச்சரோடும் கூடிப் பழைய வரிசையால் சூழப்பட்டுப் பிடரில் கிடந்து அசையும் ஆடை உடையவரும், மிக்க மகிழ்ச்சியுடையவருமாய் நாட்டில் உள்ளவரும், நகரத்தில் உள்ளவரும் வந்து சூழ, நின் சூர மகளிர் உறைதற்கு இடமான திருப்பரங்குன்றத்தின் மீது ஏறிப் பெருமையுண்டாக, வலமாக வரும் இயல்புகள் நீ எழுந்தருளிய கோயிலை சுற்றுதலை உவமை கூறுமிடத்து, திங்கள் தன்னைச் சூழ்ந்து வரும் விண்மீன்களுடன் மேருமலையின் பக்கத்தில் அதனைச் சுற்றுதலைப் போன்றது எனலாம்.*

*நின் குன்றின் கீழ் உள்ள இடைநிலம் யானைகளைக் கட்டுவதனாலும், குதிரைகளை அகற்றுவதாலும், தேர்களை நிறுத்துவதனாலும் அவை எங்கும் பரவி விளங்கின. அதனால், பாண்டியன் பாசறையைப் போல் விளங்கியது.*

*பாண்டியனுடன் மலை ஏறி வந்தவர்களுள் சிலர் குரங்குகள் உண்ணும் பல பண்டங்களை (அ) பணியாரங்களை அவற்றுக்கும் கொடுப்பர். சிலர் முசுக்கலையாகிய குரங்குக்கு உணவாகக் கரும்பைத் தருவர். சிலர் வீணையையும், யாழையும் மீட்டுவர். சிலர் முரசின் ஒலியை எழுப்புவர்.*

*திருப்பரங்குன்றத்தில் ஓவியம் வரையப்பட்ட ஓவியசாலை இருந்தது. (எழுத்து நிலை மண்டபம்) நாண் மீன்களையும் தாரகைகளையும் உள்ள சுடர்ச் சக்கரத்தைப் பொருத்தி ஞாயிறு முதலாக வரும் கோள்களின் நிலையை விளக்கி அங்கு ஓவியம் எழுதப்பட்டிருந்தது. இரதி, அவள் கணவன் காமன், பூனையின் வடிவம் கொண்ட இந்திரன், கௌதம முனிவன், அவன் சாபம் இடுவதால் அகலிகை கல்லாய்க் கிடந்தது போன்ற ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இத்தகைய ஓவிய மண்டபங்கள் பலப்பல. அக்குன்றத்தில் செவ்விய மூங்கில்களையும் விரிந்த பாறைகளையும் உடைய அகன்ற இடங்களில் இயற்றலால் அம்மலை மங்கல நிலையை உடையது.*

*சுனையிலும், அதன் பக்கத்திலும் பச்சிலையின் கொழுந்து, அரக்காம்பல், காந்தள், பஞ்சாய்க்கோரை, வேங்கை, தோன்றி, நறவம், இலவம் இலை எல்லாம் நெருங்கிப் பூத்திருந்தது. விடியற்காலத்துப் பலநிறம் கொண்ட மேகம் பொருந்திய வானம் போலிருந்தது.*

*கோயில் யானைக்கு இடும் கவளத்தில் அது உண்டு எஞ்சிய மிச்சிலை*

உண்ணும் மகளிர் கணவரின் அன்பைப் பெறுவர். கன்னித்தன்மை முதிர்ந்த பருவம் உடைய மகளிர் குறைவற்ற நிரம்பிய காதலரைப் பெறுவர்.

தெவ்வுக்குன்றத்துத் திருந்து வேல் அழுத்தி 102
அவ்வரைஉடைத்தோய்! நீ இவ்வரை மருங்கில்
கடம்பு அமர் அணிநிலை பகர்ந்தேம்
உடங்கு அமர் ஆயமொடு ஏத்தினம் தொழுதே! 105

## பரிபாடலால் அறியப்படும் செய்தி

1. பாண்டிய மன்னன் தன் மனைவியர் அமைச்சருடன் திருப்பரங்குன்றம் மலை மீதேறி முருகனை வழிபட்டான்.
2. முருகன் கடப்ப மரத்தின் கீழ் வீற்றிருந்தான்.
3. மலைச் சிகரங்களில் சூரர மகளிர் உறைந்தனர்.
4. மலைமேல் சுனைகள் இருந்தன.
5. மலையிலிருந்து வீழும் அருவி நீரால் வயல்கள் நிரம்பின.
6. மலைமேல் எழுத்தாணி மண்டபம் இருந்தது. இதனால் சங்க காலத்தில் திருப்பரங்குன்றம் மலைமேல் முருகன் கோயிலிருந்தது உறுதியாகிறது.

கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகத்தின் வடபகுதிகளாகிய தொண்டை நாட்டையும் நடு நாட்டையும் பல்லவர்கள் கைப்பற்றி ஆண்டனர். நடுநாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் இடையிலுள்ள சோழ நாடு களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. (சதாசிவ பண்டாரத்தார்).

கி.பி. 310-340 அரிமர்த்தன பாண்டியனுக்குப் பின் 2-ஆம் வரகுணன் ஆண்டான். இவன் காலத்தில் படைவலி குறைந்ததை உளவறிந்து சோழ நாட்டிலிருந்து களப்பிரர் படையெடுத்து வந்து 2ஆம் வரகுணனைக் கொன்று பாண்டி நாட்டைக் கைப்பற்றினர். கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் நடுவில் இது நிகழ்ந்தது என்பார் துடிசைகிழார்.

(பெரிய புராண விரிவுரை - C.K. சுப்பிரமணிய முதலியார் பக்கம் 32)

கி.பி. 3 முதல் 6 ஆம் நூற்றாண்டு வரை மதுரையில் சில பகுதிகளில் களப்பிரர்கள் ஆட்சி நடந்தது. களப்பிரர்கள் பௌத்த சமயம் விட்டு சமணம் மேற்கொண்டனர். கி.பி.470இல் பூஜ்ய பாதருடைய மாணாக்கர் வச்சிர நந்தி மதுரையில் த்ரமிள சங்கம் ஒன்றை நிறுவினார். மதுரையைச் சுற்றியுள்ள எண்பெருங் குன்றுகளில் எண்ணாயிரம் சமண முனிவர்கள் இருந்தனர். திருப்பரங்குன்றத்திலும் மலைமேல் சமணர் படுக்கையிருக்கிறது. சைவ - சமணப்

பூசல் உச்சநிலையில் இருந்த காலமது. அக்காலத்தில் தான் மலை மேலிருந்த முருகன் கோயில் மண்டபங்கள் இடிக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. திருஞான சம்பந்தரும், சுந்தரரும், திருப்பரங்குன்றம் சிவன் கோயிலை சேவித்து தேவாரத் திருப்பதிகம் பாடிய காலத்தில் திருப்பரங்குன்றத்தில் முருகன் கோயில் இல்லை என்பது தெளிவு.

### பரிபாடல் – நச்சினார்க்கினியாரால் மேற்கோளாக காட்டப்பட்டது

ஈவாரைக் கொண்டாடி, ஏற்பாரைப் பார்த்துவக்கும் சேய்மாடக்கூடலும் செவ்வேள் பரங்குன்றும் வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார் போவார் ஆர்புத்தேள் உலகு.

### மதுரைக் காஞ்சி – மாங்குடி மருதனார்

வன்கை வினைஞர் அரிபறை இன்குரல்
துளிமழை பொழியும் தண்பரங்குன்றில்
கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்
ததைத்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்து உடன் ஆடும் இசையே அனைத்தும்
அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப
குருகு நரல மனை மரத்தான்
மீன் சீவும் பாண் சேரியொடு
மருதம் சான்ற தண்பணை சுற்றி ஒரு சார்.

இனிய ஓசையை உடைய துளிகளை உடைய மேகங்கள் பெய்யும் குளிர்ந்த திருப்பரங்குன்றத்தில் விழாவைக் கொண்டாடும் ஆரவாரமும், புதுநீர் விழாவின் ஆரவாரத்தைத் தன்னிடம் கொண்ட மகளிர் கூட்டம் அழகுபெறக் கூடுமாறு அவர்களுடன் நீராடும் ஆரவாரமும் என்ற அவ்வோசை முழுவதும் மற்றப் பூதங்கள் விரிதற்குக் காரணமான பெருமையுடைய வானத்தில் போய் முழங்கி அங்கு வாழ்பவர்க்கு இனிதாக ஒலிக்க, குருகு என்னும் பறவைகள் கூப்பிட, மனையிடத்ததும் மரங்கள் தோறும் மீனைத் திருத்தும் பாணரின் குடியிருப்பில் பாடலாலும், ஆடலாலும் உண்டாகின்ற ஓசையோடு ஊடான ஓர் உரிப் பொருளையுடைய மருத நிலத்தால் சூழப்பட்ட ஒரு பகுதி.

### சங்க காலத்திற்குப்பின் பரங்குன்றம்

கி.பி. 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தர், மாறவர்மன் அரிகேசரி, அரிகேசரி பராங்குசன், கூன் பாண்டியன் என்ற பெயரையுடைய பாண்டியன் காலம் கி.பி. 640-670 (TV சதாசிவ பண்டாரம்) இப்பாண்டிய மன்னன் காலத்தில் மதுரைக்கு வந்தவர் திருஞானசம்பந்தர்.

*திருப்பரங்குன்றம் சன்னதித் தெருவில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு வந்து தேவாரப் பதிகம் பாடியுள்ளார்.*

*இறைவன் - பரங்கிரி நாதர்*
*இறைவி - ஆவுடையநாயகி*

*இறைவன் மேல் 10 பாடல்கள் பாடியுள்ளார்.*

**திருஞானசம்பந்தர் தேவாரம்**
**(முதல் திருமுறை)**

*அங்கமொ ராறும் அருமறை நான்கும் அருள் செய்து*
*பொங்கு வெண்ணூலும் பொடியணி மார்பிற் பொலிவித்துத்*
*திங்களும் பாம்பும் திகழ்சடை வைத்தோர் தேன்மொழி*
*பங்கினன் மேய நன்னகர்போலும் பரங்குன்றே.* *(1-100-2)*

*வளர்பூங் கோங்கம் மாதவியோடு மல்லிகைக்*
*குளிர்பூஞ் சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றம்*
*தளிர்போல் மேனித் தையல் நல்லாளோ டொருபாகம்*
*நளிர்பூங்கொன்றை சூடினன் மேய நகர்தானே.* *(1-100-4)*

*கி.பி. 667-712. சேரமான் பெருமாள் நாயனார் சேர நாட்டை ஆண்டார். கி.பி. 712-ல் சேரமான் பெருமான் என்னும் கழறிற்றறிவார் நாயனாரும், சுந்தரரும் ஒன்றாகக் கயிலாயம் சென்றனர்.*

*கி.பி. 670-710. மதுரையை கோச்சடையன் இரணதீரன் ஆண்டான். இவர் காலத்தில் சுந்தரர் மதுரைக்கு வந்தார். கோச்சடையன் இரணதீரன் பாண்டியன் மகளை மணந்து மதுரையில் தங்கியிருந்த சோழ மன்னன், சேரமான் பெருமாள் ஆகிய நால்வரும் திருப்பரங்குன்றம் பரங்கிரிநாதரை தரிசித்தனர். சுந்தரர் சிவபெருமான் மேல் பதினொரு பாடல்கள் அருளிச் செய்தார். அப்பகுதி 11-ம் பாடலில் 'உலகாண்ட மூவேந்தர் முன்னேயொழிந்த' என்ற அடியால் இவருடன் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் இத்தலத்திற்கு வந்து பரங்கிரிநாதரை வழிபட்டனர் எனத் தெரிகிறது. இச்செய்தி பெரியபுராணத்துள்*

*"கோத்திட்டை என்றெடுத்துக் கோதில் திருப்பதிக இசை*
*மூர்த்தியார் தமை வணங்கி முக்கோக்களுடன் முன்பே*
*ஏத்தியவன் தமிழ்மாலை இன்னிசைபா டிப்பரவி*
*சாத்தினார் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில்".*

*என்று சேக்கிழார் பாடியுள்ளார்.*

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பரங்குன்றத்துத் தேவாரம்

### (ஏழாம் திருமுறை)

**முதலாம் பாடல்**

*கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர் உமைக்*
*கொண்டுழல் கின்ற தோர் கொல்லைச் சில்லை*
*சேத்திட்டுக் குத்தி தெருவே திரியுஞ்*
*சில்பூதமு நீருந் திசை திசையன*
*சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழநும்*
*மரைக் கோவணத்தோ டொருதோல் புடை சூழ்ந்த*
*தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும்பாம்*
*படி கேளுமக் காட்செய வஞ்சுதுமே.* *(7-2-1)*

**11ம் பாடல்**

*அடிகேள் உமக்காட் செயஅஞ்சு துமென்*
*றமரர் பெருமா னைஆரு ரன் அஞ்சி*
*முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே*
*மொழிந் தாறும்ஓர்நான் கும்ஒரொன்றினையும்*
*படியா இவைகற் றுவல்ல அடியார்*
*பரங்குன் றம்மேய பரமன் அடிக்கே*
*குடியாகிவா னோர்க்கும்ஓர் கோவுமாகிக்*
*குலவேந்தராய் விண் முழுதாள் பவரே.* *(7-2-11)*

*அவ்வருமையையும் பெருமையையும் அரசர் மூவரும் கேட்டு அஞ்சி நாயனாரை வணங்கினார்கள் (திருப்பனந்தாள் காசிமடம் தேவாரம் பக். 1099) கோத்திட்டை - மிக்க மேட்டு நிலம். திருப்பரங்குன்றத்திற்கு கோத்திட்டை என்றொரு பெயர் சுந்தரரால் கூறப்பட்டுள்ளது. பரங்குன்று - மேலான மலை.*

## கல்லாடத்தில் திருமுருகனும், திருப்பரங்குன்றமும்

கல்லாடனாரால் இயற்றப்பட்ட சைவ சமய நூல் கல்லாடமாகும். 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' 'கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே' என்ற முதுமொழிகள் கல்லாடத்தின் அருமையினை விளக்குகின்றன. இந்நூல் அகவற் பாக்களால் இயன்றதொரு இன்ப நூலாகும். இந்நூலில் 15 அடிச் சிற்றெல்லையும் 66 அடிப் பேரெல்லையும் கொண்ட பாடல்கள் உள்ளன.

கல்லாடம், மதுரையில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக் கடவுளின் சிறப்புக்களைக் கூறுவதற்காகப் படைக்கப்பட்ட அகப்பொருள் நூல். ஆயினும் இந்நூலில் திருமுருகனின் சிறப்புகளும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. இதற்குச் சில காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. சிவபெருமானைப் பற்றிய நூலில் வேறு கடவுளர்களுக்குக் கடவுள் வாழ்த்துக் கூற இயலாது. ஆயினும் 'தகப்பன் சாமி'யாகிய முருகனுக்கு வாழ்த்துக் கூறுதல் பொருத்தம் உடையது.
2. சூரபதுமனை அழிப்பதற்கென்றே இறைவனால் படைக்கப்பட்ட அருமைந்தன்.
3. குறிஞ்சி நிலக் கடவுள், தான் படைத்த களவு நூலுக்கு ஏற்றவன்.
4. குறவர் நங்கை வள்ளியைக் களவு மணம் கொண்டவன்.
5. இறைவன் எழுந்தருளியுள்ள மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பவன்.

முருகனின் சிறப்புகள் கீழ்க்கண்ட நிலைகளில் அமைகின்றன.

1. பிள்ளைமைச் சிறப்புகள்
2. படைப்பு நோக்கத்தினை நிறைவேற்றல் - சூரபதுமனைக் கொல்லல்.
3. வெறியாட்டிற்குரிய கடவுள்
4. திருப்பரங்குன்றச் சிறப்புகள் அவனுடைய பிள்ளைமைச் சிறப்புகள் 1. கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்படுதல் 2. பிரமனைச் சிறை வைத்தல், 3. இறைவனுக்குப் பிரணவத்தைச் சொல்லிக் கொடுத்தல் 4. அகத்தியருக்கு மறை மொழிதல் 5. களவியலுக்கு உரை காணல் என அமைகின்றன.

### கார்த்திகேயன்

முருகன், தேவர்களுக்கு இடையூறு செய்த சூரபதுமனை அழிப்பதற்காக, இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து நெருப்புப் பிழம்பாகத் தோன்றியவன்.

அவனைக் கார்த்திகை மகளிர் செவிலித் தாயாராக வளர்த்தனர். இதனால் அவன் 'கார்த்திகேயன்' ஆனான். கார்த்திகை மகளிரால் வளர்க்கப்பட்ட நிலையைப் பரிபாடல் சிறப்பித்துக் கூறுகிறது. கல்லாடமும்,

"இமயம் பூத்த சுனைமாண் டொட்டில்
அழிவிற் றங்கி யறுதாய் முலையுண்டு"

என்று சிறப்பிக்கிறது. சரவணப் பூம் பொய்கையில் வளர்ந்தமை காரணமாக அவன் 'சரவணன்' ஆனான். மேலும் பின்வரும் செய்திகளைக் கல்லாடம் குறிப்பிடுகிறது.

தானே 'பிரமம்' என்று செருக்குற்ற பிரமனுக்கு, 'ஓம்' என்ற பிரணவத்துக்குப் பொருள் தெரியாததால் சிறையில் இட்டான் முருகன். இதனால் படைப்புத் தொழில் நின்று விட, சிவன் உள்ளிட்ட தேவர்கள் வேண்ட, சிறை வீடு செய்தான் (கல்.கட. வாழ்த்து 43-6).

தன் சிரிப்பால் திரிபுரத்தை அழல் கொள்ளச் செய்தவன் கூடலம்பெருமான். அவனுக்கே - தந்தைக்கே ஓமெனும் பிரணவத்தை அறிவுறுத்தியவன் முருகன். அதனால் பிரணவ நாதனானான். (கல்.கடவா : 42-3).

நேரிமலை வானுற வளர்ந்து, விண்ணில் வானவர் செல்லும் வழியைத் தடை செய்தது. அகத்தியர், அதை நிலத்தில் அழுத்தி வழியுண்டாக்கினார். பேராற்றல் மிக்க முனிக்கு முருகன் மறைமொழி செவியறிவுறுத்தினான்.

வாழ்வியலுக்கு இலக்கணம் கண்ட சிறப்புடையவர் தமிழர். தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் வழி நூலாகத் திகழ்வது களவியல் உரை. இதைச் சிவபெருமான் அருளினார் என்பர். இந்நூலுக்கு முருகன் உரை கண்டதாகக் கல்லாடம் உணர்த்துகிறது.

முருகன் சூரபதுமனைக் கொல்வதற்காகவே படைக்கப்பட்டவன். அவன் சூரனை வென்றமை பெருவெற்றியாகக் கருதப்படுகிறது. பேராற்றல் வாய்ந்தவனை வென்ற பேராற்றலன் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. சூரன் தம்பி தாருகாசூரனையும் சிங்க முகாசூரனையும் அழித்தல் சுட்டப்படுகிறது. சூரன் மாமரமாக நின்ற கோலம், பல படவிரித்துக் கூறப்படுகிறது. சூரனுடைய ஆற்றல் குறிக்குமாற்றால் முருகனுடைய வலிமையை மேம்படுத்தி மொழியப்படுகிறது. சூரனைக் கொன்ற வேலின் சிறப்பு புகழப்படுகிறது. சூரனின் வேண்டுகோளின்படி மயிலும், சேவலும் ஆக்கிய முருகனின் திருவருள் திறம் உணர்த்தப்படுகிறது. சூரபதுமன் இறப்பதற்கு முன் அவன் உறவினர்களான சிங்க முகனையும், தாருகாசூரனையும் அழித்த முருகனின் பேராற்றல் குறிக்கப்படுகிறது. சூரபதுமனின் பேராற்றலைச் சுட்டி, அவனை அழித்தவன் முருகன் என்று

குறிக்குமாற்றால், முருகனின் தோற்றம் மேம்படுத்தப்படுகிறது. அமிழ்தும், கற்பகத்தருவும் பெற்ற உடலக்கண்ணனாகிய இந்திரன் ஏவல் செய்ய, அவன் வானூலக வளனெல்லாம் நுகர்ந்த களவு நெஞ்சன் என்று குறிக்கப்படுகிறான் (1:1-3).

மாமரமாக இருந்த சூரனை முருகன் அழித்தமையைப் பல பாடல்கள் விரித்துரைக்கின்றன. (கட:வா 4-11; 8:1-7; 41:10-13; 48:8-13, 72:1-8; 80:17 83:1-9) சூரனாகிய மாமரம் நஞ்சை யொத்த மாயையாகிய முறையினின்று தோன்றியது தன் நெஞ்சின்கண் உள்ள பொறாமையாகிய கிளைகளை எண் திசையிலும் பரப்பியது. இருள் மனமாகிய தளிர்களைத் தளிர்த்தது; ஆயிரம் காவத தூரம் திரண்டது; இருபதாயிரம் காவத தூரம் உயர்ந்தது; ஐயாயிரம் காவத தூரம் அகன்றது; வஞ்சகப் பூக்களை ஈன்றது; கிளைகள் தலைகீழாகப் பொருந்தின; பழியாகிய வேர்கள் மேலே அலையப் பெற்றது. இத்தகைய நஞ்சையொத்த சூரபதுமனாகிய மாமரத்தை முருகக் கடவுள் தடிந்தான் (83:1-9) என்று மாமரமாக நின்ற சூரபதுமனின் தோற்றம் கூறப்படுகிறது.

சூரபதுமனை அழிக்க முருகனுக்கு அன்னை கொடுத்த வேலின் காரணமாக வேலாயுதன், கதிர்வேலன், ஞானவேலன் எனப் பல பெயர்களைச் சிறப்பாகப் பெற்றான். தீமைகளை அழிக்கும் அந்த வேல் நன்மையைக் காக்கப் பயன்படுகிறது. அதனால் முருகனின் வேல் பெரிதும் போற்றப்படுகிறது. "ஏழுமலை பொடித்த நதிநிலை நெடுவேல்" (1:6) என்று சிறப்பிக்கப்படுகிறது.

"கீழினர் நின்ற மேற்பகை மாவின்
ஓருட லிரண்டு கூறுபட விடுத்த
அழியாப் பேரளி யுமைக்க ணின்று
தற்பெயர் யுணர்த்திக் கற்பினொடு கொடுத்த
அமையா வென்றி அரத்த நெடுவேலொய்!" (க.வா. 11-15)

என்ற வேலின் சிறப்பும், உமையவள் வேலினைக் கொடுத்த காரணமும், முருகனின் பெருமையும் கூறப்படுகின்றன.

திருப்பரங்குன்றத்தில் உறைகின்ற முருகனின் கையில் உள்ள வேல், தேவர்களைப் போன்று உள்ளது. அது பிரமனைப் போல நான்முகங்கொண்டு, அவன் தாமரைப் பூவில் இருந்தாற்போன்று நல்ல உள்ளத்தினர் நெஞ்சில் வீற்றிருந்தது. திருமால் போல அரக்கரை அழித்து, நெய்யுண்டு, சிவன் போலத் திரிபுரம் எரியூட்டி, எவ்வுலகமும் தொழுது எழுதற்குக் காரணமாக இருந்தது என்று வேலின் சிறப்புக் கூறப்படுகிறது. (72:1-8).

அடியவர்களுக்கு அருள்புரியும் முருகன் மயில் வாகனத்தில் வீற்றிருந்து அருள் புரிதலால், மயில் வாகனம் சிறப்பிக்கப்படுகிறது. மாமரமாக நின்ற

*சூரபதுமனை இரு கூறாகப் பிளந்த முருகனுடைய மயிலும், சேவலும் வாகனமும் கொடியுமாக மாறின. மயில் வாகனத்தின் சிறப்பு அழகுற விரித்துரைக்கப்பட்டுள்ளது. (கா.வா. 16-25).*

*சூரனைக் கொன்ற அடையாளமாக முருகன், சேவற் கொடியைத் தாங்கினான். அவனுடைய வெற்றிச் சின்னமாகவும் அருட் சின்னமாகவும் அக்கொடி விளங்கியது. (கடவா. 26-31) சேவலங் கொடியோனால் காக்கப்படுகின்ற திருப்பரங்குன்றமும் சிறப்பிக்கப்படுகிறது. (8:7).*

*சூரனை வென்று தேவர்களின் இடரைத் தீர்த்த முருகனுக்கு நன்றிக் கடனாகத் தேவேந்திரன் தன் மகள் தெய்வ யானையைத் தேவ சேனாதிபதியாகிய முருகனுக்குக் கொடுத்தான். (கடவா. 35-36) சூரனைக் கொன்றதனால் வெற்றிப் பரிசாகக் கிடைத்த தெய்வயானையை மணந்து முருகன் மகிழ்வுடன் தங்கிய திருப்பரங்குன்றம் என்று குன்றம் சிறப்பிக்கப்படுகிறது.*

*குறிஞ்சி நிலக் கிழவோன் முருகன் குறிஞ்சி நில மகளாகிய வள்ளியைக் களவு மணம் புரிந்தவன். "வள்ளித்துணைக் கேள்வன்" (1:7) என்றும்,*

*"செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த*
*பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலையோய்" (க.வா. 37-38)*

*என்றும் வள்ளி நாயகன் புகழப்படுகிறான்.*

*சங்க அக இலக்கியங்களில் குறிஞ்சி நில வழிபடு கடவுளாக முருகன் திகழ்கிறான். தலைவி, தலைவனுடன் காதல் கொண்ட நிலையில், பித்தேறியவள் போல் இருப்பாள். இதைக் கண்ட தாயார் முருகன் குற்றமென நினைந்து, வெறியாட்டு எடுப்பர். இவ்வெறியாட்டு குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமே உரியது. இது அக்காலச் சமுதாய நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.*

*குறிஞ்சி நில மகளிர் முற்றத்தின்கண் களன் இழைப்பர். வெறியாட்டாளன், வேலன், குறத்தி, முதுபெண்டிர் ஆகியோர் தொண்டகப்பறை முழக்குவர். முருகனுக்குரிய வெறியாட்டுப் பறையை முழக்குவர். முருகனுக்குரிய வழிபாடு இயற்றுவர் என்று முருக வழிபாடு தெரிவிக்கப்படுகிறது (7:7-14).*

*தலைவன் கொடுத்த நோயைத் தலைவனே தீர்க்க வேண்டும். முருகனின் ஆற்றலால் தீர்க்கப்படுமாயின் தலைவியின் கற்புக்கு இழுக்கு நேரிடும். தாயின் விருப்பத்திற் கேற்ப வெளியாட்டு எடுக்கட்டும். ஆனால் முருகன் இவள் நோயைத் தீர்க்கக் கூடாது என்று வேண்டுகிறாள் தோழி. (கல். 16:23-28).*

*தலைவியின் நோயினைத் தீர்க்கக் கூடாது என்று முருகனிடம் வேண்டுகிறாள் தோழி ஒருத்தி என்று தோழியால் முருகனின் நோய் தீர்க்கும் ஆற்றல் குறிப்பிடப்படுகிறது.*

தலைவி கூற்றுப் பாடல் ஒன்றிலும் வெறியாட்டு கூறப்படுகிறது. உறையிலிருந்து நீக்கிய வேலைச் சுற்றுகிற வேலனும், முறத்தில் பரப்பிய நெல்லினை மூன்றும் இரண்டும் ஒன்றுபடக் கையால் அள்ளிப் பிடித்து, இதோ முருகனின் கோழிக்கொடி தோன்றுகிறது என்று கூறுவதனால் தன் நோய் நீங்காது என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். (30:1-3).

தலைவனிடம் காதல் கொண்ட தலைவி, முன்பு போல் சிரிக்கவில்லை; உலகத்தைத் துறந்த துறவியர் தன் சுற்றத்தாரை நோக்குவது போல் நோக்குகிறாள். பகழி செய்கின்ற கம்மாளர் வேறொன்றையும் நினைக்காமல், கணையை மட்டுமே நினைப்பதுபோல், தலைவியின் ஐம்பொறிகளும் ஒன்றுபட்டுள்ளன. அதனால் இவள்,

"அதிருவர்க் கொக்கின் களவுயிர் குடித்த
புகரிலை நெடுவே லறுமுக குளவன்
றகரங் கமழு நெடுவரைக் காட்சி
யுற்றன ளாதல் வேண்டும்" (98:55-57)

என்று செவிலித்தாய் நினைக்கிறாள். இதிலிருந்து முருகன் குடிகொண்ட திருப்பரங்குன்றத்திற்குக் கன்னிப் பெண்கள் தனியே செல்லக்கூடாது. சென்றால் தெய்வக் குற்றத்திற்கு ஆட்பட நேரிடும் என்று அக்காலத்தினர் கொண்ட நம்பிக்கை தெரிய வருகிறது.

முருகனைத் தொழுதலால், மழை பெய்யும் என்று அக்கால மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால் வெறியெடுத்து முருகனை வேண்டினர்.

"வேலன் பேசி மறிசெகுத் தோம்பிய
காலங் கோடா வரைவளர் பண்டம்" (கல். 42:20-21)

இதற்கு "மழை பெய்தலைக் குறித்து வெறியாட்டாளன் வாழ்த்தி ஆடு பலியிட்டுப் பூசனை செய்த வரை வளர் பண்டம்" என்று உரை எழுதப்பட்டுள்ளது" (கல்.ப.341) என்பதால் குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு முறை தெரிய வருகிறது.

## திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றத்தின் சிறப்புப் பலபட விரித்துக் கூறப்படுகிறது. இதற்குச் சில காரணங்களைக் குறிப்பிடலாம்.

அ) சிவபெருமானின் சிறப்பினைக் கூறும் புலவர், அவன் மகன் முருகன் எழுந்தருளிய குன்றத்தைச் சிறப்பித்துக் கூறி அதனையடுத்த மதுரை மாநகர் என்கிறார்.

ஆ) திருப்பரங்குன்றத்தில் இயற்கை வளம், கல்லாடனாரின் உள்ளத்தைக்

*கவர்ந்ததால் அவ்வளத்தை விரித்துக் கூறுகிறார்.*

இ) *முருகனின் அறுபடை வீடுகளில் முதன்மையானது திருப்பரங்குன்றம். இதனால் கல்லாடனார் முருகனின் சிறப்புகளைப் பலபட விரித்துக் கூறியுள்ளார்.*

*திருப்பரங்குன்றத்தின் சிறப்புகளைக் கூறும் கல்லாடனார், இது சிறப்புகள் பொருந்திய முருகன் எழுந்தருளிய இடம் என்றும் இயற்கை வளம் சூழ்ந்த இடம் என்றும் குறித்துள்ளார்.*

## திருமுருகன் சிறப்புகள்

*திருமுருகனின் பல்வேறு சிறப்புகளும் ஒரே பாடலில் விளக்கப்படுகின்றன. "பசுந்தழைத் தோகையும் செந்நிறச் சேவலும் மலர்க்கையில் ஏந்தியவன்; நிலைத்த பேரொளி மேனியன்; உலகிலுள்ள உயிர்களுக்கு உயிர் அனையன்; சூரனைக் கொன்றவன்; நான்முகனுக்குத் தண்டம் அளித்தவன்; குறுமுனிக்குப் பெருமறை யானவன்; நெடுமறைக்கு முதற் கடவுளானவன்; குஞ்சரக் கோதைக்கும் குறமகட் பேதைக்கும் இரு பக்கங்களிலும் இடம் தந்தவன்; அமிழ்தானவன் ஆகிய இறைவன் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம்" என்று முருகனின் பெருமைகள் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. (73:1-10).*

*திருப்பரங்குன்றத்திற்கு இந்திரன் உவமிக்கப்படுகிறான். இந்திரனுக்குக் கற்பகச் சோலையும், குன்றத்திற்கு இளங்காக்களும் உள்ளன. இந்திரனின் உடலில் உள்ள தாமரைக் கண்கள் போல, குன்றத்தில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. இந்திரன் வானுலகத்தை ஆளும் பேரறிவு பெற்றவன். குன்றம் வானளாவிய திங்களைத் தாங்கியுள்ளது என இந்திரனுக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் உவமைகள் கூறப்பட்டுள்ளன. (81:1-15).*

*பல்வேறு சிறப்புகளுக்குரிய முருகன் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கிறான். விளக்கு, இடியேறு, வடவைத்தீ, கூற்றுவன், உயிர், தேவதருக்கள், நல்லாசிரியர், பாண்டிய முருகன் ஆகியோருடன் ஒப்பிடப்படுகிறான். (கல். 56:1-9) முருகன் பகைமுடித்து மணம் கொண்டு மகிழ்ந்த சிறப்பினையுடைய திருப்பரங்குன்றம் என்று சிறப்பிக்கப்படுகிறது. (கல். 41:10-13:8-13) திருப்பரங்குன்றத்தின் பெருமையைக் குறிக்க வருகின்ற கல்லாடனார், மயிலூர்தியுடைய முருகனைச் சிறப்பிக்கிறார். (71:1-10; 73:1-4).*

## இயற்கை வளம்

*நிலமகளின் அனைத்துப் பகுதிகளிலும் இயற்கை கொலு வீற்றிருக்கிறது. ஆயினும் குறிஞ்சி நிலத்தில் சிறப்பான அழகு நிறைந்து விளங்குகிறது. அழகன்*

*முருகன் இயற்கை கொலு வீற்றிருக்கும் திருப்பரங்குன்றத்தைத் தேர்ந்தெடுத்துள்ளான்.*

*அருவியின் துளிகளும், நீர்த்துருத்தியிலிருந்து வரும் குங்குமக் கலவையும் எங்கும் சிதறும். குறவர் மக்கள் கொழிக்கும் முத்துக்களும், கூத்தரங்கங்களில் மாலை அறுந்து சிதறுகின்ற முத்துக்களும் எங்கும் சிதறும். அகில் மரத்தை எரித்தலால் எழும் புகையும், ஆவுதி நறும் புகையும் எங்கும் கமழும். வேங்கையின் பூந்துகளை விரும்பும் பெண் வண்டுகளும், கமுகின்கண் மொய்க்கும் ஆண் வண்டுகளும் ஒலிக்கும். சந்தனப் பொழிலில் கூத்தாடும் மயில்களும் முற்றத்தின்கண் உள்ள மனையில் உள்ள அன்றில்களும் அங்கு இருக்கும். இவ்வாறு திருப்பரங்குன்றத்தின்கண் வளம் மயங்கின. (50:15-25) அருவிகள் இழியும் பேரழகுடையது திருப்பரங்குன்றம் (1:8; 50:15).*

### அருணகிரி நாத சுவாமிகள் திருப்புகழில் போற்றிய திருப்பரங்குன்றம்

1. *தென்பரங் குன்றில் பெருமாளே.*
2. *குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங் குவித்துக் கும்பிடும் பெருமாளே.*
3. *தினைப்புனம் பைங்கொடி தனத்துடன் சென்றணை திருப்பரங் குன்றுறை தம்பிரானே.*
4. *திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர் தென்பரங் குன்றிலுறை பெருமாளே.*
5. *திருப்பரங்கிரி தனில் உறை சரவண பெருமாளே.*
6. *தெவிட்ட அன்போடு பருகுயர் பொழில்திகழ் திருப்பரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.*
7. *அயனையும் புடைத்துச் சினந்து உலகமும் படைத்துப் பரிந்து அருள் பரங்கிரிக்குட் சிறந்த பெருமாளே.*
8. *சினத்தொடுஞ் சமன் உதைபட நிறுவிய பரற்குள் அன்புறு புதல்வநன் மணியுகு திருப்பரங்கிரி தனில் உறை சரவண பெருமாளே.*
9. *உயர்கின்ற வனங்கள் பொருந்திய வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமாளே.*
10. *தேவர் பணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே.*
11. *அண்டம் இலங்கிட வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே.*
12. *திருப்பரங்குன்றிற் புக்குளிருக்கும் பெருமாளே.*
13. *உயர் திருப்பரங்கிரி வளநகர் மருவிய பெருமாளே.*
14. *தினைப்புனஞ் சென்றுலாவு குறத்தியின் பம்பராவு திருப்பரங்குன்ற மேவு பெருமாளே.*

# திருப்பரங்கிரி புராணம்

## நிரம்ப அழகிய தேசிகர்

*கி.பி. 16ஆம் நூற்றாண்டில் காரைக்குடிக்கு 3 கி.மீ. தொலைவிலுள்ள துழாவூரில் தங்கி வாழ்ந்தவர். திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவருடன் உடன் பயின்றவர். இவர் திருப்பரங்குன்றத்தில் மடம் அமைத்து நெடுங்காலம் வாழ்ந்தவர். இவர் இயற்றிய நூல் திருப்பரங்கிரிப் புராணம், இப்புராணத்துள் சில துதிப் பாடல்களைக் காண்போம்.*

### பரங்குன்றீசுரர் துதி

*உலகெ லாநிறைந் துள்ளும் புறம்புமா*
*யிலகு பேரொளி யின்பமுந் துன்பமும்*
*விலகி நின்ற விமலன் பரங்கிரித்*
*தலைவன் பாதந் தலைமிசை யேற்றுவாம்.*

### ஆவுடைய நாயகி துதி

*பொழியருவி யென வொழுகக் கருணைவெள்ள*
*மடைதிறக்கும் பூங்கண் மாதை*
*மழலையமு தம்பொழியப் பேசுமொரு*
*பைங்கிளியை மருவிநாளும்*
*பழமறைக ளோவிடவே பதம்பெயர்க்கும்*
*பொலங்கொடியைப் பார்க்குந் தோறும்*
*அழகொழுக நின்றவனைப் பரங்குன்றில்*
*ஆவுடையை யகத்துள் வைப்பாம்.*

*தமிழ்கூறும் நல்லுலகத்தில் புராண இலக்கியத்திற்குத் தனிச் சிறப்புக்கள் உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியக் காலகட்டத்தில் புராணக்கதைகளே அதிகமாகப் பேசப்பட்டன. அப்புராணங்கள் இரண்டு வகையான அமைப்பை உடையனவாகக் கருதப்படுகின்றன. ஒன்று தெய்வங்கள், பெரியோர்கள் பற்றிய வரலாற்றைக் கூறுவன. மற்றொன்று தலங்களின் பெருமையைப் பற்றி விளக்கிக் கூறுவன. இந்த வகைகளில் தலபுராணங்களே எண்ணிக்கையில் மிகுந்து காணப்படுகின்றன. அந்தத் தலபுராணங்களில் சிறப்பிடம் பெறுவன திருப்பரங்கிரிப் புராணமும், சேதுப்புராணமும் ஆகும். இப்புராணங்களை எழுதியவர் நிரம்ப அழகிய தேசிகர். திருப்பரங்கிரிப் புராணம், முருக வழிபாட்டு இலக்கியமாகும். அது முருகனை வழிபட்டு, அப்பேற்றின் வழியாக உயிர்கள் மேன்மை அடையும் என்று கூறுகிறது.*

*நிரம்ப அழகிய தேசிகர் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். கல்வி கற்பதில் ஆர்வங்கொண்டு கமலை ஞானப்பிரகாச சுவாமிகளிடம் சிவதீட்சை பெற்றவர். இவரிடம் கற்ற கல்வியின் பயனாக அவர் திருப்பரங்கிரிப்புராணம், சேதுபுராணம் ஆகியன எழுதினார். திருவருட்பயன், சிவஞானசித்தியார் என்ற இரண்டு நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். சிவஞான சித்தியாருக்குப் பல உரை நூல்கள் காணப்படுகின்றன. அவற்றில் காலத்தால் முந்தியது நிரம்ப அழகிய தேசிகர் எழுதிய உரை நூலே.*

**திருப்பரங்கிரிப்புராணம்**

*திருப்பரங்கிரிப்புராணம் அணிந்துரை, பதிப்புரை, முகவுரை, அபிப்பிராயம், சாற்றுக்கவிகள் ஆகிய பகுதிகளை முன்னால் கூறுகின்றது. இவற்றின் பின் பாயிரச்சருக்கம் முதலாகத் திருக்கல்யாணச் சருக்கம் ஈறாகப் பதினொரு சருக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இப்பதினொரு சருக்கங்களில் 524 பாடல்கள் காணப்படுகின்றன.*

**நூற்பெயர்**

*திருப்பரங்கிரியின் தெய்வப் பெருமையைப் புராண முறையாகப் போற்றியுரைத்தலின் இஃதுப்பெயர்த்தாயிற்றென்பது எளிதின் விளங்குவதாம் என்று ஆசிரியரே நூலின் முகவுரையில் கூறுகிறார். திருப்பரங்கிரிமலைக்குச் சத்தியகிரி, சத்தியஞானகிரி, சுமந்தவனம் என்ற மற்ற பெயர்களும் உண்டு என்று கூறுகிறார்.*

*தமிழ்மொழியகராதி, பரங்கிரிநாயகர் என்ற சொல்லிற்குத் திருப்பரங்குன்றத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர் என்று கூறுகிறது. பரங்கிரி என்பது சிவன் தங்கியுள்ள மலை என்றும் இம்மலையில் தவத்தின் பொருட்டும், தெய்வயானையம்மையைத் திருமணம் செய்தற்பொருட்டும் முருகன் இங்கு எழுந்தருளியிருக்கின்றார் என்றும் கூறப்படும்.*

*திருப்பரங்கிரிப்புராணம் என்ற நூலின் அவையடக்கச் செய்யுளில்,*

> *“குடமு யர்த்திடு மகத்தியன் குடங்கையாற் கொண்ட*
> *கடலை யானகங் கையடக் குவனெனல் போலும்”*

*என்கின்றார். விரிவாகிய திருப்பரங்கிரியின் மான்மியத்தைச் சொல்லியருளிய சமஸ்கிருத நூற் பொருளை நான் தமிழ் நூற் பாடல்களாற் பாடத் தொடங்கியது, அகத்திய முனிவர் உள்ளங்கையிலடக்கிய சமுத்திர சலத்தை நானும் உள்ளங்கை யிலடக்குவேனென்று புராணத்தைப் பாடுவது எனக்கு இயலாத செயல் என்று*

*அடக்கமாகச் சொல்லிக் கொள்கிறார்.*

**சைவசமயக் கருத்துக்கள்**

**இறைவன் (பதி)**

*குமரன் தவசுச் சருக்கத்தில், மதுரமாகிய சொல்லையுடைய உமாதேவி சிவபெருமானைக் கண்களால் அருந்தியதுபோல, அவர் சொல்லும் கதைகளைத் தன் திருச்செவிக்கு அமுதமெனக் கேட்டுச் சிவஞானத்தின் மேல் மனம் பற்றுதலுடையவளாயினாள் என்று ஆசிரியர் கூறுகிறார்.*

**சிவஞானத்தின் மேல் பற்றுதல்**

*சிவஞானத்திற்கு மேலும் விளக்கம் கூறும் வகையில் ஆசிரியர், 'சிவபெருமானிடம் உமாதேவியார் தம் கரங்களைக் குவித்து நின்று (சுவாமி) அடியாள் சொல்வதைக் கேட்க வேண்டும். மனத்துக்குச் சந்தேகத்தைத் தரும் புராணக்கதைகளாலே பிறவியை நீக்க முடியாது. சிவஞானத்தினாலேயே தான் பிறவியை நீக்கி மோட்சம் அடையலாம் என்றும், நிலைபெற்ற உம்முடைய கிருபா நோக்கத்தைப் பொருந்திய காலத்தில் பக்குவமுதிர்ந்து ஞானமுண்டாகும்' என்றும் கூறுவர். இக்கருத்தைச் சிவஞான சித்தியார் கூறுகிறது.*

*ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்*
*நல்லஆ கமஞ்சொல்ல அல்லவா மென்னும்*
*ஊனத்தார் என்கடவர் அஞ்ஞானத்தால்*
*ஊறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்*
*ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் இருள்போல்*
*அஞ்ஞானம் விடப் பந்தம்அறும் முத்தி யாகும்*
*ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்*
*இறைவனடி ஞானமே ஞானமென்பர்.*

**உயிர் (பசு)**

*திருப்பரங்கிரிப் புராணத்தில் உயிர்கள் பிறவிப் பயனால் அனுபவிக்கும் துன்பங்கள் விளக்கப்பட்டுள்ளன. அத்துன்பங்களைப் போக்கச் சில கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. எங்ஙனமாயின், சந்தேகத்திற்குரிய புராணக் கதைகள் பிறவியை நீக்காது, நிலையாகப் பிறவி அறுபடல் வேண்டுமாயின் சிவஞானத்தின் மீது பற்றுடையவராக விளங்கவேண்டுமென்பதாக நூலில் விளங்குகிறது.*

*தக்கதோர் பிறவி யாழி தணந்திட வோட மாகும்*
*.....................................................................................................................*